3·60

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1962

# பொன்ன
# தமிழ்ச்சோல

MADRAS RECORD OFFICE

எட்டாம் வகுப்பு

ஜெனரல் புக் கம்பெனி
கும்பகோணம்

TB
031(8)
N63

88779

# பொன்னித் தமிழ்ச் சோலை

## (எட்டாம் வகுப்பு)

(1958 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டப்படி தயாரிக்கப்பெற்றது)

MADRAS RECORD OFFICE

தொகுத்தவர் :
**புலவர் V. நாராயணசாமி,**
தமிழாசிரியர்,
K. சுப்பிரமணிய செட்டியார் உயர்நிலைப்பள்ளி, திருப்பூர்.

ஜெனரல் புக் கம்பெனி

டவுன் ஹைஸ்கூல்ரோடு, **கும்பகோணம்.**

9, பிரான்ஸிஸ் ஜோசப் தெரு, **சென்னை-1**

திருத்திய பதிப்பு 1961

மறு பதிப்பு 1963

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் ★ சென்னை-600 008
88779

32 பவுண்டு வெள்ளைக் காகிதத்தில்
அச்சிடப் பெற்றது.

(தமிழ்நாடு) பாடப்புத்தகக் குழுவினரால்
அங்கீகாரம் செய்யப்பெற்றது.
கெஜட் பக்கம் 31. தேதி 10—5—61.

TB
02180
N63

பதிப்புரிமை

விலை ரூ. 2

---

சாரதா விலாஸ பிரஸ், கும்பகோணம்.

# முகவுரை

1958 ஆம் ஆண்டில், சென்னைக் கல்வித் துறையினர் வெளியிட்ட புதிய பாடவியலைத் தழுவி, இப் பொன்னித் தமிழ்ச் சோலை 8 ஆம் வகுப்பிற்காக வெளியிடப் பெற்றுள்ளது.

புதிய பாடவியலின்படி செய்யுட்பகுதியில் 700 வரிகளும், உரை நடையில் 150 (கிரவுன் அளவு) பக்கங்களும் இருக்கவேண்டுமென்பது விதி. அதனை உளங்கொண்டே இந்நூல் தொகுக்கப்பெற்றுள்ளது. செய்யுள், உரை நடை ஆகிய பகுதிகளின் இறுதியில் அருஞ்சொற்பொருள், வினுக்கள், பயிற்சி முதலிய குறிப்புக்கள் வேண்டுமளவில் தரப் பட்டுள்ளன.

இந்நூலில், தங்கள் கவிதைகளையும், கட்டுரைகளையும் இணைத்துக்கொள்ள இசைவு தந்த அறிஞர் பெருமக்கட்கு என் நன்றியை உரிமையாக்குகின்றேன்.

இந்நூலைத் தொகுத்து நன்முறையில் வெளிவர உதவி புரிந்த குடந்தை **ஜெனரல் புக் கம்பெனியாருக்கும்,** குடந்தை சிறிய மலர் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் **வித்துவான் ப. திருநாவுக்கரசு** அவர்கட்கும், குடந்தை நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் **வித்துவான் சோ. மாணிக்கம்** அவர்கட்கும் என் நன்றி உரித்தாகுக.

கல்வித் துறையில் ஈடுபட்ட பெரியார்கள், இத் தமிழ்ச் சோலையைச் செந்தமிழ் நாட்டு மாணவ மாணவியர் படித்துப் பயன்பெறுமாறு செய்வதுடன் என்னையும் இத் துறையில் மேலும் ஈடுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தொகுப்பாசிரியர்.**

# உள்ளுறை

## செய்யுட் பகுதி


| எண் | | பக்கம் |
|---|---|---|
| **I.** | **வாழ்த்துப் பகுதி** | |
| | 1. கடவுள் வாழ்த்து | ... 1 |
| | 2. தமிழ்த்தாய் வாழ்த்து | ... 2 |
| | 3. நாட்டு வாழ்த்து | ... 2 |
| **II.** | **அறவுரைப் பகுதி** | |
| | 1. திருக்குறள் | ... 4 |
| | 2. நாலடியார் | ... 16 |
| | 3. திரிகடுகம் | ... 17 |
| | 4. சிறுபஞ்ச மூலம் | ... 19 |
| | 5. அறநெறிச் சாரம் | ... 20 |
| **III.** | **கதைப் பகுதி** | |
| | 1. நளவெண்பா | ... 22 |
| | 2. திருவிளையாடற் புராணம் | ... 29 |
| | 3. மணிமேகலை | ... 36 |
| | 4. இரட்சணிய யாத்திரிகம் | .... 39 |
| | 5. ஆசிய ஜோதி | ... 43 |
| **IV.** | **பல்சுவை** | |
| | 1. கதிரவன் தோற்றம் | ... 48 |
| | 2. முழுமதிக் காட்சி | ... 48 |
| | 3. சீட்டுக்கவி | ... 49 |
| | 4. சிலேடை | ... 50 |
| | 5. அந்தாதி | ... 50 |
| | 6. பிள்ளைத்தமிழ் | ... 51 |
| | 7. தூது | ... 52 |
| | 8. கலம்பகம் | ... 53 |
| | 9. குற்றாலக் குறவஞ்சி | ... 54 |
| **V.** | **வழிபாட்டுப் பாடல்கள்** | |
| | 1. சிவபெருமான் | ... 57 |
| | 2. திருமால் | ... 57 |
| | 3. இயேசுநாதர் | ... 57 |
| | 4. முழுமுதற் கடவுள் | ... 58 |

# உரைநடைப் பகுதி


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இசை இன்பம் ... | 1 |
| | —மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் | |
| 2. | ஆதிமந்தியார் ... | 7 |
| | —திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் எம்.ஏ., அவர்கள் | |
| 3. | பட்டினப் பாலை ... | 12 |
| | —பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனுர், M.A.L.T., M O.L., Ph.D. | |
| 4. | விபுலானந்தரின் நற்பண்புகள் ... | 19 |
| | —வித்துவான் R. பழநியாண்டி முதலியார் அவர்கள் | |
| 5. | பயிர்வண்டும், படர் கொடியும் ... | 25 |
| | —டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, B.A., B.L., | |
| 6. | நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா? சிக்கனக்காரனு? ... | 31 |
| | —பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் | |
| 7. | பழந்தமிழ்ப் புலவர் சிறப்பியல்புகள் ... | 41 |
| | —டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார், M.A., Ph.D., M. L. C. | |
| 8. | சுவீடன் ... | 48 |
| | —திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பி. ஏ., அவர்கள் | |
| 9. | அறம் உரைத்த உழவர் ... | 57 |
| | —வித்துவான் அன்பு. கணபதி அவர்கள் | |
| 10. | தம்பிக்கு ... | 63 |
| | —டாக்டர் மு. வரதராசனுர், எம்.ஏ., எம்.ஓ. எல்., பி.எச்.டி., | |
| 11. | வீடும் கலையும் ... | 69 |
| | —திரு. சி. பெரியநாயகி அம்மையார் அவர்கள் | |

12. பண்டைத் தமிழரசரும் புலவரும் ... 79
—பண்டித வித்துவான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்

13. மலைவாசம் ... 86
—திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்

14. இளைஞருக்கு அறிவுரை ... 94
—திரு. நெ. து. சுந்தரவடிவேலு, எம். ஏ., எல். டி. அவர்கள்

15. கூட்டுறவு வளர்ச்சி ... 102
—சென்னை அரசாங்கச் செய்தித் துறையினர்

16. வள்ளல் பேகன் (நாடகம்) ... 112
—திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள்

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே !

— மகாகவி இரவீந்திரநாத தாகூர்

# தேசிய கீதம்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்,
மக்கள் எல்லாருடைய மனத்திலும்
ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மகாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

எட்டாம் வகுப்பு

# செய்யுட் பகுதி

## I வாழ்த்துப் பகுதி

### 1. கடவுள் வாழ்த்து

வாழ்த்துப் பகுதியில் கடவுள் வாழ்த்து, மொழி வாழ்த்து, நாட்டு வாழ்த்து என மூன்று பிரிவுகள் உள்ளன.

**கடவுள் வாழ்த்து:** கடவுளை வாழ்த்துதல். மக்களின் சிந்தனை, மொழி, செயல்களைக் கடந்து நிற்பவர் கடவுள். (கட + உள் = கடவுள்) இவ் வாழ்த்து, திருவருட்பாவில் உள்ளதாகும்.

**திருவருட்பா:** (திரு + அருள் + பா) இறைவன் திருவருளால் பாடிய பாடல்கள் என்பது பொருள். இந்நூலில் உள்ள செய்யுட்கள் எளிமையும் இனிமையும் வாய்ந்தவை; கற்றோரே யன்றி கல்லாரும் கேட்ட அளவில் மனம் கரைந்து உருகுமாறு அமைந்தவை.

**ஆசிரியர்:** இந்நூலை இயற்றியவர் இராமலிங்க அடிகளார். பிறப்பிடம்: சிதம்பரத்தை அடுத்த மருதூர். பெற்றோர்: இராமையா பிள்ளை—சின்னம்மையார். கருணீகர் மரபைச் சார்ந்தவர். சமயம்: சமரச சன்மார்க்கம். காலம்: 1823—1873.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி யுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனயான் தெளிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தைமிக விழைந்த தாலோ.

— இராமலிங்க அடிகளார்.

## 2. தமிழ்த்தாய் வாழ்த்து

மொழி வாழ்த்து: தாய்மொழியை வாழ்த்துதல். தமிழ் நம் தாய்மொழியாதலின் தமிழ்மொழியை வாழ்த்துதல் நமது கடமையாகும்.

இப் பாடலை இயற்றியவர் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் ஆவார். இவர் தஞ்சையைச் சார்ந்த கரந்தையில் வாழ்ந்தவர். கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர்களில் ஒருவராவர். கரந்தைப் புலவர்கல்லூரித் தலைவராகப் பணிபுரிந்தவர். காலம்: 1886—1953.

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே!
தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்!
தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வி!
கானார்ந்த தேனே!கற் கண்டே! நற் கனியே!
கண்ணே!கண் மணியே!அக் கட்புலஞ்சேர் தேவி!
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே!
அம்மே!நின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே!

—கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை

## 3. நாட்டு வாழ்த்து

நாட்டு வாழ்த்து: நாட்டினை வாழ்த்துதல் எனப்பொருள்படும். 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தன'—ஆதலின் நம் தாய்நாட்டை வணங்குதல் நமது தலை சிறந்த கடமை ஆகும்.

இச் செய்யுள் பாரதியார் பாடலில் அமைந்துள்ளது. பாரதியாரின் இயற்பெயர் சுப்பிரமணிய பாரதியார். இவர் எட்டயபுரத்தில் பிறந்தவர். பெற்றோர்: சின்னசாமி ஐயர் - இலக்குமி அம்மாள். இவர் இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர். உணர்ச்சி ததும்பும் கவிதைகள் மூலம் மக்களைத் தேசீயப் போராட்டத்திற்குத் தட்டியெழுப்பியவர். காலம்: 1882—1921.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே ! — அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே ! — அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே ! — இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ ? — இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ ?

— தேசீயகவி பாரதியார்

சொற்பொருள் :

1. பேதம்-வேறுபாடு ; சித்து-அறிவு ; வித்தகர்-மேலானவர்; சிந்தை-உள்ளம்.

2. தீஞ்சுனை-இனிய சுனை; திருமாலின் குன்றம்-திருவேங்கட மலை; அ + இடை = ஆயிடை-சுட்டெழுத்து நீண்டது; கான்-மணம்; கண் + புலம் = கட்புலம்; புலம் – அறிவு; ஆறாத-குறையாத அறைதல்-கூறுதல்.

மதியே, தேனே, கனியே முதலியன உவமையாகுபெயர்கள். நூற்கடல்-நூலாகிய கடல் உருவகம். ஆறாத-எதிர்மறைப் பெயரெச்சம்.

3. முந்தையர்-மூதாதையர்; வந்தனை-வழிபாடு; வந்தேமாதரம்-தாய்நாடே வணங்குகின்றேன்; வாயுற-வாயார.

வினாக்கள் :

1. இறைவன் நடம்புரியும் இடம் என இராமலிங்க அடிகளார் குறிப்பிடுவது எது ?

2. இராமலிங்க அடிகளார் தம் மனத்தின் விழைவாகக் கூறுவதென்ன ?

3. தமிழன்னை ஆட்சி புரிந்த இடமாகக் கவியரசு எதனைக் குறிக்கின்றார் ?

4. தாய் நாட்டை வணங்குதற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

# II அறவுரைப் பகுதி

இப் பகுதியில் 1. திருக்குறள், 2. நாலடியார், 3. திரிகடுகம், 4. சிறுபஞ்சமூலம், 5. அறநெறிச் சாரம் என்னும் நூல்களி லிருந்து செய்யுட்கள் சில பாடமாக அமைந்துள்ளன.

## 1. திருக்குறள்

திருக்குறள்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று; கடைச் சங்க நூல்களை மேற்கணக்கு என்றும் கீழ்க்கணக்கு என்றும் பிரிப்பர். மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்பவை செய்யுட்களின் அடி யளவைக்கொண்டு பிரிக்கப்பட்டவை. மேற் கணக்கில் பதினெட்டு நூல்களும் கீழ்க்கணக்கில் பதினெட்டு நூல்களும் உள. கீழ்க் கணக்கு நூல்களை.

நாலடி நான்மணி நானாற்ப(து) ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு

என்னும் செய்யுளால் அறியலாம்.

திருக்குறள் உலகமக்கள் அனைவருக்கும் ஏற்ற நல்லுரைகளைக் கூறுவது. அதனால் இது மேனாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க் கப்பட்டுள்ளது. இஃது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்னும் மூன்று பிரிவுகளைக்கொண்டது. இதனால் இந்நூல் முப்பால் எனும் பெயர் பெற்றது. இந்நூல் 133 அதிகாரங்களையும் 1330 குறட் பாக்களையும் உடையது.

நூலாசிரியர்: திருவள்ளுவர். காலம் கி. பி. இரண்டாம் நூற் றாண்டென்பர். அரசருக்கு அந்தரங்க ஆலோசனை கூறும் ஓர் அரசியல் அதிகாரியை வள்ளுவர் என்பர். அத்தகைய பணியை ஏற்றிருந்தமையின் இவர் தம் இயற்பெயர் மறைந்து சிறப்புப் பெயராகிய வள்ளுவர் என்பதே வழங்குவதாயிற்று எனக் கருது கின்றனர். பிற வரலாறுகளுக்குத் தக்க ஆதாரங்கள் இல்லை.

### என்றும் துன்புறாதவர்

1. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

### மழையின் சிறப்பு

2. விசும்பின் துளிவீழின் அல்லால் மற்(று) ஆங்கே
பசும்புல் தலைகாண்(பு) அரிது.

பெரியவர்தம் பெருமை

3. இருமை வகைதெரிந்து ஈண்(டு)அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்(று) உலகு.

அறத்தின் தன்மை

4. சிறப்(பு)ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

அறத்தைச் செய்யும் முறை

5. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

இல்லறத்தின் சிறப்பு

6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ(து) எவன்.

பெண்ணின் பெருமை

7. பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

தலைசிறந்த காவல்

8. சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

மக்கட்பேறு

9. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

அன்புடைமை

10. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

இல்லறத்தின் பயன்

11. இருந்(து)ஓம்பி இல்வாழ்வ(து) எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

இன்சொல்லின் இலக்கணம்

12. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

### இனியவை கூறல்

13. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

### செய்ந்நன்றி அறிதல்

14. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

### நடுவு நிலைமை

15. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

### அடக்கத்தின் பெருமை

16. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங்(கு) இல்லை உயிர்க்கு.

### பணிவுடைமை

17. எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

### பொறையுடைமை

18. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

### அழுக்காறு கொள்ளாமை

19. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்(கு) அறிந்து.

### செல்வம் சுருங்காதிருக்க வழி

20. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

### பெறத்தக்கது

21. ஒப்புரவி னல்வரும் கே(டு)எனின் அஃ(து)ஒருவன்
விற்றுக்கோள் தக்க(து) உடைத்து.

### ஈகையின் இலக்கணம்

22. வறியார்க்கொன்(று) ஈவதே ஈகைமற்(று) எல்லாம்
குறியெதிர்ப்பை நீர(து) உடைத்து.

உயர்குடிப் பிறந்தார் தன்மை

23. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள.

பொருள் சேமிக்கும் இடம்

24. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃ(து)ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

அழியாமல் நிற்பது

25. ஒன்றா உலகத்(து) உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்ப(து) ஒன்று இல்.

வசையைத் தருவது

26. வசைஎன்ப வையத்தார்க்(கு) எல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின்.

அருளுடைமை

27. தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி(து) ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

தவத்தின் சிறப்பு

28. வேண்டிய வேண்டியாங்(கு) எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

கூடா ஒழுக்கம்

29. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த(து) ஒழித்து விடின்.

வாய்மை

30. வாய்மை எனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

தன்னைக் காப்பது

31. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

இன்னா செய்யாமை

32. நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்
நோய்இன்மை வேண்டு பவர். [யார்

### யாக்கை நிலையாமை

33. நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

### மெய்யறிவு

34. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு.

### நோய் நீங்கும் வழி

35. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

### கல்லாதவன் இழிவு

36. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

### ஊழ்வினை

37. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ(து) எவன்.

### இறைவன் மாட்சி

38. காட்சிக்(கு) எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

### கண் என்று சொல்லத் தகுவன

39. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

### புலவர் தன்மை

40. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

### கல்லாதவர் சிறுமை

41. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ(டு) ஏனை யவர்.

### கேள்விச் சிறப்பு

42. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

அறிவு எனப்படுவது

43. எவ்வ(து) உறைவ(து) உலகம் உலகத்தோ(டு)
அவ்வ(து) உறைவ(து) அறிவு.

தலையான வலிமை

44. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

பெரியாரைத் துணைக்கொள்ளல்

45. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

அறிவுடையார் செயல்

46. ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

பண்பறிதல்

47. நன்றாற்றல் உள்ளும் தவறுண்(டு) அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை.

வலியறிதல்

48. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.

பொருளைச் செலவிடும் முறை

49. ஆகா(று) அளவிட்டி(து) ஆயினும் கேடில்லை
போகா(று) அகலாக் கடை.

காலம் அறிதலின் பயன்

50. அருவினை என்ப உளவோ கருவியால்
காலம் அறிந்து செயின்.

காலமறிதல்

51. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

இடமறிதல்

52. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்.

தெளிவு கொள்ளும் இடம்

53. அன்பறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

உண்மைச் சுற்றத்தார்

54. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

மறதியால் நேரும் கேடு

55. அச்சம் உடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப்(பு) உடையார்க்கு நன்கு.

அரச முறை

56. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் [பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

பயனில் செல்வம்

57. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண்(டு) அன்ன(து) உடைத்து.

நிலத்திற்குப் பாரமாவார்

58. கண்ணோட்டத்(து) உள்ள(து) உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

மனிதருள் மரம்

59. உரம்ஒருவற்(கு) உள்ள வெறுக்கை அஃ(து) [இல்லார்
மரம்மக்கள் ஆதலே வேறு.

முயற்சியுடைமை

60. தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

முயற்சியின் பயன்

61. தெய்வத்தான் ஆகா(து) எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

அமைச்சரின் கடமை

62. அறிகொன்(று) அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

### வினைத் தூய்மை

63. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

### வினைத் திட்பம்

64. வினைத்திட்பம் என்ப(து) ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

### குறிப்பறிதல்

65. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

### படைச் செருக்கு

66. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து.

### பண்புடையார் தொடர்பு

67. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

### ஊதியம் தருவது

68. ஊதியம் என்ப(து) ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

### பழைமை பாராட்டல்

69. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

### சூதின் சிறுமை

70. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல்.

### மானம் உடைமை

71. புகழின்றால் புத்தேள்நாட்(டு) உய்யாதல் என்மற்(று)
இகழ்வார்பின் சென்று நிலை.

### சான்றாண்மை

72. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

சான்றோர் தன்மை

73. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

நாணுடைமை

74. அணியன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு
பிணியன்றோ பீடு நடை. [அஃதின்றேல்

உலகத்தவரின் சுற்றத்தான்

75. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

சோம்பலின் சிறுமை

76. இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

வறுமையின் கொடுமை

77. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

இரத்தலின் இழிவு

78. இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

கயவர் இயல்பு

79. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

கீழோர் செய்கை

80. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்(கு) உய்த்துரைக்க லான்.

—திருவள்ளுவர்

---

சொற்பொருள் :

2. விசும்பு - வானம் ; இங்கு ஆகுபெயரால் வானத்தைக் குறித்தது ; காண்பு - காண்டல்.

3. இருமை வகை - பிறப்பு வீடு என்ற இரண்டனது துன்ப இன்பக் கூறுபாடுகள்; ஈண்டு-இப்பிறவியைக் குறித்தது; பிறங்கிற்று- உயர்ந்தது.

4. சிறப்பு - வீடுபேறு ; ஆக்கம் - மேன்மேல் உயர்த்தல் ; உயிர் - இங்கு மக்கள் உயிரைக் குறித்தது.

5. ஒல்லும் வகை - தத்தமக்கு முடிந்தவாறு ; ஓவாது-ஒழியாது; செல்லும் வாய் - செய்தற்குரிய இடம்; செயல் - செய்க; வியங்கோள் வினைமுற்று.

6. அறத்து ஆறு - அறத்தின் வழி; புறத்தாறு-இல்லறத்திற்குப் புறமான வழி.

8. நிறை-நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தல்; தலை-தலையான காவல்.

9. மாநிலம் - பெரிய நிலம், உரிச்சொல் தொடர்.

10. சார்பு - பற்றுக்கோடு; என்ப - என்று சொல்லுவார்கள். (பலர்பால் வினைமுற்று); மறம் - அறத்திற்குப் புறம்பானது.

11. ஓம்பி - பாதுகாத்து; வேளாண்மை - உபகாரம்.

12. அளைஇ-கலந்து (சொல்லிசை அளபெடை); செம்பொருள் - உண்மைப் பொருள் ; படிறு - வஞ்சனை ; இன்சொலால் - ஆல் அசை.

13. அல்லவை - அறம் அல்லாதன (பாவம்); நாடி - ஆராய்ந்து.

14. ஆற்றல் - ஈடுசெய்வது.

15. நடுவு - நடுவு நிலைமை ; ஒரீஇ (ஒருவி) - நீங்கி (சொல்லிசை அளபெடை).

16. ஊங்கு - மேம்பட்டது.

17. தகைத்து - தன்மையை உடையது.

18. ஒறுத்தார் - தண்டித்தவர் ; பொதித்து வைத்தல் - உயர் குணம் பற்றி இடைவிடாது நினைத்தல்.

19. அழுக்காறு - பொறாமை ; இழுக்கு ஆறு - தீய நெறி ; படுபாக்கு - வருதல்.

20. அஃகாமை - சுருங்காமை ; வெஃகாமை - விரும்பாமை.

21. ஒப்புரவு - உலக நடையினை அறிந்து செய்தல் ; கேடு - பொருள் அழிவு ; கோள் தக்கது - கொள்ளத்தக்கது.

22. குறியெதிர்ப்பு - அளவு குறித்து வாங்கி, வாங்கியவாறே திருப்பிக்கொடுப்பது.

23. எவ்வம் - துன்பம் ; குலன் உடையான் - உயர்குடியில் பிறந்தவன்.

24. அற்றார் - பொருள் அற்றவர் ; அழிபசி - மிகுந்தபசி (எல்லா நன்மைகளையும் அழிக்கும் பசி); வைப்புழி - வைக்கும் இடம் ; (வைப்பு + உழி = வைப்புழி).

25. ஒன்றா உலகம் - தனக்கு இணையில்லாத உலகம், நிலையாததாகிய உலகம் எனினும் பொருந்தும் ; பொன்றுது - அழியாது.

26. வசை - குற்றம் (பழி) ; இசை - புகழ் ; எச்சம் - எஞ்சி நிற்பது;

27. பிறிது - வேறு ஒன்றினது.

28. எய்தலால் - அடைதலால.

29. மழித்தல் - மொட்டையடித்தல் ; நீட்டல் - சடைவளர்த்தல்.

32. நோய் - துன்பம்.

33. நெருநல் – நேற்று.

34. மெய்ப்பொருள் - உண்மைப் பொருள்.

35. காமம் - ஆசை ; வெகுளி - கோபம் ; மயக்கம் - அஞ்ஞானம் ; நாமம் – பெயர் ; நோய் - பிறவி நோய்.

36. தகைமை-மதிக்குந் தன்மை(மதிப்பு); சொல்லாட-உரையாட.

38. மீக்கூறும் - உயர்த்திக் கூறும்.

39. வாழும் உயிர் – மக்கள் உயிர்.

40. உவப்ப - மகிழ்ச்சி அடையும்படியாக ; தலைக்கூடி - சேர்ந்து ; உள்ள - நினைக்கும்படி.

42. நுணங்கிய - நுட்பமான ; வணங்கிய - பணிவான.

43. உலகம் - உலக மக்கள் (ஆகுபெயர்).

44. தமர் - உற்றார் ; வன்மை - வலிமை.

45. இடிப்பார்- அறிவுரைகளைவலியக்கூறுவார்; (அறிவுடையார்) ஏமம் - பாதுகாவல்.

46. ஆக்கம் - இலாபம் ; ஊக்கார் - மேற்கொள்ளமாட்டார்.

47. ஆற்றல் - செய்தல் ; நன்று - நன்மையான வழிகள் ; ஆற்றுக்கடை - செய்யாதபொழுது.

48. கொம்பர் - கொம்பு, இறுதிப்போலி ; இறந்து - கடந்து ; இறுதி - முடிவு. இச்செய்யுள் உவமானத்தைக்கூறி உவமேயப் பொருளைப் பெறவைத்தமையால் பிறிதுமொழிதலணியாகும்.

49. ஆகாறு - (பொருள்) வருகின்றவழி ; இட்டிது - சிறிது ; போகாறு - போகிறவழி; அகலாக்கடை - பெருகாது இருக்குமானல்.

51. கூம்பும் பருவம் - வினைமேல் செல்லாது இருக்குங்காலம் ; சீர்த்தஇடம்-வினைமேல் செல்லும் காலம்; இச்செய்யுள் உவமைஅணி.

52. எஞ்சாமை - ஒன்றையும் தவறவிடாமல்.

53. தேற்றம் - தொழில் செய்வதில் கலங்காமை; அவா - ஆசை.

54. பற்று - இங்குச் செல்வத்தைக் குறித்தது ; பாராட்டுதல் - கொண்டாடுதல்.

55. பொச்சாப்பு - தொழில் செய்வதில் சோர்வு ; அரண் - பாதுகாவல்.

56. கொடியார் - தீயவர் ; பைங்கூழ் - (பசுமை+கூழ்) பசுமையான பயிர் ; களைகட்டல் - களைபிடுங்கிப் பயிரைப் பாதுகாத்தல் ; நேர் - ஒப்பாகும்.

57. செவ்வி - காட்சி; அருஞ்செவ்வி - காணஇயலாமை; இன்னா முகத்தான் - கண்டார்க்குத் துன்பம் தரக்கூடிய முகத்தோற்றம் உடையவன்; பேய்கண்டன்னது - பேய்பெற்றதை ஒத்தது; இச்செய்யுள் உவமை அணி. பேஎய் - அளபெடை.

58. கண்ணோட்டம்-பழகியவர் கூறியதை மறுக்கமாட்டாமை, தாட்சணியம்; உலகியல்-உலக நடை; உண்மை-உயிர்வாழ்தல்; நிலக்கு-நிலத்திற்கு; பொறை - சுமை.

59. உரம் - வலிமைவாய்ந்த அறிவு; உள்ளம்—ஊக்கம்; வெறுக்கை-மிகுதி.

60. தாளாண்மை-முயற்சி; வேளாண்மை — உதவும் தன்மை; வாளாண்மை-வாளை ஆளும் தன்மை; வாளால் செய்யும் தன்மை என்றும் கூறுவர்.

61. தெய்வம் - இங்கு ஊழ்வினையைக் குறிக்கும்.

62. அறி-(அறிந்து சொல்லியவரின்) அறிவு; உழை-பக்கம்; உழையிருந்தான்-அமைச்சன்.

65. அடுத்தது-தன்னை அடுத்துள்ள பொருள்; கடுத்தது-மிகுதியாக இருக்கின்ற ஒன்று; இச் செய்யுள் உவமை அணி.

66. விழுப்புண்-வீரர்களுக்கு முகத்திலும் மார்பிலும் பட்டபுண்; வழுக்கினுள் வைக்கும்-பயன்படாது கழிந்த நாளுக்குள்ளேவைப்பான்; இங்கு வீரன் என்பது தோன்றா எழுவாய்.

67. நவில்தொறும்-சொல்லுந்தோறும்; நூல் + நயம்-நூனயம்; பயில் + தொறும்-பயிறொறும்-பழகுந் தோறும்.

68. கேண்மை-நட்பு; ஒரீஇ-நீங்கி (சொல்லிசை அளபெடை)

69. நோதக்க-வெறுக்கத் தக்க காரியம்; நட்டார்—நண்பர்; கிழமை—உரிமை.

70. சிறுமை-துன்பம்; சீர் - புகழ்.

71. புத்தேள் நாடு-விண்ணுலகம்.

72. நோன்மை - தவம்; நலத்தது - நன்மைகள் அமைந்தது: சால்பு-சான்றாண்மை.

73. பயத்தது-பயனை உடையது.

74. நாணுடைமை - உயர்ந்தோர் தமக்குத் தகுதி இல்லாத காரியங்களைச் செய்தலில் நாணமடைதல்; பீடு நடை - பெருமிதம் வாய்ந்த நடை.

75. குடி-தான் பிறந்தகுடி; செய்தல்-உயரச்செய்தல்.

76. அசைஇ-சோம்பி; நகும்-தனக்குள்ளே சிரிப்பான்.

78. இரவு - இரத்தல்; கரவு - வைத்துக்கொண்டு இல்லை என மறைத்தல்; உள்ள-நினைக்க.

79. கயவர்-கீழ் மக்கள்; மேவன-விரும்புவன. இச்செய்யுள் வஞ்சப்புகழ்ச்சியணி.

80. அறை-அடிக்கப்படுகின்ற; அன்னர் - ஒப்பாவார்; உய்த்துரைத்தல்-எடுத்துச்சென்று தாமே பிறர்க்குச் சொல்லுதல், இச் செய்யுள் உவமை அணி

வினாக்கள் :

1. என்றும் துன்பப்படாதவர், விலங்கை ஒத்தவர், தானே அழியக்கூடியவர், உலகத்தாரின் சுற்றமாக விளங்குபவர், பறையை ஒத்தவர்—இவர்கள் யாவர் எனக்குறிப்பிடுக.
2. மழையின் சிறப்பாக வள்ளுவர் கூறுவது என்ன ?
3. பெண்களுக்கு உயர்ந்த காவலாக அமைவது யாது ?
4. இல்லறத்தின் பயன் என்ன ?
5. இன்சொல்லின் இலக்கணம், செல்வர்களுக்கு வேண்டும் தன்மை, உயர்குடிப் பிறந்தார் தன்மை, வாய்மையின் இலக்கணம், உலகம் படைத்த பெருமை, மக்களின்கண், புலவர்க்குரிய தொழில் — இவைபற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?
6. ஒருவன் தன்னை விற்றும் பெறத்தக்கது யாது ?
7. எத்தகைய அரசனை உலகம் உயர்த்திக் கூறும் ?
8. பொருளைச் செலவிடும் முறைபற்றி வள்ளுவர் கூறுவது யாது ?
9. மனிதருள் மரமாவார் யார் ?
10. நிலமகள் யாரை நோக்கி நகுவாள் ? ஏன் ?

## 2. நாலடியார்

நாலடியார் : (நான்கு + அடி + ஆர்) நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் இயற்றப்பட்ட நூல் என்பது பொருள். இது நாலடி நானூறு எனவும் பெயர் பெறும். ''நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'', ''பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்'' என்று சிறப்பிக்கப்படுதலால் இந்நூல் திருக்குறளோடு வைத்து எண்ணத்தகும் பெருமையினையுடையது.

நாலடியார் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. அறம், பொருள், இன்பம் என்றமூன்று பிரிவுகளில் 40 அதிகாரமாக வகுக்கப்பட்டுள்ளது.

இந்நூற் செய்யுட்கள் கி. பி. 6 அல்லது 7 ஆம் நூற்றுண்டில் இருந்த சமண முனிவர்களால் இயற்றப்பட்டன என்றும் பதுமனர் என்பவரால் தொகுத்துக் கோவையாக்கப்பட்டு, அரிய உரையொன்றும் வகுக்கப்பட்டது என்றும் கூறுவர்.

### பெரியோர் சிறியோர் நட்பு

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. 1

கற்றறிந்தாரின் உயர்வு

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோர் ஆயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். 2

தீயவர் நட்பால் தீமை விளையும்

மனத்தால் மறுவில ரேனும்தாம் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர் —புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக் கால். 5

—சமண முனிவர்கள்.

சொற்பொருள் :

1. நந்தும்-வளரும்; வைகலும்-நாள்தோறும்.

2. களர் நிலம்-உவர் நிலம்; சான்றோர்-அறிவுடைய பெரியோர் ; விளைநிலம்-நன்செய் நிலம் ; தலை நிலம்-உயர்ந்த இடம் ; விழுமிது - மேம்பட்டது ; கடைநிலம்-கீழ்க்குலம்.

களர் நிலம் : (களரையுடைய நிலம்) வேற்றுமைத் தொகை.
விளை நிலம்: வினைத்தொகை

3. மறு-குற்றம்; புனம்-காடு; வெறி-நறுமணம்; வேம்-வேகும்; இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமையணி ; வேங்கை-ஒரு மரம்.

வினக்கள் :

1. பெரியவர், சிறியவர் நட்புக்குக் காட்டப்படும் உவமைகள் யாவை?
2. களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்-இவ்வுவமையால் சுட்டப்படும் உண்மை யாது?
3. தீயவரைச் சார்ந்தவர் தீங்குறுவர் என்பதை நாலடி ஆசிரியர் எங்ஙனம் விளக்குகிறார்?
4. 'நாலடியார்'—இந்நூலைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

## 3. திரிகடுகம்

திரிகடுகம் : சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் இம்மூன்று காரச் சரக்குகளும் திரிகடுகம் எனப் பெயர் பெறும். இவற்றால் ஆன மருந்து உடல் நோயைப் போக்கும். இதைப்போல அறியாமையாகிய நோயைப் போக்குதற்குரிய மும்மூன்று பொருள்களை விளக்கும் பாக்களைக்கொண்ட இந்நூல் இப் பெயர் பெற்றது. இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றாகும்.

இதன் ஆசிரியர் நல்லாதனார். இவர் காலம் கடைச் சங்க காலம். இவர் பாடிய கடவுள் வாழ்த்துச் செய்யுளிலிருந்து, இவர் வைணவ மதத்தைச் சார்ந்தவர் என்பது தெரிகின்றது.

### எல்லோருக்கும் துன்பம் தருபவை

ஆசை பிறன்கட் படுதலும், பாசம்
பசிப்ப மடியைக் கொளலும், கதித்தொருவன்
கல்லானென் றெள்ளப் படுதலும் இம்மூன்றும்
எல்லார்க்கும் இன்னா தன. 1

### உள்ளன போன்று அழிவன

கிளைஞர்க் குதவாதான் செல்வமும், பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும்,—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். 2

### பிறந்தும் பிறவாதவர்

அருளினை நெஞ்சத் தடைகொடா தானும்,
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்,
இறந்தின்னா சொல்லகிற்பானும் இம் மூவர்
பிறந்தும் பிறந்திலா தார். 3

—நல்லாதனார்

**சொற்பொருள் :**

1. பிறன்கண் ஆசைப்படுதல்-பிறர் பொருள்மேல் ஆசைப் படுதல்; பாசம்-அன்பு, இங்கு அன்புடைச் சுற்றத்தைக் குறித்தது; கதித்து-வெறுத்து; எள்ளப்படுதல்-இகழப்படுதல்.

2. போற்றான்-போற்றிப் பாதுகாவாதவன்; இளையன்-அறிவிற் சிறியவன்; குடிமை-உயர் குடிச்சிறப்பு.

3. அடை கொடுத்தல்-தங்கச் செய்தல்; துவ்வான் - உண்ணாதவனாய்; இறந்து-தன் நிலைதவறி; சொல்லகிற்பான்-சொல்லுவான்.

**வினாக்கள் :**

1. எல்லார்க்கும் துன்பந் தருபவை யாவை?
2. எவை உள்ளன போலத் தோன்றிக் கெடும்?
3. பிறந்தும் பிறவாதவராக உள்ளவர் யாவர்?
4. திரிகடுகம்—இதன் பெயர்க் காரணத்தைப் புலப்படுத்துக.

# 4. சிறுபஞ்சமூலம்

சிறுபஞ்சமூலம்: கண்டங்கத்திரிவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர், வழுதுணைவேர் என்ற ஐந்து வேர்களாலாகிய மருந்து உடல் நோயைப் போக்குவதைப்போன்று, ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்பெற்ற ஐந்து பொருள்களும், மக்களின் அறியாமை நோயை அகற்றுதலின் இந்நூல் சிறுபஞ்சமூலம் என்னும் பெயரினைப் பெற்றது. இதுவும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்ருகும்.

இதன் ஆசிரியர் காரியாசான் என்பவராவர். இவரது காலம் ஏறக்குறைய கி. பி. 6ஆம் நூற்ருண்டு என்பர்.

### பெருமையும் சிறுமையும்

பிழைத்தல் பொறுத்தல் பெருமை ; சிறுமை
இழைத்ததீங் கெண்ணி இருத்தல் ;—இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. 1

### கற்றவர் கல்லாதார் முதலியோர்

தேவரே கற்றவர் ; கல்லாதார் தேருங்கால்
பூதரே ; முன்பொருள் செய்யாதார்–ஆதரே
துன்பமி லேம்பண்டு யாமே வனப்புடையேம் ;
என்பார் இருகால் எருது. 2

### உறுதிமொழிகள்

பெருங்குணத்தார்ச் சேர்மின் பிறன்பொருள்வெள வன்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின் ; ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின்; வருங்காலன் திண்ணிதே ;
வாய்ச்சொல்லே அன்று ; வழக்கு. 3

—காரியாசான்.

சொற்பொருள் ;

1. பிழைத்தல் - பிறர்செய்த தீமைகள் ; பகைகெட - பகைமை நீங்க ; பல்பொருளார் - பொருள் மிகுதியும் படைத்தவர் ; நகை - பிறர் பழிப்பு.

2. பூதர்-பூதங்களை ஒப்பர் ; முன்-முதுமைப் பருவம் வருவதற்கு முன் ; பொருள் செய்யாதார் - பொருளைத் தேடாதவர் ; ஆதர்- அறிவில்லாதவர் ; எருது - எருதுகட்கு இணையாவார்.

3. பெருங்குணத்தார் - உயர்ந்த குணமுடைய பெரியோர்; சேர்மின், வெளவன்மின், கழிமின், காமின்-ஏவல் பன்மை வினை முற்றுக்கள்; வெளவன்மின் - அபரிக்காதீர்கள்; கருங்குணம் - கீழ்மைக்குணம்; கழிமின் - நீக்குங்கள்; திண்ணிது - உறுதி; வழக்கு - உலக நடைமுறை.

வினுக்கள் :

1. ஒருவனுக்குப் பெருமையையும் சிறுமையையும் தருவனவாக ஆசிரியர் கூறுவன யாவை?
2. தேவர், பூதர், ஆதர், இருகால் எருது - இவர்கள் யார் யார்?
3. சிறுபஞ்சமூல ஆசிரியர் மக்களுக்குக் கூறும் அறிவுரை என்ன?
4. சிறுபஞ்சமூலம் — இந்நூலுக்கு இப்பெயர் வரக் காரணம் என்ன?

## 5. அறநெறிச்சாரம்.

அறநெறிச்சாரம்: அறநெறிகளில் சாரமானவற்றைப் பாக்களில் கூறும் நூல். இது காட்சி, ஒழுக்கம், ஞானம் என்ற மூன்று பெரும்பகுதிகளையுடையது.

இதன் ஆசிரியர் முனைப்பாடியார் என்பவராவர். இவரது காலம் கி. பி. 13ஆம் நூற்றுண்டு என்பர்.

### தற்பெருமை ஆகாது

பலகற்றேம் யாம்என்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்றுர் கண்ணும் உளவாம் பலகற்றுர்க்(கு)
அச்சாணி அன்னதோர் சொல். 1

### உயர்குணங்கள்

தூயவாய்ச் சொல்லாடல் வன்மையும் துன்பங்கள்
ஆய பொழுதாற்றும் ஆற்றலும்—காய்விடத்து
வேற்றுமை கொண்டாடா மெய்ம்மையும் இம்மூன்றும்
சாற்றுங்கால் சாலத் தலை. 2

### உண்மை உறவினர்

நல்லறம் எந்தை; நிறைஎம்மை; நன்குணரும்
கல்வியென் தோழன்; துணிவெம்பி—அல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ? பொருளாய
இச்சுற்றத் தாரில் எனக்கு. 3

—முனைப்பாடியார்.

சொற்பொருள் :

1. அலர் கதிர் - விரிந்த கிரணங்கள் ; கைக்குடை - சிறுகுடை ; அச்சாணி - கடையாணி.

2. தூயவாய் - (சொல்லினும் பொருளினும்) குற்றம் இல்லாதன வாய் ; ஆற்றும் ஆற்றல் - தளராதிருக்கும் ஆற்றல் ; காய்வு இடத்து- தம்மை வெறுப்பவர் இடத்தில் ; சால - உரிச்சொல்.

3. எந்தை - எம் + தந்தை ; நிறை - மன அடக்கம் ; எம்பி - எம் + தம்பி.

விஞக்கள் :

1. ஏன் தற்புகழ்தல் கூடாது ?
2. சாற்றுங்கால் சாலத் தலையாவன யாவை ?
3. உண்மை உறவினராக முனைப்பாடியார் கூறுவன யாவை ? இதனால் நீவிர் அறிவதென்ன ?

# III. கதைப் பகுதி

## 1. நள வெண்பா

### சுயம்வர காண்டம்

நளன் நிடதநாட்டு மன்னன். அவன் வரலாற்றை வெண்பாவால் கூறும் நூல் நளவெண்பா ஆகும். இந்நூல் சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று பிரிவுகளை யுடையது.

ஆசிரியர் புகழேந்திப் புலவர் ஆவார். இவர் தொண்டை நாட்டில் உள்ள பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். வெண்பா பாடுவதில் வல்லவர். இவர் மள்ளுவநாட்டு மன்னன் சந்திரன் சுவர்க்கியால் ஆதரிக்கப் பெற்றவர். இவர் அம்மன்னவனைத் தமது நூலில் பல இடங்களில் போற்றிப் பாடியுள்ளார். இவரது காலம் கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டு. வைணவ மதத்தவர். ஒட்டக்கூத்தர், கம்பர் முதலியோர் இவர் காலத்தவர் என்பர்.

நம் பாடப்பகுதி: நளன் சோலையில் கண்ட அன்னத்தின் வாயிலாக விதர்ப்ப நாட்டரசன் மகள் தமயந்தியின் குண நலன்களை அறிந்து அவளிடம் அன்பு பூண்டு, அவ்வன்னத்தையே அவளிடம் தூதனுப்பி, முடிவில் சுயம்வரத்தில் தமயந்தியை மனைவியாகப் பெற்று மகிழ்தல்.

#### மாவிந்த நகரச் சிறப்பு

மாமனு நூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகும் தடந்தோளான்—காமருபூந்
தாரான் முரணை நகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி. 1

#### நளனது செங்கோற் சிறப்பு

சீத மதிகுடைக்கீழ்ச் செம்மை அறம்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு. 2

### நளன் சோலையை அடைதல்

தேரின் துகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனல்நனைப்ப வேயடைந்தான்—கார்வண்டு
தொக்கிருந்(து)ஆ லித்துழலும் தூங்கிருள் வெய்
[யோற்கொதுங்கிப்
புக்கிருந்தா லன்ன பொழில். 3

### அன்னத்தின் தோற்றம்

நீணிறத்தால் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தால் பொய்கைத் தலம்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு. 4

### நளன் அன்னத்தைப் பிடித்துவரக் கூறுதல்

பேதை மடவன்னம் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழும் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா என்றான் பெயர்ந்து. 5

### மகளிர் அன்னத்தைப் பிடித்து வருதல்

நாடிமட அன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற(து) ஒப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. 6

### அன்னத்தின் அச்சம்

அன்னந் தனைப்பிடித்தங்(கு) ஆயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. 7

### நளன் ஆறுதல் கூறல்

அஞ்சல் மடஅனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 8

### நளனிடம் தமயந்தியைப்பற்றி அன்னம் கூறுதல்

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே! உன்றன்
இசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையில்
தமையந்தி என்றோதும் தையலாள் மென்றோள்
அமையந்தி என்றோர் அணங்கு. 9

### அன்னம் தமயந்தியைப் புகழ்ந்து கூறல்

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு. 10

[தமயந்தியின்மீது அன்புகொண்ட நளன், அன்னத்தை அவள்பால் தூதனுப்ப, அன்னம் தமயந்தியை அடைதல்]

### நளனிடமிருந்து வந்த அன்னத்தைத் தமயந்தி வினவுதல்

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடம்சேர் ந்(து) ஆங்கதனை
என்னுடல் சொல்என்றாள் ஈங்கு. 11

### நளனது குணச்சிறப்பை அன்னம் வெளிப்படுத்தல்

செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்—மெய்ம்மை
நளன்என்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளன்என்பான் வேந்தன் உனக்கு. 12

### தமயந்தியின் வேண்டுகோள்

வாவி உறையும் மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற்(கு) என்நிலைமை சென்றுரைத்தி என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. 13

### வீமன் தமயந்தியின் சுயம்வரத்தை அரசர்கட்கு அறிவிக்கச் செய்தல்

மங்கை சுயம்வரம்நாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைகென்(று) இயம்பினன்—பைங்கமுகின்
கூந்தல்மேல் கங்கைக் கொழுந்தோடும் நன்னாடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு. 14

### தமயந்தி சுயம்வரத்திற்கு மன்னர்கள் வருதல்

மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டிசைக்கும்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி—நாமத்தால்
பாவேய்ந்த செந்தமிழாம் என்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம். 15

### நளன் குண்டினபுரம் அடைதல்

சடைச்செந்நெல் பொன்விளைக்கும் தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொற்றும வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழும் நகர். 16

### சுயம்வரத்திற்குத் தேவர்கள் வருதல்

மால்வரையை வச்சிரத்தால் ஈர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து. 17

### தமயந்தி சுயம்வர மண்டபத்தை அடைதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 18

### தோழி தமயந்திக்கு மன்னர்கள் சிறப்புக்கூறல்

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென்று இயலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 19

### குருநாட்டு மன்னன் சிறப்பு

தெரியில் இவன்கண்டாய் செங்கழுநீர் மொட்டை
அரவின் பசுந்தலையென் றஞ்சி—இரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புள் தாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன். 20

### கோசலநாட்டரசன் பெருமை

அன்னம் துயிலெழுப்ப அந்தா மரைவயலில்
செந்நெல் அரிவார் சினையாமை—வன்முதுகில்
கூனிரும்பு தீட்டும் குலக்கோ சலநாடன்
தேனிருந்த சொல்லாய் இச் சேய். 21

### காந்தார நாட்டு வேந்தன் மாண்பு

மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகும் அன்னம் தனிக்கயிற்றில்—போம்நீள்
கழைக்கோ தையரேய்க்கும் காந்தார நாடன்
மழைக்கோதை மானே! இம் மன். 22

### தமயந்தி நளனுருவாயிருந்த தேவர்களைக் கண்டு மயங்கல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்;—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்(று)
ஊசலா டுற்றாள் உளம். 23

### தமயந்தி நளனை அறிதல்

கண்ணிமைத்த லால், அடிகள் காசினியில் தோய்தலால்,
வண்ண மலர்மாலை வாடுதலால்,—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு. 24

### தமயந்தி நளனுக்கு மாலை சூட்டல்

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட, வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 25

—புகழேந்திப் புலவர்.

சொற்பொருள் :

1. மனுநூல் - மனுசாத்திரம் ; சந்திரன் சுவர்க்கி - மள்ளுவ நாட்டு மன்னன் ; தாமரையாள் - திருமகள் ; வைகும் - தங்கும் ; தட + தோள் = தடந்தோள் ; தார் - மாலை ; முரணைநகர் - மள்ளுவ நாட்டின் தலைநகர்.

2. சீதம் - குளிர்ச்சி ; மதிக்குடை - சந்திரவட்டக் குடை ; பூ + தார் = பூந்தார் ; பசுமை + கிளி = பைங்கிளி ; ஆடல் - வலிமை.

3. துகள் - புழுதி ; இழையார் - ஆபரணம் அணிந்த பெண்கள் ; குழல் - கூந்தல் ; வேரி - தேன் ; கருமை + வண்டு = கார் வண்டு ; தொக்கு இருந்து - கூடியிருந்து ; ஆலித்து - ஆரவாரித்து ; உழலும் - சுற்றி அலையும் ; தூங்கு இருள் - மிகுந்த இருள் ; வெய்யோன் - சூரியன்.

4. நீள் + நிறம் = நீணிறம் - மிகுந்த ஒளி ; பெயர - நீங்க ; நீடிய - நீண்ட; தாள் + நிறம் = தாணிறம்; பொய்கைத்தலம் - குளத்தின் நீர்ப்பரப்பு ; மாண் நிறம் - சிறந்த புகழ் ; அப்பு - நீர் ; முளரி - தாமரை ; அன்னம் + புள் = அன்னப்புள்.

5. பேதை - பெண் ; இங்கு இயல்பு விளியாக வந்தது ; பிழையாமல் - வருந்தாமல் ; மேதிக்குலம் - எருமைக் கூட்டம்.

6. மயில் + குழாம் - மயிற்குழாம் ; குழாம் - கூட்டம் ; வல்லியர் - வல்லிக்கொடி போன்ற பெண்கள் ; கொண்டு என்பது இடைக் குறையாய்க் கொடு என வந்துள்ளது ; போந்து - போய்.

7. மலங்கிற்று - வருந்தியது ; வான்கிளை - மிகுந்த சுற்றம் ; (கிளை - உவமையாகு பெயர்),

8. மடம் - இளமை ; அணி நடை, மணி நடை - அழகிய நடை ; வஞ்சி - கொடி ; விஞ்சியது - மேம்பட்டது ; மாண - மிகுதியாக ; மன் - அரசன்.

9. திசைமுகந்த - எட்டுத் திசைகளையும் தன்னிடத்தேகொண்ட; கவிகை - குடை ; இசை - புகழ்; வசை - குற்றம்; மென்மை + தோள் = மென்றோள் ; அமை - மூங்கில் ; அமையந்தி - மூங்கிலைப்போல் பொருந்திய.

10. நாற்குணம் - அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்கள் (இவை மகளிர்க் குரியன) ; நாற்படை - நான்கு படை, (யானை, குதிரை, தேர், வீரர்) ; ஐம்புலன் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றால் அனுபவிக்கும் உணர்வுகள் ; அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன ; ஆர்க்கும் - ஒலிக்கும். சிலம்பு - மகளிர் காலில் அணியும் அணி ; வதனம் - முகம்.

11. நன்னுதல் - நல்ல நெற்றி, இங்கு நல்ல நெற்றியையுடைய தமயந்தி ; தன் + ஆடல் = தன்னாடல் ; ஆடல் - விளையாட்டு ; என் + நாடல் = என்னாடல் ; நாடல் - நாடுவது. நாடல் என் எனக் கூட்டுக.

12. செம்மனம் - செம்மையான உள்ளம் ; தண்ணளி - குளிர்ந்த அருள் ; மேல் + நிலம் = மேனிலம் ; நான்கு + நிலம் = நானிலம் ; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு வகையாக அமைத லால் நிலத்திற்கு நானிலம் எனப் பெயர் வழங்கும்.

13. வாவி - குளம் ; ஆவியாதி உவந்தளித்தாய் என மாற்றுக. ஆல் - அசை ; பாவை - பெண் ; (உவமையாகு பெயர்).

14. கமுகு - பாக்கு ; கூந்தல் - பூவின் மெல்லிய உறுப்பு ; கங்கைக் கொழுந்து - கங்கையாற்று நீர்த்திவலை ; நன்னுடன் - நல்ல நாட்டையுடையவன், வீமன்.

15. மால் களிறு - மதமயக்கமுடைய யானை ; தாமம் - மாலை ; நாமம் - பெயர், புகழ் ; பாவேய்ந்த - பாடல்களமைந்த.

16. கடல் + தானை = கடற்றானை - கடலை ஒத்த சேனை (உவமைத் தொகை) ; அடல் - போரிடுதல் ; நல்லுயிர் - நல்ல உயிர், இங்குத் தமயந்தியைக் குறிக்கும், (நளனது நல்ல உயிர்போன்றவளாதலின்); நகர் - வீமன் தலைநகர் (குண்டினபுரம்).

17. மால் - பெரிய, கரிய ; வச்சிரம் - இந்திரனது படை ; ஈர்ந்தான் - அரிந்தான் ; வானவர் - தேவர், இங்கு, அக்கினி, வருணன், யமன் என்ற மூவரையும் குறிக்கும் ; மாலை - மணமாலை ; குறித்து - விரும்பி.

18. விழித்தாமரை - விழிகளாகிய தாமரை மலர்கள் (உருவகம்) ; மண்டபம் - சுயம்வர மண்டபம் ; புக்காள் - புகுந்தாள் ; பொன் - திருமகள். இச் செய்யுள் உவமையணி.

19. பரிசு - தன்மை ; இயல் அணங்கு - நற்குணம் பொருந்திய பெண் (தோழி.) தார் வேந்தன் - இங்கு வீமனைக் குறித்தது; கொடி - உவமையாகு பெயராய்த் தமயந்தியைக் குறித்தது.

20. மொட்டு - அரும்பு ; அரவு - பாம்பு ; பிள்ளைக்குருகு - அன்னக்குஞ்சு ; வள்ளை - ஒருவகைக் கொடி.

21. கூன் + இரும்பு = கூனிரும்பு - வளைந்த அரிவாள் ; தேனிருந்த - தேன் போன்று இனிய.

22. கயம் - குளம் ; கழைக் கோதையர் - கழைக் கூத்தாடும் மகளிர் ; மான் - உவமையாகு பெயராய்த் தமயந்தியைக் குறித்தது.

23. காவலர் - அரசர் ; சேடி - தோழி ; ஈரிருவர் - நால்வர், இந்திரன், வருணன், யமன், அக்கினி ஆகிய தேவர் நால்வர் ; ஊசலாடுற்றாள் - தடுமாற்றமடைந்தாள்.

24. காசினி - பூமி ; நறுந்தாமரை விரும்பும் நன்னுதல் - தாமரை மலரில் விரும்பி வாழும் இலக்குமி.

25. வெள்கி - வெட்கமுற்று ; கண்ணகல் - இடமகன்ற ; ஞாலம் - உலகம் ; (ஆகுபெயர்) ; வள்மாலை - மயக்கம் ; வயம் - வெற்றி ; பொன் - திருமகள் போன்ற தமயந்தி.

### வினாக்கள்

1. 'நளவெண்பா'—இதன் ஆசிரியர் யார்? இவரைப்பற்றிக் குறிப்பு எழுதுக.
2. புகழேந்திப் புலவர் செய்ந்நன்றி மறவாதவர் என்பதனைச் சான்றுகாட்டி விளக்குக.
3. நளனது செங்கோற் சிறப்பை வரைக.
4. அஞ்சிய அன்னத்திற்கு அரசன் காட்டிய ஆறுதல் மொழி என்ன?
5. அன்னம் தமயந்தியைப்பற்றி நளனிடம் கூறியவை யாவை?
6. அன்னம் தமயந்தியிடம் நளனைப் பாராட்டி உரைத்த விதம் யாது?
7. தமயந்தி அன்னத்திடம் வேண்டிக்கொண்டது என்ன?
8. குருநாட்டரசன், கோசலநாட்டரசன், காந்தாரநாட்டு மன்னன்—இவர்கள் தமயந்திக்கு எவ்வாறு எடுத்துரைக்கப் பெற்றனர்?
9. சுயம்வர மண்டபத்தில் தமயந்தியின் மனம் ஏன் ஊசலாடத் தொடங்கியது?
10. தமயந்தி உண்மையான நளனை எவ்வாறு கண்டறிந்து மாலை சூட்டினாள்?
11. பின்வரும் உவமைகளை உவமேயங்களோடு பொருத்தி விளக்குக:
    (1) "நல்ல மயிற்குழாம், ஓடி வளைக்கின்ற(து)ஒப்ப"
    (2) "செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
    பொய்கைவாய்ப் போவதே போன்று"
12. இடஞ்சுட்டி விளக்குக:
    (1) "என்னுடல் சொல் என்றாள்"
    (2) "என்னுடைய ஆவி உவந்தளித்தாய்"
    (3) "ஊசலா டுற்றாள் உளம்"

## 2. திருவிளையாடற் புராணம்

திருவிளையாடற்புராணம்: (திரு + விளையாடல் + புராணம்) மதுரை சோமசுந்தரக் கடவுள் தம் அடியார் பொருட்டாகச் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப்பற்றிக் கூறும் பழைய வரலாற்று நூல் என்பது பொருள். புராணம்-பழைய வரலாறு. இந்நூல் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று பிரிவுகளை உடையது. நம் பாடப்பகுதி கூடற் காண்டத்தில் உள்ளதாகும்.

இந்நூலை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர் ஆவார். இவர் சோழ நாட்டில் உள்ள வேதாரணியம் என்னும் திருமறைக் காட்டில் பிறந்தவர். தந்தையார் பெயர் மீனாட்சிசுந்தரேச தேசிகர்; சைவ வேளாள குலத்தினர். இவரது காலம் சுமார் முந்நூறு ஆண்டு களுக்குமுன் என்பர்.

[நம் பாடப் பகுதியில், சிவபெருமான், பாணபத்திரன் பொருட்டு, விறகு சுமந்த தலையராய் வந்து, ஏமநாதன் என்பானை இசையால் வென்று பாணபத்திரனுக்கு அருள் செய்யும் சிறப்புக் கூறப் பட்டுள்ளது.]

## விறகு விற்ற படலம்

### ஏமநாதன் வருகை

மன்றலந் தெரியன் மார்பன் **வரகுணன்** செங்கோல் ஓச்சிப்
பொன்றலங் காவ லானிற் பொலியுநாள் **ஏம நாதன்**
என்றொரு விறல்யாழ்ப் பாணன் வடபுலத் திருந்தும்
போந்து
வென்றிகொள் விருதி னோடும் விஞ்சைசூழ் மதுரை
சார்ந்தான். 1

### ஏமநாதனின் இசை விருந்து

பூழியர் பெருமான் கோயில் புகுந்துவேத் தவையத் தெய்திச்
சூழிமால் யானை யானைத் தொழுதுபல் புகழ்கொண் டாடி
ஏழிசை மழலை வீணை இடந்தழீஇச் சுருதி கூட்டி
வாழியின் னிசைத்தேன் மன்னன் அஞ்செவி வழியப்
பெய்தான். 2

### ஏமநாதனின் செருக்கு

மீனவன் வரிசை பெற்ற செருக்கினும் விருதி னானும்
மானமேல் கொண்டு தன்னோடு இன்னிசை பாட வல்ல
தானயாழ்ப் புலவர் வேறிங் கில்லெனத் தருக்குஞ் செய்தி
கோனறிந் துழையர்க் கூவிப் "பத்திரற் கொணர்தி"
ரென்றான். 3

### பாணபத்திரன் ஏமநாதனிடம் இசை வாதம் புரிய ஒப்புதல்

உழையரால் விடுக்கப் பட்ட பத்திரன் உவரி வென்றோன்
கழல்பணிந் தருகு நிற்பக் கௌரிய னோக்கிப் "பாணி
பழகிசை வல்லா னோடும் பாடுதி கொல்லோ" என்ன
மழலையாழ் இடந்தோள் இட்ட பாணர்கோன் வணங்கிச்
சொல்வான். 4

### மன்னவன் கட்டளை

"தென்னவர் பெரும யானுன் திருவுள வலனுங் கூடல்
முன்னவன் அருளூ மூட்டு முயற்சியான் முயன்று பாடி
அன்னவன் விருது வாங்கி அவனைவீ றழிப்பன்'' என்றான்
மன்னவன் "நாளைப் பாடு போகெ''ன வரைந்து சொன்னான். 5

### பாணபத்திரன் இறைவனை வேண்டுதல்

மையணி மிடற்றி னானை மதுரைநா யகனை வந்தித்(து)
"ஐயனே அடியேற்(கு) இன்றுன் அருட்டுணை செய்யல் வேண்டும்
மெய்யனே'' என்று போற்றி வேண்டுகொண் டன்பு தோய்ந்த
பொய்யறு மனத்தான் இல்லம் புக்கினி திருந்தான் இப்பால். 6

### இறைவன் விறகாளாய் வருதல்

வேறு

வருத்த னாகிவந் திரந்தவ னிசைப்பகை மாற்ற
விருத்த னாம்விற காளென விண்ணிழி விமானத்(து)
ஒருத்த னாரறி வாகிய வுண்மையா னந்தத்
திருத்த னார்தம திச்சையாற் றிருவுருக் கொள்வார். 7

### விறகாளின் தோற்றம்

அழுக்கு மூழ்கிய சிதரசைத் தவிர்சடை யமுதம்
ஒழுக்கு வெண்மதி வாங்கியே செருகிய தொப்ப
மழுக்கு கூனல்வெள் வாய்க்குயம் வலம்படச் செருகி
இழுக்கு தேய்செருப் பருமறை கடந்ததா ளேற்றி. 8

பழையதோர் பொல்லம் பொத்திய பத்தர்யாழ்க் கோல்தோள்
உழைய தாகவிட் டெருத்தலை தூசலா டியவொண்
குழைய காதினிற் களவிணர்க் குறியகாய் தூக்கித்
தழையும் வார்சிகை சரிந்திடச் சுமையடை தாங்கி. 9

தறிந்த விந்தனந் தினந்தொறுந் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை யுடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்குறை மங்கையுங் காணா(து)
எறிந்த விந்தனச் சுமைதிரு முடியின்மே லேற்றி. 10

என்பு தோன்றியூ னின்றியே யிளைத்தயாக் கையராய்
அன்பு தோன்றியே கண்டவ ரகங்கனிந் திரங்க
வன்பு தோன்றிய மனமொழி கடந்ததாண் மலர்பார்
முன்பு தோன்றிய தவத்தினுல் முடிமிசைச் சூட. 11

விறகாளாய் வந்த இறைவன் ஏமநாதன் வீட்டை அடைதல்

நடந்து கொள்ளுநர்க் கருவிலே பகர்ந்துநான் மாடம்
மிடைந்த வீதியுங் கவலையு முடுக்கரு மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன்மால் சூழ்ச்சியும் பகலுங்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச் செல்வார். 12

விறகாளாய் வந்த இறைவன் இசைபாடுதல்

எடுத்த விந்தன மொருபுறத் திறக்கியிட் டுன்றி
அடுத்த வன்புறந் திண்ணைமீ தமர்ந்திளைப் பாறித்
தொடுத்த வின்னிசை சிறிதெழீஇப் பாடினர் சுருதி
மடுத்தி யாரவன் பாடுவான் என்றிசை வல்லான். 13

ஏமநாதன் வினவும் இறைவன் விடையும்

வண்டறை கொன்றை யான்முன் வந்து, "நீ யாரை"
யென்றான்
"பண்டரு விபஞ்சி பாண பத்திர னடிமை" யென்றான்
முண்டக மலரோன் மாயோன் புரந்தரன் முதன்மற் றேனை
அண்டருந் தன்குற் றேவ லடிமையாக் கொண்ட
வம்மான். 14

"கனியிசைக் கிழவன் தன்கீழ்க் கற்பவ ரனேகர் தம்முள்
நனியிசைக் கிழமை வேட்டு நானுமவ் வினைஞ னானேன்
தனியிசைக் கிழவ னேக்கித் தசையெலா மொடுங்க மூத்தாய்
இனிஇசைக் கிழமைக் காகா யென்றெனைத் தள்ளி
விட்டான். 15

"வெவ்விற கெறிந்து கட்டி விலைபகர்ந் தேனு மைய
இவ்வயி றோம்பு கேனென் றித்தொழில் பூண்டே"னென்ன
நைவளந் தெரிந்த ஏம நாதனும், "விறகு மள்ளா,
அவ்விசை யொருகா லின்னும் பாடென" ஐயன் பாடும். 16

### இறைவன் பாடிய இசைச் சிறப்பு

பைத்தலை விடவாய் நாகம் பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய் வல்லியம் மருட்கை எய்தித்
தத்தமா றறியா வாகித் தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளும் இசைவலைப் பட்ட வம்மா! 17

கண்ணிறை நுதலோன் சாம கண்டத்தின் எழுந்த முல்லைப்
பண்ணிறை தேவ கீதஞ் சராசர வுயிரும் பாரும்
விண்ணிறை திசைக ளெட்டும் விழுங்கித் தன்மயமே யாக்கி
உண்ணிறை யுயிரு மெய்யு முருக்கிய திசைவல் லானே. 18

### இசையைக்கேட்ட ஏமநாதன் நிலை

"இழுக்கி விட்டவிக் கிழமக னிசையிதே லந்த
வழுக்கில் பத்திரன் பாடலெற் றேவென" மதியா
அழுக்க முற்றெழுந் திசைவலான் அடுத்ததன் பண்டர்
குழுக்க ளுங்குலை குலைந்திட இருள்வழிக் கொண்டான். 19

### பாணபத்திரன் கனவில் இறைவன் அருளுதல்

அன்று பத்திரன் கனவில்வந் தாடலேற் றழகர்
"இன்று பத்திர! இசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று பத்திர னடிமையா மென்றுபாண்" செய்து
வென்று பத்திரஞ் செய்துநின் வேண்டுகோள் என்றார். 20

### பாணபத்திரன் திருக்கோயிலை அடைதல்

கண்மலர்ந்தெழு பத்திரன் கரையிலா வுவகை
உண்மலர்ந்தெழு மன்புகொண்(டு) ஊக்கவெங் கதிரோன்
விண்மலர்ந்தெழு முன்புபோய் விசும்பிழி கோயிற்
பண்மலர்ந்தநான் மறைப்பொரு ளடித்தலம்
பணிந்தான். 21

### பாணபத்திரன் முறையிடு

"கடிய கானகம் புகுதவோ கட்டிய விறகை
முடியி லேற்றவோ முண்டகத் தாள்களை ந் திடவந்(து)
அடிய னேன்பொருட் டடாதசொற் பகரவோ வஞ்சக்
கொடிய னேன்குறை யிரந்தவா விளைந்ததே குற்றம்." 22

"நெடிய னேமுதல் வானவர் நெஞ்ச முஞ் சுருதி
முடிய னேகமுங் கடந்தநின் முண்டகப் பாதஞ்
செடிய னேன்பொருட் டாகவிச் சேணிலந் தோய்ந்த
அடிய னேற்கெளி தாயதோ வையநின் பெருமை" 23

பாணபத்திரன் அரசனைக் காணல்

என்ன வந்தனை செய்துநின் றேத்தியங் கயற்கண்
மின்ன மர்ந்தபங் கொருவனை வலங்கொடு மீண்டு
மன்னர் தம்பிரா னாகிய வரகுண தேவன்
தன்னை வந்தடி பணிந்தனன் தந்திரிக் கிழவோன். 24

மன்னவன் பாணபத்திரனைச் சிறப்பித்தல்

பத்தர் யாழிசைக் கிழவனைப் பணைக்கைமான் எருத்தில்
வைத்து மாடநீள் நகர்வலஞ் செய்வித்து மலர்ந்த
சித்த மாழ்ந்திட வரிசைகண் மிதப்புறச் செய்து
தந்து மான்றுடைத் தேரினன் தன்மனை புகுவான். 25

சொற்பொருள் :

1. மன்றல்-மணம்; தெரியல்-மாலை; பொன்தலம் காவலான்-தேவேந்திரன்; விறல்-வலிமை; வடபுலம்-வடநாடு (வடக்கு+புலம்); விருது-வெற்றிச்சின்னம்; விஞ்சை-கலை(போலி).

2. பூழியர் - பாண்டியர்; வேந்து + அவை - வேத்தவை; சூழி-யானையின் முகபடாம்; மழலை - இனிமை; இசைத்தேன் - உருவகம்.

3. வரிசை-சிறப்பு; மானம்-தன்மதிப்பு; உழையர்-ஏவலாளர்.

4. உவரி-கடல்; உவரிவென்றோன்-பாண்டியன்; கழல்-வீரர் காலில் அணியும் ஓர் அணி, இங்குத் தானியாகுபெயராய்க் கால்களைக் குறித்தது; பாணி-தாளம்.

5. கூடல் - மதுரை; முன்னவன் - முதல்வன், சோமசுந்தரக் கடவுள்; வீறு-பெருமை.

6. மை-கருமை; மையணிமிடறு-விடத்தால் கறுத்த கழுத்து; அருள் + துணை-அருட்டுணை.

7. இழி-இறங்கிவந்த; திருத்தனர்-இறைவன்.

8. சிதர்-கந்தை; அசைத்து-உடுத்தி; குயம்-அரிவாள்.

9. பொல்லம்பொத்திய - இணைத்துத் தைத்த; பத்தர் - யாழின் குடப்பாகம்; எருத்து-கழுத்து; குறிய-சிறிய.

10. இந்தனம்-விறகு; பங்கி-தலைமயிர்; எறிந்த, தறிந்த-வெட்டிய.

11. வன்பு-வலிமை, பார்-நிலம், நிலமகள்.

12. அருவிலை - தகாதவிலை ; கவலை - நாற்சந்தி ; முடுக்கர் - குறுகிய தெரு, சந்து ; மிடைந்து - கலந்து ; சூழ்ச்சி - ஆராய்ச்சி ; கடைத்தலை - இலக்கணப்போலி.

13. எழீஇ-எழுப்பி; சுருதி-இசைச்சுரத்திற்கு ஆதாரமான ஒலி.

14. விபஞ்சி - வீணை ; முண்டகம் - தாமரை ; புரந்தரன் - இந்திரன் ; அண்டர் - தேவர்.

15. கிழமை - உரிமை ; வேட்டு - விரும்பி ; வினைஞன் - தொழில் புரிவோன்.

16. நைவளம்-ஒருவகைப் பண் ; விறகு மள்ளன்-விறகுக்காரன்.

17. பை - படம் ; மஞ்ஞை - மயில் ; நால்வாய் - தொங்கும்வாய். மத்தமான் - யானை ; புல்வாய்-மான் ; வல்லியம்-புலி ; மாறு - பகைமை.

18. கண்டம் - கழுத்து ; முல்லைப்பண் - சாதாரி என்ற பண் ; கீதம் - பாடல் ; இசைவல்லான் - ஏமநாதன்.

19. இழுக்கிவிட்ட - தள்ளிவிடப்பட்ட ; வழுக்கில் - குற்றமற்ற ; அழுக்கம் - கவலை ; பண்டர்குழு - பாணர் கூட்டம் ; குலைகுலைந்திட - நிலைகுலைந்து அழிய.

20. ஆடல் - வலிமை ; ஏற்றழகர் - இடபத்தை ஊர்தியாகக் கொண்ட சோமசுந்தரர் ; பாண்செய்து - இசைபாடி.

21. கண்மலர்ந்து - விழித்து ; விசும்பு - வானுலகம்.

22. அடாத சொல் - 'பாணபத்திரன் அடிமை' என்ற சொல்.

23. சுருதி - வேதம் (காதால் கேட்கப்படுவது).

24. வந்தனை - வழிபாடு ; அமர்ந்த - விரும்பிய ; வலங்கொடு - வலம் வந்து ; தந்திரிக்கிழவன் - யாழுக்கு உரியவன் ; பாணபத்திரன்; தந்திரி - யாழ்.

25. பணைக்கைமான் - யானை ; தத்துமான் - குதிரை ; தொடை - தொடுக்கப்பட்ட.

வினாக்கள் :

1. மன்னவன் பாணபத்திரனை ஏன் வருவித்தான் ?
2. இறைவன் பாணபத்திரனுக்காக ஆற்றிய திருவிளையாடலைச் சுருக்கி வரைக.
3. இறைவன் விறகாளாய் வந்த கோலத்தினைப் புலப்படுத்துக.
4. இசைகேட்டுவந்த ஏமநாதன் இறைவனை வினவியதென்ன? அதற்கு அவர் அளித்த மாற்றம் யாது ?
5. இறைவன் பாடிய இசையின் வளத்தினை விவரிக்க.
6. இறைவன் பாடிய இசையினைக் கேட்ட ஏமநாதன் அடைந்த உள நிலையினைக் குறிப்பிடுக.
7. இறைவன் பாணபத்திரன் கனவில் கூறியதென்ன ?
8. விழித்தெழுந்த பாணபத்திரன் இறைவன்முன் இரங்கிக் கூறியன யாவை ?

9. பாண்டியன் பாணபத்திரனுக்குச் செய்த சிறப்புக்களைக் குறிப்பிடுக.
10. இடஞ்சுட்டி விளக்கந் தருக :
    1. "பாணி பழகிசை வல்லானேடும் பாடுதி கொல்லோ"
    2. "வென்று பத்திரம் செய்தும்"
    3. "அடிய னேற்கெளி தாயதோ"

## 3. மணிமேகலை

கோவலனுக்கு மாதவியிடம் பிறந்தவள் மணிமேகலை. அவள் வரலாறு கூறும் இந்நூல், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. மணிமேகலைத் துறவு எனவும் இந்நூல் பெயர் பெறும். புத்த மதக் கோட்பாடுகளைப் பெரிதும் கூறும் நூல்.

ஆசிரியர்: மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனுர். இவர் சீத்தலை என்ற ஊரில் பிறந்தவர். மதுரையில் கூல வாணிகம் செய்து வாழ்ந்தவர். காலம்: கடைச் சங்ககாலம். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் இவர் காலத்தவரே.

[நம் பாடப் பகுதியில் ஆதிரையின் கணவனுகிய சாதுவன், நாகர்கள் வாழும் தீவினை அடைந்து, நாகர் குருமகனுக்கு அறவுரைகள் பல கூறி, அவனுல் அளிக்கப்பெற்ற பன்மணிக் குவியலோடு நாடு திரும்பிய செய்தி கூறப்பெற்றுள்ளது.]

## ஆதிரை பிச்சையிட்ட காதை

### சாதுவனும் நாகர் குருமகனும்

### சாதுவன் நாகர் தீவை அடைதல்

ஆங்கவள் கணவனும் அலைநீர் அடைகரை
ஓங்குயர் பிறங்கல் ஒருமர நீழல்
மஞ்சுடை மால்கடல் உழந்தநோய் கூர்ந்து
துஞ்சுதுயில் கொள்ளவச் சூர்மலை வாழும்
நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்
பக்கஞ் சேர்ந்து பரிபுலம் பினனிவன்
தானே தமியன் வந்தனன் அளியன்
ஊனுடை இவ்வுடம் புணவென் றெழுப்பலும்,
மற்றவர் பாடை மயக்கறு மரபின்
கற்றனன் ஆதலில் கடுந்தொழில் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுரை யாடி
ஆங்கவர் உரைப்போர் "அருந்திறல் கேளாய்
ஈங்கெங் குருமகன் இருந்தோன் அவன்பால்
போந்தருள் நீ"யென அவருடன் போகி

சாதுவன் நாகர் குருமகனைக் காணுதல்

கள்அடு குழிசியும் கழிமுடை நாற்றமும்
வெள்ளென்பு உணங்கலும், விரவிய இருக்கையில்
எண்குதன் பிணவோடு இருந்தது போலப்
பெண்டுடன் இருந்த பெற்றி நோக்கிப்
பாடையிற் பிணித்தவன் பான்மைய னாகிக்
கோடுயர் மரநிழற் குளிர்ந்த பின்னவன்
ஈங்குநீ வந்த காரணம் என்னென
ஆங்கவற் கலைகடல் உற்றதை உரைத்தலும்
அருந்துதல் இன்றி அலைகடல் உழந்தோன்
வருந்தினன் அளியன் வம்மின் மாக்காள்
நம்பிக் கிளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களும் ஊனும் வேண்டுவ கொடுமென,
அவ்வுரை கேட்ட சாதுவன் அயர்ந்து
வெவ்வுரை கேட்டேன் வேண்டேன் என்றலும்
பெண்டிரும் உண்டியும் இன்றெனின் மாக்கட்கு
உண்டோ? ஞாலத் துறுபயன் உண்டெனில்
காண்குவம் யாங்களும் காட்டுவா யாகெனத்
தூண்டிய சினத்தினன் சொல்லெனச் சொல்லும்.

சாதுவன் கூற்று

மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல க்டைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்.

குருமகன் வேண்டுகோள்

என்றவன் உரைத்தலும் எரிவிழி நாகனும்
நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து
"கள்ளும் ஊனும் கைவிடின் இவ்வுடம்பு
உள்ளுறை வாழுயிர் ஓம்புதல் ஆற்றேன்
தமக்கொழி மரபின் சாவுறு காறும்
எமக்காம் நல்லறம் எடுத்துரை" என்றலும்,

### சாதுவன் அறவுரை

நன்று சொன்னாய் நன்னெறிப் படர்குவை,
உன்றனக்(கு) ஒல்லும் நெறியறம் உரைக்கேன்
உடைகல மாக்கள் உயிருய்ந் தீங்குறின்
அடுதொழில் ஒழிந்தவர் ஆருயிர் ஓம்பி
மூத்துவிளி மாவொழித் தெவ்வுயிர் மாட்டும்
தீத்திறம் ஒழிகெனச் சிறுமகன் உரைப்போன்

### குருமகன் சாதுவனைச் சிறப்பித்தல்

ஈங்கெமக் காகும் இவ்வறம் செய்கேம்
ஆங்குனக் காகும் அரும்பொருள் கொள்கெனப்
பண்டும் பண்டும் கலங்கவிழ் மாக்களை
உண்டேம், அவர்தம் உறுபொருள் ஈங்கிவை
விரைமரம் மென்துகில் விழுநிதிக் குப்பையொடு
இவையிவை கொள்கென எடுத்தனன் கொணர்ந்து,

### சாதுவன் தன் நகர் அடைதல்

சந்திர தத்தன் என்னும் வணிகன்
வங்கம் சேர்ந்ததில் வந்துடன் ஏறி
இந்நகர் புகுந்தீங் கிவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமும் செய்தனன்.

சொற்பொருள் :

பிறங்கல் - மலை; மஞ்சு-மேகம் ; உழந்த - வருந்திய; சூர் -அச்சம்; நக்க சாரணர் - ஆடையின்றித் திரிவோராகிய நாகர் ; நயமிலர் - அன்பில்லாதவராய் ; நயம் - அன்பு ; பரிபுலம்பினன் - வருந்தினன் ; அளியன் - இரங்கத்தக்கவன் ; பாடை - மொழி ; கோடு - கிளை ; குழுசி - பானை ; எண்கு - ஆண் கரடி ; பிணவு - பெண் கரடி ; பெற்றி - தன்மை ; நம்பி - ஆண்பாற் சிறப்புப் பெயர். பெண்பால் - நங்கை ; கயக்கு - குற்றம் ; உரவோர் - அறிவுடையோர் ; விளி - இறந்த ; விழுநிதி - உயர்ந்த செல்வம் ; குப்பை - குவியல் ; வங்கம் - கப்பல்.

வினாக்கள் :

1. சாதுவனைக் கண்ட நாகர்கள் கூறியதென்ன ?
2. சாதுவன் நாகர்களை எவ்வாறு தன்வயப்படுத்தினான் ?
3. சாதுவன் கண்ட நாகர் குருமகன் தோற்றத்தை விளக்குக.
4. சாதுவன் நாகர் குருமகனுக்குக் கூறிய அறவுரைகள் யாவை ?

5. குருமகன் சாதுவனுக்குச் செய்த சிறப்பியல்புகளைக் கூறுக.
6. இடஞ் சுட்டி விளக்குக :
   (1) "எமக்காம் நல்லறம் எடுத்துரை"
   (2) "காண்குவம் யாங்களும் காட்டுவாயாக".

# 4. இரட்சணிய யாத்திரிகம்

## ஆத்தும வேதனை

**இரட்சணிய யாத்திரிகம் :** ஆன்ம ஈடேற்றத்தை விரும்புவோர் வேதநெறி ஒழுகிச் செல்லுங்கால் முதலிலிருந்து முடிவு வரை அவர்க்கு நிகழும் செய்திகளையும் அனுபவங்களையும் விளக்குவதாகும். இந்நூல் ஒரு கிருஸ்துவக் காப்பியம் ஆகும். ஜான் பனியன் (John Bunyan) என்னும் ஆங்கிலக் கவிஞன் இயற்றிய "Pilgrims Progress" என்னும் ஆங்கில நூலைத் தழுவி இயற்றப்பெற்றது.

இந்நூலை இயற்றியவர் ஹென்றி ஆல்பர்ட் கிருஷ்ண பிள்ளை ஆவார். இவர் பாளையங்கோட்டைக்கு அருகில் உள்ள ரெட்டியார் பட்டியில், வைணவ வேளாளர் மரபில் கி. பி. 1827ஆம் ஆண்டில் பிறந்தவர். பெற்றோர் : சங்கரநாராயண பிள்ளை, தெய்வநாயகி அம்மை. இவர் 1858இல் கிறிஸ்தவ மதத்தை மேற்கொண்டார். 1900இல் இவ்வுலகை நீத்தார். இவரைக் "கிறித்தவக் கம்பர்" என்றழைப்பர்.

இவர் இயற்றிய வேறு நூல்கள் : இரட்சணிய மனோகரம், இரட்சணியக் குறள், இரட்சணிய சமய நிர்ணயம் என்பன.

[நம் பாடப் பகுதியில் உலக மக்களின் பாவச் செயல்களுக்காக இயேசுநாதர் மிக இரக்கங்கொண்டு மனம் வருந்தி, அவர்களது ஈடேற்றத்திற்காகப் பட்ட துன்பம் கூறப்பெறுகிறது.]

### இயேசு நாதரும் அடியரும் கெதுசேம் என்னும் சோலையை அடைதல்

இனையன வளங்கொண் டோங்கி
   இறும்புசூழ் கிடந்த வந்தப்
புனைமரக் காவின் பாங்கர்
   பொலங்கெழு கெதுசேம் என்னும்
நனிசிறந் தொப்பி கந்த
   நறுமலர்ச் சோலை கண்ணுற்(று)
அனகனும் அன்பின் மிக்க
   அடியரும் ஆண்டுப் புக்கார் 1

சோலைக் காட்சி

செழுமலர்ச் சோலை யோங்கு
    சினைதொறும் நிறையப் பூத்த
கொழுமுகை அவிழ்ந்து செந்தேன்
    குளிர்நறும் துளிவார் காட்சி
அழகிய மணவா ளன்தன்
    அகத்துவந் தடையும் ஆன்மக்
கழிதுயர்க் கிரங்கிச் சிந்தும்
    கண்ணினீர்த் தாரை போலும். 2

இயேசுநாதர் ஆத்தும வேதனை அடைதல்

கிரிமிசை முன்னர்த் தம்மைக்
    கேழ்கிளர் மகிமை யோடு
தரிசனம் செய்த மூன்று
    தாசரை உடன்கொண் டேகி
ஒருசிறை யுற்றுத் துன்பம்
    உறுவதற்(கு) உரிய தான
நரசுபா வத்திற் பாடு
    நயந்தனு பவிக்கல் உற்றார். 3

வாக்கினுக் கதீத மான
    மகிமையை யிழந்துங் கன்னி
பாக்கிய வயிற்றிற் கர்ப்பப்
    பையுளே பழங்க ணுற்றும்
ஆக்கமற் றேழை யாகி
    யலைந்துஞ்சற் றவியா தோங்கி
மீக்கிளர் தேவ நீதி
    வெந்தழல் குளிப்ப தானார். 4

வெந்துய ரென்னுந் தாப
    மிகுகனல் மூள மூளச்
சுந்தரக் குமர னாவி
    துடித்துள முடைந்து சோர்ந்து
நைந்தனன் மெழுகு போல
    உருகியே குடரி னுப்பண்
சிந்திய தென்னே யேது
    பாவியேம் தீமை யன்றோ. 5

முழங்கெரி நடுவ ணுய்த்த
முருகுலாம் அலங்கல் போலும்
தழங்குவெண் திரைவா யுற்றுத்
தளர்ந்துழல் திரணம் போலும்
பழங்கணுக் குடைந்து தேம்பிப்
பரிவுறீஇப் பாருக் கின்பம்
வழங்குவான் துணிந்து வந்த
மாநுவேல் வருந்தி ளுரால். 6

இயேசுநாதர் ஆண்டவன் திருவருளை வேண்டல்

காலிணை முடக்கி யந்தக்
கரணத்தை யொடுக்கி யன்பின்
சீலமே திகழுங் கஞ்சத்
திருமுக நிலத்திற் சேர்த்திக்
கோலமார் தடக்கை கூப்பிக்
கும்பிட்டு விழிநீர் சோரச்
சாலவும் பணிந்து தீன
தயாளரின் அருளை நாடி, 7

அப்பனே யெல்லாம் உம்மால்
ஆகுமிவ் வவத்தை யார்ந்த
கைப்புறு பாத்தி ரத்தைக்
கழித்திடக் கருத்துண் டாயின்
அப்படி யாக அன்றேல்
ஐயவென் சித்த மன்று
மெய்ப்படும் உமது சித்தம்
விழைந்ததே யாக வென்ருர். 8

தேவ தூதன் இயேசுநாதரைத் தேற்றிப் போதல்

இம்முறை யாக மேனி
இரத்தவே ரொழுகு மாறு
செம்முறை திறம்பாத் தூய
சிந்தையுள் ளுடைந்து தேம்பி

மும்முறை பிதாவைக் கிட்டிச்
செபித்தனர் முனிவொன் றின்றி
எம்முறை பாட்டுக் குள்ளம்
இரங்கியா தரிக்கு மீசன். 9

அத்தனைக் கருதிக் கூவும்
அளவையில் அடுத்தோர் தூதன்
சித்தசஞ் சலத்தை யாற்றித்
தேற்றினன் சென்று னாக
இத்தரா தலத்து மாந்தர்
எவரையும் புரக்க வந்த
வித்தகப் புனித மூர்த்தி
எழுந்தனர் விமலற் போற்றி. 10

—H. A. கிருஷ்ண பிள்ளை.

சொற்பொருள் :

1. இரும்பு-மலை ; பாங்கர்-பக்கம்; பொலன்கெழு-அழகு பொருந்திய ; இகந்து - கடந்து ; அனகன் - பாவமில்லாதவன்.

2. சினை - கிளை; முகை - அரும்பு; ஆன்மக் கழிதுயர்க்கு-ஆத்தும வேதனைக்கு ; தாரை - மழை ஒழுக்கு.

3. மூன்று தாசர் - பேதுரு, யோவான், யாக்கோபு என்னும் அன்பர்கள் ; சிறை - பக்கம் ; நர சுபாவம் - மக்கள் இயல்பு ; பாடு - துன்பம்.

4. வாக்கினுக்கு அதீதம் - சொல்லளவைக் கடந்தது ; கன்னி - மரியம்மை, தாய் ; பழங்கண் - துன்பம் ; ஆக்கம் - செல்வம் ; அவியாது - அடங்காமல் ; குளித்தல் - மூழ்குதல்.

5. தாபம் - வெப்பம் ; சுந்தரக் குமரன் - இயேசு நாதர் ; நாப்பண் - நடுவில்.

6. முருகு - மணம் ; அலங்கல் - மாலை ; திரை - அலை ; திரணம் துரும்பு ; பரிவுறீஇ - துன்பமுற்று ; மானுவேல் - இயேசு நாதர்.

7. அந்தக் கரணங்கள் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன ; கஞ்சம் - தாமரை ; கோலம் - அழகு ; தீனதயாளர் - ஏழைகளுக்கு இரங்கும் கடவுள்.

8. கைப்புறு பாத்திரம் - வெறுக்கத் தக்க உடல்.

9. இரத்த வேர் - இரத்தமாகிய வியர்வை ; திறம்பா - தவறுதீ ; முனிவு - வெறுப்பு ; முறைபாடு - முறையிடுதல்.

10. அத்தன் - கடவுள் ; தராதலம் - நிலம் ; புனிதம் - தூய்மை; விமலன் - குற்றம் இல்லாதவனாகிய இறைவன்.

வினுக்கள் :

1. இரட்சணிய யாத்திரிகம்—சிறு குறிப்பு வரைக.
2. கெதுசேம் சோலேக் காட்சியினே விவரிக்க.
3. இயேசுநாதர் அடைந்த ஆத்தும வேதனேயை விளக்கி எழுதுக.
4. இயேசுநாதர் ஆண்டவன் திருவருளே வேண்டிக் கூறியவை யாவை?
5. தேவதூதன் இயேசுநாதரைத் தேற்றியது எவ்வாறு?

## 5. ஆசிய ஜோதி

ஆசிய ஜோதி: ஆசியாக் கண்டத்தில் பேரறிவுச் சுடரைத் தம் அன்புரைகளால் பரப்பிய புத்தர் பெருமான் வரலாற்றைக் கூறும் நூல். இனிய எளிய தமிழ் நடையில் இயன்றது. சர் எட்வின் ஆர்னுல்டு என்ற ஆங்கில அறிஞர் எழுதிய "Light of Asia" என்னும் நூலேத் தழுவிக் கவிதை வடிவில் புனேயப்பட்டது.

இதன் ஆசிரியர்: கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளே ஆவர். பிறப்பிடம்: நாஞ்சில்நாட்டுத் தேரூர். பெற்ருேர்: சிவதாணுப்பிள்ளே, ஆதிலக்குமியம்மாள். சாந்தலிங்கத் தம்பிரானிடம் தமிழ் பயின்றவர்; கோட்டாறு, நாகர்கோயில் முதலிய இடங்களில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்; கவிதைகள் இயற்றுவதில் கைவந்தவர்; மக்களால் கவிமணி எனப் போற்றப்பெற்றவர்; காலம்: 1876-1954. மருமக்கள் வழி மான்மியம், உமர்கய்யாம் பாடல்கள் முதலியன இவர் பாடிய பிற நூல்களாம்.

[ நம் பாடப்பகுதியில், புத்தர் அவதாரச் சிறப்பும் அசித முனிவரின் அன்புரைகளும் கூறப்பட்டுள்ளன. ]

### புத்தர் அவதாரம்

மாயா தேவி கனுக் காணுதல்

அந்நாளில் அவ்விரவில் சுத்தோத னப்பேர்
அண்ணற்கு வாய்த்தமனே அலர்மங்கை யனேயாள்
எந்நாளும் காணுத கனவொன்று கண்டாள்
எந்நாடும் எவ்வுயிரும் இன்புறவே அம்மா!
ஆறு கதிரொளி செய்திடுமீன்—கண்ணுக்கு
அற்புதக் காட்சி அளித்திடுமீன்:
ஏறும் அழகு பொழிந்திடுமீன்—திசை
எட்டும் ஒளிர ஒளிவிடுமீன்.

சின்னஞ் சிறுமருப் பாறுளதாய்க்—காம
தேனுவின் பால்நிறம் பெற்றுள தாய்,
மன்னும் மதவேழம் போன்றிடுமீன்—இந்த
வையம் ஒளிர ஒளிவிடுமீன்.
விண்ணகம் விட்டு விரைந்திறங்கி—வரும்
வீதி யெலாம்ஒளி வீசி வந்து,
மண்ணகம் வாழ வலந்திரிந்து—தேவி
மாயை வயிற்றில் புகுந்ததுவே.

உலகில் நன்மை விளைதல்

காலைக் கதிரோன் உதிக்குமுன்—ஆசிய
கண்ட மெலாம்ஒளி கண்டதுவே;
வேலைத் திரைகள் அடங்கினவே—திசை
வெற்புகள் நின்றுகூத் தாடினவே.
பட்டமரங்கள் தளிர்த்தனவே—எங்கும்
பாழ்ங்கிண றும்ஊறிப் பொங்கினவே;
திட்டுத் திடர்மணற் காடும்—சுடுகாடும்
சில்லென்று பூத்துச் சிலிர்த்தனவே.
சீரிய ஓடை குளங்களிலே—நல்ல
செந்தா மரைகள் மலர்ந்தனவே;
பாரிலே அவ்விராக் கண்ட—புதுமையைப்
பாடிட வல்லவர் யாரேயம்மா!

(வேறு)

ஒண்சுடர் உலகில் உதித்தெழு காலை
மன்னிருட் சோலையோர் பொன்னிறம் பொலிய
நிரந்தொளி பரந்து நிறைவது போல,
மாயையின் மனத்தெழு மகிழ்ச்சியும் பொங்கி
இடைவெளி யின்றி எவ்வெவ் வுலகும்
பாதல மீருப் படர்ந்து சென்றது;
"பிறந்திட இறந்தீர்! இறந்திடப் பிறந்தீர்!
எழுமின்! எழுமின்! யாவரும் எழுமின்!
புத்த பெருமான் புவியில் உதித்தனன்.
அவனை வணங்குமின்; அவன்வழி பற்றுமின்;

அவனுரை கேண்மின்; அழிமனம் ஒழிமின்;
நலமுறு மெனவே நம்பி நாடுமின்;
உள்ளந் தெளிமின்; உறுதி கொண்மின்;
உய்யும் வழிஈது; உண்மையும் ஈதாம்''
என்னும் மொழிகள் எவ்வெவ் விடத்தும்
மந்திர மொழிகளாய் வந்தெழக் கேட்டனர்.
அதனால்,
அமைதி நிலவி, அன்பு தழைத்துக்
குவலய முழுதும் குதுகல முற்றது.
கடலும் மலையும், காடும் மேடும்
பூவுல கறியாப் புதுமணம் கமழ,
இனிய தென்றல் எழுந்து வீசியது.

## புத்தர் அவதாரம்

ஒருநாள் பகலில் உச்சியம் பொழுதில்
அரண்மனை யருகில் அணிமலர் மலர்ந்து
நறுமணம் வீசுமோர் நந்த வனத்தில்,
தழையும் பூவும் தலையில் தாங்கிக்
கோயிலில் நட்டஓர் கொடிமரம் போல
வளருமோர் அசோக மரத்தின் நிழலில்
மாயா தேவி வந்து நின்றனள்.
நிற்கவே,
உரிய காலம் உறுவதை உணர்மரம்,
உணராப் பொருளெதும் உலகினில் இல்லை;
மலர்முடி வணங்கி வளைந்து கவிந்தொரு
தழைவீ டாகச் சமைந்து நின்றது.
பாரிடம்,
பன்மலர் மலர்ந்தொரு பஞ்சணை யாயது;
பக்கத் தெழுமொரு பாறையும் பிளந்து;
மதலையை ஆட்ட மஞ்சன நீரை
ஓடும் அருவியாய் ஒழுக விட்டது.
தேவி,
நோவு நொம்பலம் நோக்கா டின்றியோர்
மகனைப் பெற்று மகிழ்ச்சி யுற்றனள்.

மகவின் அழகிய வடிவினில் அமைந்த
எண்ணான் கரிய இலக்கணம் கண்டு, இது
தெய்விக மகவெனச் செப்பினர் தெரிந்தோர்.
சோபன மறிந்து சுத்தோ தனனும்,
தாயை மகவொடு தண்டிகை ஏற்றி
அரண்மனை உய்த்திட ஆணை யிட்டனன்.

## குழந்தையைக் கண்டு வணங்கி அசிதமுனி உரைத்தல்

மாமுனி எழுந்து வணங்கி நின்று
"பொறுபொறு, தாயே! பொறு" எனத் தடுத்து,
"மதலாய்! நின்னடி மலரிணை தொழுதேன்.
அவனே நீயாம் ஐயம் அதற்கிலை.
பகவன் நீயே! பரமன் நீயே!
புனிதன் நீயே! புராணன் நீயே!
தருமன் நீயே! தலைவன் நீயே!
ஆதி நீயே! அறவோன் நீயே!
ஆயிர வாரத் தாழியான் நீயே!
உண்மை ஒளியால் உள்ளிருள் போக்கி,
நன்மை விளைக்கும் ஞாயிறு நீயே!
யானும் இன்றுஉன் இணையடி பணிந்து,
பாரிற் பிறந்த பயனெலாம் பெற்றேன்.
மன்னர் மன்னவ! மானிடத் தருவில்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு அப்பால்
ஒருமுறை மலரும் ஒண்மலர் இதுவாம்.
மலரிதன் மணமே அறிவின் மணமாய்
மனத்தின் மாசு மாற்றிடும், ஐயா!
மலரிதன் மதுவே அருளின் மதுவாய்
மன்னுயிர்க்கு இன்பம் வளர்த்திடும், ஐயா!
இம்மா மகனை ஈன்றவர் போல,
மாதவஞ் செய்தோர் மாநிலத்து உண்டோ?
ஆயினும், அரசே! அரிவாள் போல்உன்
நெஞ்சினை அறுக்கும் நெடுந்துயர் ஒன்றுஇம்
மகவால் உனக்கு வருவது திண்ணம்
மங்கையர்க் கரசி, மாயா தேவி!

வாழ்க்கையோ துன்ப மயமாம்; அதனுல்,
ஏந்திய முத்தினை ஈன்றபின் இப்பி
மாண்டு மண்ணில் மறைவது போல,
இற்றைக்கு ஏழாம் நாளில் இறவா
இன்ப வீடுநீ எய்துவது
உண்மையாம்'' என்று உரைத்து ஏகினனே!

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

சொற்பொருள் :

அண்ணற்கு-அரசனுக்கு; அலர்மங்கை-இலக்குமி; மருப்பு-கொம்பு; வேழம்-யானை; வேலைத்திரை-கடல் அலை; வெற்பு-மலை; மன்னிருள்-நிறைந்த இருள்; அழிமனம்-கவலையால் வருந்தும் மனம்; உய்யும்-பிழைக்கும்; தழைத்து-பெருகி; குவலயம்-உலகம்; குதுகலம்-மகிழ்ச்சி; மதலை-குழந்தை; நொம்பல்-துன்பம்; சோபனம்-நற்செய்தி; தண்டிகை-பல்லக்கு; புராணன்-கடவுள்; மது-தேன்; இப்பி-சங்கு.

வினுக்கள் :

1. சிறு குறிப்பு வரைக:
   ஆசிய ஜோதி, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.
2. மாயாதேவி கண்ட கனவின் சிறப்பு யாது?
3. உலகில் விளைந்த நன்மையை விளக்குக.
4. மாயாதேவியின் மனமகிழ்ச்சி எங்ஙனம் புனைந்துரைக்கப் பட்டுள்ளது?
5. மந்திர மொழிகளாய் மக்கள் கேட்டவை யாவை?
6. மாயாதேவி நின்ற அசோக மரத்தின் சிறப்பை வரைக.
7. அசித முனிவர் குழந்தையை நோக்கிக் கூறியன யாவை?
8. மகவால் வரும் இன்னலாக அசித முனிவர் கூறியது யாது?
9. உவமைகளை விளக்குக:
   1. ''கோயிலின் நட்ட ஓர் கொடிமரம் போல''
   2. ''ஏந்திய முத்தினை ஈன்றபின் இப்பி
      மாண்டு மண்ணில் மறைவது போல''
10. இடஞ்சுட்டி விளக்குக:
    1. ''உய்யும் வழி ஈது; உண்மையும் ஈதாம்''
    2. ''மாதவஞ் செய்தோர் மாநிலத்து உண்டோ''

# IV. பல்சுவை

(வருணனை)

## 1. கதிரவன் தோற்றம்

இப்பாடல்களைப் பாடியவர் பாரதிதாசன். இவரது இயற்பெயர் கனக. சுப்புரத்தினம். இவர் புதுச்சேரியில் வாழ்ந்து வருகின்றார். தோற்றம் 1891ஆம் ஆண்டு. தந்தையார் பெயர் கனகசபை முதலியார். புதுச்சேரி கல்வே கல்லூரியில் தமிழ் ஆசிரியராயிருந்து ஒய்வு பெற்றவர்; பாரதியாரிடம் பேரன்பு கொண்டவர். தன் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். சமுதாய ஏற்றத் தாழ்வுகளைச் சாடி, கவிதை புனையும் ஆற்றலைக் கண்ட மக்கள் இவரைப் புரட்சிக் கவிஞர் என்றழைக்கின்றனர். இவரியற்றிய நூல்கள்: பாரதிதாசன் கவிதைகள், அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, இசையமுது முதலியன.

பாடப்பகுதி: 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பெற்றவை.

உலகமிசை உணர்வெழுப்பிக் கீழ்த்திசையின் மீதில்
உதித்துவிட்டான் செங்கதிரோன்; தகத்த
தாகாயம்பார்
விலகிற்றுக் காரிருள்தான்; பறந்ததுபார் அயர்வு;
விண்ணிலெலாம் பொன்னொளியை ஏற்றுகின்றான்
அடடா!
மலையும்எழிற் பெருங்கடலின் அமுதப்ர வாகம்!
மேலெல்லாம் விழிஅள்ளும் ஒளியின் பிரவாகம்!
நலம்செய்தான்; ஒளிமுகத்தைக் காட்டிவிட்டான், காட்டி
நடத்துகின்றான் தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை!

## 2. முழுமதிக் காட்சி

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்

சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
　　சொக்கவெள்ளிப் பாற்குடமோ, அமுதவூற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
　　கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!

—பாரதிதாசன்

## 3. சீட்டுக் கவி

சீட்டுக்கவி: இஃது ஒருவர் மற்றவர்க்கு எழுதும் செய்யுள் வடிவில் அமைந்த கடிதமாகும். இப்பாடலைப் பாடியவர் அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் என்பவர். இவர் பாண்டிய நாட்டில் முதுகுளத்தூரில் பிறந்தவர். காலம் கி. பி. 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

இச்சீட்டுக்கவி, புலவரால் முத்துக்கறுப்பண்ணர் என்ற வள்ளலுக்கு எழுதப்பட்ட கடிதம் ஆகும்.

கல்விச் சமுத்திரம்; கமலா லயம்தமிழ்க்
　　　கடன்மடை திறந்த வெள்ளம்;
　கற்பனை பிறப்பிடம்; கலைமக ளிருப்பிடம்;
　　　கவிமாரி பொழியு மேகம்;
சொல்விற் பனம் விளையும் மதுரக் களஞ்சியம்;
　　　தோன்றுகற் பூர தீபம்;
　சுகிர்தகுண அவதானி சரவணப் பெருமாள்கை
　　　தொட்டெழுதி விட்ட சனது.
வில்லுக் கருச்சுனன்; சொல்லுக் கரிச்சந்திரன்;
　　　வெற்றிக்கு விக்ர மார்க்கன்;
　வித்தைக் ககத்தியன் முத்துக் கறுப்பண்ண
　　　விலட்சணன் எதிர்ந்து காண்க!
மல்வெற்றி யாயென்று தாயென்று நீயென்று
　　　மாலென்று வேலொன்று கா
　மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
　　　வருகின்ற தருள்புரி கவே.

—சரவணப்பெருமாள் கவிராயர்.

## 4. சிலேடை

### (கலைசைச் சிலேடை வெண்பா)

சிலேடை: இரு பொருள்படும்படியாகப் பாடப்படுவது. கலைசைச்சிலேடைவெண்பா: கலைசை-தொட்டிக்கலை என்னும் ஒரூர். இது தொண்டை நாட்டில் உள்ளது. அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன்மீது பாடப்பெற்ற சிலேடைப் பொருள் அமைந்த வெண்பாக்களாலான ஒரு நூல்.

இதன் ஆசிரியர் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர். காலம் 200 ஆண்டுகளுக்கு முன். சிவஞான முனிவருடைய மாணவர்களில் ஒருவர். இவர் சிறந்த முருக பக்தர் ஆவர்.

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலைசையே—மேவும்
அரிவையம்பா கத்தான் அரனொருமூன் றெய்தோன்
அரிவையம்பா கத்தான் அகம்.

## 5. அந்தாதி

அந்தாதி: முதற்பாவின் ஈற்றில் உள்ள எழுத்து, அசை, சீர், அடி முதலியவற்றுள் ஏதேனும் ஒன்று, வரும் பாடலுக்கு முதலாக அமையப் பாடப்படுவதாகும். (அந்தத்தை ஆதியாக உடையது.)

பாடப் பகுதி: திருவேங்கடத்தந்தாதியில் இருந்து எடுக்கப் பெற்றதாகும். இதன் ஆசிரியர்: அழகிய மணவாளதாசர் எனும் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஆவார். காலம்: 17ஆம் நூற்றுண்டு. திருவரங்கத்தில் வாழ்ந்தவர். திருவரங்கப் பெருமானிடம் பேரன்பு கொண்டவர்; வைணவ மரபினர்; இவர் பாடிய நூல் அஷ்டப்பிரபந்தம் எனப்படும். சொற்சுவை, பொருட்சுவை அமையப் பாடுவதில் வல்லவர்.

### திருமாலின் திருவடிச் சிறப்பு

திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன சிற்றன்னையால்
தருவேங் கடத்துத் தரைமேல் நடந்தன தாழ்பிறப்பின்
உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன உற்றழைக்க
வருவேங் கடத்தும்பி அஞ்சலென் றேடின மால்கழலே. 1

வேங்கடத்தின் மேன்மை

மாலை மதிக்குஞ்சி ஈசனும் போதனும் வாசவனும்
நூலை மதிக்கு முனிவருந் தேவரு நோக்கியந்தி
காலை மதிக்குள்வைத் தேத்துந் திருமலை கைம்மலையால்
வேலை மதிக்கும் பெருமான் உறைதிரு வேங்கடமே. 2

—அழகிய மணவாளதாசர்.

## 6. பிள்ளைத்தமிழ்

96 வகைப் பிரபந்தங்களில் ஒன்று. கடவுளையோ மக்களில் சிறந்தாரையோ குழந்தையாகக் கருதி அக்குழந்தைப் பருவத்தைப் பத்துப் பருவங்களாகப் பகுத்துக்கொண்டு, பருவம் ஒன்றிற்குப் பத்துப் பாடல்கள் வீதம் பாடப்படுவது. பிள்ளைத்தமிழ் ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்களாவன : காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர். பெண்பால் பிள்ளைத்தமிழாயின் மேற்கூறிய பத்துப் பருவங்களில் ஈற்றிலுள்ள சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் மூன்றையும் நீக்கிவிட்டு அம்மானை, நீராடல், ஊசல் என்னும் மூன்றையும் கூட்டிப் பத்தாக்கிப் பாடுவர்.

ஆசிரியர் பகழிக்கூத்தர். இவர் இராமநாதபுரத்தைச் சார்ந்த சன்னுசிக் கிராமத்தில் தோன்றியவர். தந்தையார் பெயர் தர்ப்பாதனர். இவர் கொடிய சூலை நோயால் துன்புற்று வருந்திய நிலையில் திருச்செந்தூர் முருகன் மீது பிள்ளைத்தமிழ் பாடி, அந்நோய் நீங்கப் பெற்றுர் என்பர். வைணவ அந்தணர் குலம். ஏறக்குறைய 200 ஆண்டுகட்குமுன் வாழ்ந்தவர்.

கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு ;

தத்தும் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளம் தனக்கு விலையுண்டு ;
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்

கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர் முத்தினுக்கு விலையுண்டு;
கொண்டல் தருநித்திலம் தனக்கும்
கூறும் தரமுண்(டு); உன்கனிவாய்

முத்தந் தனக்கு விலையில்லை;
முருகா! முத்தம் தருகவே!
முத்தம் சொரியும் கடலலைவாய்
முதல்வா! முத்தம் தருகவே.

—பகழிக் கூத்தர்.

## 7. தூது

### (பணவிடு தூது)

பணத்தைத் தூதாக விடுத்த செய்தியைப்பற்றிக் கூறும் நூல்.

மதுரையில் இருந்து அரசாண்ட, அரங்க கிருட்டினமூர்த்தி வீரேந்திர நாயக்கருக்கு மந்திரியாகத் திருநெல்வேலியைப் பாதுகாத்து வந்த மாதைத் திருவேங்கடநாதர் என்பவர்மீது இந்நூல் பாடப்பட்டது. பாடிய புலவர் பெயர் அறியமுடியவில்லை.

பணமே! எனைப்படைத்த பாக்கியவானே! வங்
கணமே! என்ஆருயிரே! கண்ணே!—குணநிதியே
சாம்புநதி தீரத்தும் சாளக்கி ராமத்தும்
மேம்படு சித்தாதிகள்செய் வித்தையிலும்—தேம்பொழியும்
பன்றி மலையினும்,நீ பண்டுபிறந் தாய்;அங்கு
நின்றுலக மெங்கும் நிறைந்திட்டாய்—ஒன்றுகேள்
ஈசன்உனக் கொப்பென்பார்; ஈசனைஉண் டாக்கி அவன்
பூசனைநீ செய்விப்பாய் புண்ணியா!—பேசுங்கால்
சின்மயமாம் உன்னுடனே செம்புவெள்ளி சேர்ந்தாலும்
உன்மயமே எங்கும் உயர்ச்சிகாண்—பொன்மகளை
மார்புதனில் மாயோன் வரிசையாய் வைத்தது,நின்
பேர்மகிமை கண்டாய் பெரியோனே—பாருலகில்
முந்தப் பதஞ்சலிக்கு முன்னின்று கூத்தாடும்
அந்தக் கனகசபை யார்வடிவம்?—நிந்தையிலா
உன்மரபு சொல்ல ஒருகோடி நாள்செல்லும்;
என்மனதில் வந்த(து) இயம்புவேன்—நன்மைதரும்

கோலம் பலஎடுத்துக் கோவேநீ செய்யும்இந்திர
சாலம் பிறரறியத் தக்கதோ—ஞாலமிசை
மேரு அணுவாக்கி விடுவாய் அணுவையொரு
பாரமக மேருவெனப் பண்ணுவாய்—ஈரமின்றி
வெட்டுவாய் வெட்டுதலை மீட்பாய்; வரிந்திறுகக்
கட்டுவாய் ; கட்டும் கயிறவிழ்ப்பாய்—கிட்டும்
உறவிற் பகைவிளைப்பாய்; உட்பகையாம்—பண்டைக்
குறையைத் தவிர்த்துறவு கொள்வாய்—துறைவிட்டு
காடுநா டாக்கிடுவாய்; கண்விழித்து மூடுமுன்னே
நாடுகா டாக்கிடுவாய் நம்பிநீ—தேடுங்கால்
தாங்குவார் அற்றுத் தடுமாறி, ராப்பகலாய்
ஏங்குவார் ஏக்கம் உன்ஏக்கமே—ஓங்கும்
பணமென்னும் உன்னைப் படைக்காத சென்மம்
பிணமென்பர் கண்டாய் பெரியோய் !

## 8. கலம்பகம்

### (மறம்)

கலம்பகம் : இது, கலம் + பகம் எனப் பிரியும். கலம்-பன்னிரண்டு, பகம்-ஆறு, ஆக பதினெட்டு உறுப்புக்களைப் பெற்றிருப்பதால் இப் பெயர் பெற்றது என்பர். கதம்பம் என்ற வடசொல் திரிந்து கலம்பகம் என்று ஆயிற்று என்றும் கூறுவர்.

புயவகுப்பு, அம்மானை, மறம், குறம், சித்து, களி முதலிய 18 18 உறுப்புக்கள், அமையுமாறு அந்தாதித் தொடையில் முதலும் ஈறும் மண்டலித்து வரப் பாடப்படுதல் இதன் இலக்கணமாகும்.

மறம்: மன்னர் முதலியோர் மறக்குடியில் பிறந்த மகளை மணக்க விரும்பித் தூதனுப்ப மறக் குடியில் பிறந்த மறவர். தம் வீரம் தோன்றக் கூறி மகள் கொடுக்க மறுத்தல் இதன் இலக்கணமாகும்.

ஆசிரியர்: துறைமங்கலம் சிவப்பிரகாசர். இவர் துறைமங்கலம் என்னும் ஊரில் தோன்றியவர். அண்ணமலை ரெட்டியார் என்பவரால் ஆதரிக்கப்பெற்றவர். வெள்ளியம்பலத் தம்பிரான் என்பவரை ஞான குருவாகக் கொண்டவர். குமாரசுவாமிதேசிகர் இவர் தந்தையாராவார். வீர சைவ மரபைச் சார்ந்தவர். கற்பனைக் களஞ்சியம் எனப் பாராட்டப்பட்டவர். கி. பி. 17ஆம் நூற்றுண்டினர்.

பிரபுலிங்கலீலை, சீகாளத்திப் புராணம், திருவெங்கை உலா முதலிய நூல்களைப் பாடியுள்ளார்.

விற்ற தார்கலை பாதி யோடுவ
னத்தி லேயழ விட்டதார் ?
வெஞ்சி றைப்புக விட்ட தார் ? துகி
லுரிய விட்டுவி ழித்ததார் ?

உற்ற தாரமும் வேண்டு மென்றினி
மன்னர் பெண்கொள லொண்ணுமோ !
உமிய டாமண மென்ற வாய்கிழித்
தோலை காற்றிலு ருட்டடா.

வெற்றி யாகிய முத்தி தந்தருள்
வெங்கை மாநகர் வேடர்யாம்.
விமல ரானவ ரைமைய டுத்தினி
தெங்கள் மிச்சின்மி சைந்தபின்

பெற்ற வேலர் தமக்கு யாமொரு
பெண்வ ளர்ப்பினில் ஈந்தனம்.
பெற்ற பிள்ளைகொ டுப்ப ரோவிதென்
பேய்பி டித்திடு தூதரே.

—துறைமங்கலம் சிவப்பிரகாசர்.

## 9. குற்றாலக் குறவஞ்சி

(குறத்தி மலைவளம் கூறல்)

குற்றாலக் குறவஞ்சி: திருக்குற்றாலநாதர்மீது பாடப்பெற்ற குறவஞ்சி என்பது பொருள். குறம்-குறவர், குறத்தியர் வாழ்வியலைச் சிறப்பித்துக் கூறுவது.

இந் நூலின் ஆசிரியர்: திரிகூடராசப்பக் கவிராயர். இவரது ஊர் குற்றாலத்தின் அண்மையிலுள்ள மேலகரம். வேளாளர். பதினேழாம் நூற்றாண்டு. குற்றாலக்குறவஞ்சி, குற்றாலச்சிலேடை, குற்றால புராணம் முதலிய பல நூல்களை எழுதியிருக்கிறார்.

ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்;
வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும்;
விந்தையகில் குங்குமமும் சந்தனமும் நாறும்;

காடுதொறும் ஓடிவரை யாடுகுதி பாயும்!
காகமணு காமலையில் மேகநிரை சாயும்;
நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்கும் திரிகூட மலையெங்கள் மலையே.

— திரிகூடராசப்பக் கவிராயர்.

சொற்பொருள் :

1. 2 : வருணனை : பிரவாகம் - வெள்ளம் ; கோலம் - அழகு ; செம்பரிதி - சூரியன்.

3. சிட்டுக்கவி : விற்பனம் - கல்வியறிவு : மதுரம் - இனிமை ; சுகிர்தம் - நன்மை, இன்பம்; அவதானி-ஒரே நேரத்தில் பலவற்றைக் கவனித்துச் சொல்பவன், மறதி இல்லாதவன் ; சனது - சன்னது - ஓலை ; கா - கற்பகச்சோலை ; நாவொன்று - நாவின் திறம்பொருந்திய: பா - பாடல்.

4. சிலேடை : காவலர் - கா + அலர், கா + வலர் - சோலையில் மலர்ந்த மலர், காத்தலில் வல்ல அரசர் ; சூழ்தல் - சுற்றுதல், ஆராய்தல் ; பாவலர் - காவலரைச் சூழ்வர் ; ஆறுகால் வண்டினம் கா அலரை ஆராயும் (சூழும்). அரிவையம் பாகத்தான் — அரி + வை + அம்பு + ஆக + தான் — திருமாலைக் கூர்மையான அம்பாகக்கொண்டு தான் ஒருவனே. அரிவை + அம் + பாகத்தான் — உமாதேவியை அழகிய இடப்பாகத்தில் கொண்டவன்.

5. அந்தாதி : சிற்றன்னை - கைகேயி ; திரு + வேம் + கடம்— மரங்கள் வேகும் காடு ; உருவேங்கள் + தத்துக்கு - உருவேங்கடத் துக்கு ; உருவேங்கள் — பிறப்பெடுத்தவர்கள் ; தத்துக்கு - துன்பம் போக்குதற்கு ; உற்று-துன்பமுற்று ; தும்பி-யானை, கசேந்திரன். மாலைமதி - பிறை மதி ; குஞ்சி - தலைமுடி ; போதன் - பிரமன் ; வாசவன் - இந்திரன் ; வேலை - (பாற்)கடல் ; மதிக்கும் - கடையும்.

6. பிள்ளைத் தமிழ் : கத்தும் தரங்கம் — ஒலிக்கும் கடல் ; சூல்-கருப்பம் ; வாலுகம்-மணல்மேடு ; கான்ற - ஈன்ற ; மணி - முத்து; தத்தும் - மதம் பெருகும்; கரடம் - கன்னம்; விகடதட - வேடிக்கையான கையைக் கொண்ட ; மருப்பு — கொம்பு ; சாலி - நெற்பயிர்; நித்திலம்— முத்து ; தரம் — மதிப்பு; அலைவாய் - திருச்செந்தூர்.

7. தூது : வங்கணம் — நட்பு ; சாம்புநதி - ஒரு நதியின்பெயர்; சாளக்கிராமம் — உயர்ந்தவகைச் சங்கு ; பன்றிமலை - ஒரு மலையின் பெயர் ; சின்மயம் - ஒளி வடிவம் ; பதஞ்சலி — ஒரு முனிவர் ; கனக சபை — சிதம்பரத்திலுள்ள பொற்சபை ; உன் மரபு - உன் பெருமை ; கோலம் — உருவம் ; பார — பெரிய.

8. கலம்பகம் : கலை - ஆடை : தாரம் - மனைவி ; விமலர் - குற்றமற்றவர் ; மிச்சில் - உண்டுமிஞ்சிய உணவு.

9. குற்றாலக்குறவஞ்சி ; ஆடும் + அரவு + ஈனும் + மணி = ஆடுமரவீனுமணி – ஆடுகின்ற பாம்பு தருகின்ற மாணிக்கம் ; கோடிவெயில் – மிக்க சுடர் ; கவளம் - யானை உண்ணும் உணவின் உருண்டை ; சாடுபுனம் – வெட்டும் காடு ; வரையாடு – மலை ஆடு ; மேகநிரை – மேகக் கூட்டம் ; திரிகூடமலை – மூன்று சிகரங்களையுடைய மலை.

வினாக்கள் :

1. கதிரவன் தோற்றமும், முழுமதித்தோற்றமும் பாரதிதாசன் அவர்களால் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
2. சீட்டுக்கவி என்றால் என்ன? நம் பாடப் பகுதியில் உள்ள சீட்டுக்கவி யாரால் யாருக்கு எழுதப்பட்டதாகும்?
3. கலைசையின் சிறப்பாக ஆசிரியர் கூறுவதென்ன?
4. திருமாலின் திருவடிச் சிறப்பினைக் கூறுக.
5. எந்தெந்த முத்தினுக்கு விலையுண்டு? விலையில்லா முத்து யாது?
6. பணம் படைத்த பாக்கியமாக ஆசிரியர் குறிப்பிடுவதென்ன?
7. மறக்குடித்தலைவன் மன்னவனுக்குப் பெண் கொடுக்க மறுத்தது ஏன்?
8. குற்றால மலையின் சிறப்புக்களை எழுது.

# V. வழிபாட்டுப் பாடல்கள்

வழிபாட்டுக்குரிய பாடல்கள்: நாள்தோறும் இறைவனை வணங்கும்போது பாடுதற்குரிய பாடல்கள் ஆகும். இப்பகுதியில் தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், தேம்பாவணி, சீறாப்புராணம் முதலியவற்றிலிருந்து எடுக்கப்பட்ட பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

## 1. சிவபெருமான்

இதனைப் பாடியவர் திருநாவுக்கரசர்; தேவாரம் பாடிய மூவரில் ஒருவர். திருமுனைப்பாடி நாட்டில் தோன்றியவர். புகழனார், மாதினியார் இவர் பெற்றோராவார். சமண சமயத்தை முதலிற்சார்ந்து பின்னர் சைவராக மாறியவர். கி. பி. ஏழாம் நூற்றாண்டினர்.

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங் கிடந்தலந் தெய்த்
தொழிந்தேன்,
திருவொற்றி யூரா! திருவால வாயா! திருவா ரூரா!
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி ஏகம்பனே!

## 2. திருமால்

இதனைப் பாடியவர் தொண்டரடிப்பொடியாழ்வார். இவர் திருமாலை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வீடுபேறடைந்த பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர். திருவரங்கப்பெருமானிடத்தில் பேரன்புகொண்டவர். இவர் பாடிய பாடல்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளன. சோழநாட்டுத் திருமண்டங்குடியைச் சார்ந்தவர். கி. பி. எட்டாம் நூற்றாண்டினர்.

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே!

## 3. இயேசுநாதர்

இதனைப் பாடியவர் வீரமா முனிவர். இத்தாலிய நாட்டிலிருந்து சமயப் பணிபுரியத் தமிழகம் வந்தவர். தமிழ்மொழியைக் கற்றுத் தம் பெயர் "வீரமா முனிவர்" என அமைத்துக்கொண்டார். தமிழில் முதன் முதல் அகராதி கண்டவர் இவரே. தேம்பாவணி யெனும் காவியம் இயற்றித் தமிழன்னையை ஒளிபெறச் செய்தார். 17ஆம் நூற்றாண்டினர்.

நூல்வாய்ப் புகழ்மேல் உயர்ந்தோய் நீ!
நோய்வாய் மருந்திற் கனிவோய் நீ!
கோல்வாய் கோடா நீதிநெறி
கொண்டெவ் வுலகும் புரந்தோய் நீ!
வேல்வாய்க் குருதி பாய்ந்திறப்ப
மெய்கொண் டாயோ இதையறியாக்
கால்வா யிலேப்போல் தியங்கிய வென்
கருத்திற் குணர்வை உணர்த்தாயோ?

## 4. முழுமுதற் கடவுள்

இதனைப்பாடியவர் உமறுப்புலவர். இவர் கடிகை முத்துப்புலவரின் மாணவர். எட்டயபுர அரசவையில் புலவராய்த் திகழ்ந்தவர். முகமதிய மதத்தினைச் சார்ந்தவர். நபிகள் நாயகத்தின் வரலாற்றினை கூறும் சிறுப்புராணம் பாடிப் புகழ்பெற்றவர். 17ஆம் நூற்றாண்டினர்.

திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக்(கு)அணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத்(து) உறைந்தபல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

### சொற்பொருள்

1. கருவுற்ற நாள்-பிறவி எடுத்தற்குத் தொடங்கிய நாள் எய்த்து-இளைத்து.
2. அச்சுதன் - அழிவில்லாதன்; அரங்கமாநகர் - திருவரங்கம்.
3. கனிவோய்-கனிந்து அருள் புரிவோன்; கோடா-திறம்பாத; புரந்தோய்-காத்தவன்; தியங்கிய-மயங்கிய.
4. திரு-அழகிய; மரு-மணம்; பொருவா-ஒவ்வாத.

### வினாக்கள்

1. நாவரசர் இறைவனை வேண்டுவதென்ன?
2. தொண்டரடிப்பொடி யாழ்வார் எந்தச்சுவையை வேண்டுகிறார்?
3. வீரமா முனிவர் இயேசுநாதர் பெருமைகளாகக் கூறுவதென்ன?
4. முழுமுதற் கடவுளின் தன்மையாகக் கூறப்படுவதென்ன?
5. சிறு குறிப்பு வரைக: திருநாவுக்கரசர், தொண்டரடிப் பொடி ஆழ்வார், வீரமா முனிவர், உமறுப் புலவர்.

# உரைநடைப் பகுதி

## 1. இசை இன்பம்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்

இசையினுடைய பெருமையை ஓர்ந்தே தமிழர் முத்தமிழுள் இசைத் தமிழை நடுநாயகமாக வைத்திருக்கின்றனர். இயற்றமிழாகிய இலக்கிய நூல்கள் செய்யுட்களால் இயன்றன. அவை இசையுடனேயே பயிலப்பட வேண்டும். நாடகத்திற்கு இசை இன்றியமையாதது என்பதை யாவரும் அறிவர். இலக்கிய இலக்கணப் பயிற்சி, ஆங்கிலம் தெலுங்கு முதலிய மொழிப்பயிற்சி முதலியன உடையரால் அவ்வக் கலைகளில் அறிவுடையாரையே இன்புறுத்த முடியும். ஆனால், இசையோ, கற்றார், கல்லார், விலங்கினங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்க்கும் இன்பம் நல்கும். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இருதிணை உயிர்களும் இசையின் வயப்பட்டு நின்றனவென்பது பல இடங்களிற் கூறப்பட்டுள்ளது.

காட்டிலுள்ள மலர்கள் மலரும் பருவத்தில் வண்டுகள் சென்று அவற்றிலிருந்து ஊதும். மலரும் பருவத்திலிருக்கும் பேரரும்பு '**போது**' என்று தமிழிற் கூறப்படும். காட்டிலுள்ள முனிவர் முதலியவரும் பிறரும் சிற்சில போதுகள் மலர்வதாற் காலத்தை அறிந்து வந்தனர். '**நள்ளிருள் நாறி**' என்றொரு மலர் உண்டு. அது நடு யாமத்தில்தான் மலரும். சூரியன் மறைந்திருப்பினும் அவை மலர்வதாலும் குவிதலாலும் போதினைப் புலப்படுத்துதலின், போதெனப் பெயர் பெற்றன. அப்போதுகளில் வண்டுகள் இசைபாட, அவை மலரும்; "முல்லை, வரி வண்டூத வாய் நெகிழ்ந்தனவே," என்பது **குறுந்தொகை**. பாம்பு இசைக்கு அடங்கும் என்றும் கூறப்படுகின்றது. மதம் பிடித்து அலையும் யானைகளும் இசையினால் அடங்கி விடும். பரிக்கோல், குத்துக்கோல் முதலிய ஆயுதங்களாலும்

அடக்கமுடியாத ஒரு யானை வீணை இசைக்கு அடங்கி விடுவது உவமானமாகக் ''காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல் யாழ்வரைத் தங்கியாங்கு'' எனக் **கலித்தொகை** என்ற சங்கநூலிற் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் ''அணியிழை மகளிரும் யானையும் வணக்கும், மணியொலி வீணையும்'' என்று **பெருங்கதையிலும்**, ''மகரயாழ் வல்ல மைந்தன் ஒருவனைக் கண்ட மத்தப் புகர்முகக் களிற்றின்'' என்று **மேருமந்தர புராணத்திலும்** சொல்லப்பட்டிருக்கின்றன. **அகநானூற்றில்** குறிஞ்சி நிலத்தில் தினைக்கொல்லையைக் காக்கும் ஒரு பெண் தெள்ளிய சுனையில் நீராடிப் பரண்மேல் நின்று, இனிய காற்றில் தன் கூந்தலை ஆற்றிக் கொண்டு, மிகுந்த களிப்புடன் அந்நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கையில், தினைக்கதிரை உண்பதற்காக அங்கே வந்த யானையொன்று அந்தப் பெண்ணின் இசையில் மயங்கிக் கதிரை உண்ணமல் தான் கொண்ட பெரும்பசியையும் மறந்து மயங்கி நின்றதாக ஒரு செய்தி காணப்படுகின்றது. இந்தக் காட்சியையே,

> ''ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
> பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
> குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
> படாஅப் பைங்கண் பாடுபெற்(று) ஒய்யென
> மறம்புகல் மழகளி(று) உறங்கும் நாடன்''

என்ற அடிகள் காட்டுகின்றன.

உதயணன் சரித்திரமாகிய பெருங்கதையில், உதயணன் **நளகிரி** என்ற மதம் பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கி, அதன்மேல் ஏறி, ஆயுதங்களை அதையே எடுத்துத்தர ஏவி ஊர்ந்தானென்று ஒரு செய்தி காணப்படுகின்றது. இசையினல் வணக்கப்பட்ட அந்த யானை உதயணனுக்கு அடங்கி நின்றதை ஆசிரியர் கூறுகையில், 'குருவினிடத்து மிகுந்த பக்தியுள்ள ஒரு மாணவன்போல் யானை படிந்தது' என்னும் பொருள்பட, ''வீணை கெழீஇ வீதியின் நடப்ப, ஆணையாசாற்கு அடியுறைசெய்யும், மாணி போல மதக்களிறு படிய'' என்று பாடியுள்ளார். இதே

நிகழ்ச்சியைக் கூறும் **உதயண குமார காவியம்** செய்தவர், இங்கே தந்தையைக் கண்டு வணங்கும் ஓர் உத்தமபுத்திரனை உவமை காட்டுகிறார்.

பசுக்கள் இசையின் வயப்படுகின்றன என்பதைக் கண்ணபிரானார் கதை விளக்கும். பசுக்களைப் பல இடங்களிலும் மேயவிட்டு விளையாடிக்கொண்டிருந்த கண்ணபிரானார், மாலைக்காலத்தில் பசுக்களை ஆயர்பாடிக்கு ஓட்டிச் செல்ல வேறு ஏதும் செய்வதில்லை ; குழலை எடுத்து ஊதுவார் ; உடனே பல இடங்களிலும் நின்று மேய்ந்த பசுக்களெல்லாம் ஒருங்கே திரண்டு அவர்பால் வந்து சேரும். இதனையே " ஆக் குவித்தார் குழலால் அரங்கேசர் " என்று திவ்விய கவி ஒருவர் சுருக்கமாக விளக்குகின்றார். **பெரிய புராணத்திற்** கூறப்படும் நாயன்மார்களுள் **ஆனாய நாயனா**ருடைய புராணத்தும் இத்தகைய செய்திகள் காணப்படுகின்றன.

**அசுணமா** என்றொரு விலங்குண்டு. அதைப் பறவை என்பாருமுளர். அஃது இசையை அறிவதிற் சிறந்தது ; இனிய இசையைக் கேட்டுக் களிக்கும் ; இன்னா இசையைக் கேட்பின், மூர்ச்சையுற்று விழுந்துவிடும். அதன் தன்மையை, " இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்து, இருங்கல் விடரளை யசுணம் ஓர்க்கும் " என்ற **அகநானூற்**றடிகளாலும், " இன்னளிக்குரல் கேட்ட வசுணமா அன்னளாய் மகிழ்வெய்துவித்தாள் " என்ற **சிந்தாமணிப்** பாடலாலும், " யாழ், நறையடுத்த அசுண நன்மாச் செவிப் பறையடுத்தது போலும்" என்ற **கம்பர்** வாக்காலும் அறியலாம். அதனைப் பிடிக்க எண்ணியவர்கள் செடி மறைவிலிருந்து யாழ் வாசிப்பார்களென்றும், அதன் இசையைக் கேட்டு அருகுற்று அசுணம் களிக்குமென்றும், அப்பொழுது அதனைப் பிடித்துக்கொள்ளுவார்களென்றும் தெரிகின்றது. அவர்கள் கை முதலில் யாழின் இசையால் அசுணத்திற்கு இன்பத்தை விளைவித்துப் பின்பு அதன் உயிருக்கே அழிவு சூழ்வதை **நற்றிணை**யில் உவமையாக எடுத்தாள்கையில்,

" அசுணம் கொல்பவர் கைபோல் நன்றும், இன்பமுந் துன்பமு முடைத்தே " என்று ஒரு நல்லிசைப் புலவர் பாடியிருக்கிறார்.

கின்னரப் பறவையும் இத்தன்மையதே. வண்டிமாடு, கபிலை ஏற்றக் காளைகள் முதலியவற்றை இயக்கும்போது, தெம்மாங்கு முதலிய பாடல்களைப் பாடுவதையும், அவைகளைக் கேட்டு அவ்விலங்குகள் தம் வேலையை வருத்தமின்றி அமைதியாகச் செய்துவருவதையும் இன்றும் காண்கிறோம். அந்தத் தெம்மாங்கு தேன் பாங்குபோலும்! குழந்தைகள் அன்னையரின் இனிய தாலாட்டிசையைக் கேட்டு அழுகை ஒய்ந்து உறங்குவதை எவர் தாம் அறியார்?

வன்மனக் கள்வரும் தம் கொடுஞ்செயலை மறந்து இசை வயத்தராவர். பழைய நூலில் இத்தகைய செய்தியொன்று காணப்படுகின்றது. பாலை நிலத்தில் ஆறலைக் கள்வர் வழிவருவோர் பொருளையும் உயிரையும் கவர்வர். பொருளில்லையெனினும் வாளால் வெட்டப்பட்ட உடம்பு துள்ளுவதைப் பார்த்தேனும் களிக்கக் கொலை செய்வர். அவர் முன்னே பொருநர் பாலைப்பண்ணைப் பாடினால், அக்கள்வர் தம் கையிலுள்ள ஆயுதங்களை நழுவவிட்டுத் தம் வன்தொழிலை மறந்து இன்புற்று இசைக்கு உருகுவாராம். இதனையே, " ஆறலைக் கள்வர் படைவிட அருளின், மாறுதலைப் பெயர்க்கும் மருவின் பாலை " என்ற அடிகள் உணர்த்துகின்றன.

சீவக சிந்தாமணியின் கதாநாயகனான சீவகன், ஆண்களைப் பார்ப்பதுமில்லை யென்ற விரதத்துடன் இருந்த சுரமஞ்சரி என்ற பெண்ணின்பால் ஒரு பழுத்த கிழவன் வேடங்கொண்டு சென்று, இசை பாடி, அவளை வசப்படுத்தினான். அவன் இசையைக் கேட்ட பெண்டிர் யாவரும் வேடன் பறவைபோலக் கத்தும் ஓசையைக் கேட்டு மயங்கி ஒரே கூட்டமாக ஓடிவரும் மயிலினங்களைப் போல விரைந்து வந்தனர் என்று கவி அவ்விடத்தில் வருணிக்கிறார்.

"கள்ளமூப்பின் அந்தணன் கனிந்தகீத வீதியே
வள்ளிவென்ற நுண்ணிடை மழைமலர்த் தடங்கணுர்
புள்ளுவம் மதிமகன் புணர்த்தவோசை மேற்புகன்(று)
உள்ளம்வைத்த மாமயிற் குழாத்திஞேடி யெய்திஞர்"

என்பது அந்தப் பாட்டு.

இசை பிறரைத் தன் வயப்படுத்தும் என்னும்போது என்னுடைய இளமைக் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. என்னுடைய தமிழாசிரியராகிய திரிசிரபுரம் மகாவித்துவான் **மீனுட்சிசுந்தரம் பிள்ளை** யவர்களிடத்துச் சிறப்புப்பாயிரம் பெறப் பல புலவர்கள் முயற்சி செய்ததுண்டு. சிறந்த சங்கீத வித்துவானும் பெருஞ் சிவபக்தருமாகிய **கோபாலகிருஷ்ண பாரதியார் அவர்கள்** தாம் இயற்றிய நந்தன் சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்துதவுமாறு பிள்ளையவர்களை வேண்டினுர்கள். அதில் பிழைகள் காணப்பட்டமையாற் "சிறப்புப் பாயிரம் தரமாட்டோம்," என்று பிள்ளையவர்கள் மறுத்து விட்டார்கள். மறுத்தும், பாரதியார் முயன்றே வந்தார். ஒருநாள் பிள்ளையவர்கள் உள்ளே படுத்திருக்கும்போது அவர்கள் வீட்டிற்கு வந்த பாரதியாரவர்கள் பிள்ளையவர்கள் நித்திரை செய்கிறுர்கள் என்பதை அறிந்து, எழுப்புதல் கூடாதென்றெண்ணிப் புறத்தே இருந்து, தமது நந்தன் சரித்திரக் கீர்த்தனையிலுள்ள "கனக சபாபதி தரிசனம் ஒரு நாள் கண்டால் கலிதீரும்" என்ற கீர்த்தனையை இனிமையாக மெல்லப் பாடிக்கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்கள் விழித்துக்கொண்டு எழுந்து கீர்த்தனை முழுவதும் பாடும் வரையில் இருந்து கேட்டு, மனமுருகி, "இதற்குச் சிறப்புப் பாயிரம் கொடாமலிருப்பது முறையன்று," என்று உடனே வந்து சிறப்புப் பாயிரமொன்றை வழங்கினுர்கள்.

இறைவனே இசையின் வடிவமாயிருப்பவரென்றும், இசையில் விருப்பம் உடையவரென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றுர்கள். "ஏழிசையாய் இசைப்பயனுய்", "இயலவன் இசையவன்," இயலிசைப் பொருள்களாகிய," "ஏழிசையை" என வரும் **தேவாரப் பகுதிகள்** சிவபெரு

மான் இசையுருவினர் என்பதைத் தெரிவிக்கின்றன. இசையிலுள்ள விருப்பத்தினல் நாள்தோறும் இசையைக்கேட்டு மகிழும்பொருட்டு இசையில் வல்ல இரண்டு கந்தருவர்களைச் சிவபெருமான் காதிற் குழையாக வைத்தருளியிருக்கின்றனரென்று நூல்கள் கூறும். ''இசை விரும்பும் கூத்தனுர்,'' என்பதும் இறைவருடைய இசை விருப்பத்தை வெளியிடும். இறைவன் கையில் வீணையை வைத்து வாசித்தின்புறுவதாகப் பெரியோர் கூறுவர். ''எம் இறை வீணை வாசிக்குமே'' என்பது **தேவாரம்.** இத்தகைய மூர்த்தி **'வீணதட்சிணமூர்த்தி'** என்று வழங்கப்படுவார். கண்ணன் வேய்ங்குழலோடும் விளங்கி இசை பரப்பியதை அறியாதார் யார்? இத்தகைய இசையின் பெருமையையும் இன்பத்தையும் இன்னும் விரிக்கிற் பெருகும்.

## அருஞ்சொற் பொருள்:

ஓர்ந்தே-உணர்ந்தே. வாய் நெகிழ்ந்தன - மலர்ந்தன. வணக்கும்-பணியைச் செய்கின்ற. புகர் - புள்ளி. ஒலியல் வார் மயிர் - அடர்ந்து நீண்ட கூந்தல். குரல்-தினைக்கதிர். பாடு பெற்று-உறக்கங்கொண்டு. மறம் புகல்-வீரத்தை விரும்புகின்ற. அடியுறை-பணிவிடை. மாணி-மாணவன். இருஞ்சிறைத்தொழுதி-கரிய சிறகுகளையுடைய வண்டின் கூட்டம். யாழ் செத்து-யாழ் ஒலி என்று கருதி. விடர்-பிளவு. அளை-குகை. மழை-குளிர்ந்த. புள்ளுவம் மதிமகன்-பறவைகளுடைய குரல் ஒலிகளின் வேறுபாட்டினை நன்குணரும் வேடுவன்.

## வினக்கள்:

1. இசையின் சிறப்பு யாது?
2. போது: இதன் பெயர்க்காரணத்தை விளக்குக.
3. கலித்தொகை, குறுந்தொகை, பெருங்கதை முதலிய நூல்களால் அறியப்பெறும் இசையின் சிறப்பியல்புகளைத் தெளிவுபடுத்துக.
4. யானை இசையில் மயங்கி நிற்கும் என்பதை, அகநானூறு, பெருங்கதை இவற்றின் மூலமாக விளக்கிக் காட்டுக.
5. அசுணமாவின் இயல்பு யாது? அதனைப் பிடிக்க விரும்புவோர் கைக்கொள்ளும்முறையினை இலக்கியச்சான்றுகளுடன் விளக்குக.
6. வன்மனக் கள்வரும் இசையில் தம் நிலை மறப்பர் என்பதற்குச் சான்று தருக.
7. இசை பிறரைத் தன் வயப்படுத்தும் என்பதை ஒரு நிகழ்ச்சியின் வாயிலாக விளக்குக.
8. இறைவன் இசையில் பெருவிருப்புடையன் என்பதற்கு நூற் சான்றுகள் தருக.

## கட்டுரைப் பயிற்சி:

இசையின் சிறப்பியல்புகள் பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை ஒன்று வரைக.

# 2. ஆதிமந்தியார்

திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், எம். ஏ., அவர்கள்

சோழன் கரிகாலன் என்பான் சோழநாட்டை ஆண்ட முடியுடை மன்னருள் முதன்மை பெறுதற்குரிய பெருமை வாய்ந்தவன். இவன் உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னியின் புதல்வன் என்பது பொருநராற்றுப் படையால் போதரும். உழுவித்து உண்ணும் வேளாளனும், மன்னர்க்குப் பெண்கொடுக்கும் உரிமை உடையோனுமாகிய நாங்கூர் வேளிடை இவன் பெண் கொண்டு இல்வாழ்க்கையினை நடத்தி வந்தான். இக்கரிகாலனது மகள் ஆதிமந்தியார். இளமை முதல் புலமை நலம் மிகுந்த அழகுமிக்க ஆதிமந்தி, உரிய பருவத்தில் ஆட்டனத்தி என்ற சேர அரசனை மணந்தாள். இவனது பெயர் சங்க நூலில் அத்தி எனவும், ஆட்டனத்தி எனவும் குறிக்கப்பட்டுள்ளது. அத்தி நடனக் கலையில் வல்லவனுதலின் கூத்தன் என்று பொருள்படும் ஆட்டன் என்ற அடைமொழியினைப் பெற்று ஆட்டனத்தி எனவும், பொருநன் எனவும் அழைக்கப் பட்டான். சேரர்க்குக் கூத்தாடுதல் வழக்கம் என்பது, "ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் துணங்கைக் கூத்து ஆடினன்" என்று பதிற்றுப்பத்தில் வருதல் காண்க. ஆட்டனத்தி அழகாற் பொலிவு பெற்ற நிமிர்ந்த திரண்ட தோளினை உடையவன் என்பது அகநானூற்றுப் பாடலால் விளங்குகின்றது.

சோழ நாட்டில் ஆண்டுதோறும் காவிரிப் புதுப்புனல் விழா நடைபெறுவதுண்டு. சோழன் கரிகாலன் தன் அமைச்சர்களுடனும், சுற்றத்தாருடனும் கழார் என்னும் ஊரிலுள்ள காவிரித் துறையில் நடைபெறும் காவிரிப் புதுப்புனல் விழாவினைக் காணுதற்குச் சென்றுன். கரிகாலன் புதுப்புனல் விழாக் கொண்டாடும் இச் செய்தியினை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துள் கடலாடு காதையுள் குறிப்பிடுதல் காண்க. காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த இந்திர விழாவிற்குப்பின் மக்கள் கடலில் நீராடச்

சென்றனர். அப்போது கடற்கரையிலுள்ள ஆரவாரம், கரிகால் வளவன் காவிரியின் புதுப்புனல் விழாக் கொண்டாடும் சிறந்த நாளினைப் போன்றது எனக் கூறுகின்றது சிலப்பதிகாரம்.

ஆதிமந்தியும் அவள் கணவன் ஆட்டனத்தியும் புதுப்புனல் விழாவிற்குச் சென்றனர். அவ்விழாவிற்குச் சென்ற ஆட்டனத்தியின் தோற்றத்தினைக் கூறப் போந்த பரணர்,

> "கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன்
> வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல்
> சுரியலம் பொருநனை."

எனக் கூறுவதினின்று ஆட்டனத்தி கச்சினையும், கழலினையும், தேனொழுகும் தாரினையுடைய மார்பினையும், சுருண்ட குழலினையும் உடையவனாய் விளங்கினான் என்பது பெறப்படுகின்றது. புனல் விழாவில் கலந்து கொள்ளக் கருதிய ஆட்டனத்தி இன்னிசை இயம்ப, தன் அழகிய வீரக்கழல் காலில் புரள, கரிய கச்சிற் கோத்துக் கட்டிய அழகிய பொன்னாலாகிய பாண்டில் மணிகள் ஒலிக்க, காவிரியாற்றில் இறங்கி, பலவகையான நடனங்கள் ஆடி, அந்நீரில் நீந்துவானாயினன். ஆட்டனத்தியின் நடனங்களைக் கண்ட கரிகாலன் முதலியோர் கழிபேர் உவகை கொண்டனர். அதுபோழ்து ஆட்டனத்தியின் அழகைக்கண்டு விரும்பிக் காவிரி அவனை அழைத்துக் கொண்டு போய்க் கடலுள் மறைத்து விட்டது.

தன் கனவனைக் காணப்பெறாத ஆதிமந்தி கழிபெருந் துன்பம் கொண்டாள். அவள் தன் எதிரே வருபவர்களை எல்லாம் நோக்கித் தன் கணவனின் தோற்றம், உடை முதலியனவற்றை எடுத்துக் கூறி, "என் கணவனைக் கடல் கொண்டு ஒளித்ததோ? புனல் கொண்டு ஒளித்ததோ? அன்றி அவன் எங்கேனும் நடனம் செய்யப்

போயிருக்கின்ருனே?'' எனப் பலவாறு புலம்பி அவனைக் கண்டு பிடிக்கும் பொருட்டுப் பல ஊர்கள்தோறும் திரிய லுற்ருள்.

தன் கணவனைத் தேடுதற்குச் சென்ற ஆதிமந்தி வீரர் குழுமியுள்ள விழா நிகழும் இடங்களிலும், மகளிர் துணங்கைக் கூத்தாடும் இடங்களிலும் சென்று, ''என் காதலனைக் கண்டீரோ,'' எனக் கேட்டுக்கொண்டே காவிரி யின் கரையோரமாகச் சென்று கடற்கரை அடைந்து அங்கும் நின்று புலம்புவாளாயினள். இச் செய்தியினை ஆதிமந்தியார் பாடிய குறுந்தொகைச் செய்யுளால் அறியலாகும்.

கடற்கரையின் அருகே வந்து தம் காதலன் பிரிவு குறித்துக் கலங்கும் ஆதிமந்தியாரின் அவலத்தினையும் கற்பின் திண்மையினையும் கண்ட கடல், ஆதிமந்தியார்பால் இரக்கங்கொண்டு ஆட்டனத்தியைக் கரையில் கொணர்ந்து காட்ட, துன்பத்தில் ஆழ்ந்திருந்த ஆதிமந்தியார் அதனைக் காணுது வருந்துவாராயினர். இதனைக் கண்ட மருதி என்ற ஒரு மாது ஆதிமந்தியாரிடத்தே இரக்கங்கொண்டு தன் உயிர்க்கு அஞ்சாது கடலில் சென்று தேடி ஆதிமந்தி யாருக்கு அவர் கணவனைக் கொணர்ந்து காட்டித் தான் உயிர்விட்டுப் பொன்ருப் புகழ் எய்தினுள் என்னும் செய்தி அகநானூற்றுப் பாடலால் அறியக்கிடக்கின்றது. தம் கற்பின் திண்மையால் கணவனைப் பெற்ற ஆதிமந்தி யார் மகிழ்ச்சிகூர்ந்து மருதியினை மனமார வாழ்த்தித் தம் கண்மணி அனைய காதலனுடன் இன்புற்று வாழ்ந்து வருவாராயினர்.

தலைவனைப் பிரிந்த தலைவி கொண்ட துன்பத்திற்கும், கற்பின் திண்மைக்கும் ஆதிமந்தியாரை உவமையாகக் கூறுதலைத் தமிழ் இலக்கியத்துள் பல இடங்களில் காண லாகும். எடுத்துக்காட்டாகத் தலைவனைப்பிரிந்து வருந்தும் வெள்ளிவீதியார் என்ற பெண்பாற் புலவர்,

> ''..............யானே
> காதலற் கெடுத்த சிறுமையோடு நோய்கூர்ந்து
> ஆதிமந்தி போலப் பேதுற்று
> அலந்தனென் உழல்வென் கொல்லோ''

எனத் தமது துன்பத்தினை ஆதிமந்தியார் கொண்ட துன்பத்தோடு ஒப்பிட்டுக் கூறியதனைக் காண்க. பாண்டியன் மயங்கி விழ, கண்ணகி, நடுங்கி வீழ்ந்த பாண்டிமா தேவியை விளித்து, ''கற்புடைய மகளிர் பிறந்த புகார் நகரத்தில் யான் பிறந்தேன். யான் கற்புடைய மகள் என்பது உண்மையேயாயின் இம்மதுரைமாநகரை அழிப்பேன்'' என வஞ்சினம் கூறுங்கால் புகாரிலுள்ள ஏழு கற்புடைப் பெண்டிரைக் குறிப்பிடும்போது, அவருள் ஆதிமந்தியாரை ஒருவராக வைத்துக் கூறுதல் ஈண்டு நோக்கத்தக்கது.

> ''மன்னன் கரிகால் வளவன் மகள் வஞ்சிக்கோன்
> தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
> கல்நவில் தோளாயோ வென்னக் கடல் வந்து
> முன்னிறுத்திக் காட்ட அவனை தழீஇக்கொண்டு
> பொன்னங் கொடிபோலப் போதந்தாள்.''

எனக் கண்ணகி வாயிலாக இளங்கோவடிகள் ஆதிமந்தி யாரின் கற்பின் மாண்பினைப் பாராட்டுகின்றார். சிலப்பதி காரத்துள் கூறப்பட்டுள்ள கற்புடை மகளிர் எழுவர் வரலாறும் பட்டினத்துப் பிள்ளையார் புராணத்தில் பூம் புகார்ச் சருக்கத்திலும் கூறப்பட்டுள்ளது.

இதுகாறும் கூறியவற்றால் ஆதிமந்தியார் என்பார் கற்பின் திறமையுடன் விளங்கிய காரிகையார் என்பது பெறப்படுகின்றது. இவ் வம்மையாரைப் போன்ற பல கற்பரசிகளின் வரலாறு தமிழ் இலக்கியத்துள் காணப் படுதலால் அவ்வரலாறுகளைப் பொதுவாக ஆடவரும் சிறப் பாகப் பெண்மக்களும் படித்துப் பயன் பெறுவார்களாக.

அருஞ் சொற்பொருள்:

போதரும்-புலனுகும். தேன் + தார் - தேந்தார். தார் - மாலை. சுரியல் - சுருண்ட மயிர். துணங்கை - மகளிர் கைகோத்தாடும் ஒரு வகைக் கூத்து. பொன்ரு - அழியாத. நோய்கூர்ந்து - துன்புற்று. பேதுற்று - மயங்கி. அலந்தனென் உழல்வென்-அலைந்து நிலைகெடுவேன். வஞ்சிக்கோன் - ஆட்டனத்தி. நவில் - போன்ற.

வினுக்கள்:

1. ஆட்டனத்தி பெயர்க் காரணத்தை விளக்குக.
2. "சேரர்க்குக் கூத்தாடுதல் வழக்கம்" என்பதைச் சான்று தந்து விளக்குக.
3. ஆட்டனத்தியின் தோற்றச் சிறப்பைப் பரணர் எவ்வாறு கூறுகின்ருர் ?
4. கணவனை இழந்த ஆதிமந்தி எவ்வாறு புலம்பிஞள் ?
5. ஆதிமந்தி தன் கணவனை எங்கெங்குத் தேடிஞள் ?
6. ஆதிமந்தியாருக்கு மருதிசெய்த உதவி யாது ?
7. தலைவனைப் பிரிந்த தலைவியின் துன்பத்திற்கு ஆதிமந்தியாரை உவமையாகக் கூறினர் என்பதைச் சான்றுதந்து விளக்குக.
8. ஆதிமந்தியார் கற்பின் மாண்பினை இளங்கோவடிகள் எங்ஙனம் பாராட்டுகின்ருர் ?

கட்டுரைப் பயிற்சி:

"ஆட்டனத்தியும் ஆதிமந்தியும்" என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.

# ૩. பட்டினப் பாலை

பேராசிரியர். டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., L.T. M.O.L., Ph.D.

முன்னுரை

காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துக்கூறிப் பாலைத் திணையில் அமைந்ததாதலின் இப்பாட்டுப் பட்டினப் பாலை எனப் பெயர் பெற்றது. இது வேற்று நாட்டுக்குச் செல்லத் தொடங்கிய தலைவன் தனது நெஞ்சை நோக்கி, 'தலைவியைப் பிரிந்து வாரேன்' என்று தனது செலவை நிறுத்திக் கூறும் கூற்றுகக் கரிகாற்சோழனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. இப்பாட்டு 301 அடிகளை உடையது. இப்பாடலைக் கேட்டு உவந்த கரிகாற் சோழன் உருத்திரங் கண்ணனாருக்குப் பதினாறு இலட்சம் பொன் பரிசாக அளித்தனன் என்று நூல்கள் கூறும்.

காவிரியாற்று வளம்

காவிரியாறு மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றிக் கடலிற் பாயும். வெள்ளி என்னும் விண்மீன் தான் நிற்பதற்குரிய வடதிசையில் இல்லாது, தென்திசையிற் சேரினும் வானம் பொய்ப்பினும் பொன்கொழிக்கும் காவிரியில் நீர் வற்றாது. இத்தகைய வளமுடைய காவிரி பாயப்பெற்ற நாடு சோழ நாடு.

மருத நிலவளம்

மருத நிலத்தில் ஊர்கள் நெருக்கமாக இருக்கும். வயல்கள் மிக்க விளைச்சலை நல்கும். கருப்பஞ்சாறு காய்ச்சும் கொட்டில்களில் எழுந்த இனிய புகைபடுவதால் வயலில் உள்ள நெய்தற் பூ வாடும். எருமைக் கன்றுகள் செந்நெற் கதிர்களை வயிறார உண்டு நெற்குதிர்களின் நிழலில் உறங்கும். செழித்த வயல்களில் குலைத் தெங்கும், குலை வாழையும், காய்க் கமுகும், மஞ்சளும், பல்வேறு மரங்களும், குலைகளையுடைய பனையும் நெருங்கி வளரும். ஊர்களில் உள்ள மனைகளின் முற்றத்தில் நெல் உலர

வைக்கப்பட்டிருக்கும். அதனைக் கோழிகள் தின்னாதபடி சிறு பெண்கள் காவலாக இருப்பர்; நெல்லைத் தின்னும் கோழிகளைத் தம்முடைய மகரக் குழைகளால் எறிந்து ஓட்டுவர். கால்களில் தண்டையணிந்த சிறுவர் உருளைகளை யுடைய சிறு தேர்களை முற்றத்தே உருட்டி விளையாடுவர். முன்னர்ப் பெண்கள் எறிந்த மகரக் குழைகள் அத்தேர் உருளைகளின் போக்கைத் தடுக்கும்.

நெய்தல் நிலத்தில்

சோழ நாட்டைச் சேர்ந்த பல ஊர்களிலும் சென்று, உமணர் உப்பை விற்ற விலைக்கு நெல்லைப்பெறுவர். அதனைப் படகுகளில் ஏற்றிக்கொண்டு தத்தம் நெய்தல் நில ஊர்கட்குச் செல்வர். தோப்புக்களை அடுத்துப் பூஞ் சோலைகள் இருக்கும். அப்பூஞ்சோலைகளில் பொய்கைகள் இருக்கும். அப்பொய்கைகளில் மணம் நிறைந்த பன்னிற மலர்கள் மலர்ந்திருக்கும்.

நகரத்தில்

இத்தகைய வளமிக்க சோழ நாட்டின் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினமாகும். அப்பெருநகரின் மதில் திண் ணியது; புலி அடையாளம் தீட்டப்பெற்ற வலிய கதவு களைக்கொண்டது. நகரத்தில் உணவுச்சாலைகள் பல வுண்டு. அவற்றில் வடிக்கப்படும் கஞ்சி ஆற்று வெள்ளம் போலப் பெருகி ஓடும். அதனைப் பருகச் செல்லும் எருது கள் தம்முள் போரிடலால், அது மண் கலந்து சேருகி விடும். தரை காய்ந்த பிறகு அதன்மீது தேர்கள் ஓடுதலால் புழுதியாகி மேலெழும்; எழுந்து பலவகை ஓவியங்கள் தீட்டப்பெற்ற வெண் சுவருடைய கோவில்கள் மீது படிந்து, அவற்றை மாசுபடுத்தும். நகரத்தில் அமணப் பள்ளிகள் உண்டு. அவை ஒவ்வொன்றிலும் குளமுண்டு. சடைமுடியுடைய முனிவர் இளமரக்காவில் தங்கியிருப்பர். அவர்கள் நெருப்பில் நெய்பெய்து ஓமம் செய்வர். அங் குள்ள குயில்கள் ஓமப் புகையைக் கண்டு மேகம் என

மருண்டு காளிகோட்டத்தில் உள்ள புருக்களோடு பழமரப் பொந்துகளில் தங்கும்.

பரதவர் செயல்கள்

பட்டினப் பாக்கத்தில் உள்ள பரதவர் இருல் மீனின் இறைச்சியையும், வயல் ஆமையின் இறைச்சியையும் சமைத்து உண்பர். வறண்ட அடம்பின் பூவையும் ஆம்பற் பூவையும் பறித்துச் சூடுவர்; பொது விடத்தே மிகப் பலராகக் கூடுவர்; ஆட்டுக் கடாக்களையும் கவுதாரிகளையும் போரிடச்செய்து பொழுது போக்குவர்; பின்னர் மற்போரும், கருவிப்போரும் புரிவர். அதன் பிறகு கவண்கல் வீசி விளையாடுவர். அக்கல்லெறிக்கு அஞ்சிக் குட்டிகளை ஈன்ற பன்றிகளும் கோழிகளும் திசைகெட்டு ஓடும். பரதவர் முழுநிலா இரவில் மீன் பிடிக்கச் செல்லார்; தழை உடையணிந்த தம் மகளிரோடு மணல் முற்றத்தே கூடுவர்; அவ்விடத்தில் சினைச்சுருவின் கொம்பை நடுவர்; அதனிடத்து ஏறிய தெய்வத்தை வழிபடுவர்; அதன்மீது வெண்டாளிப் பூவால் கட்டிய மாலையை அணிவர்; தாழம்பூவைச் சூடுவர். பனையிலிருந்து இறக்கிய கள்ளையும், நெல்லாற் சமைத்த கள்ளையும் குடித்துக் களித்து விளையாடுவர். பிறகு அவர்கள் கடற்கரையில் கூடிக் காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் நீராடுவர்; நீராடியபின் கடல்நீர் உப்பு நீங்கும் பொருட்டு ஆற்றுநீரில் குளிப்பர்; நண்டுகளைப் பிடித்தாட்டுவர்; பரவி வருகின்ற அலைகளைக் காலால் மிதிப்பர்; மணலினால் பாதைகள் செய்வர்; உயர்ந்த மாடங்களிலிருந்து செல்வ மகளிர் பாடும் பாடல்களைக் கேட்டு மகிழ்வர். இரவில் உயர்ந்த மாடங்களில் விளக்குகள் எரியும். வைகறையில் கட்டுமரங்களிற் செல்லும் பரதவர் அவ்விளக்குகளை அறிவர். காலையில் கடைத்தெருவில் பலரும் வழிபடும் தெய்வங்களுக்குப் பாடுமகளிர் பக்திச் சுவையுடைய பாடல்களைப் பாடுவர். அக்கோவில்களில் புல்லாங்குழல், யாழ், முரசு முதலிய இன்னிசைக் கருவிகள் ஒலிக்கும்; விழாக்கள் சிறப்புற நடைபெறும்.

### பண்டசாலை

பரதவர் வாழும் அகன்ற தெருவில் காவலைக்கொண்ட பண்டசாலை உள்ளது. உள்நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பண்டங்கள் சுங்கம் மதிப்பிடப்பட்டு, புலி முத்திரை யிடப்பட்டு, கப்பல்களில் ஏற்றும்பொருட்டுப் பண்டசாலை முற்றத்தே அடுக்கிக் கிடக்கும். கப்பல்களில் இருந்து இறக்கப்பட்ட பண்டங்கள் புலிப்பொறி இடப் பெற்றுச் சுங்கம் மதிப்பிடப் பண்டசாலை முற்றத்தின் ஒரு பக்கத்தே குவிந்து கிடக்கும். சுங்கம் கொள்பவர் சிறு பொழுதும் ஓய்வின்றி நாடோறும் சுங்கம் கொள்வர். நாய்களும் ஆட்டுக்கடாக்களும் பண்டசாலை முற்றத்தில் கிடக்கும் மூட்டைகளின்மீது ஏறிக் குதிக்கும்.

### மகளிர் விழாக் காணல்

உயர்ந்த மாடங்கள் பல ஏணிப்படியை உடையனவாய் இருக்கும். வானளாவிய மாடங்களில் வாழ்ந்த மகளிர் சிவந்த அடியினர்; பவள நிறத்தினர்; மெல்லிய உடையினர்; கிளி மொழியினர்; மயிலின் சாயலர். அவர்கள் தென்றற் காற்று வீசும் சாளரங்களின் எதிரே நின்று கடைத்தெருவை நோக்குவர்; அப்பொழுது கடைத்தெருவில் சிலர் பாடுவர்; சிலர் புல்லாங்குழல் ஊதுவர்; சிலர் யாழ் வாசிப்பர்; சிலர் முரசொலிப்பர். அந்த நிலையில் முருகக்கடவுள் முதலிய தெய்வங்கட்கு விழாக் கொண்டாடப் படும். அப்பொழுது மேற்சொல்லப்பட்ட மாடங்களில் உலாவும் மகளிர் தம் கைகளைக் குவித்து வணங்குவர்.

### கடைத்தெருவில் பலவகைக் கொடிகள்

வீட்டில் உலவும் தெய்வங்கள் மகிழும்படி வாயில்களில் கொடிகள் நாட்டப்பட்டிருக்கும். கடைத்தெருவில் இரண்டு வரிசைகளிலும் எடுத்த கொடிகள் கரும்பின் பூக்களைப்போல விளங்கும். கூல வகைகளை நிரப்பித் தாழிடப்பெற்ற அறைகளில் கொடிகள் கட்டப்பட்டிருக்கும். பல நூல்களை நன்கு கற்ற ஆசிரியர்கள் பிறரை வாதுக்

கழைக்கக் கொடிகள் கட்டியிருப்பர். துறைமுகத்தே நிற்கும் பலவகைக் கப்பல்கள்மீது கொடிகள் கட்டப்பட்டிருக்கும். 'இஃது இன்ன கடை' என்பதை மக்களுக்குணர்த்த ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு வகைக் கொடி கட்டப்பட்டிருக்கும். இவ்வாறு தெருக்களில் எண்ணிறந்த கொடிகள் கட்டப்பட்டிருத்தலால் ஞாயிற்றின் ஒளிக்கதிர்கள் தெருவிற் பெரிதும் படுவதில்லை என்னலாம்.

கடைத்தெருவில் பலநாட்டுப் பண்டங்கள்

மலைநாட்டு மிளகும் பொன்னும், பொதிய மலையிற் பிறந்த சந்தனமும் அகிலும், தென் கடலில் பிறந்த முத்தும், கீழ்க்கடலில் பிறந்த பவளமும், கங்கையாற்றுப் பாய்ச்சலால் விளைந்த பொருள்களும், காழகப் (பர்மா நாட்டுப்) பொருள்களும், சீனம் முதலிய இடங்களிலிருந்து வந்த பனிநீர் முதலியனவும், காவிரியாற்றுப் பாய்ச்சலால் விளைந்த பொருள்களும், இலங்கைப் பொருள்களும், பிறவும் புகார் நகரத்துக் கடைத்தெருவில் மிகுதியாகக் குவிந்து கிடக்கும். வெளி நாடுகளிலிருந்து வந்த பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் நகரில் குடியிருப்பர்.

வேளாளர் இயல்பு

வேளாளர் அருள் ஒழுக்கம் நிறைந்தவர். அவர்கள் அறிவுரையால் வலைஞர் முற்றத்தில் மீன்கள் பாய்ந்து திரியும். ஊன் விற்பவர் குடிசையில் ஆடு முதலியன திரண்டு இருக்கும். வேளாளர் களவு செய்பவரை அத்தொழிலினின்று நீக்குவர்; அந்தணரது புகழை நிலை நிறுத்துவர். பலர்க்குத் தானம் அளித்தல் வேளாளர் இயல்பு.

வணிகர் இயல்பு

வணிகர் நுகத்தில் தைத்த பகலாணியைப் போல நடுநிலை பிறழாத நெஞ்சினர்; மிகச்சிறிய அளவு ஆதாயம் வைத்துப் பொருள்களை விற்பவர்; தாம் கொடுக்கும் பொருளுக்கு ஏற்பவே சரக்கையும் கொள்வர்; அவ்வாறே

தாம் வாங்கும் பொருளுக்குக் குறையாத மதிப்புடைய பொருளேயே கொடுக்கும் இயல்பினர்.

### கரிகாலன் வீரம்

வலிய புலி, கூட்டில் அடைபட்டு வளர்ந்தாற் போல கரிகாலன் பகைவரது சிறையிலிருந்து வளர்ந்தான்; சிறையிலிருந்து வெளியேற விரும்பி, காவலரை வாளால் துணித்து, அவ்விடத்தினின்றும் அகன்ருன்; தனது அரசுரிமையை முறைப்படி பெற்ருன். பின்னர் அவன் தனது நாட்டை உருவாக்க நாற்படைகளுடனும் சென்ருன்; பகைவர் நாடுகளேக் கைப்பற்றினுன். அவனுல் கைப்பற்றப் பட்ட ஊர்களில் கூகைகள் இருந்து குழறின; மதில்கள் அழிந்தன. எத்துணே அரசர்கள் எதிர்த்து வரினும் தான் ஒருவனுய் நின்று வெல்ல வல்லவன் என்று பெருமிதம் கொண்டிருந்த பாண்டியனே அவன் வென்ருன். அவன் நினேத்தவற்றை நினேத்தவாறே முடிக்க வல்லவன். அருவா நாட்டார், குட்ட நாட்டார், குட நாட்டார், இருங்கோ வேளிர் முதலியவர்களேத் தனக்குக் கீழ்ப்படுத்தியவன். அவன் காடு கெடுத்து நாடாக்கியவன்; ஆங்காங்குக் குளங்களே அகழ்வித்தவன்; உறையூரில் கோவில்களேயும் குடிகளேயும் நிலேபெறச் செய்தவன். இங்ஙனம் பல நாடுகளே வளப்படுத்தியதனுல் அவன் கரிகால்வளவன் எனப் பெயர் பெற்ருன்.

### புகாரில் அம்பலம்

புகாரில் அம்பலம் ஒன்று உண்டு. அதனில் அருள் தறி நிறுத்தப்பட்டுள்ளது. சிறை செய்யப்பட்ட பகைவர் நாட்டு மகளிர், துறையில் நீராடி அம்பலத்தை மெழுகுவர்; விளக்கை ஏற்றி வைப்பர். அங்குப் பல நாட்டாரும் சென்று வணங்குவர்.

### தலேவன் செய்த முடிவு

"நெஞ்சமே, என் காதலி இங்கே தனித்து இருப்ப, நான் மேற்சொல்லப்பட்ட பல சிறப்புக்களே உடைய காவிரிப்பூம்பட்டினத்தையே பரிசிலாகப் பெறுவேனுயினும்

திருமாவளவனுடைய செங்கோலைப்போல் குளிர்ந்த தோள்களை உடைய தலைவியைப் பிரிந்து, அவ்வரசன் பகைவர் மேல் செலுத்தும் வேலைக்காட்டிலும் மிக்க வெப்பத்தை உடைய கானகத்தைக் கடந்து வாரேன்'' என்று கூறித் தலைவன் தலைவியைப் பிரிய மனமில்லாது தங்கினன்.

அருஞ் சொற்பொருள் :

செலவை - பயணத்தை. வெள்ளி - சுக்கிரன். பொய்ப்பினும்- மழை பொழியத் தவறினும். கொழிக்கும்-சேர்க்கின்ற. கமுகு-பாக்கு. முற்றம்-வீட்டு வாசலின் முன்னிடம். மகரக்குழை-மகரமீன் வடிவாகச் செய்த காதணி. உமணர்-உப்பு விற்போர். திண்ணியது-வலிமையுடையது. அமணப்பள்ளி-சமணர் கோவில். இளமரக்கா-பூஞ்சோலை. கோட்டம்-கோவில். பரதவர் - நெய்தல் நில மக்கள். கவுதாரி-ஒரு வகைப் பறவை. வைகறை-விடியற்காலை. பொறி-முத்திரை. சுங்கம்- வரிப்பொருள். எடுத்த - கட்டிய. கூலம்-தானியம். ஆதாயம் - இலாபம். கூகை - கோட்டான். பெருமிதம் - செருக்கு. அகழ்வித்தவன்- தோண்டுமாறு செய்தவன். தறி-கற்றூண்.

வினாக்கள் :

1. பட்டினப்பாலையைப் பற்றிய சிறுகுறிப்புத் தருக.
2. காவிரியாற்றின் வளம் எத்தகையது ?
3. மருத நிலவளம் எங்ஙனம் சிறப்பிக்கப்பட்டுள்ளது ?
4. நெய்தல் நிலச் செழிப்பு எத்தகையது ?
5. புகார் நகரச் சிறப்பு எங்ஙனம் புனைந்துரைக்கப்பட்டுள்ளது ?
6. பரதவர் தம் பொழுதுபோக்குச் செயல்களாகச் செய்வன யாவை?
7. புகார் நகரப் பண்டசாலையின் சிறப்பினை விளக்குக.
8. கடைத்தெருவில் எடுக்கப்பட்டுள்ள கொடிகள் யாவை ?
9. பிறநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருள்கள் யாவை ?
10. வேளாளர், வணிகர் இவர்களின் இயல்புகளை எழுதுக.
11. கரிகாலன் வீரம் எங்ஙனம் சிறப்பிக்கப்பட்டுள்ளது ?
12. தலைவன் செய்த முடிவு யாது ?

கட்டுரைப் பயிற்சி :

பின்வருந் தலைப்புக்களைப் பற்றி வரைக :

1. புகார் நகரின் செல்வ வளம்.
2. சோழநாடும் காவிரியாறும்.
3. புகார் நகர மக்களின் பண்பு.

# 4. விபுலானந்தரின் நற்பண்புகள்

வித்துவான் R. பழனியாண்டி முதலியார் அவர்கள்

விபுலானந்தரின் வரலாற்றுச் சுருக்கம் (கி.பி.) 1894–1947: இவர் ஈழநாட்டுத் தமிழர்; மயில்வாகனர் என்னும் இயற்பெயரினர்: வேளாளர்; பி. எஸ். ஸி. பட்டமும், தமிழிற் பண்டிதர் பட்டமும் பெற்றவர்; துறவியாகி இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்; அம்மடத்தார் நடத்திவரும் பள்ளிகளை வளமுறச் செய்தவர். அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராயிருந்தவர்; தமிழிசை ஆராய்ச்சி செய்து யாழ் நூல் எழுதி அழியாப் புகழ்பெற்றவர்; வேறு பல கட்டுரைகளும் நூல்கள் சிலவும் எழுதினவர்; இறுதியில் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராயிருந்து காலமானவர்.

1. **தமிழ்த்தொண்டு:** ஒவ்வொரு தமிழனும் தம் தாய்மொழிக்குத் தன்னால் இயலும் தொண்டினைச் செய்தல் வேண்டும் என்பது அடிகள் கருத்து. அதனை அவர் பல கூட்டங்களிற் கூறியுள்ளார். அவர், தம் வாழ்க்கையில் அதனைச் செய்து காட்டினர்; தம்மளவில் எல்லாத் தமிழ் நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றார்; ஆராய்ந்தறிந்த உண்மைகளை நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிப்படுத்தித் தமிழ் மக்கட்கு உதவினர்; இறந்தொழிந்த தமிழ் இசை அறிவை 'யாழ் நூல்' வாயிலாகப் புதுப்பித்தார். இஃதொன்றே அப்பெரியார் பெயரை நிலைநிறுத்தப் போதியதாகும். அவர் தம்மைக் காண வரும் தமிழ் நண்பர்களுடன் தமிழ் நூல்களைப் பற்றியே பேசுவார்; அவற்றின் சிறப்பியல்புகளை அவர்கள் மனத்திற் பதிய வைத்துத் தமிழின்பால் பற்றுள்ளங் கொள்ளச் செய்வார். முற்றும் துறந்த முனிவராக இருந்தும் அவர் தாய்மொழியினிடம் கொண்டிருந்த பற்று அளவிடற்கரியது என்பது அவர் வாழ்க்கையிலிருந்து நாம் நன்கு அறியலாம். அடிகளது தமிழ்நடை செய்யுள் நயம் பொருந்தியது; நல்ல தமிழ்ச் சொற்களைப் பெற்றது; படிக்கப் படிக்க இன்பம் அளிப்பது. அவர், "தமிழர், சங்க நூல்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, அவற்றின் சிறப்பை

மேனுட்டாரும் பிறரும் அறியுமாறு செய்ய வேண்டும்,'' என்று பல சமயங்களிற் கூறியுள்ளார்.

2. **அடிகளும் மறுமலர்ச்சிக்காரரும்:** ''இக்காலத்தில் எழுவாய், பயனிலைப் பொருத்தங்கூட இல்லாமல் தமிழ் எழுதும் மறுமலர்ச்சிக்காரர் பலரால் தமிழ் நடை வளர்ச்சி பெறுது. மறுமலர்ச்சி என்பது தமிழுக்கே சிறப்பாக உண்டான இலக்கண வரம்புகளை மீறி எழுதுவதும் பேசுவதுமாகும் என்று சிலர் நினைக்கின்றனர்... பழைய இலக்கியங்களில் இல்லாத மலர்ச்சியையா இந்த மறுமலர்ச்சிக்காரர்கள் கொண்டுவரப்போகிறுர்கள்? பலர் நம் பொக்கிஷங்களான பழந்தமிழ் நூல்களை வெறுக்கின்றனர்; அவற்றைத் தொடுவதும் இழிவெனக் கருதுகின்றனர். அத்தகையோர் கட்டுரைகளும் கதைகளும் பாட்டுகளும் எழுதிக் குவிக்கின்றனர். **அவையனைத்தும் மணமற்ற வெறும் காட்டுப் பூக்களே** ஆகும். பழைய நூல்களில் ஊன்றிப் பயின்று **தமிழ் மரபும் பண்பாடும்** உள்ளத்தில் மலராவிடில், எழுத்திலும் பேச்சிலும் மறுமலர்ச்சி காண்பதருமை. காலப்போக்குக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்பத் தமிழ்நடை மலர வேண்டுவது வரவேற்கத்தக்கது. ஆயின் **மரபும் ஒழுங்கும்** தவறிப் போவது இயல்பில் அமைந்த அழகைச் சிதைப்பதாகும்... ...அருமையாக எழுதக்கூடிய மறுமலர்ச்சி எழுத்தாளர் பலர் தமிழ் இலக்கியங்களிற் பயிற்சி இன்மையாலோ—பயிற்சிக் குறைவிஞலோ—சில இடங்களில் வழுக்கி வீழ்வதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. அவர்கள் மனம் வைத்துத் தமிழ்நூற் பயிற்சி பெறின், அவர் தொண்டு சிறப்புறும். பழந்தமிழ் நூற் பயிற்சியுடைய புதுமை எழுத்தாளர்களே தமிழ் நாட்டுக்கு இப்பொழுது தேவையானவர்,'' என்று அடிகள் அடிக்கடி கூறுவது வழக்கம்.

3. **அடக்கமுடைமை:** அடிகள் மும்மொழிப் புலவர்; முற்றும் துறந்த பெரியார். எனினும், அவர் தமக்குத்

தமிழறிவை ஊட்டிய ஆசிரியர்களிடம் இறுதி நாள் வரை பேரன்புடனும் மரியாதையுடனும் நடந்து வந்தது குறிப்பிடத் தக்கது. செருக்குற்று மற்றவரை இழிவாகக் கருதும் மனப்பான்மை அடிகளிடம் இருந்ததில்லை. கற்றூர்—கல்லார், முதியவர்—இளைஞர், வறியவர்—செல்வர் ஆக அனைவரிடத்தும் இனிய முகத்துடன் பேசிப் பழகுதல் அவர் இயல்பு.

4. **பிறரை ஊக்குவிக்கும் பண்பு:** பலர் தம் போன்ற புலவரைக் காணின் பொருமைகொண்டு அவர் முற்போக்கிற்கு ஊறு செய்தல் இயல்பு. ஆயின், சங்கப் புலவர்கள் ஒருவரை ஒருவர் பாராட்டியே பேசியுள்ளனர். அடிகள் நிறை குடம் ஆதலின், சங்கப் புலவரை ஒத்திருந்தார்; தம்போன்ற புலவர்களை அவர்களது முயற்சியில் ஊக்கித் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்துள்ளனர். **நவநீத கிருஷ்ண பாரதியார்** என்பவர் பாடிய பாக்களை **'உலகியல் விளக்கம்'** எனப் பெயரிட்டுத் தாமே அதற்கு வாழ்த்துப் பதிகமும் வலிந்து தந்து அச்சிடுவித்து வெளிப்படுத்தினர்; அந்நூற் பாக்களை ஆங்கிலத்தில் வரைந்து பாரதியார் புகழையும் பரப்பினர். இந்த உண்மையை நவநீத கிருஷ்ண பாரதியாரே ஒரு கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

5. "எனது யாழ் நூலை அச்சிட அன்பர் ஒருவர் விரும்புகிறூர்" என்று அடிகள் தம் நண்பர் ஒருவரிடம் குறிப்பிட்டார். அந்த நண்பர், "தங்கள் அன்பிற் சிறந்த படிப்பாளி போலும்!" என்றூர். அடிகள், "அந்த அன்பர் பெரிய படிப்பாளியல்லர். ஆயின் தமிழ் ஆர்வம் மிக்கவர்; நற்பண்புகள் பெற்றவர்; பெருஞ் செல்வர். தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் தமிழ் கற்றூர் பலருள்ளும் காணப்படும் பெருங்குறை ஒன்றுண்டு. அஃதாவது, பிறரிடம் நலன் எதுவும் காண விரும்பாமை ஆகும். அவர் பிறர்பாலுள்ள நலன்களைக் கண்டு பொருமை கொள்கின்றனர்; வெளியில் உதட்டளவில் புகழ்கின்றனரே தவிர

உளமாரப் புகழ்வதில்லை. இதனால் புலவர்கள் தம்முள் மன ஒற்றுமையின்றிச் சிதறுண்டு சிறப்பிழந்து தவிக்கின்றனர்,'' என்று மிகுந்த வருத்தத்துடன் கூறினர்.

6. **ஏழை பங்காளர் :** அடிகள் ஏழைகளிடம் எல்லையற்ற அன்பு கொண்டவர்; அவர்கள் முன்னேறத் தம்மால் ஆயினவெல்லாம் செய்து வந்தவர். அநாதை மாணவர் பலர் அவரால் கல்வியறிவு பெற்று நன்னிலையில் இருந்து வருகின்றனர். அடிகள் தாழ்த்தப்பட்ட மக்களிடம் பேரன்பும் கழிவிரக்கமும் கொண்டவர். அவர்கள் கல்வியறிவு பெறத் தம்மால் இயன்றவெல்லாம் சலியாது செய்தார். அண்ணமலை நகருக்கு அருகில் இருக்கும் சேரியில் அவர் செய்த தொண்டு கொண்டே அவர் 'ஏழை பங்காளர்' என்று கூசாது கூறலாம்.

7. **சமயப் பற்று :** விபுலானந்த அடிகள் சைவ சமயத்திற் பெரும் பற்றுக்கொண்டவர். சைவ மடங்களிடம், தொடர்பு கொண்டவர். திருஆவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார்கோவில் ஆதீனங்கள் அவரைப் பெருமைப்படுத்தின; அடிகளது யாழ் நூல் ஆராய்ச்சிக்கு வேண்டிய ஏட்டுச் சுவடிகளை உதவின. அடிகள் சைவ சித்தாந்த சாத்திரங்களில் நல்ல பயிற்சி உடையவர்; சைவ சித்தாந்த ஆண்டு விழாக் கூட்டங்களில் தலைமை வகித்த பெருமை அவருக்கே உரியது. அவர் மதுரை மீனாட்சியம்மன் மீது பெரும் பக்திகொண்டவர்; தாம் சொற்பொழிவாற்றுவதற்கு முன் கடவுள் வாழ்த்தாக மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் உள்ள ஒரு பாடலை அவர் பாடுவது வழக்கம். அடிகள் தில்லைக் கூத்தப்பிரானிடம் எல்லையற்ற பக்தி கொண்டவர்; இந்தியாவில் இருந்த காலங்களில் எல்லாம் தில்லைக்குச் சென்று சில நாட்கள் தங்கி நடனப் பெருமானைத் தரிசிப்பது வழக்கம். சைவர்க்குத் தில்லை சிறந்த தலமாதல்போல வைணவர்க்குச் சீரங்கம் சிறந்த பதியாகும். அங்கே கார்முகில் வண்ணன் கிடந்த கோலத்திற் காட்சி அளிக்கிறான்.

நமது அடிகட்கு அப்பெருமானிடத்தும் ஈடுபாடு இருந்தது.

8. **கற்றாரைப் போற்றல்:** 'கற்றலிற் கற்றாரை வழிபடுதல் நன்று' என்று அடிகள் அடிக்கடி கூறுவது வழக்கம். அப்பெரியார் சிறந்த தமிழ்ப் புலவர்களாகிய சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், டாக்டர் உ. வே. சாமிநாதையர், வெ. ப. சுப்பிரமணிய முதலியார், மறைமலை அடிகள் முதலிய பெருமக்களிடம் மிக்க அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார். "தமிழை நன்றாகப் படித்த இப்பெருமக்களை நீங்கள் யாத்திரையாகச் சென்று தரிசிக்க வேண்டும்; அவர்களுடன் பேசிப் பழகவேண்டும்; அவர்களுடன் சிறிது நேரம் பேசுவது பல நூல்களைப் படித்து அறிவதற்கு ஒப்பாகும்," என்று அடிகள் தம் மாணவர்க்கும் ஈழநாட்டு நண்பர்கட்கும் கூறியுள்ளனர்.

9. **எல்லோரிடத்தும் அன்பு:** அடிகள் எல்லாச் சமயத்தினரையும் நண்பராகப் பெற்றிருந்தார். முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சைவர், வைணவர் முதலிய அனைவரும் அவரை நேசித்தனர்; அவருடன் அளவளாவி மகிழ்ந்தனர். அடிகள் அவ்வச் சமயத்தாருடன் அவரவர் சமயத் தொடர்பான செய்திகளைப்பேசி மகிழ்விப்பது வழக்கம்; அத்துடன் சமரச சன்மார்க்கத்தைப்பற்றியும் பேசுவார்; இந்த நண்பர்களுடன் பேசுகையில் சாதி வேறுபாடுகள் இந்து சமய பலத்தைப் போக்கி வருவதை நன்கு விளக்கிக்கூறிச் சமய ஒற்றுமைக்கு எல்லோரும் பாடுபட வேண்டும் என்று கூறி வற்புறுத்துவார்; "ஒழுக்கமே உயர்ந்தவன் — தாழ்ந்தவன் என்பதை உறுதிப்படுத்தும் அளவு கருவியே தவிரப் பிறப்பன்று," என்று கூறுவார்; 'நாட்டில் உள்ள சாதிச் சண்டை, மதச்சண்டைகள் ஒழிந்து மக்கள் முன்னேறும் நாள் எந்நாள்!' என்று அடிக்கடி கூறி வருந்துவார்.

10. **முடிவுரை:** அடிகளது வாழ்வு தியாக வாழ்வு; அவர் துறவியாக இருந்தார்; கல்விக்கும், சமயத்துக்கும்,

தமிழுக்கும் தொண்டாற்றினர்; தமிழ்—ஆங்கிலப் பத்திரிகைகட்கு ஆசிரியராக இருந்தார்; தமிழ் ஆராய்ச்சி நூல்கள் எழுதினர்; கருத்தை ஈர்க்கத் தக்க கட்டுரைகளை வெளிப்படுத்தினர்; ஏழை பங்காளராய்த் திகழ்ந்தார்; நாடெங்கும் சொற்பொழிவாற்றி மக்கட்குத் தமிழ்ப்பற்றையும் சமயப்பற்றையும் வளர்த்தார்; 'தொண்டு செய்யவே பிறவி வேண்டும்' என்றார். இராமகிருஷ்ண மடத்து அடிகளுள் தமிழ் மொழிக்குப் பாடுபட்ட முதற் பெரியார் விபுலானந்தர் என்றே கூறலாம். அப்பெரியாரைப் பெற்றெடுத்த ஈழ நாட்டுக்கு நமது நன்றி உரியதாகுக! அவரது தியாக வாழ்வு நமக்கு நல்வழி காட்டுவதாக!

அருஞ்சொற் பொருள் :

திரிபு - ஒன்றை மற்றொன்றாகக் கருதுதல். அற - நீங்க. பொக்கிஷம் - கருவூலம். வழுக்கி வீழ்வதை - தவறிச் செல்வதை. பரிதாபம்- இரக்கம். செருக்குற்று - ஆணவங்கொண்டு. ஊறு - தடை. எல்லையற்ற - அளவில்லாத. கழி - மிக்க. ஈடுபாடு-பற்று. ஈர்க்கத்தக்க- கவரக்கூடிய.

வினாக்கள்:

1. அடிகளாரின் தமிழ்நடை எத்தகையது ?
2. எவற்றை மணமற்ற காட்டுப்பூக்களாக அடிகள் கூறுகின்றார் ?
3. அடிகளார் அடிக்கடி கூறிவந்த செய்தி யாது ?
4. தமிழ்நாட்டிற்குத் தேவையான எழுத்தாளர் யாவர் ?
5. தம்போன்ற புலவர்களை ஊக்குவிக்கும் பண்பினைப் பெற்றவர் அடிகளார் என்பதனைச் சான்றுடன் எழுதுக.
6. தமிழ்ப் புலவர்கள் சிதறுண்டு சிறப்பிழந்து தவிக்கக் காரணம் யாது ?
7. அடிகளார் ஏழைகளிடத்தில் இரக்கம் கொண்டவர் என்பதை விளக்குக.
8. அடிகள் தம் மாணவர்கட்கும், நண்பர்கட்கும் கூறியுள்ள செய்தி யாது ?

கட்டுரைப் பயிற்சி :

பின்வருந் தலைப்புக்களைப்பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.

1. அடிகளாரின் பண்பாடு.
2. அடிகளாரின் தமிழ்ப்பற்றும், சமயப் பற்றும்.

# 5. பயிர் வண்டும், படர் கோடியும்

டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, B. A., B. L.,

''வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டு யாழ்செய் குற்றாலம்.''

என்று பிள்ளைப்பெருமான் போற்றும் பெருமை வாய்ந்த திரிகூட மலையின் ஒருசார் ஓங்கி வளர்ந்த ஒரு வேங்கை மரம் விண்ணளாவி விளங்கிற்று. அதன் மருங்கே முளைத்தெழுந்த ஒரு மெல்லிய பூங்கொடி அவ்வேங்கையின் அழகிய கொம்புகளில் பின்னிப் படர்ந்து செழித்து வளர்வதாயிற்று. மஞ்சு தோய வளர்ந்து மாண்புற்று இலங்கிய வேங்கையின்மீது அவ்விளங்கொடி வரிவரியாய்ச் சுற்றி விளங்கிய கோலம் கண்டோர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் தன்மை வாய்ந்து விளங்கிற்று. அவ் வேங்கையின் பூங்கொடிகளில் தீங்குயில்கள் மணந்து மகிழ்ந்தன; வண்டினங்கள் பண்ணமைந்த இசை பாடி மலர்களின் மதுவை மாந்திக் களித்தன.

''தீங்குயில் மணந்துதேன் துஞ்சவண்டு பாண்செய
வேங்கை நின்று பொன்உகுக்கும்''

என்று சிந்தாமணி ஆசிரியர் வியந்துரைத்த இயற்கை அழகு அளவிலா உவகையளித்தது.

அவ்வேங்கை மரத்தின் அடிப்புறத்தில் ஆழ்ந்து அகன்ற ஓர் ஆறு அணிபெறச் சென்றது. மலையிடைப் பிறந்து சவியுறத் தெளிந்து, ஆழ்ந்து அமைந்து ஆன்றோர் மனம்போல் அவ்யாறு அழகுற நடந்துசென்றது. அம்மலையில் வீசிய மெல்லிய இளங்காற்றில் வேங்கையின் பூங்கொம்புகள், அசைந்து பொன்மலர் சொரிந்தன. இளங்கொடி வேங்கையின் கிளைகளில் இனிதாய்த் துவண்டது. இளந்திரைகள், ஆற்றில் அலைந்து இன்புற்று இலங்கின. அப்போது சேய்மையில் ஒல்லென ஓர் ஒலி கிளம்பியது. அதன் தன்மையை மனத்தாற் கருது

முன்னரே கடுங்காற்று வேகமாய்ச் சுழன்று வீசத் தலைப் பட்டது. விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல் வீசிய புயல் காற்றின் வெம்மையால் மலைப்பொருள்கள் எல்லாம் மயங்கிச் சுழன்றன. அக் கடும்புயலின் வேகத் திற்கு ஆற்ருது மலையே நிலைகுலைந்தது. வெறிகொண்ட புயலில் அகப்பட்ட வேங்கைமரம் வேரோடு அற்று அருகே சென்ற ஆற்றில் விழுந்தது. வானுற ஓங்கி வளம் பெற வளர்ந்து பூத்துச் செழித்து விளங்கிய வேங்கை விழுவதைக் கண்ட எமது உள்ளம் வெதும்பியது. உலகப் பொருள் களின் நிலையாமையை நினைந்து நெஞ்சம் குழைந்தது.

இவ்வாறு வேங்கை சாய்ந்து வேகமாய்ச் செல்லும் ஆற்றில் விழுந்தபோது, அதனைச் சுற்றிப் படர்ந்திருந்த மெல்லிய கொடியும் வேரற்று அம்மரத்தோடு ஆற்றில் மயங்கி விழுந்தது. ஆயினும் அவ்வேங்கையில் தீந்தேனுண்டு திளைத்த வண்டுகள் மரத்தோடு பூவும் மாளக் கண்டு நிலையழிந்த வேங்கையை நீத்து ஆர்த் தெழுந்து அயல் நின்ற மற்ரேர் மலரில் சென்று சேர்ந் தன. இதனை நோக்கியபோது மதுவுண்டு மயங்கும் வண்டின் இழிகுணம் மனத்தை வாட்டி வருத்தியது.

"காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனில் பலராவர்—ஏலா
இடர்ஒருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட!
தொடர்புடையேம் என்பார் சிலர்"

என்னும் பெரியாரது மொழிகளின் பொருளைத் தெள்ளிதில் தெரிந்தோம். கெடுமிடத்துக் கைவிடும் கருவண்டு போலாது பெருந்துயர் நேர்ந்தபோதும் பிரியாத பெருந் தன்மை வாய்ந்து திகழ்ந்த பூங்கொடி அருங்குல மங்கையர் போல் அமைந்து விளங்கிற்று. வேரூன்றி முளைத்த இடத்தினின்றும் படர்ந்து போந்து வேங்கையைப்பற்றித் தளிர்த்து வளர்ந்த கொடியின் தன்மை, மணப்பருவம் வாய்ந்த மங்கை பிறந்த மனையினின்றும் போந்து தலை மகனைச் சேர்ந்து வாழும் தகைமையில் அமைந்திருந்தது.

பூங்கொடி படர்வதற்கு ஏற்ற கொழுகொம்பாய் அமைந்த பெருமை சான்ற வேங்கையின் தோற்றம், ஆண்மையும் பெருமையும் பொருந்தித் திகழும் தலைமகனது விழுமிய கோலம்போல் விளங்கிற்று. அவ்வேங்கையில் நன்றாகப் படர்ந்து அதன் கிளைகளுக்குப் புதியதோர் அழகளித்த கொடியின் கோலம், தலைமகனுடன் ஒன்றி வாழ்ந்து இல் வாழ்க்கைக்கு அழகளிக்கும் குலமங்கையின் குணத்தை விளக்கி நின்றது. இன்னும் வேங்கை துயர் உற்று ஆற்றில் விழும் நிலையில் அதனோடு தானும் வீழ்ந்து துயர் உற்ற கொடியின் தன்மை, தலைவன் துயருறும்போது தானும் துயருறும் நிறை அமைந்த மங்கையின் மனப் பான்மையை விளக்கி நின்றது. இத்தகைய பெருமை, கற்பமைந்த மாதர் வாழ்க்கையில் கவின்பெற விளங்கக் காணலாம்.

தேனடைந்த சோலைத் திருநாடு துறந்து கானகம் செல்ல இசைந்த கமலக் கண்ணன், தலைமகளாகிய சீதை யிடம் விடைபெறுமாறு அவள் மாளிகைக்குச் சென்றான். அங்கு அறமே உருவாயமைந்த திருமகளைக் கண்டு "மாதே! இணையற்ற என் தம்பி இந்நாட்டை அரசாள்வான். நான் தாய் தந்தையரது ஆணையைத் தலைமேற்கொண்டு வெளியே போந்து மலைவளங் கண்டு வருவேன். நான் வரும் அளவும் நீ வருந்தாதிரு" என்று மொழிந்தான். அம்மாற்றம் கேட்ட மங்கை நாயகன் வனம் நண்ணலுற் றான் என்றேனும், நாடாளும் நற்பதத்தை இழந்தான் என்றேனும் வருந்தினாள் அல்லள். ஆயினும் "நீ வருந் தாதே; நான் உன்னை விட்டுப் பிரிவேன்" என்று நாயகன் உரைத்த சொல் நஞ்சு போல் மங்கையின் நெஞ்சை நலிவுறச் செய்தது.

"நாய கன்வனம் நண்ணலுற் றான்என்றும்
மேய மண்இழந் தான்என் றும் விம்மலள்
நீவருந் தலை நீங்குவன் யான்என்ற
தீய வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்"

என்ற கவியரசராகிய கம்பர் மங்கையின் மனப்பான்மையை மாண்புற விளக்கிப்போந்தார். இவ்வாறு மயங்கித் தளர்ந்த மங்கையை நோக்கி மன்னவன், "மாதே பஞ்சினும் மெல்லிய உன் கமலபாதம் வெம்மை நிறைந்த கானகத்தில் தோய்ந்து வருந்தும்; கதிரவன் கொடுமையால் கானகக் கற்களெல்லாம் கனல் உமிழும்; அக்கொடிய சூடு உன்னுல் தாங்குதற்கு அரிதாகும்" என்று வனத்தின் வெம்மையை மங்கை அறியுமாறு எடுத்துரைத்தான். அப்போது மையறு மனத்தளாய மங்கை "ஐய, நின் பிரிவினும் சுடுமோ அப்பெருங்காடு" என்று,

"அத்துன்பத்திற்கு இணையாய
துன்பம் வேறில்லை யென்றும்"

வினவினுள். தலைவனைப் பிரிவதே பெருந்துன்பம் என்று நிறை அமைந்த மாதர் கருதுவர் என்பதற்குச் சீதை ஒரு சிறந்த சான்ருய் அமைகின்ருள்.

இவ்வாறே கலியின் கொடுமையால் நாடும் பீடும் இழந்து கல்லும் முள்ளும் நிறைந்த கானகம் நோக்கிச் சென்ற நளன், தன்னேடு போந்த தமயந்தியின் மென்மை நோக்கி மனம் நொந்து விதர்ப்ப நாட்டிற்குச் செல்லும் வழியைக் கண்டபோது, "மாதே உன் தந்தையின் ஊருக்குச் செல்லும் வழி இதுவே" என்று எடுத்துரைத்தான். அது கேட்ட மங்கை மனம் பொருது அழுது,

"ஆங்கது கேட்டலும் அழுது மாழ்கிநொந்து
ஈங்குநின் அடியனேன் பிழைத்தது யாதுகொல்!
பூங்கழற் குரிசிலோய்! பொறியி லேன்தனை
நீங்கவோ இவ்வுரை நிகழ்த்தினுய் என்ருள்"

என்று கவி கூறுமாறு தயங்கித் தலைவனைப் பிரியாது பின் தொடர்ந்து சென்ருள் என்று இனிது அறியப்படுகின்றது.

இன்னும் பெற்ருேர் சேர்த்துவைத்த பெருஞ்செல்வம் எல்லாம் பொதுமாதிடம் இழந்து வறியனுய், மாடமதுரையில் மனையாளது மணிச் சிலம்பை விற்று வாணிகம் செய்யு

மாறு புகார் நகரினின்றும் போந்த கோவலனைப் பிரியாது பின்னே சென்று, கடுமையார் கானகத்தில் கமல பாதமும் மெல்லிய மேனியும் தளர்ந்து வருந்த, அத்துயரைப் பொறுத்து, தலைவனது துயரைக்கண்டு தளர்ந்த கண்ணகியின் பெருமையை,

"கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்கு துயர்எய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி"

என்று சிலப்பதிகாரம் இனிது எடுத்துரைக்கின்றது. இவ்வாறு மண்மகளும் அறியாத வண்ணச் சீறடிகள் வருந்தக் கானகத்தில் நடந்து கணவன் துயர் களைந்த கண்ணகியின் பெருமையைக் கோவலன் கண்டு மனங்குழைந்தான்.

"நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்துஈங்கு என்துயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!"

என்று புகழ்ந்து போற்றினன்.

இவ்வாறு கணவனைப் பிரியாத பெருவாழ்வு வேண்டி இறைவனை வாழ்த்துவதே நிறை அமைந்த மாதர் நெறியாகும். இத்தகைய மாதர் கணவரோடு இன்பமும் துன்பமும் ஒருங்கே நுகர்ந்து அவர் ஆவி துறப்பின் அந்நிலையே உயிர் நீப்பர் என்பதும் அறியப்படுகின்றது. நீரில் அமைந்து வாழும் நீலமலர் அந்நீர் வற்றியபோது அவ்விடத்தே வற்றி உலரும் தன்மைபோல், கற்பமைந்த மங்கையர் கணவன் வாழுங்காலத்து அவனுடன் இனிது வாழ்ந்து, அவன் அழியும் காலத்துத் தாமும் அகமகிழ்ந்து அழிவர். இத்தன்மை வாய்ந்த குல மாதர் நெறியைக் கொடியின் தன்மையோடு ஒப்புநோக்கிக் கம்பர் அமைத்துள்ள கற்பனை, தேன் எனத் தித்திக்கும் தகையதாகும்.

"நிலம ரங்கிய வேரோடு நேர்பறித்து
அலம ரும்துயர் எய்திய ஆயினும்
வலம ரங்களை விட்டில மாசிலாக்
குலம டந்தையர் என்னக் கொடிகளே."

என்னும் கம்பர் கவியில் அமைந்துள்ள சொல் நயமும் பொருள் நயமும் ஆயுந்தோறும் அளவிறந்த இன்பம் பயப்பனவாகும்.

ஆகவே, அற்ற குளத்து அறுநீர்ப் பறவைபோல் இடர் உற்றபோது நீங்கும் வண்டனையாரோடு இணங்காது இணைபிரியா இயல்பு அமைந்த கொடியன்னாரைத் துணை யாகக் கோடலே இருமையும் இன்பம் தருவதாகும் என்னும் உண்மை இனிதறியப்படும்.

அருஞ்சொற் பொருள் :

வம்பு-மணம். கொம்பு-கிளை. கோலம்-அழகு. பிள்ளைப்பெரு மான்-திருஞான சம்பந்தர். மஞ்சு-மேகம். மாந்தி-பருகி. சவி-அழகு. திரை - அலை. வெம்மை - கொடுமை. காலாடுபோழ்து - செல்வம் மிகுந்த காலத்து. ஏலா - பொருந்தாத. பொறி - நல்வினை. ஏத்தும்- புகழ்கின்ற. நீப்பர்-விடுவர், அரங்கிய - பொருந்திய.

வினாக்கள் :

1. ஓங்கி வளர்ந்த வேங்கையின் காட்சியை விளக்குக.
2. வண்டும், பற்றிப்படர்ந்துள்ள பைங்கொடியும் நமக்கு அறிவுறுத் தும் உண்மைகள் யாவை? தனித்தனியே விளக்குக.
3. இராமன் சீதையிடம் கூறிய செய்தி யாது ?
4. சீதையின் நெஞ்சினை நஞ்சுபோல் நலிவுறுத்தியது எது ?
5. சீதை எதற்குச் சான்றாய் இலங்குகின்றாள் ?
6. கண்ணகியின் பெருமையைச் சிலப்பதிகாரம் எங்ஙனம் எடுத் துரைக்கின்றது ?
7. கண்ணகியைக் கோவலன் எங்ஙனம் பாராட்டினார் ?
8. குலமாதர் நெறியைக் கொடியின் தன்மையோடு ஒப்பிட்டுக் கம்பர் கூறுந்தன்மையை விளக்குக.
9. இருமையும் இன்பம் தருவது எது ?

கட்டுரைப் பயிற்சி :

இயற்கைக் காட்சி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் கட்டுரை ஒன்று வரைக.

# 6. நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா? சிக்கனக்காரனா?

பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார்

பாண்டி வளநாட்டில் பண்டைக்காலத்தே மணிமுடி தாங்கிய மன்னனொருவன் செங்கோல் செலுத்திச் சிறப்புற்று விளங்கியிருந்தான். அவன், கல்வியறிவு பெரிதும் உடையவன்; எதனையும் ஆராய்ந்து பார்ப்பவன்; எதனையும் உய்த்துணர்ந்து, அதன் உண்மையைத் தேர்பவன்; கற்றோரைத் தன் கண்ணேபோல் கருதிக் காக்கவல்ல நல்லியல்பு வாய்ந்தவன். அதனால் இன்னிசைப் புலவர் அனைவரும் அவன் அவைக்கண் குழுமி இன்புற்று வாழ்வாராயினர். அரசன் தன் மனத்தில் தோன்றும் ஐயப்பாடுகளை அவர்கள் முன்னிலையில் வெளியிட்டுத் தீர்த்துக் கொள்ளும் அவாவுடையவன். அவன் பெயர் **பாண்டியன் மாகீர்த்தி** என்பது.

மாகீர்த்திக்கு மக்கள் இருவர் இருந்தனர். இவ்விருவர்க்கும் மனப்பான்மை வேறுபட்டிருந்தது. ஒருவன், தன் தந்தை தனக்கு வழங்கும் பொருளனைத்தையும் செலவு செய்து மகிழ்ச்சியடைவான். மற்றவனோ, தனக்குக் கிடைக்கும் பொருளனைத்தையும் சிதறவிடாமல் சேர்த்து வைத்து, அதனைக் கண்டு கண்டு மனம் பூரிப்பான். அவ்விருவர் செயல்களையும் கண்ணாரக் கண்ட காவலன், 'என்னே இவர்தம் இயல்பு! இவை ஒன்றுக்கொன்று மாறான வழியை யுடையன. செலவாளி தன் நாட்டுக்கு நன்மை விளைப்பவனா? சிக்கனக்காரன் தன் நாட்டிற்கு நலம் பயப்பவனா? இவற்றின் உண்மை நன்கு புலப்பட அறிதல் வேண்டும்' என்று ஆராய்வானானான். அவனுக்கு ஏதும் புலப்படவில்லை. அதனால், அவன் தன் அவைக்கண் சிறந்து விளங்கிய புலவர்களுள் இருவரை நோக்கி, ஒரு நாள் வினவுவானாயினான்.

"இன்னிசைப் புலவீர்! என் மனத்துள் ஓர் ஐயப்பாடு உளது; அதனை நீவிர் ஆராய்ந்து தீர்த்தல்வேண்டும். இவ்வுலகில் மானிடர்க்கு மனப்பான்மை மாறுபடுகின்றது; அதனை மனத்தின் இயல்பு என்கின்றனர். ஒருவன் பெருஞ் செலவாளியாக இருக்கின்றான்; மற்றொருவன் மிக்க சிக்கனக்காரனாக இருக்கின்றான். இவ்விரண்டு இயல்பும் ஏறுமாறானவை. இவற்றை அவனவனுக்கு உற்ற மனப்பான்மை என்னலாம். இவ்விருவரின் மனப்பான்மையும் மாற்ற இயலாது. ஆயினும், இவ்விருவருள் தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் யாவன் என்னுஞ் செய்தியே என் மனத்துக்குள் எழுந்த ஐயப்பாடாகும். அதனை நீவிர் இருவீரும் ஆராய்ந்து சொற்போரின் மூலமாக எனக்குத் தெரிவித்தல் வேண்டும்" என்றான்.

**கீரன், நக்கீரன்** என்னும் புலவர் இருவரும் அவ்வையப்பாட்டைத் தீர்த்தற் பொருட்டுச் சொற்போர் புரிவாராயினர்:

கீரன்:- "பாண்டி வேந்தே! மானிடன் ஒருவன் பெறத்தக்க பேறுகள் நான்காகும். அவை, அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள், அறமும் பொருளும் இன்பமும் இம்மையில் அடையக்கூடியவை. அம்மூன்றனுள்ளும் முந்துறச் சிறந்து நிற்பது பொருளேயாம். ஒருவன் அறஞ்செய்தற்கும், இன்பம் துய்த்தற்கும் பொருளொன்றே ஆதாரமாகும்.

> "ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
> ஏனை யிரண்டும் ஒருங்கு"

என்றார் வள்ளுவனார்.

"அஃதாவது, பொருளைப் பெரிதும் தேடினவர்க்கு மற்றைய அறமும் இன்பமும் ஒருசேர எளிதில் வந்தடையும் என்பதாம். ஆதலின், அத்தகைய பொருளை வீணிற் செல்வு செய்யாது, எவ்வாற்றானும் அதனைக் காத்து

வாழ்வதே பேரறமாம். 'பொருள்தனைப் போற்றி வாழ்' என்னும் மூதுரையும் உலகில் வழங்குகின்றதே. பெருஞ் செலவாளியைக் காட்டினும் பெருஞ் சிக்கனக்காரனே தன் நாட்டுக்கு நற்பயன் விளைப்பவன் என்பது என் கருத்து. ஆதலின், அதற்கான நியாயங்களை எடுத்துக் காட்டுகின்றேன்.

முதலாவது—சிக்கனக்காரன், பொருள் பலவகையினும் சிதறுண்டு போகாமல், ஓரிடத்திலேயே முதற் பொருளாகச் சேர்ந்திருக்கச் செய்து வருவதனுல், அந் நாட்டின் செல்வம், அவன் நாட்டிலேயே நிலைத்திருக்கும். அதனுல் பொருள்நூலின் கொள்கைப்படி, சிக்கனக்காரன் தன் நாட்டிற்குப் பெரும்பயன் விளைப்பவனுகின்ருன். பிற நாடுகளுக்கு நம் நாட்டுப் பொருள்கள் பற்பல வகையிற் செல்லுமாயின், நம் நாடு நாளடைவில் நலங்குன்றி வறுமையடையும். ஆதலின், சிக்கனக்காரன் செய்கை, பொருள்நூலின் முறைக்குப் பொருந்தியிருக்கின்றது. பிற நாட்டு வேந்தர் நம் நாட்டின்மீது படையெடுத்துவருங் காலத்தும், பஞ்சம் முதலிய இடுக்கண்கள் நேருங் காலத்தும் பொருள் பெரிதும் வேண்டப்படுவதாகும். அதனுல், சேமித்து வைக்கப்பெறும் பொருளே நாட்டிற்கு நலம் பயப்பதாகும்.

இரண்டாவது—பெருஞ் செலவாளியின் செய்கை அறநூல் முறைக்கு மாருனதாகும்.

"ஆன முதலில் அதிகஞ் செலவானுல்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனுய் ஏழ்பிறப்புந் தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு"

என்பவாதலால், பெருஞ் செலவாளியின் செய்கை அறிவுடையோரால் வெறுத்து ஒதுக்கத் தக்கதேயாகும்.

மூன்ருவது—பொருளிடத்துப் பற்றில்லாத ஒருவன் அதனைப் பற்பல வகையிற் செலவழிக்கத் துணிவான்.

பொருள், தீச்செய்கைக்குப் பெரும்பாலும் காரணமாயிருத்தலின், செலவாளி அதனைத் தீச்செயலில் செலவிடப் பின்னிடான். நற்செயலுக்கும் பொருள் காரணமாகுமன்றே? பெருஞ் செலவாளி அப்பொருளை நற்செயலிற் செலவு செய்யானே எனின், செய்தலும் கூடும் ஆயினும், தீச் செயலில் தன் பொருளைச் செலவிடாமல் இருக்க அவனைத் தடுப்பது ஏதும் இல்லையே! சிக்கனக்காரன் நற்செயலில் தன் பொருளைச் செலவிட்டுப் புகழைத் தேடிக்கொள்ளா விடினும், தீச்செயலில் அதனைச் செலவு செய்து இகழ்வைத் தேடிக்கொள்ள இடந்தர மாட்டான்.

நான்காவது — செலவாளி, சிக்கனக்காரன் ஆகிய இவரிருவரும் நேர்மாறாக இருந்து, தம் நாட்டுக்குச் சில வழிகளில் நன்மையையும், சில வழிகளில் தீமையையும் புரிந்து வருகின்றனராயினும், மிக்க செலவாளியைவிட, மிக்க சிக்கனக்காரனே தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் ஆகின்றான். அஃது எப்படியெனில், தேனீக்கள் காலமறிந்து மலர்தோறும் சென்று வருந்தி யுழைத்து, தேனைத் திரட்டிக்கொண்டு போய்க் கூட்டில் சேர்த்து வைப்பது போல, சிக்கனக்காரன் ஒல்லும் வகையால் செல்வம் தேடித் தன் பேழையில் சேர்த்து வைக்கிறான். ஈக்கள் தேடி வைத்த தேன் பலருக்கும் பயன்படுவதுபோல, சிக்கனக்காரன் ஈட்டிவைத்த பொருள், அவனுக்குப் பின்னர், பலருக்கும் பயன்படுவதாகும். ஆகவே, சிக்கனக்காரன் தன் வாழ்நாள் முழுவதும் தான் தேடிய பொருளினால் ஒரு பயனும் அடையாமற் போயினும், பின்னர் அதனால் பலர் பயனடைகின்றனர்; பெருஞ் செலவாளியோ எனின்—பொருளினாலாகிய பயனைத் தான் இருக்குமளவும் துய்க்கின்றானில்லை; சிறிது காலமே அதன் இன்பத்தை அனுபவிக்கின்றான்.

ஐந்தாவது—சிக்கனக்காரன் ஒருவகையில் இன்பமும் அடைகின்றான்; தன் பொருளைப் பார்த்துப் பார்த்து இன்புறுகின்றான். செலவாளியோ இவ்வகையான இன்பம்

எய்துதல் அரிது. ஏனென்றல் பெருஞ் செலவினுல் தன் கைப்பொருள் அனைத்தையும் செலவிட்ட பிறகு, மேன்மேலும் வருவாயில்லாத காலத்தில் துன்புறுவான். பலருக்கும் வழங்கிய காரணத்தால் அவன் அடைந்த மகிழ்ச்சியினும், பொருளற்ற காலத்தில் அடையும் வருத்தமே மிகப்பெரிதாகக் காணும்; இம்மட்டோ! பொருள் மிக்கிருந்த காலத்துத் தான் மேற்கொண்டிருந்த பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும், வருவாய் குன்றியவிடத்துத் தான் விடக்கூடாமையின், மிக்க துன்பமே அடைவான்; தான் உலகத்தில் இருந்து என்ன பயன் என்றும் எண்ணு வான். எப்பொழுதும் வறுமை நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவனது நிலைமையைக் காட்டிலும், முதலில் செல்வனுயிருந்து, பின்னர் வறுமை யடைந்தவனது நிலைமை, அம்மம்ம! கொடிது கொடிது! சிக்கனக்காரன், செல்வம் இருந்தும் வறிய நிலையிலேயே வாழ்ந்து வந்தவ ணுதலால், அவனுக்கு எவ்விதத் துன்பமும் இல்லையாம். மேற்போந்த நியாயங்களால், சிக்கனக்காரனே தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் என்பது என் கொள்கை.'

கீரன் கூறிய கட்டுரையைக் கேட்ட நக்கீரன் எழுந்து தன் உட்கோளை எடுத்துரைப்பானுனன்.

'மன்னர் மன்ன! கீரர் கூறிய உரையின்படி இவ் வுலகில் ஒருவன் அடையத்தக்க பெரும் பேறுகளுள் பொருளே முதன்மையானது என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவணது எய்த இருதலையும் எய்தும்' என்பது உண்மை யுரையே. அத்தகைய பொருளை எவ்வகையிலும் இம்மியும் செலவு செய்யாமல் சேர்த்து வைக்கும் சிக்கனக்காரனை வரையாது வழங்கும் வள்ளலைக்காட்டிலும் தன் நாட்டிற்குப் பெரும்பயன் விளைப்பவன் எனக் கீரர் கூறியது எனக்குச் சிறிதும் உடன்பாடன்று.

முதலாவது—பொருள்நூலின் கொள்கைப்படி ஒரு நாட்டின் பொருள் நாற்புறமும் பரவச் செய்வதே, அந்

நாட்டின் நலத்திற்கு அடுத்தது என்பதைக் கீரர் மறந்தனர் போலும்! ஒரு நாட்டில் சிலர் பெருஞ் செல்வராய் இருக்கப் பலர் மிக்க வறியர்களாயிருப்பது அந்நாட்டிற்கு நலம் விளைவிப்பதன்று. எந்நாட்டில் மக்கள் அனைவரும் ஒரே நிலையில் இருக்கின்றார்களோ, அந்நாடே சிறந்ததாகும். சிக்கனக்காரன் பொருளையெல்லாம் பிறரிடத்துப் பரவாத படி தன்னிடத்திலேயே சேர்த்து வைத்துக் கொண்டிருப்பா னாயின், அப்பொருளினாலாகிய பயனை அந்நாடு, முற்றும் இழந்துவிடும். இவ்வுண்மையை யுணர்ந்தே, நம் பெரியோர், தக்க ஏற்பாடுகள் பலவற்றைச் செய்திருக் கின்றனர்.

திருமணம் முதலிய சிறந்த செயல்களை நடத்துங் காலத்தில் செல்வர்கள், இயம், இன்னிசை, நாட்டியம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களை அழைத்துப் பொருள் தந்து, சிறப்புற நடாத்தும் செயலை மேற்கொண் டிருந்தனர் என்று தெரிய வருகின்றது. பெருஞ்செல்வ னொருவன் தன் பொருள் அனைத்தையும் சேமித்து வைத்திருப்பானாயின், அது மற்றையோருக்குப் பயன் படாமற்போகும் அன்றே? அன்றியும், அரிது முயன்று கற்ற இன்னிசையாளர் முதலியோர் பிழைப்பின்றிப் பெரிதும் வறுமையுற்றுத் துன்பம் எய்துவர்.

இரண்டாவது—செலவாளியின் செய்கை அறநூலுக்கு முரண்பாடாகும் என்று கீரர் கூறியது வியப்பினும் வியப் பாகும். அவர், தம் கொள்கையை நிலைநிறுத்த, 'ஆன முதலில் அதிகம் செலவானால்' என்னும் செய்யுளை எடுத்துக் கூறினர். அவ்வறநூலே எனக்கும் துணை செய்யாமற் போகவில்லை.

''பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே! கேளுங்கள்—கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின்(பு) ஆரே அனுபவிப்பார்
பாவிகாள்! அந்தப் பணம்''

என்னும் செய்யுளைக் கீரர் கேட்பாராயின் யாது விடை கூறுவரோ அறியேம்! அதனால் பொருளைச் சேர்த்து வைக்கும் சிக்கனக்காரன் செய்கை, அருவருக்கத் தக்கது என்பது இச்செய்யுளால் தெளிவாகுமன்றோ?

மூன்றாவது—பெருஞ்செலவாளி, தீமைக்குக் காரணமான பற்பல கொடிய செயல்களைச் செய்யவும் பின்னிடான் என்று கீரர் கூறியது சிறுவர் வாயினும் சிரிப்பை விளைக்கும்; அவன் தீச்செயல்களுக்கே தன் பொருளைச் செலவிடுவான் என்பது பொருந்தாதன்றோ? குமணன் என்னும் அரசன் தன் நாட்டைத் துறந்து காட்டில் வதிந்த காலத்தும், வறுமையால் வாடித் தன்னைத் தேடியடைந்த பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர்க்குத் தன் தலையையும் கொடுக்க உடன்பட்டானன்றோ? அதனால், வள்ளலாவான் தன் உயிரையும் வழங்கப் பின்னிடான் என்பது வெளியாகும்.

நான்காவது—சிக்கனக்காரன் தேனீக்களைப் போல மெய் வருந்திப் பொருளைத் தேடி அதனைச் செலவு செய்யாமல் சேர்த்து வைப்பதனால், அப்பொருள் அவன் இறந்த பின்னர் பலருக்கும் பயன்படுவதாகும் என்று கீரர் கூறியதும் ஒரு நியாயமாமோ? வள்ளலாகிய செலவாளி தான் வாழும்போதே பலருக்கும் வழங்கித் தானும் துய்த்து அப்பொருளைப் பயன்படுத்துவது சிறந்த செயலன்றோ?

"உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ!
இழந்தானென்(று) எண்ணப்படும்"

என்னும் செய்யுளுக்கு இசையச் சிக்கனக்காரன் சேர்த்து வைத்த பொருளையுடையவனாயினும் அதனை இழந்தவனேயாவனன்றோ?

ஐந்தாவது—பொருட்பேய் பிடித்த பேராசையுள்ள ஒருவன், அப் பொருளைச் சேர்ப்பதற்கு எவ்வகைப்பட்ட

தீச்செயலையும் செய்யப் பின்னிடான்; கொலை முதலிய குற்றங்களைச் செய்யவும் அஞ்சான். சிக்கனக்காரன், தான் இறக்குமளவும் தன் பொருளைப் பார்த்துக்கொண்டே இன்பமடைகிறான் என்று கீரர் கூறினர். வள்ளலோ தன் வாழ்நாளில் தான் ஈட்டிய பொருள்களைப் பலர்க்கும் வழங்கி ஈத்துவக்கும் இன்பம் அடைகின்றான்.

ஆறாவது—அறத்திற்கும் இன்பத்திற்கும் பொருள் காரணமாகும்; அதுவே வீட்டிற்கும் ஒருவாறு காரணமாகும்; ஆதலின் பொருளை நல்வழியிற் செலவழிப்பவனே அறம், இன்பம், வீடு ஆகிய இவற்றை அடையப் பெறுவான். சிக்கனக்காரன் இவற்றுள் ஒன்றையேனும் பெறான். அதனால், செலவாளியின் செயல் இவ்வுலகத்திற்கு உபகாரமாகவும், அவனுக்கே பெரும் பயனை விளைவிப்பதாகவும் இருத்தலினால், சிக்கனக்காரனைவிடச் செலவாளியே சிறந்தவனாவான் என்பது என் சித்தாந்தம்' என்றான்.

இவ்விருவரும் கூறிய பேருரைகளைக் கேட்டு முடிவு தேறாதகிய மன்னன் மனம் தடுமாறி நிற்கையில், **கீரங்கொற்றனார்** என்னும் புலவர் ஆராய்ந்து முடிவு கூறுவாராயினர்.

"மன்னர் மன்ன! இன்னிசைப் புலவர்களாகிய இருவரும் நேர்மாறான கருத்தையே கூறினர். கீரர், பொருளைச் சேர்த்து வைக்கும் சிக்கனக்காரனே சிறந்தவன் என்று கருத்துக் கொண்டனர். நக்கீரர், வரையாது கொடுக்கும் வள்ளலே சிறந்தவன் என்று வாதித்தனர். அவரவர் தத்தம் கூற்றுக்கேற்ப மேற்கோளும் காட்டினர்.

செல்வம் உலக இன்பத்திற்கு முக்கிய காரணமாகும். அதனைச் செலவு செய்யாது வறிதே வைத்திருப்பதனால் பயனின்றாம். செலவாளி தன் வருவாய்க்குத் தக்க செலவு செய்தல் வேண்டும். வருவாய் சுருக்கமாகவும், செலவு பெருக்கமாகவும் இருப்பின், அச்செலவாளி இன்னல்

உறுவான். அதனால், தன் வருவாயை நோக்கி ஒருவன் செலவு செய்தல் வேண்டும். தேடிய பொருள் அனைத்தை யும் புதைத்து வைப்பவன் பூதம் போல்பவன் ஆவான்''.

இவ்வாறு கீரங்கொற்றனர் கூறிய முடிவுரையைக் கேட்ட முடிமன்னன் உண்மை தேர்ந்து உவப்புற்றான். அதனால், அரசன் 'செலவாளியே இவ்வுலகத்திற்கு மிகச் சிறந்த துணைவனாவான்' என்பதை அனைவர்க்கும் விளங்கக் கூறினான். 'செலவாளி, தன் செயலினால் தான் ஒருவன் துன்புற்றாலும், பலருக்கும் பயன்பட்டு, அவரனைவரையும் இன்புறச் செய்வதனால் அவனே சிக்கனக்காரனைவிடத் தன் நாட்டிற்கு மிக்க நலம் புரிபவன் ஆகின்றான் என்பது தேற்றம்' என்றான்.

அருஞ் சொற்பொருள் :

குழுமி - கூடி. காவலன் - அரசன். ஏறுமாறானவை - முரண் பட்டவை. மானம் - பெருமை. மதி - அறிவு. நாடு - அறிவாயாக. ஒல்லும் வகை - முடியும் வகை. பேழை - பெட்டி. உட்கோள் - மனக் கருத்து. வடு - குற்றம். மூன்று - அறம், பொருள், இன்பம். இம்மி - சிறிது. இயம் - வாத்தியக்கருவி. கூடு - உடல். வதிந்த - வாழ்ந்த. சித்தாந்தம் - முடிந்த முடிவு. தேற்றம் - உறுதி.

வினாக்கள் :

1. பாண்டியன் மாகீர்த்தியின் சிறப்பியல்புகள் யாவை?
2. மாகீர்த்தியின் உள்ளத்தில் எழுந்த ஐயம் யாது? அதனைத் தீர்த்துக்கொள்ள யாது செய்தான்?
3. சிக்கனக்காரன் செய்கை பொருள் நூல்முறைக்குப் பொருந்தியது என்பதற்குக் கீரன் காட்டும் காரணம் யாது?
4. பெருஞ் செலவாளியின் செய்கை அறநூல் முறைக்கு எங்ஙனம் முரணானது?
5. செலவாளியைவிடச் சிக்கனக்காரனே நாட்டிற்கு நலம் விளைப் பவன் என்பதற்குக் கீரன் காட்டும் காரணங்கள் யாவை?

6. சிக்கனக்காரன் செயல், பொருள் நூல் முறைக்குப் பொருந்தியதே என்பதற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

7. சிக்கனக்காரன் செயல் அருவருக்கத்தக்கது என்பதை நக்கீரன் எங்ஙனம் எடுத்துக் காட்டினன் ?

8. சிக்கனக்காரன் பொருள் அவனுக்குப் பின் பலருக்கும் பயன்படும் என்ற நியாயம் பொருந்தாது என்பதை நக்கீரன் எங்ஙனம் மறுக்கிருன் ?

9. கொற்றனுர் கூறிய முடிவு யாது ?

கட்டுரைப் பயிற்சி :

பின்வரும் தலைப்புக்களைப்பற்றி, ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக

1. நாட்டிற்கு நன்மை விளைப்பவன் செலவாளியே.
2. நாட்டிற்கு நன்மை விளைப்பவன் சிக்கனக்காரனே.

# 7. பழந்தமிழ்ப் புலவர் சிறப்பியல்புகள்

டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார், M. A. Ph. D., M. L. C.

பழந்தமிழ்ப் புலவர் மானமே பெரிதுடையவராய் வாழ்ந்தவர். அவர் இன்றியமையாச் சிறப்பினை நல்கும் பெற்றி வாய்ந்த பொருட்களாயினும், அவற்றை அடையப் பழிச்செயல் செய்ய வேண்டுமெனின், அஞ்சி விடுப்பர். உலகினை ஒருங்கே பெறுவதெனினும், பழியோடு வருவதாயின், அதனைக் கொள்ளமாட்டார். ஈன்ற தாய் பசித்திருக்கக் காணுமளவு வறுமை உற்றஞான்றும், பழிச்செயல் ஒன்றுதானுஞ் செய்து அத்தாயையும் பாதுகாக்க நினையார். பின், மனைவி மக்களைப் பாதுகாக்கும் பொருட்டுப் பழிச்செயல் செய்ய இணங்குவாரோ? நரம்புந் தோலுமாய்த் திரங்கி நரைத்து மூத்த தாய் தந்தையரோ, இளைய அழகிய மனைவியோ, பச்சிளங் குழவியோ பசியால் உயிர்விட வேண்டிய அளவு வறுமை வந்துற்றபொழுதிலும், இளிவந்த செயல் எதுவும் செய்து அவர் உயிரைப் பாதுகாக்க இசையார். ஆகவே, இளிவந்தன பல செய்தாயினும் அன்னார் உயிரைப் பாதுகாக்க வேண்டும் என்னும் போலியுரை அவர்க்குப் பொருந்தாது. காட்டாக, ஒன்று கூறுவேன். புலவர் ஒருவர் மிக்க வறுமையுற்று மனைவி மக்களோடு நாடுபெயர்ந்து போகின்றார். வீட்டிலுள்ள தட்டுமுட்டுப் பொருள்களைத் தலையிலும் தோளிலுமாகச் சுமந்துகொண்டு அவர்கள் போகின்றார்கள். மெல்லியல் வாய்ந்த மனைவி நடக்கமாட்டாது தள்ளாடி அடியெடுத்து வருகிறாள். இடையே கிடக்கும் மலைமீது அடிவருந்தும்படி நெடிது நேரம் ஏறி வருகின்றாள். அந்நிலையில் ஒரு பொய் கூறுவாராயின், பெருஞ்செல்வம் கிடைக்கப்பெறுவர் என்பதை அவர் அறிகின்றார். ஆயினும், பொய் கூற அவர் மனம் ஒருப்படவில்லை. அதனால் மேலே நடக்கின்றார். அப்பொழுது அப்புலவர்,

> "வாழ்தல் வேண்டிப்
> பொய்கூறேன் ; மெய்கூறுவல்"

என்று கூறுகின்றார். அப்புலவர் பெயர் மருதன் இளநாகனார்.

புலவரென்பார் பொருளுக்காக, இல்லாததைக் கூறுகிறவர் என்று பலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அரசரையும் செல்வரையும் புகழ்ந்து அவரிடம் உள்ள பொருளைப் பறிப்பதே புலவர் தொழில் எனச் சிலர் நினைக்கிறார்கள். ஒன்றுங் கொடாதவனைப் பாரியென்றோ, ஓரியென்றோ புகழ்வதும், வீரமில்லாதானை விறல்வீமனென்றோ வில்விசயனென்றோ புனைவதும் அவர் இயல்பு என்றுகூட நினைக்கிறார்கள். இது தவறு. காட்டாக வன்பரணர் என்னும் புலவர் அவ்வாறு வாழ்ந்தவரல்லர் என்பது,

"பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யாக் கூறிக் கிளத்தல்
எய்யா தாகின் றுஎஞ் சிறுசெந் நாவே"

என அவர் கூறியவற்றால் விளங்கும். பெருமையில்லாத மன்னராற் புகழப்பட்டுப் பொருள் தரப்படும் நோக்கத்தால், அவர் செய்யாத செயல்களைச் செய்தனர் எனப் பேசி, அவர்பால் இல்லாத குணங்களை உடையவர் என வியந்து கூறுவதை அப்புலவர் நா அறிந்திலது எனக் கூறுகின்றார். அப்படிக் கூறுங்கால் பொய்கூறி வாழ்வு பெறாத காரணத்தால் தாம் வருந்தவில்லை என்பதை 'எம் நா' என்ற வகையாற் புலப்படுத்துகின்றார். 'என் நா' எனச் சொல்ல வேண்டிய இடத்து, அவர் 'எம் நா' எனக் கூறியது இக்காரணத்தால் என்க.

வாய்மை பேசுவதில் மகிழ்ச்சியுடையார் என்பதைப் புலப்படுத்த தமது நாவைச் செவ்விய நா என்றே கூறுகின்றார். மக்கள் எல்லாருக்கும் உள்ள அளவுதான் தம் நாவும் இருக்கிறதென்பதையும், யாவரும் வாய்மையே பேச முயன்றால், அம்முயற்சி கைகூடும் என்பதையுங் காட்டுவார் போல, 'எனது நா மிகப் பெரிய தொன்றன்று சிறியதே' எனக் கூறுவாராய் 'எஞ்சிறு நா' எனச் சொல்லியதைக் காணுந்தோறும் மகிழ்ச்சி உண்டாகிறது.

இவ்வாறு கூறிய வன்பரணர் போன்று வாய்மை யறம் பேணி வாழ்ந்த பழந் தமிழ்ப் புலவர் பலர்.

அக்காலப் புலவர்கள் திருப்தியுடையவராய் வாழ்ந்தவர் என அறிகின்றோம். எத்துணைப் பொருள் பெற்றாலும், மேலும் மேலும் திரட்டவேண்டும் என்னும் அவாவுடை யாரைப் போன்றன்றிப் பெற்றதன்கண்ணே மகிழ்ந்து பிறர்க்கு வழங்கியும் வாழ்ந்தார் என அறிகின்றோம்.

" பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி "

வாழ்ந்தவர் என அவர்கள் காணப்படுகிறார்கள். பொருளை நிரம்பப் பெற்ற புலவர் ஒருவர் தம் மனையாட்டியை நோக்கி " நாம் நன்றாக வாழவேண்டும் என்று நினைத்துப் பூட்டி வைக்காமல், யாருக்குக் கொடுக்கலாம் என்று என்னோடு கலந்து ஆலோசியாமல், நீயும் எல்லோர்க்குங் கொடுப் பாயாக. நானும் கொடுப்பேன் " என்று கூறுகின்றார்.

" இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே ! "

எனப் பெருஞ்சித்திரனார் தம் மனைவியிடம் கூறியதாக ஒரு பாட்டுக் கூறும்.

இன்னொரு புலவர், " பிறன் கடை மறப்ப நல்குவன் செலினே " எனக் கூறுகின்றார். இதிலிருந்து அறியப் படுவன என்னவென்றால் கொடுப்பவன் நிரம்பக் கொடுப் பான் என்பதும், அப்புலவர் மன அமைதி உடையவர் என்பதும் ஆம். மற்றொரு புலவர் " உன்னைப் பாடிய என்வாய் பிறர் புகழ் சொல்லாதிருத்தல் வேண்டும் " என்றவாறு கூறுகின்றார். அப்பகுதி,

" நிற்பாடிய அலங்கு செந்நா
பிறரிசை நுவலாமை வேண்டும் "

என்பது.

அப்புலவர்கள்பாற் காணப்படும் இன்னொரு சிறப் பியல்பு செய்ந்நன்றி யறிதல். தமக்கு உதவி செய்த ஒருவனது பரம்பரையில் வந்தவரைப் பெரிதும் விரும்பிப் பாராட்டும் இயல்புடையவராய்ப் பலர் வாழ்ந்தார்கள். காட்டாக, பெருந்தலைச் சாத்தனுரைக் கூறலாம். அவர் முன்னொருநாள் கண்டீரக்கோப்பெருநள்ளி வீட்டிற்குச் சென்றாராக, அவர் மனைவி அப்புலவர்க்கு யானைப் பிடியும் பொருளும் கொடுத்து உதவினாள். அதை நினைவு கூர்ந்து, பெருநள்ளி மரபில் வந்த இளங்கண்டீரக்கோ என்பான் விளையாடிக்கொண்டிருந்தானை ஓடோடியுந் தழுவி அணைத்துப் போற்றினார் அப்புலவர் எனின், அவர் நல்லியல்பு விளங்கும்.

ஆய் என்ற வள்ளல் முடமோசியார் என்ற புலவருக்குப் பற்பல கொடைகள் கொடுத்துள்ளான். ஆதலால், அவன் குடியை வாழ்த்த நினைத்தார் அப்புலவர். அந் நேரத்தில், வடதிசையில் உள்ள இமயமலையைப் போலத் தென்திசையில் ஆய்குடி மன்பதைகளைக் காக்கின்றது எனச் சொல்லினார். உடனே அவருக்குப் பெரியதொரு வருத்தம் நேரிட்டது. 'ஆய்' என முன்னால் வைத்து எண்ண வேண்டிய தகுதியுடையானை இமயத்தின் பின்னால் வைத்து எண்ணினேனே, எத்துணைப் பெருந்தவறு செய் தேன் எனக்கருதி மிகவும் உளைந்தார். முன்னால் எண்ணப் படவேண்டியவனைப் பின்னால் எண்ணிய என் நன்றி கெட்ட நிலை காரணமாக, என் நெஞ்சு அமிழ்ந்திப்போவ தாக என்றார். அவனை முதலிற் புகழாது இமயத்தைப் புகழ நினைத்த என் நா பிளக்கப்பட்டொழிக என்றார். அவனை முதலிற் புகழுஞ் சொற்கள் காதில் விழாமல், இமயத்தைப் புகழ்ந்த சொல் காதில் கேட்கப் பெருமை யால் அக்காதுகள் தூர்ந்து போகட்டும் என்றார். பாழாய்ப் போன ஊரில் உள்ள பாழ்ங்கிணற்றைப் போலத் தூர்ந்து போகட்டும் என்றார். மக்கள் வாழும் ஊரில் உள்ள கிணறு ஆயின், அது மீண்டும் தோண்டப்படலாம்; பாழூரில் உள்ள கிணறு தோண்டப்படாது ஒழிவது

போலவே என் செவிப்புலன் அறவே ஒழியட்டும் என்பார் போல இவ்வண்ணம் கூறினர். இவ்வாறு கூறியதற்குக் காரணம் அவருக்கு ஆயினிடத்துள்ள செய்ந்நன்றியறிதலே ஆகும். இந்நன்றியறிதல் புலவர் யாவர் மாட்டும் காணப் பட்டதொரு சிறப்பியல்பு ஆகும்.

அக்காலப் புலவரிற் பலர் முயற்சியுடையராய் வாழ வேண்டும் என்று நினைத்தார்கள். நன்முயற்சி செய்ய வேண்டும் என்ற உயரிய குறிக்கோள் இல்லாதாரை வெறுத்தார்கள். அதனுல்தான் ஆலத்தூர் கிழார் என்னும் புலவர், "பூட்கை இல்லோன் யாக்கைப்போல" என வெறுத்துரைத்தனர். "நல்ல மேற்கோள் இல்லாதவ னுடைய உடம்பு பொலிவற்றுப் புல்லென்று இருத்தலைப் போல" என உவமையாக வழங்கவேண்டும் என்ருல், உயரிய குறிக்கோள் உடையராக மக்கள் இருக்கவேண்டும் என்ற எண்ணம் எத்துணைப் பெரிய அளவு புலவரிடம் குடிகொண்டிருத்தல் வேண்டும்!

முயற்சி எடுக்குங்கால் உயரிய பொருள்களின் பொருட்டு அஃது எடுக்கப்பட வேண்டும் என்ற குறிக் கோள் உடையராய்ப் புலவர் பலர் காணப்பட்டனர். அதனுல்தான் ஒரு புலவர் "யானையை வேட்டையாடிச் செல்கின்றவன் சில வேளைகளில் யானையையும் பெறுதல் கூடும்; காடை, கவுதாரி முதலிய சிறு பறவைகளை நாடிப் போகிறவன் சில வேளைகளில் அப்பறவைகளும் பெருமல் வறிதே திரும்பவும் கூடும்! ஆதலால், உயர்ந்த பொருள் களிடத்தே விருப்பம் வைக்க வேண்டும்" என்ற கருத்துப் படக் கூறினர்.

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே"

என்ருர். இக்கருத்தினுலேயே திருவள்ளுவரும்

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல், மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

என்ருர். செய்யக் கருதுவதை உயர்ந்ததாக எண்ணி,

அஃது ஏதாவது காரணத்தாற் கிடைக்கப் பெறாது போய் விட்டாலும் மக்கள் பழிக்கப்படமாட்டார் என்பதே கருத்து. "விண்ணிடத்துக் குறிவைத்துச் சுடுகிறவன் தவறினாலும் மரத்திடத்துக் குறிவைத்துச் சுடுகிறவனைவிட உயர மாகவே சுடுவன். ஆதலால், உள்ளத்தில் தளர்ச்சி வேண்டா" என ஜியார்ஜு ஹெர்பர்ட்டு, (George Herbert) கூறியுள்ளதும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவே லேந்தல் இனிது"

என்னும் திருக்குறளும் இக்கருத்தானே எழுந்தது. எலி போன்ற சிறு முயற்சி உடையாரை இகழ்ந்தும், புலி போன்ற பெரு முயற்சி உடையாரைப் புகழ்ந்தும், புலவர் ஒருவர் பாடினர் (புறநானூறு-செய்யுள் 190). எனவே, தாளாண்மை உடையாரைப் புலவர் பாராட்டினர் என்பது பெறப்படும்.

புலவர் சிலர் வறியராய்ப் பேசப்படுதல் காரணமாகப் பண்டைத் தமிழ்ப் புலவர் அனைவரும் வறிஞர் என எண்ணுதல் ஆகாது. புலவர் பலர் வெவ்வேறு தொழில் இயற்றுவாராய்ப் பெரும்பொருள் படைத்திருந்தனர். கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், அறுவை வாணிகன் நல்வேட்டனார், மருத்துவன் தாமோதரனார், கொல்லன் அழிசி, எழுத்தாளர் சேந்தன் பூதனார், கணக்காயர் தத்தனார் முதலிய புலவர் பெயரே அவரவர் தொழிற்றிறத்தைக் காட்டும்.

சோழன் நல்லுருத்திரன், பாண்டியன் நெடுஞ்செழியன், சேரமான் கணைக்கால் இரும்பொறை முதலான அரசர்கள் புலமை உடையராய் மிக்க மானமுடையராய் வாழ்ந்த திறம் பலர் அறிந்தது.

இன்னோரன்ன பழந்தமிழ்ப் புலவருடைய சிறப் பியல்புகளை முழுதும் அறியவேண்டுவோர், புறநானூற்றுப் பாடல்களை ஊன்றிப் படிப்பார்களாக!

### அருஞ் சொற்பொருள்:

பெற்றி-பெருமை. திரங்கி - சுருங்கி. இளிவந்த செயல் - பழிச் செயல். பீடில்-பெருமையில்லாத. கிளத்தல்-சொல்லுதல். எய்யா தாகின்று-பொருந்தாது. அருத்தி-உண்ணுமாறு செய்து. ஓம்பாது - பாதுகாவாமல். கூம்பாது-குறைவில்லாமல்- சூழாது - ஆராயாமல். இசை-புகழ். மன்பதை-மக்கள் தொகுதி. உளைந்தார் - வருந்தினர். தாளாண்மை-முயற்சி.

### வினாக்கள்:

1. புவவர், இளிவந்த செயல் செய்து தம் உயிர் முதலியவற்றைக் காக்க நினையார் என்பதனைப் புலப்படுத்துக.
2. புலவர், இல்லாததைக் கூறும் இயல்பினரல்லர் என்பதைப் பரணர் கூற்றால் விளக்குக.
3. வன்பரணர் "எம் நா" என்றும், "எஞ்சிறு நா" என்றும் கூறியதன் நயம் யாது?
4. பெற்றதைக்கொண்டு மகிழ்ந்தும் பிறர்க்கு வழங்கியும் வாழ்ந்தவர் புலவர் என்பதை விளக்குக.
5. புலவர், செய்ந்நன்றி அறிதலில் சிறந்தவர் என்பது எதனால் விளங்குகின்றது?
6. உயரிய குறிக்கோள் உடையராய் மக்கள் இருக்க வேண்டும் என்ற எண்ணமுடையர் புலவர் என்பதை மேற்கோளுடன் எழுதுக.
7. ஜியார்ஜு ஹெர்பர்ட்டுக் கூறும் அறிவுரை யாது?
8. பண்டைத் தமிழ்ப்புலவர் அனைவரும் வறிஞர் அல்லர்; வெவ் வேறு தொழிலுமுடையர் என்பதற்குச் சான்றுகள் தருக.

### கட்டுரைப் பயிற்சி:

பழந்தமிழ்ப் புலவர் பண்பாடு என்ற தலைப்பில் ஒருபக்க அளவில் கட்டுரை வரைக.

# 8. சுவீடன்

திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பீ. ஏ., அவர்கள்

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஏராளமான சின்னஞ் சிறு நாடுகளிலே, பொருளாதாரத் துறையில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ள நாடு, சுவீடன். இரு உலகப் பெரும் போர்களிலும் சுவிட்சர்லாந்தைப்போலச் சுவீடனும் நடுநிலைமை வகித்தது. முதலாளித்துவம், அபேத வாதம் ஆகிய இரண்டுக்கும் நடுவழியான ஒரு பொருளாதார அமைப்பும் சுவீடனிடம் பொருந்தியுள்ளது. கள்ள வாணிகம் (Black Market) என்பதே இல்லாத நாடு உலகில் ஒன்று இருக்கிறது என்ருல், அதுதான் சுவீடன். இக்காரணங்களால், சுவீடனைப்பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாதது.

### பரப்பும், மக்கள் தொகையும்

சென்னை மாகாணமும் சுவீடனும் நிலப்பரப்பில் அநேகமாகச் சமமானவை. ஆனல், சுவீடனில் பாதிப் பிரதேசம் காடுகள் நிரம்பியது. மேலும் ஒரு இலட்சம் ஏரிகளும் பல மலைகளும் ஏராளமான ஆறுகளும் உள்ளன. சுவீடனின் மக்கள் தொகை 70 இலட்சம்தான். அதாவது, மைசூர் சமஸ்தானத்தைவிடக் குறைவானது. சுவீடனில் ஒவ்வொரு 11 பெண்கட்கும் 10 ஆண்கள் வீதந்தான் இருக்கின்றனராம்!

மூன்று குழந்தைகள் உடையவர் பெரிய குடும்பத்தாரெனச் சுவீடனில் கருதப்படுகின்றனர். ஏனெனில், ஒவ்வொரு 100 குடும்பங்களிலும், 83 குடும்பத்தார் ஒரு குழந்தை உடையவராகவும், 12 குடும்பத்தார் இரண்டு குழந்தைகள் உடையவர்களாகவும், ஐந்து குடும்பத்தார்கள் மட்டுமே மூன்று குழந்தைகள் உடையவர்களாகவும் இருக்கிருர்கள்.

சரித்திரம்

பல நூற்றுண்டுகள் பெரிய வல்லரசாக விளங்கியதும் கி. பி. 862 முதல் 500 ஆண்டுகள் வரை ரஷ்யாவில் அரசு செலுத்தியதும் ஆகிய சுவீடன் இப்போது ஆதிக்க அரசியலிலிருந்து விலகி நிற்கிறது. ஏகாதிபத்தியங்களே உலக யுத்தங்களுக்குக் காரணம் என்பதை சுவீடன் நாட்டவர் உணர்ந்திருப்பதே இதற்கு மூலகாரணம். கி. பி. 1800 முதல் பிறநாட்டு விவகாரங்களில் சுவீடன் தலையிட்டதில்லை. ரஷ்யா, ஜெர்மனி ஆகிய இரு பெரு நாடுகட்கு அருகிலிருந்தும், யுத்தத் தீ தன்னைப் பற்றுதபடி இந்நாடு தன்னைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. இதன் பயனாகச் சுவீடனில் சமாதானமும் நல்வாழ்வும் நிலவின. இவைதான் இந்நாட்டின் பொருளாதாரச் செழிப்புக்கு அடிப்படை.

விஞ்ஞான முன்னேற்றம்

தீப்பெட்டி, டைனமைட், ஐஸ் பெட்டி, சிக்கலைக் குறைக்கும் ரவைகள் (Ball bearings), டெலிபோன், டீசல் எஞ்சின், கிரசின் ஸ்டவ் ஆகிய கருவிகள் அனைத்தும் சுவீடன் நாட்டினராலேயே முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றிலிருந்து சுவீடனில் விஞ்ஞானம் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

கூட்டுறவு

கூட்டுறவு இயக்கம் உலகில் பரவியதற்கு, சுவீடனில் இவ்வியக்கம் வெற்றி பெற்றவையே காரணம். பல பெரிய தொழிற்சாலைகள், சுவீடனில் கூட்டுறவு முறையில் நடைபெறுகின்றன. சில்லறை வியாபாரத்திற் பெரும்பகுதி இந்த ஸ்தாபனத்தாரிடமே இருக்கிறது. கள்ள வாணிகம் இங்கு இல்லை எனின், இவற்றின் நிருவாகத் திறமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ ?

தொழில்கள்

சிமிண்டு, இரும்பு, மரச் சாமான்கள், செயற்கை வீடுகள் ஆகிய இவற்றைச் செய்யும் தொழிற்சாலைகள், நெசவு ஆலைகள், சுரங்கங்கள், பலவகை யந்திரங்கள் உற்பத்தி செய்யும் சாலைகள் போன்ற எத்தனையோ வகைத் தொழில்கள் இந்த நாட்டில் இருந்தபோதிலும், முக்கியமானவை—காகிதத் தொழிற்சாலைகளும் கண்ணுடித் தொழிற்சாலைகளுமே.

காகிதத்தால் சுவீடிஷ்காரர்கள் செய்யாதது ஒன்றுமே இல்லை. காகிதப் போர்வைகூடச் செய்கிருர்கள்! கரன்ஸி நோட்டு என்ற காகித நாணயத்தை உலகுக்கு வழங்கியவர்களும் சுவீடிஷ்காரர்களே ஆவர்.

பொருளாதாரச் செழிப்பு

சுவீடனின் நாணயமாகிய குரோணர் (குரோணர் = 14 அணு) டாலருடன் இணைக்கப்பட்டிருக்கிறது. நமது நாட்டு நாணயமாகிய ரூபாய் இங்கிலீஷ் ஸ்டர்லிங்குடன் இணைக்கப்பட்டிருப்பதுபோல டாலர் கிராக்கியான நாணயமாயிருப்பதால், சுவீடனின் நாணயமும் மிக வலுவான நிலையில் உள்ளது.

சுவீடிஷ்காரர்கள் பொதுவாகப் பணம் படைத்தவர்கள். அண்டை நாடுகளில் உள்ள சொத்துக்களிலும் தொழில்களிலும் பெரும்பகுதி இவர்கட்குச் சொந்தமானவையே.

வேலையில்லாத் திண்டாட்டம் என்பதே சுவீடனில் கிடையாது. மக்களின் பாதித் தொகையினர் பணப் பாதுகாப்பு நிதிகளிற் கணக்குகள் வைத்திருக்கின்றனராம். கீழ்க்கண்ட புள்ளி விபரங்களிலிருந்து, சுவீடனின் செழிப்பை மேலும் ஊகிக்கலாம். ரேடியோ நிலையங்கள் 33. ரேடியோ கருவிகள் 20 லட்சம். சினிமாக் கொட்டகைகள் 2,242. டெலிபோன் 1 லட்சம். ஆகாய விமானங்கள் 30.

மோட்டார் கார்கள் 2 லட்சம். ரயில் பாதையின் நீளம் 10400 மைல்கள். தினசரிப் பத்திரிகைகள் 230.

### கல்வி

எட்டு ஆண்டு இலவசக் கட்டாயக் கல்விமுறை சுவீடனில் நடைமுறையில் இருக்கிறது. அவ்விதம் கற்க இயலாதவர்கள் ஏழு ஆண்டுகள் கற்றபின்பு, வாரம் இரு நாட்கள் வீதம் மேலும் இரு ஆண்டுகள் கல்வி கற்க வேண்டும். எல்லா மாணவர்கட்கும் காலை உணவும் ஏழை மாணவர்கட்கு உணவும், உடையும் அரசியலாரால் இனமாகக் கொடுக்கப் படுகின்றன. ஓராண்டில் 360 மைல்கள் இலவச உல்லாசப் பிரயாணமும் மாணவர்கட்கு உண்டு! கல்லூரிகள், நேர்த்தியான கண்ணைக் கவரும் கட்டடங்களில் அமைந்துள்ளன. உயர்தரக் கல்லூரிகளில், தாய்மொழி தவிர, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ் ஆகியவற்றில் இரண்டு மொழிகள் கட்டாய பாடமாக இருக்கின்றன. ஸ்டாக்ஹோம் சர்வகலாசாலையில் சமஸ்கிருதமும் கற்பிக்கப்படுகின்றது. வியாபாரம் பற்றிய கல்வி சுவீடனில் சிறந்துள்ளது. பல ஜெர்மன் பேரறிஞர்கள் இப்போது சுவீடன் சர்வகலாசாலைகளிற் பணியாற்றுகின்றனர். எல்லா மாணவர்கட்கும் 9 மாத கால இராணுவப் பயிற்சி உண்டு.

### சுகாதாரமும் வைத்தியசாலைகளும்

சுவீடனில் பொதுச் சுகாதாரம் மிகத் திருப்தியான முறையில் இருக்கிறது. சுவீடன் மக்கள் உயரமானவர்கள்; நல்ல உடலமைப்பு உள்ளவர்கள். அவர்களுடைய சராசரி வயது 70. (நம் நாட்டில் 27). இந்நாட்டவர் நம் தேசங்களில் பல நகரங்களில் கண் வைத்தியசாலைகளையும், பிற வைத்தியசாலைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். உலகிலேயே மிகச் சிறந்த டாக்டர்களும், ஆஸ்பத்திரிகளும் சிகிச்சைக் கருவிகளும் சுவீடனில் உண்டு. விமானப் படையெடுப்பு ஏற்பட்டால் அப்போது நோயாளிகளைக் காப்பாற்றுவதற்காக மலைகளுக்குள் தங்குமிடங்கள்

(Shelters) கட்டி, அம்மலைகளின் மீது ஆஸ்பத்திரிகள் அமைத்திருக்கின்றனர். ஆபத்துக் காலத்தில், 'லிப்ட்' என்ற கருவி மூலம் நோயாளிகள் உடனே அவ்விடங்களுக்குக் கொண்டுபோகப்படுவார்கள்.

சுவீடிஷ் அரசியலார் தங்களுடைய வைத்தியசாலைகளில் ஒரு நோயாளிக்குத் தினசரி ரூ. 18 வீதம் செலவிட்ட போதிலும், 4 ரூபாய் மட்டுமே அவனிடமிருந்து வசூலித்து மீதச் செலவைத் தாங்களே ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

இருப்புப் பாதைகள்

அமெரிக்க இருப்புப் பாதைகளுக்கு அடுத்தபடியாக உலகிற் சிறந்தவை சுவீடனில் உள்ளவையே. மிக அழகிய மின்சார ரயிலொன்றில் 5 மணி நேரத்தில், கோதன்பர்க்கிலிருந்து 300 மைல் தூரத்திலுள்ள ஸ்டாக்ஹோமுக்கு நான் ஒரு முறை சென்ற பிரயாண அனுபவம் என் மனத்தைவிட்டு என்றும் அகலாது.

சுவீடனில் பகற் பிரயாணத்துக்கும் இராப் பிரயாணத்துக்கும் தனித்தனி ரயில் வண்டிகள் உண்டு. இரவில் ஓடும் ரயில்களில் எல்லா வகுப்புப் பிரயாணிகட்கும் தூங்கும் வசதி தரப்படுகிறது.

எல்லா ரயில்களிலும், புகை பிடிப்பவர்க்கும் பிடியாதவர்க்கும் தனித்தனி வண்டிகள் உண்டு. ஓடும் ரயிலிலேயே பிரயாணிகள் ஒரு கோடியிலிருந்து மற்ருெரு கோடிக்கு நடந்து செல்வதற்குத் தக்கபடி வழி விடப்பட்டிருக்கின்றது. இந்த நடைபாதைகளிலுள்ள, தானே மடக்கிக் கொள்ளும் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு, பிரயாணிகள் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம். இன்றியமையாப் பொருள்கள் பலவற்றை வணிகர் ரயிலிலேயே விற்கின்றனர். குப்பையைப் போடுவதற்குத் தொட்டிகளும் ரயிலில் வைக்கப்பட்டுள்ளன; குடி தண்ணீர்க் குழாய்களும், காகிதத்தாலான குவளைகளும், கைக்

குட்டைகளும் ரயில்களில் வைக்கப்பட்டுள்ளன; வேகமாகச் செல்லும் ரயில்களில் 'டைனிங்கார்' என்னும் சாப்பாட்டு விடுதிகளும் உண்டு. மேல் வகுப்புப் பிரயாணிகட்கு ரயில்வேப் படமும் தினசரிப் பத்திரிகையும் இலவசமாகக் கிடைக்கும். நம் நாட்டில் பஸ்களில் இருப்பது போன்று சுவீடன் ரயில்களில் கண்டக்டர் இருக்கிறார். இவர், குறிப்பிட்ட ரயில் அடுத்தாற்போல் எந்த இடத்தில் நிற்கும் என்பதை ஒலிபரப்பும் கருவி மூலம் அறிவித்துக்கொண்டே இருப்பார்.

### அரசியலமைப்பு

நம் நாட்டைப் போலவே, (ஆனால், ஒரு முடியரசின் கீழ்) கட்சி முறையில் ஜனநாயக ஆட்சி சுவீடனில் நடைபெறுகிறது. சுவீடிஷ் மக்களுக்கு அரசியல் விஷயங்களில் அதிக அக்கறை இல்லை. ஆயினும் மன்னரிடத்தில் மக்கள் மிகவும் பற்றுள்ளவராக இருக்கின்றார்கள்.

### தட்பவெப்ப நிலை

சுவீடனில் மழை, அளவுக்கு அதிகமாகவே பெய்கின்றது. மழை போதுமான அளவு பெய்யாவிட்டால், அக்காலங்களில் விவசாய வேலைகட்குப் போதிய மின்சாரம் கிடைப்பதற்காக மின்சாரத்தைப் பங்கீடு செய்கின்றனர்.

சுவீடன்தான் உலகிலேயே மிகவும் வடக்கேயுள்ள நாடு. ஆகையால், இங்குள்ள கால நிலையே மிக விசித்திரமானது. மே மாதம் தொடங்கி மூன்று மாதங்கள் இளவேனிற் காலம். இக்காலத்தில் சுவீடனில் சூரியன் அல்லும் பகலும் பிரகாசிக்கின்றது. அதாவது மே மாதத்தில் உதயமாகும் சூரியன் ஜூலை மாதத்தில்தான் அஸ்தமிக்கிறது. இதனால் இந்த நாட்டுக்கு **நள்ளிரவுச் சூரியன் நாடு** என்று பெயர் வழங்குகின்றது.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் மூடுபனிக்காலம். அப்போது உறைந்த பனிக்கட்டியில் ஓடி விளையாடுவது இந்நாட்டவருக்கு மிகவும் இன்பம் தருவதாகும்.

### மக்களின் குணங்கள்

சுவீடிஷ் மக்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள் ; எவ் வேலையையும் முகமலர்ச்சியோடும் திறமையோடும் செய்யும் இயல்புடையவர்கள். தமிழ் மக்களைப் போலவே சுவீடிஷ் மக்களும் நகைச் சுவை நிரம்பியவர்கள். இவர்களுடைய தேசீய விளையாட்டு, கால் பந்தாட்டம்; தேசீய உணவு, மீன். அடுத்தபடியாக இவர்கட்குக் காப்பியில்—பால் சேர்க்காத கறுப்பு நிறக் காப்பியில் — மோகம் அதிகம். இந்தியக் காப்பி உலகெங்கும் புகழ் பெற்றதாகையால் சில சுவீடிஷ் பெண்கள் காப்பி தயாரிப்பது பற்றி என்னை வினவினர். சாமர்த்தியமாக ஏதோ சொல்லி மழுப்பிவிட்டேன்.

தந்தை பிரபலமாயிருந்தால், மகன் தன் பெயரை விட்டுவிட்டு அவர் பெயருக்குப் பின்னால் "மகன்" என்ற வார்த்தையைச் சேர்த்துக்கொள்வது சுவீடிஷ் மக்களின் பண்பாடு.

பொதுவாகச் சுவீடிஷ்காரர்கள் கணக்கில் வல்லுநரல்லர். இதனால்தான் தசாம்ச முறையிலேயே நீட்டல், முகத்தல், நிறுத்தல் அளவுகள், நாணயம் இவற்றை சுவீடிஷ்காரர்கள் அமைத்துக் கொண்டனர் போலும்! மிகச் சிறிய கூட்டல் கழித்தல் கணக்குகட்குக்கூட அவர்கள் இயந்திர உதவியை நாடுகின்றனர்.

### நகரங்கள்

சுவீடனின் தலைநகராகிய **ஸ்டாக்ஹோம்** உலகின் மிக அழகிய நகரங்களில் ஒன்று; சரித்திரப் பிரசித்தி பெற்றது. பதின்மூன்று ஏரிகள், பல மலைகள்—இவற்றிற்கிடையே அமைந்துள்ள இந்நகரின் பெருமையை "ஸ்டாக்ஹோம் நகரை இரவில் பார்த்துவிட்டு இறந்துபோ" என்ற பழமொழியிலிருந்து அறியலாம். திறந்த வெளியில் மிருகக் காட்சிசாலை இருப்பது உலகிலேயே இந்த

நகரில் மட்டுந்தான். இந்நகரிற் பல கட்டடங்களில் பத்தாவது மாடியில், குழந்தைகள் விளையாடுவதற்காகத் தோட்டங்கள் இருக்கின்றன. இங்குள்ள டவுன் ஹால் என்னும் மண்டபம் சுவீடனின் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாகும். உலக சமாதானத்துக்கு உழைத்தவர்கட்கும் பிற மேதாவிகட்கும் நோபல் பரிசுகள் ஏற்படுத்திய சுவீடிஷ்காரரான **ஆல்பர்ட் நோபல்** என்பவர் நினைவு நிலையமாக ஒரு பெரிய நூல்நிலையம் ஸ்டாக்ஹோம் நகரில் உளது. சுவீடனின் இதர முக்கிய நகரங்கள்— கோதன்பர்க்கும், மால்மோவும்.

முடிவு

சுவீடன் கடந்த நூறு ஆண்டுகளில்தான் இந்த மிகச் சீரிய நிலையை அடைந்திருக்கிறது. இதற்குக் காரணமாயுள்ளவர்கள் கைதேர்ந்த தொழிலாளிகளும், சிறந்த பொறியியல் வல்லார்களும், பிரசித்திபெற்ற விஞ்ஞானிகளும், திறமையான நிருவாகிகளுமாவார். மேலும், மிக மலிவான மின்சார வசதியும், தொழிலாளரிடையே அமைதியும் இங்கே காணப்படுகின்றன. நம் நாட்டுக்கும் இவை அனைத்தும் வேண்டும். இவை இருந்தால், இந்தியாவும் இந்த வையத்து நாட்டிலெல்லாம் உயர்வுற்று, வறுமை நீங்கி வாழலாம்.

அருஞ்சொற் பொருள் :

அபேதவாதம்-பொதுவுடைமை. அக்கறை-கவலை.
மோகம்-பெரு விருப்பம். வையம்-உலகம்.

வினாக்கள் :

1. சுவீடனைப்பற்றி அறிந்துகொள்ளுதல் ஏன் இன்றியமையாதது?
2. சுவீடனில் சமாதானமும் சுபிட்சமும் நிலவக் காரணங்கள் யாவை?
3. சுவீடனின் விஞ்ஞான முன்னேற்றத்தை எவ்வாறு உணர்ந்து கொள்ளலாம்?

4. சுவீடன் நாட்டுச் செழிப்பினை நாம் எங்ஙனம் ஊகித்தறியலாம்?

5. சுவீடன் நாட்டுக் கல்வி முறையை விளக்கி எழுதுக.

6. சுவீடனில் உள்ள இருப்புப் பாதைகளின் சிறப்புக்கள் யாவை?

7. சுவீடனுக்கு "நள்ளிரவுச் சூரியன் நாடு" என்ற பெயர் வரக் காரணம் என்ன?

8. சுவீடிஷ் மக்களின் குண நலன்களைத் தொகுத்து எழுதுக.

9. சுவீடன் உயர்நிலை அடைதற்குக் காரணமாயிருந்தவர் யாவர்?

கட்டுரைப் பயிற்சி:

பின்வரும் தலைப்புக்களைப்பற்றி 25 வரிகளில் கட்டுரைகள் வரைக.

1. சுவீடன் நாட்டுக் கல்வி முறை.
2. சுவீடன் நாட்டு இருப்புப் பாதையின் சிறப்பு.
3. சுவீடன் மக்கள் குண நலன்கள்.

# 9. அறம் உரைத்த உழவர்

வித்துவான் அன்பு கணபதி, அவர்கள்

கிள்ளிவளவன் என்னும் ஒரு மன்னன் சோணுட்டினை அரசுபுரிந்து வந்தனன். இவன் தன் காலத்திருந்த சேர பாண்டிய மன்னர்களிலும் சிறந்தவனுக விளங்கினுன். கல்வி, அறிவு, ஒழுக்கம், வீரம் ஆகியவற்ருல் உயர்ந்து தன்னை ஒப்பாரும் மிக்காரும் இல்லாது மிளிர்ந்தான்.

"கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க்(கு) ஒளி"

என்று வள்ளுவர் அரசர்க்குரிய இயல்புகளாகக் கூறிய நான்கிலும் சிறந்து மிளிர்ந்தான். கோவூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், ஆலத்தூர் கிழார், மாருேக்கத்து நப்பசலையார் முதலிய தண்டமிழ் நலம் சான்ற தமிழ்ப்புலவர்கள் இவனுல் தலையளி செய்யப்பெற்றனர். இப்புலவர்கள் கிள்ளிவளவனது சிறப்பியல்புகளைப் பாராட்டிப் பாடிய செவ்வுரைகள் செந்தமிழ் இலக்கியங்களில் பலபடப் பரந்துகிடக்கின்றன.

கொடை, வீரம், கோன்முறை ஆகியவற்ருல் சிறந்திருந்த கிள்ளிவளவனது நாடு, வளப்பத்தாலும் உயர்ந்த நிலையில் இருந்தது. ஆயினும், இத்தகைய செழிப்புள்ள சோணுட்டில் ஒருமுறை தொடர்ந்து சில ஆண்டுகள் மழையின்மையால் விலையுள் குறைந்தது. தங்கள் வாழ்க்கைக்கே போதிய வருவாயினைப் பெருத மக்கள், இறைவரி செலுத்த இயலாது இருந்தனர். இப்பஞ்சநிலை ஆட்சித் தலைவர்களால் வளவனுக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை. ஆட்சித் தலைவர்களிற் சிலர், இச்சிறு பஞ்சத்தினை ஒரு பொருட்டாக எண்ணினுர்களில்லை. நாட்டின் சில பகுதிகளிலிருந்த தண்டல் தலைவரில் சிலர் வரி வசூலித்தலில் சிறிது கடுமை காட்டினர்; முறைப்படி வரி கொடுக்குமாறு மக்களை நெருக்கினர். விளையுள் குறைவினை மக்கள் எடுத்துக்கூறி வரிக்குறைவு செய்யுமாறு வேண்டியும் அத்தலைவர்கள் அதனைச் செவிமடுத்திலர். அவர்கள் இந்நிலையினை

அரசனுக்கு அறிவித்து, அவன் கட்டளையை நாடவும் இல்லை. தங்கள் கருமமே கண்ணுயிருந்தனர். எல்லாம் சரிவர நடப்பதாகவே வளவன் எண்ணியிருந்தான்.

இவ்வாறு சில ஆண்டுகளாகத் தொடர்ந்து வரி செலுத்த இயலாதிருந்தவர்களில் நம்புலவர் வெள்ளைக்குடி நாகனுரும் ஒருவர்; தண்டல் தலைவரின் நெருக்குதலுக்குப் புலவரும் ஆளானுர்; தம் ஊர்ப் பகுதியைச் சேர்ந்த மக்கள் படும் துன்பத்தையும் கண்டார்; காவலன் பார்வைக்கு இத் துன்பநிலை கொண்டுசெல்லப்படவில்லை என்பதையும் பலர் வாயிலாகக் கேட்டறிந்தார். அரசனுக்கு இந்நிலை கூறி அறிவுறுத்துவது யார்? மக்கள் துன்பம் துடைப்பது எப்படி? அரசனைக்கண்டு இதற்கு ஒரு தீர்வு காண்பது தம் கடமை என நாகனுர் எண்ணித் துணிந்தார்.

நாகனுர் அரண்மனைக்குச் சென்ருர்; வாயில் காவலன் மூலம் தம் வருகையினை வளவனுக்கு அறிவித்தார். புலவர் வருகை அறிந்த மன்னன், நாகனுரைத் தக்கவாறு வரவேற்று உபசரித்தான். நாகனுரின் புலமைத் திறத்தினை மன்னன் முன்னரே கேட்டு மகிழ்ந்தது உண்டு; நேரிற் கண்டவனல்லன். அவ்வாறே நாகனுரும் அரசனது மாண்பு நலமெல்லாம் பலர் வாயிலாகக் கேட்டிருந்தனரே தவிர, இதுவரை நெருங்கிப் பழகியதில்லை. "புலவரே! நும் வருகையால் நான் பெருமகிழ்வடைந்தேன். தாங்கள் அரண்மனையில் சில நாள் தங்கி என்னுடன் அளவளாவிச் செல்லவேண்டும். இதுவே என் இனிய வேண்டுகோள்." இங்ஙனம் கூறிய வ்ளவனை நோக்கிப் புன்முறுவல் பூத்த புலவர், "அரசே! அடியேனின் சிறிய வேண்டுகோளினையும் ஏற்றருள வேண்டும்" என்றனர். "என்ன" என மன்னன் கேட்கப் புலவர் கூறினுர்:

"பெருமானே! நீர் செறிந்த கடலைத் தன் சுற்றெல்லை யாகவும், காற்றும் உலவாத மிக உயர்ந்த வானத்தை மேல் எல்லையாகவும் கொண்டது இவ்வுலகம். இவ்வுலகில் தண்டமிழ்க்கு உரியவராகிய முரசு முழங்கு தானைகளையுடைய

மூவேந்தர் உளர். அம்மூவருள் அரசு என்ற சிறப்பினைப் பெற்றது சோழ அரசராகிய நின்னுடைய அரசே.''

இதைக் கேட்ட வளவன் புன்னகை புரிந்தான். புலவர் மேலும் கூறுவாராயினர் :

'' (குணதிசையில்) விளங்கும் கதிரினையுடைய பகலவன் நான்கு திக்கிலும் தோன்றினாலும், (நேரே செல்ல வேண்டிய) ஒளிவிடும் வெள்ளிமீன் தென்திசை நோக்கிச் சென்றாலும் அழகிய காவிரி தன் பாய்ச்சலில் குறையாது; நீரைக் கொண்டுவந்து பல கால்வாய்களின் வழியாக ஓடவைத்துக் கன்னலை ஊட்டும். அந்நீரினை உண்ட கரும்பு, கணுக்கள் முற்றிப் பருத்து வளர்ந்து பூத்து நிற்கும். வயல்களில் காற்றில் அசைந்து காணப்படும் அப்பூக்களின் தொகுதி, வெள்ளிய வேல்களின் கூட்டமே போல் காட்சி அளிக்கும். இத்தகைய வளமிக்க சோழ நாடே நினது நாடு. அந்நாட்டினையும் அந்நாடு தரும் பலவகைச் செல்வத்தையும் பெற்றதால் உற்ற பெருமைமிக்க வேந்தனே !''

என அழைத்து, நாகனார் சற்று நிறுத்தினார். புலவரின் புகழ்ச்சி உரைகளைத் தொடர்ந்து கேட்ட மன்னவன் மனம் மேலும் மகிழ்ந்தது. ஆயினும், புலவர் உள்ளத்தில் வேறு ஏதோ மறைந்து கிடக்கின்றது என்பதைக் குறிப்பாக உணர்ந்தான். அதனை அறிய ஆவல்கொண்டான். அவ்வாவலை முகத்திலும் காட்டினான். வளவனது ஆவல் கண்ட நாகனார் இதுவே சமயம் என எண்ணித் தம் உரையைத் தொடர்ந்தார்.

'' நின்னுடைய செயல்களாகச் சில கூறுவேன்; என்னுடைய சில வார்த்தைகளைக் கேட்டருள்க. அறக்கடவுள் பொருந்தி ஆராய்வது போன்று செங்கோலால் நீதி ஆராய்வது வழக்கம். அவ்வாறு நீதி வேண்டுங்காலத்து வந்த குடிமக்களுக்குச் செவ்வி காட்டவேண்டும். அங்ஙனம் காட்டியோர் தாம் வேண்டுமென்று நினைத்த காலத்தில் தப்பாது மழையைப் பெறுவர்.''

மன்னனுக்குப் புலவரின் உள்ளம் என்ன என்பது விளங்கவில்லை. தன்னிடம் வந்த மக்களைப் பார்க்க விரும்பாது, தான் திருப்பி அனுப்பியதாகவும் அவனுக்கு நினைவில்லை. புலவர் தொடர்ந்தார் :

" கூரிய வேலையுடைய வளவ! ஞாயிற்றைத் தன் மேலே கொண்ட மேகம், நடுவுநின்று அதன் வெயிலை மறைத்தாற் போலக் கண்ணொளி பறிக்கும் வானை முட்டிய நினது வெண்கொற்றக்குடை, நினக்கு வெயில் மறைக்கப் பிடிக்கப்பட்டதோ? அன்று, அன்று. பின் எதற்கு? வருந்திய குடிமக்களின் துயர் துடைக்கவே அது பிடிக்கப்பட்டது".

" அவ்வாறெனில் என்குடை நிழலில் மக்கள் அல்லலுறுகின்றனரா? இக்குடை எனக்காக என்று யான் எந்தக் காலத்தும் நினைத்ததில்லையே! பின், புலவர் உரையின் பொருள்தான் என்ன?" இவ்வாறு மன்னன் கவலையுடன் எண்ணிப் பார்த்தான். தம் உரைகள் மன்னன் உள்ளத்தில் உறைப்பதைக் கண்ட புலவர் பின்னும் சொல்லலுற்றார் :

" இளைய பனந்துண்டங்களைப் போலத் தனித்தனியே தரையில் உருளுமாறு எதிர்ப்படையின் யானைகளை நின் வீரர்கள் போர்க்களத்தில் வெட்டி வீழ்த்தினர்கள் ; தங்கள் மேல் வரும் எதிரிப் படைகளை ஆண்மையுடன் தடுத்து நிறுத்தினர்கள். நின் வீரர்களின் தாக்குதலுக்கு ஆற்றாது எதிரிகள் சரிந்து மீளுவதை—புறமுதுகிட்டு ஓடுவதைக் கண்டு உவந்து ஆரவாரித்தார்கள் ; நினக்கு வெற்றி தேடித் தந்தனர். இவ்வெற்றி யாரால் வந்தது? எதன் பயன்? எண்ணிப் பார்த்தாயா? வயலில் கலப்பை ஊன்றிய சாலின் மருங்கே விளைந்த நெல்லின் பயன் அன்றோ?"

" உண்மையே. உணவில்லாது படை என் செய்யும்? போர்க்களத்துக்குச் செல்பவர் வீரர்களாயிருந்தாலும், உண்மையில் வெற்றிதேடித் தருபவர் உழவர்களே, இதை மறுத்தவர் யார்?" இவ்வாறு மன்னவன் எண்ண, நாகனர்,

" பெய்ய வேண்டிய காலத்து மழை பெய்யாது பொய்த்தாலும், அதன் பயனாக நாட்டில் விளைவு குறைந்தாலும், தங்கள் இயல்புக்கு மாறானவை மக்கள் செயலிலே அன்றி, மக்கள் தலைவர்களின் செயலிலே காணப்பட்டாலும் இந்த உலகம் இவைகட்கெல்லாம் காரணம் அரசனே என்று அவனைப் பழிக்கும்" எனக் கூறினார். அரசன் பொறுமை இழந்தான். புலவரை நோக்கினான். புலவர் பின்வருமாறு கூறினார் :

" மன்னனே, இதனை நீ நன்றாக அறிவது உண்மையானால் இனியாவது கோள் சொல்வாருடைய வெற்றுரைகளை நம்பவேண்டா. நாட்டில் அனைத்தும் ஒழுங்காக நடப்பதாகக் கூறும் நாட்டுத் தலைவர் சிலரின் பேச்சைக் கேட்டு நம்பி, உண்மை காண முயலாது வறிதே இருக்கவேண்டா. ஏரைப் பாதுகாக்கும் உழவரின் பாரத்தினை நீ தாங்க வேண்டும். அதன்மூலம் ஏனைக் குடிமக்களையும் காக்க வேண்டும். இங்ஙனம் செய்தால் எதிரிகளை அடக்க நீ வெளிநாடுகளுக்குப் படைகள் அனுப்பத் தேவையில்லை. எதிரிகள், தாமே வந்து உன் தாளைப் பணிவர்."

நாகனார் தமது உரையை முடித்தார்; நிமிர்ந்து நோக்கினார். நாட்டுத் தலைவர்களால் தன் குடிகட்குத் துன்பம் நேர்ந்துவிட்டதை உணர்ந்தான் மன்னன். அதனைத் திறம்படக் கூறித் தனக்கு அறிவுறுத்திய நாகனாரின் அறிவுத் திறத்தை வியந்து பாராட்டினான்; நாகனாரைத் தழுவி மகிழ்ந்தான்; பிறகு மக்கள் படும் துன்பங்கள் எல்லாம் நாகனார் விளக்கமாகக் கூறக்கேட்டு உள்ளம் மிக வருந்தினான்; அமைச்சரை விளித்து, நாட்டுநிலை யறிந்து, குறிப்பிட்ட அத்தண்டல் தலைவர்களுக்குக் கட்டளை அனுப்புவதன்மூலம் பஞ்சத்தால் நொந்த மக்களுக்கு அவ்வாண்டு வரிவிலக்கு அளிக்கச் செய்தான்.

புலவர் நாகனாரும், 'பழஞ் செய்க்கடன் வீடு கொண்டார்'; அதுவரை அவர் செலுத்த வேண்டியிருந்த வரியை மன்னன் தள்ளிவிட்டான்; அம்மட்டுமா? இது

வரை நாகனர் உரிமையுடன் அனுபவித்துவந்த நிலமனைத்துக்கும் இனி அவர் வரியே செலுத்த வேண்டியதில்லை என்ற கட்டளையும் பிறப்பித்து, அந் நிலங்களை அவருக்கு 'இறையிலி'யாக வழங்கினன்; புலவர்க்குப் பரிசில் முதலிய வரிசை அளித்து வழியனுப்பினன்.

கிள்ளிவளவனது அன்பில் திளைத்த அறம் உரைத்த உழவர், குடிமக்கட்கும் தமக்கும் நன்மை தேடியவராய் மன்னனும் மக்களும் வாழ்ந்த வெள்ளைக்குடிக்கு இனிது மீண்டார்.

அருஞ்சொற் பொருள் :

மிளிர்ந்தான் - விளங்கினன். அளி - அருள். பரந்து-மிகுந்து. செவிமடுத்திலர் - கேட்டிலர். தண்டல் தலைவர் - வரி வசூலிப்பவர். தீர்வு-முடிவு. புன்முறுவல்-புன்சிரிப்பு. தானை-சேனை. குணதிசை-கிழக்குத்திசை. பகலவன்-சூரியன். கன்னல்-கரும்பு. செவ்வி-காட்சி. ஆற்ருது-எதிர்த்து நிற்க இயலாமல். செய்க்கடன்-வயல்வரி. வீடு-விடுதலை. இறையிலி-வரி இல்லாத நிலம்.

வினுக்கள் :

1. அரசர்க்குரிய இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?
2. கிள்ளிவளவனல் அன்பு செய்யப்பெற்ற புலவர்கள் யாவர்?
3. வெள்ளைக்குடி நாகனர் தம் கடமையெனக் கொண்டது யாது?
4. காவிரி ஊட்டுவதால் விளைந்த கரும்பின் தோற்றத்தினை நாகனர் எங்ஙனம் கூறியுள்ளார்?
5. மழையை வேண்டுங்காலத்துப் பெறுவோர் யார்?
6. வெண்கொற்றக்குடை பிடிப்பதன் நோக்கம் யாது?
7. வீரர்களின் வீரச் செயல் எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?
8. அரசனைக் குடிமக்கள் எப்பொழுது பழிப்பர்?
9. நாகனர் அறிவுரை கேட்ட அரசன் செய்த செயல் யாது?
10. நாகனர்க்கு வளவன் செய்த சிறப்புக்கள் யாவை?

கட்டுரைப் பயிற்சி :

பின்வரும் தலைப்புக்களைப்பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரைகள் வரைக.

1. கிள்ளிவளவனின் பெருந்தகைமை.
2. வெள்ளைக்குடி நாகனரின் அருள் உள்ளம்.

# 10. தம்பிக்கு

டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி.

அன்புள்ள எழில்,

ஆக்கவேலை முறைகள் இன்ன இன்ன என்று வகுத்து அனுப்புமாறு எழுதியிருக்கிருய் ; எழுதுவேன்.

அதற்குள் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தமிழரிலே தனித்தனியே இவர் இவர் இப்படி உயர்ந்தார் என்று சொல்வது பழமை. தமிழர் கூடிக்கூடி இன்னது செய்து உயர்ந்தார்கள் என்று சொல்லும் நற்சொல்லே இனி வேண்டும். சேர்ந்து செயல்செய்து உயரும் வல்லமை தமிழருக்கு உண்டு என்பதை இனி உலகுக்கு உணர்த்த வேண்டும். தனி ஆட்களின் உயர்வு இனத்துக்கு என்ன நன்மை செய்யும்? தமிழ்ச் சமுதாயம் உயர வேண்டாமா? தனி ஒருவன் 'அதோ ஒரு தொழிற் சாலையைத் திறமையாக நடத்துகின்ருன்' என்று சொல்லும் நிலை போதாது. 'தமிழர் பலர் கூடி நடத்தும் தொழிற்சாலை அதோ, திறமையாக நடத்தப்படுகிறது' என்ற புகழ்நிலை வரவேண்டும் ; வளரவேண்டும். அன்று தான் தமிழர் சமுதாயமாக உயர வழி பிறக்கும். இன்றுள்ள தமிழகத்தில் தனி மரங்களாகத் தமிழர் உயர்வதையே காண்கின்ரும். தோப்பாகக் கூடி உயர்வதைக் காண்கின்ருமா? இல்லையே. இது பெருங்குறை. ஒற்றுமை இல்லாமையே இதற்குக் காரணம் என்று உணர்கின்ருயா? தமிழர் நான்குபேர் சேர்ந்து ஒரு மனமாய் ஒன்றை நடத்த முடியாது; நடத்திலுைம் அது நெடுங்காலம் நீடிக்காது என்ற பழிச்சொல் உன் செவிக்கு எட்டியிருக்குமே! பிரிக்கும் ஆற்றல் உண்டு; பிணைக்கும் ஆற்றல் இல்லை என்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமா?

இனி, ஆக்கவேலை முறைகள் என எனக்குத் தெரிந்தவற்றை எழுதுகிறேன்.

தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்த வல்லது. தமிழ் ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் ஆனால் தவிர, தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு. ஆட்சிமொழி என்றால் சட்டசபை முதல், நீதிமன்றம் வரையில் தமிழ் வழங்க வேண்டும். கல்வி மொழி என்றால் எவ்வகைக் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும். குறைகள் பல இருக்கலாம். குறைகளுக்காகத் தயங்காமல் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் ஆக்கவேண்டும் என்று உணர்ந்திடு.

இவ்வாறு பேசிக்கொண்டிருந்தால் போதாது. உன்னால் ஆனவரையில் செய். கடிதம், விளம்பரப்பலகை, மணி யார்டர், விற்பனைச்சீட்டு முதலிய எல்லாம் தமிழிலேயே எழுதுக. மராத்தியர், குஜராத்தியர் முதலானவர்களிடம் இந்த வழக்கம் உள்ளது. இவற்றைத் தமிழில் எழுதினால், தபால்காரர், வியாபாரிகள், வாங்கும் மக்கள் முதலியவர் களைத் தமிழ்ப் படிக்கச் செய்வதுபோல் ஆகும். இல்லை யானால், அவர்கள் தமிழை மறக்கும்படி செய்வதுபோல் ஆகும். நீ யாருடனும் தமிழிலே பேசு. உலகத்தார் எல்லாரும் அவரவர் தாய்மொழியில்தான் பேசுகின்றார்கள். தமிழ் தெரியாதவர்களிடத்தில் மட்டும் பிற மொழியில் பேசு. திருமணம், வழிபாடு முதலியவற்றைத் தமிழில் நடத்து.

சாதி சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக்கொள்; மறக்க முடியாவிட்டால் புறக்கணிக்கக் கற்றுக்கொள். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற செம் மொழியைப் போற்று.

நான்கு பேர் சேர்ந்தால், அவர்களிடையே பண்பாலும் செயலாலும், கருத்தாலும், கொள்கையாலும் ஒற்றுமையும் உண்டு; வேற்றுமையும் உண்டு. ஒற்றுமையான பகுதிகளை மட்டும் எடுத்துப் பேசு. வேற்றுமைப் பகுதிகள் இங்கு இப்போது வேண்டியதில்லை என்று விட்டுவிடு. வேற்றுமைப் பகுதிகளை வலியுறுத்திப் பேசினால் பொதுவேலை நடக்காது என்று நம்பு.

வெளிநாட்டுத் துணியை விலக்குதல்போல், தமிழ் நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் நன்மை செய்யாத செய்தித் தாள்களை விலக்கு. நாட்டுக்கும் மொழிக்கும் இடையூருன நிலயங்களைப் போற்ருதே. உன் காசு அவற்றிற்குப் போகாமல் காத்துக்கொள். நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் உடையவர் நடத்தும் உணவு விடுதி, மருந்துக் கடை, துணிக்கடை முதலியன சிறிது தொலைவில் இருந் தாலும், விலை சிறிது கூடுதலாக இருந்தாலும், வேறு குறை இருந்தாலும் அங்கேயே சென்று வாங்கு. அவசரத்தின் காரணமாகவோ, வேறு காரணத்தினுலோ தவற நேர்ந் தால், தவறு என்று உணர்ந்து வருந்து. அதற்குத் தண்டனையாக ஓர் அணு அல்லது இரண்டணு தனியே எடுத்து வைத்துச் சேர்த்து ஒரு சங்கத்திற்குக் கொடுத்து விடு.

கூடிய வரையில் தமிழ் நாட்டில் தமிழ்த் தொழிலாளி களால் செய்யப்பட்ட பொருள்களையே வாங்கு.

உன் மொழியையும் நாட்டையும் போற்றுவதற்காக, மற்றவர்களின் மொழியையும் நாட்டையும் தூற்ருதே; பழிக்காதே; வெறுக்காதே. அயலானின் தாயைப் பழித்து வெறுக்காமலே நம் தாயினிடம் அன்பு செலுத்த முடியும். அத்தகைய அன்புதான் நிலையானது; நீடிப்பது. மற்றவர் களின் அமைப்புக்களையும் நிலயங்களையும் விலக்குதல் என்ருல், அவர்களை வெறுப்பதும் பழிப்பதும் பகைப்பதும் வேண்டாம். ஏன் என்ருல் வெறுத்தல் பழித்தல் பகைத்தல் இவைகள், உடையவனைக் கெடுக்கும் பண்புகள்; 'சேர்ந்தாரைக் கொல்லி' என்று திருவள்ளுவரால் கூறப் படுவது போன்றவை. இன்று அயலாரிடம் செலுத்தும் வெறுப்பும் பழியும் பகையும் அவர்கள் வாளா இருந்தால், நாளை திரும்பிவந்து நம்மவரிடையே செலுத்தத் தூண்டும். இறுதியில் நம்மவரையே வெறுக்கவும், பழிக்கவும், பகைக் கவும் முனைவோம். ஆகவே, தற்காப்புப் பண்புகளாகிய அன்பு, பற்று, கடமையுணர்ச்சி ஆகியவற்றை மேற்கொள்

வோம். தன்னழிவுத் தன்மைகளாகிய வெறுத்தல், பழித்தல், பகைத்தல் ஆகியவற்றை விட்டொழிப்போம்.

தமிழரிடையே உள்ள பகைப்பிரிவுகளை மேலும் வளர்க்கும் செயல்களைச் செய்யாதே; அத்தகைய சொற்களைச் சொல்லாதே; அவ்வாறான எண்ணங்களை எண்ணாதே. தமிழரிடையே ஒற்றுமை வளர்க்கும் சிந்தை, சொல், செயல்களையே போற்று. சுவையாக இருந்தாலும் முன்னவை நாடாதே; சுவையற்றிருந்தாலும் பின்னவை போற்று.

கொள்கைகளும், கட்சிகளும், இயக்கங்களும் நாட்டு மக்களின் நன்மைக்காகத்தான் தோன்றியவை. ஆகவே, கொள்கைகள், கட்சிகள், இயக்கங்களைவிட நாட்டு மக்களின் நன்மையே பெரிது என்று உணர்.

தமிழ்நாடு உயரவேண்டும் என்றால் இங்குள்ள மலையும் காடும் நிலமும் நீரும் உயர்தல் அல்ல; இங்கு வாழும் மக்கள் யாவரும் உயர்தல் என்று கருது. ஆகவே, இந்நாட்டில் உள்ள வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பிச்சை எடுத்தல் முதலிய கொடுமைகள் ஒழிய வேண்டும் என்று கருது. "ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை" என்று பாரதியார் கண்ட கனவைப் போற்று. வறியவர்களைக் காணும் போதெல்லாம் இதை நினை. நீ உணவு உண்ணும் முன்பு ஒரு நொடிப்பொழுது கண்ணை மூடி, இலையில் உள்ள உணவு ஏழைத் தொழிலாளிகளின் உழைப்பால் ஆனது என்று எண்ணு. வாரத்திற்கு ஒரு நாளேனும் நீ வாழும் வீடு ஏழைத் தொழிலாளிகளின் உழைப்பால் ஆனது என்று எண்ணு. நீ உடுக்கும் உடை முதலியனவும் ஏழைத் தொழிலாளிகளின் உழைப்பால் ஆனவை என்று எண்ணு. அந்த ஏழைக் குடும்பங்களில் பிறந்தவர்கள் உன்னைப்போல் உண்ண முடியவில்லை என்பதையும், உன்னைப்போல் கல்வி கற்க முடியவில்லை என்பதையும் எண்ணு. அவர்கள் உயரவேண்டும் என்று கசிந்துருகு. இன்றைய எண்ணமே வருங்கால அமைப்

புக்கு வித்து ; ஆகையால், எண்ணுவதால் பயன் உண்டு என்று நம்பிக்கையோடு எண்ணு.

" யாதும் ஊரே, யாவரும் கேளிர் " என்ற நல்ல நிலை வரவேண்டும். உலகம் ஒரு குடும்பமாக வாழவேண்டும் என்று ஆர்வம் கொள். அந்த நிலை வந்தால் நாட்டுப்பற்று என்பது வேண்டாததாகிவிடும் என்றும் அறிந்துகொள். அது வரையில் நம் நாட்டுக்கு நாம் செய்யவேண்டிய கடமை இருக்கின்றது என்பதை மறவாதே. ஊர்க்கெல்லாம் பொதுக்காவல் சிறந்த முறையில் ஏற்படும் வரையில், ஒவ்வொருவரும் தம் வீட்டைத் தாளிட்டுக் காத்துக்கொள்ள வேண்டும் அல்லவா ? அதுபோல் உலகத்திற்குப் பொது வான ஒரு சிறந்த ஆட்சி முறை ஏற்படும் வரையில், நம் நாட்டை நாம் தவருமல் காத்துக்கொள்ளவேண்டும். அது குறுகிய நோக்கம் அன்று ; இன்றியமையாத கடமை என்று உணர்ந்துகொள்.

உன் மானத்தைவிட நாட்டின் மானம் பெரிது என்று உணர். உன் உயர்வைவிட நாட்டின் உயர்வு இன்றி யமையாதது என்று உணர். உன் நலத்தைவிட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர். நெருக்கடி நேரும் போது உன் நலம், உயர்வு, மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக்கொடு.

தலைமை உன்னைத் தேடிக்கொண்டு வந்தால் வரட்டும் ; நீ அதைத் தேடிக்கொண்டு போய் அலையாதே. நீ தேட வேண்டியது தொண்டு. தலைமை தாங்குவதும் ஒருவகைத் தொண்டுதான். தன்னலம் அற்றவர்க்கு அது பொறுப்பும் சிக்கலும் மிகுந்த தொண்டு. அத்தகைய தலைமைப் பொறுப்பு எப்போதாவது உன்னை நாடி வந்தால் ஏற்றுக் கொள். ஆனல், " தொண்டுக்கு முந்தி, தலைமைக்குப் பிந்தி " என்பது உன் நெறியாக இருக்கட்டும்.

இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. ஆனல், கண்டபடி சொல்ல ஆள் ஏராளம். ஒவ்வொரு வரும் ஆணையிடுவதற்கு விரும்புகிருர்கள் ; அடங்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை ; அதனல்தான் வீழ்ச்சி

நேர்ந்தது என்கிறார் விவேகானந்தர். ஆகையால், பொது நலத்திற்காகக் கட்டுப்படுதல், கீழ்ப்படிதல், தொண்டு செய்தல் இவற்றைப் பெருமையாகக் கொள்.

மேலும், நான் விரிவாக எழுதிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. உனக்குப் போதிய அறிவும் திறமையும் இருக்கின்றன. அவற்றைத் தக்க வழியில் பயன்படுத்த வேண்டுமே என்பதுதான் என் கவலை. அதனால்தான் இவ்வளவும் எழுதினேன்.

உன் அண்ணன்,

**வளவன்**

அருஞ் சொற்பொருள் :

பிணக்கும் - சேர்க்கும். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்- குலமும் ஒன்று இறைவனும் ஒருவனே. தூற்றாதே - இழித்துப் பேசாதே. கொல்லி-கொல்வது. முனைவோம்-முற்படுவோம். பற்று-ஆசை. நாடாதே-விரும்பாதே. கசிந்து-மனமிரங்கி. வித்து- அடிப்படை. ஆர்வம்-ஆசை.

வினாக்கள் :

1. தமிழர் சமுதாயமாக உயர்ந்து வாழச்செய்ய வேண்டுவனவாக ஆசிரியர் கூறுவன யாவை ?
2. தமிழ் எதிர்காலத்தில் சிறந்து விளங்க யாது செய்தல் வேண்டும்?
3. தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் செய்யவேண்டிய ஆக்கவேலைகள் யாவை ?
4. பிறர் மொழியையும் நாட்டையும் தூற்றலாகாது என்பதனை ஆசிரியர் எங்ஙனம் வலியுறுத்துகின்றார் ?
5. ஆசிரியர் எவ்வெவற்றை எண்ணிப்பார்க்கும்படி எழிலைக் கேட்டுக் கொள்கிறார் ?
6. எது இன்றியமையாத கடமை என்று ஆசிரியர் கூறுகின்றார் ?
7. நாடு வீழ்ச்சியடைந்ததற்கு விவேகாநந்தர் கூறுவன யாவை?
8. எவற்றைப் பெருமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் ?

கட்டுரைப் பயிற்சி :

மொழியும் நாடும் உயர்வதற்கான வழிகள்—இத்தலைப்பைப்பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரையொன்று வரைக.

# 11. வீடும் கலையும்

திரு. சி. பெரியநாயகி அம்மையார் அவர்கள்

"கலை" என்பது என்ன என்ற கேள்விக்கு எங்கும் விடை கிடைப்பது அரிதாயிருக்கிறது. கலை காணும் இடங்களில் கருத்துக்கியையக் காணப்படும் பொருளைக் கொடுக்கும்; கண்டோரைக் கவரும். உள்ளத்தில் உண்டாகும் கற்பனையை உணர்ச்சி குன்றாமல் பிறருக்கு வெளிப்படுத்திக் கவரச் செய்வதே கலை. அஃது அழகிய கதையிலே இருக்கலாம்; கவிதையிலே இருக்கலாம்; அல்லது ஓவியத்திலே இருக்கலாம்; நாட்டியத்திலே பேச்சிலே சாதாரண வாழ்க்கையிலே விளங்கலாம்.

சாதாரண வாழ்க்கையில் அல்லது வீட்டில் கலையைக் காண முடியுமா? ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு விட்டிலேதான் வாழ்கின்றான். ஆனால், எல்லா வீட்டிலும் கலை பரிணமிப்பதில்லை; கலை என்பது எங்குந் தோன்றுவதில்லை. இயற்கையில் கலை இருக்கிறது. ஏனென்றால், அஃது இறைவன் என்னும் கலைஞனின் படைப்பு. கலைஞன் உள்ள இடத்தில் கலை உண்டு. ஆகவே, வீட்டிலே கலையுள்ளம் படைத்த ஒருவர் இருந்து தம் உணர்ச்சியை உணர்ச்சி குன்றாமல் பிறருக்கு வெளிப்படுத்தும் நிலையில் வாழ்ந்தால்தான் கலையைக் காணலாம். மனிதன் இறைவனாகிய கலைஞனால் படைக்கப்பட்டவன். அவன் கலையுள்ளம் படைத்தவனாகவே இருக்க வேண்டும். எல்லோருக்கும் கலையைப் பெருக்க வழியுண்டு. ஆனால், சோம்பல், சோர்வு என்னும் தீய பழக்கங்கள் மக்களின் உள்ளத்தில் இக்கலை உணர்ச்சியை அழித்துவிடுகின்றன. ஆகையினால்தான் கலை சில வீடுகளில் மிளிர்கின்றது; சில வீடுகளில் காணப்படுவதில்லை.

வீட்டின் அமைப்பிலே கலையை எந்தெந்த நிலையிற் காணலாம் என்றால், வீட்டினுடைய உயரத்திலோ அன்றிப் பருமையிலோ அன்று. ஆனால், கம்பீரமான தோற்றத்திலே,

கவர்ச்சிகரமான அமைப்பிலே, கலையைக் காணலாம். அது பெரும்பாலும் கட்டுபவனுடைய கலையுள்ளத்தைப் பொறுத்திருக்கிறது.

வீட்டினுள் காணப்படும் கலைக்கு வீட்டுத் தலைவன் அல்லது தலைவி பொறுப்பாளி. சிறப்பாகத் தலைவிதான் பொறுப்பாளி என்றுகூடச் சொல்லலாம். முதலாவதாக வீட்டிலே அறைகளைச் சரியான முறையிலே தேர்ந்தெடுப்பதிலே கலையிருக்கிறது. சிலர் வசதியான முறையில் தேர்ந்தெடுத்திருக்கலாம். அதுவும் அவசியம். ஆனால், கலை அதில் இருக்க முடியாது. தேவையைப் பூர்த்தி செய்வதோடு நில்லாமல் அழகு உணர்ச்சியுடன் அமைக்கப்பட வேண்டும். ஒருத்தி தன் நெற்றியிற் பொட்டிட்டுக்கொள்கிறாள். அதிலே எப்பொழுதும் கலையிருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. மேல்நாட்டு உடையணிந்த பெண்ணின், நெற்றியிலுள்ள திலகம் அழகை வெளிப்படுத்துவதில்லை. ஆனால், கரிய கூந்தல் தவழ்ந்தாடும் அழகிய நெற்றியிலே நம் நாட்டு உடைக்கு ஏற்ப, குங்குமத்தைத் தரித்துக்கொள்ளும்போது அங்கே கலையைக் காணலாம். (நெற்றிக்கேற்ற வகையில் அளவு சிறியதாகவும் வர்ணம் பொருந்தியதாகவும் பொட்டிடுவதில் ஒரு கலை இருக்கிறது.) அதுபோலத்தான் கலையழகு தோன்றும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அறைகளிலே தேவையான பொருள்களை அமைத்து வைப்பது ஆகும்.

சில வீடுகளிலே அழகிய வர்ணம் பூசப்பட்ட சுவர், விலையுயர்ந்த கம்பளம் விரித்த தரை, அழகிய சாமான்கள், விலையுயர்ந்த பொருள்களின் குவியல்கள் இவற்றைக் காணலாம். ஆனால், அங்கு வெண்மாவைக் கொண்டு கோலம் இடப்பட்ட முற்றத்தில் பசுஞ்சாணத்தால் மெழுகப்பட்ட ஒரு திண்ணையில் காணப்படும் கலை சில வேலைகளிற் காணப்படுவதில்லை. காரணம் அங்கேயும் பொருள்கள் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலோ, அன்றிச் செல்வத்தின் பெருமிதத்தை வெளிக்குக் காட்டவேண்டிய

அளவிலோ பொருள்கள் நிரப்பப்பட்டிருப்பதுதான். பொருள்கள் அமைக்கப்பட்டிருக்கும் விதத்தில், எளிய முறையிலே ஆயினும், அழகுணர்ச்சி தோன்றக்கூடிய வகையில், தேவைக்கு அவசியமான பொருள்களை இடத்திற்கு அமைந்தாற்போல வைப்பதுதான் கலை.

பொருள்களை இடத்திற்கேற்ப அமைப்பதால் கலை மிளிர்கின்றது என்றால், பொருள்களைப் பொறுக்கி எடுப்பதிலும் கலை காணப்படவேண்டும். விலை மலிவு என்ற காரணத்தைக் கொண்டோ, பெருமைக்காகவோ, பொருள்களை வாங்கி நிரப்பினால், கலையைக் காணமுடியாது. ஆனால் நம் அறையின் அமைப்பு என்ன? அந்த அமைப்பிற்கேற்ப இப்பொருள் பொருந்துமா? பொருந்துவதோடன்றி அழகு காணப்படுமா? என்று உன்னிப் பார்த்துப் பயனுள்ள பொருள்களை வாங்குவதில் கலை இருக்கிறது என்று சொல்லலாம்.

உதாரணமாக, ஒரு நடுத்தரமான வீட்டில் போதுமான அறைகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். வீட்டிலுள்ளோர் படித்த நாகரிக வாழ்க்கையிலுள்ளவர்களுடன் பழகுகின்றவர்கள். ஆகவே, அவர்களுக்குத் தங்கள் நண்பர்கள் வந்தால் அவர்களுடன் உட்கார்ந்து அளவளாவ ஒரு நல்ல அறை வேண்டும். அங்கே உட்காருதற்கு ஓர் அழகான கட்டிலை வைத்திருப்பது கலையன்று. தங்கள் தகுதிக் கேற்பச் சில நாற்காலிகள், அவற்றோடு பொருந்தும் ஒரு சிறிய வட்ட மேசை, மேசையின் மீது விரிப்பு, அழகிய பூக்களைத் தாங்கி நிற்கும் ஒரு சிறிய செம்பு இவற்றை ஒழுங்கான முறையில் அமைப்பதிலே கலை காணப்படுகிறது.

பலநிறப் பூக்களை எடுத்துச் செம்பிலே தண்ணீர் விட்டு வைத்தால், கலை அங்கே காணப்படுவதில்லை. ஆனால் செம்பின் தோற்றம், பூக்களின் தோற்றம் இரண்டிற்கும் பொருத்தம் காணப்படவேண்டும். ஒடுங்கி நீண்ட பூச்செம்பில் பருத்துத் திரட்சியாகக் காணப்படும் மலர்

களைக் குட்டையான தண்டுகளுடன் வைத்தால் அது பொருந்தி நிற்காது. அதுபோலவே பருத்து விரிந்த செம்பில் நீண்ட தண்டுகளையுடைய மெல்லிய அல்லிபோன்ற மலர்களை இட்டுவைத்தால் பொருந்தாது. நிறங்களையும் பார்த்தே அமைத்தல் வேண்டும். ஆகவே, கலை என்பது பொருள்கள் ஒன்றோடு ஒன்று பொருந்தும் நிலையிலேதான் காணப்படும். மாலையில் மதியமும், மலர்களும், தென்றலும் எவ்வாறு பொருந்தி வருகின்றனவோ, அமாவாசையில் நள்ளிரவு, இடியின் முழக்கம், மின்னலின் பிளவு இவை எவ்வாறு பொருந்தி நிற்கின்றனவோ, அவ்வாறு அறையின் தேர்வு, அமைப்பு, பொருள்களின் தேர்வு முதலியவை பொருந்தியிருக்க வேண்டும்.

நண்பர்களுடன் பேசும் அறையைத் தவிர வேறு பல அறைகள் தனித்தனி உபயோகத்திற்காக விட்டிருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அந்தந்த அறையில் கலை எவ்வாறு பொலியும் என்பதைப் பார்க்கலாம்.

வீட்டிலே படிக்கும் அறை ஒன்று இருக்கிறது. அதிலே கண்ணைக் கவரும் நூல்கள் நிரம்ப உண்டு; மேசை உண்டு; நாற்காலி உண்டு; அழகிய விளக்கம் உண்டு; மேலே மின் சார விசிறியும் உண்டு. இவ்வளவு பொருள்கள் இருந்து விட்டால் கலை உண்டு என்று சொல்ல முடியுமா? அந்த அறையினுள் செல்லும் ஒருவருக்கு உட்கார்ந்து புத்தகங் களைப் படிக்கவேண்டும் என்னும் உணர்ச்சி உண்டாகும் நிலையில் அந்த அறையிற் பொருள்களை அமைத்திருக்க வேண்டும். விளக்கு படிப்பதற்குப் போதுமான ஒளியை உடையதாக இருக்கவேண்டும். நடுவிலே அழகிய மேசை, சுற்றிலும் நாற்காலிகள், விரிப்புகள், பூச்செம்புகள் அத் துணை அவசியமில்லை. இங்கேயும் கலையைக் காணவேண் டும். எங்கே என்றால், அலமாரியில், அலமாரிகளை அமைத் திருக்கும் நிலையில், அதிலே நூல்களை ஒழுங்காகவும், அழ காகவும் முறை தவறாமலும் அடுக்கியிருக்கும் அந்தந்தத் தகுதி யில் கலையைக் காணலாம். வீடு சிறியதாக இருக்குமானால்

கலையழகு குன்ருத வண்ணம் அதை அலுவலக வேலை களைச் செய்யும் ஓர் இடமாகவும் கொள்ளலாம். கலையழகு அதனுல் குன்றிவிடுவதில்லை. வைத்திருக்கும் முறை சரியானதாக இருக்கவேண்டும்.

படுக்கையறை ஒவ்வொரு வீட்டிற்கும் இன்றியமையாதது. நல்ல காற்ருேட்டமுள்ள அறைகளே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இங்கே, கட்டில் உபயோகிக்கப் படுமானுல், அதனடியில் பெட்டியோ பிற பொருள்களோ வைக்கக்கூடாது. உடைகளை வைத்துக்கொள்ள ஒரு சிறிய அலமாரியும், அவசியமானுல் அமர்ந்து படிக்க ஒரு சாய்வு நாற்காலியும், அதற்கென ஒரு மேசை விளக்கும் இருப்பது போதும். ஆனுல், அங்கேயும் அவற்றை உபயோகிக்கும் முறையில் கலையைக் காணலாம். படுக்கை விரிப்புகளிலே, தலையணை உறையிலே, கொசு வலையிலே கலையுள்ளம் தையலில் பரிணமிப்பதைக் காணலாம்.

பின்னர் உண்ணும் அறைக்குச் செல்வோம். அங்கே அவசியமான பொருள்கள் அவரவர் வழக்கத்திற்கேற்ப மாறுபடலாம். கலை வேண்டுமானுல், ஒரு முறையையே பின்பற்ற வேண்டும்; மேனுட்டு முறையையாவது, தமிழ்நாட்டு முறையையாவது பின்பற்ற வேண்டும்.

உண்கலங்கள் பெரும்பாலும், உபயோகத்திற்கேற்ருற் போல ஒரேவிதமான வேலைப்பாடுள்ளனவாக இருக்க வேண்டும். அவற்றைத் தூய்மை செய்து அடுக்கி வைத்திருக்கிற நிலையில் கலை கமழவேண்டும். பால், மோர், தயிர், பழம், சர்க்கரை, வெண்ணெய் ஆகிய பொருள்களை ஓர் அலமாரியிலே, உள்ளே எறும்பு செல்லாதபடி, கால்களிலே தண்ணீர் ஊற்ற வசதியுடைய நிலையிலே அமைத்து வைப்பது வெறும் பயன் மட்டும் அன்றிக் கலையும் ஆகும். செல்வர்கள் அதற்குப் பதில் ரெபர்ஜரேட்டரை வைத்துக் கொள்ளலாம்.

சமையலறைக்குச் சென்றால், அங்கேதான் கலை முழுதும் பிரதிபலிக்க வேண்டும். ஏழையின் குடிசையானாலும் சரி; செல்வந்தர்களின் சமையலறை என்றாலும் சரி; அங்கே பொருள்களை வைக்கும் முறையில் கலையைக் காண வேண்டும். நடுத்தரமான வீட்டின்கண் சமையல் அறையிற் கலையைக் காணமுடியும் என்றால், எப்படி இருக்கவேண்டும்? ஏனைய அறைகளைவிடச் சமையலறை சற்றுப் பெரிதாக இருந்தால் நல்லது. அடுப்புகள், அதற்கு மேலே புகைபோக்கி, அடிப் பகுதியிலே மழைக் காலத்திலே மட்டும் விறகுகளைக் காயவைத்துக்கொள்ளப் போதுமான இடம் இவை வேண்டும். ஆனால், தரையிலே அடுப்புகளை அமைத்துவிட்டால் இந்த வசதி ஏற்படாது. அவ்வறையிலே பொருள்களை அமைத்திருக்கும் முறை உட்சென்றவுடன் அறை விசாலமானது என்பதைக் காட்டவேண்டும். ஆனால், வேலை செய்பவர்களுக்கு அலைச்சல் அதிகம் இருக்கக் கூடாது. அடுப்பின் பக்கத்திலே சிமிட்டியாலான ஒரு மேசை போன்ற உயரமான திண்ணை தினமும் கழுவி விடக்கூடிய நிலையில் இருக்கவேண்டும். சமையலறையின் ஒரு மூலையிலேயே ஒரு சிறிய தண்ணீர்க் குழாய், அதன் நீர் உள்ளே தெறித்து விழாத நிலையில் ஒரு சிறிய தொட்டி, இவைகளை வைத்திருப்பது மிகவும் நல்லது. அம்மி, மாவாட்டும் உரல் இவ்வளவையும் சமையலறையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய அளவில் அறை பெரியதாய் இருப்பது நல்லது.

ஒரு பெண்ணின் கலைத்திறன், கலையுணர்ச்சி முழுதும் அவள் சமையல் அறையிலேதான் விளங்கவேண்டும். சமையல் அறையிலே மட்டுமின்றி, அதனை அடுத்துள்ள பொருள்களைச் சேகரித்து வைக்கும் அறையை மிகவும் தூய்மையாக வைத்திருப்பதிலும், பொருள்களை வைத்திருக்கும் பாண்டங்களை அடுக்கி வைத்திருக்கும் எளிய முறையிலும் கலை இருக்கத்தான் செய்கிறது. பொருள்களை வைக்கும் பாண்டங்கள் கூடிய மட்டும் ஒரே விதமான வேலைப்

பாடுள்ளவைகளாயும் அமைந்திருந்தால் அதில் ஒரு தனிக் கலை காணப்படும்.

வீட்டைச் சுற்றியுள்ள பாகங்களுக்குச் சென்ருல், அங்கேதான் கலை தன் உன்னத நிலையில் விளங்கவேண்டும். சுற்றுப்புற அமைப்பு பிறரைக் கவரக்கூடிய நிலையில் இருக்கும்பொழுது அங்கே கலை காணப்படுகிறது.

தோட்டத்தை எடுத்துக்கொள்வோம். பூந்தோட்டம் அமைப்பதிலும் கலையைக் காணலாம். வீட்டின் முன் பக்கத்திற் பூந்தோட்டமும், பின் பக்கத்திற் காய்கறித் தோட்டமும் அமைக்கவேண்டும். தோட்டம் என்பது செடிகளை நட்டுப் பயிராக்குவது என்று கொள்ளமுடியாது. ஆனல், அவற்றை வரிசைப்படுத்தி முறைப்படுத்தி அமைப்பதில் கலையிருக்கிறது. தரையில் வைக்கவேண்டிய செடிகளை ஒழுங்குபடுத்தித் தொட்டிகளில் நட்டுவைப்பதில் தனிக் கலை காணப்படுகிறது. மேலும், பாத்திகளின் இருகரைகளிலும் வெட்டிவிடக்கூடிய குட்டையான செடிகளை வைத்து அவைகளை அழகாக வெட்டிவிடுவதில் கலை காணப்படுகிறது. பின்னிப்பின்னி அடர்ந்து வளர்ந்து ஒழுங்கற்று நிற்கும் செடிகளை எவ்வளவு அழகான முறையில் வெட்டி வளர்க்கின்ருர்கள் என்பது திருவனந்தபுரம், பங்களூர், நீலகிரி, கொடைக்கானல், கொழும்பு, டெல்லி போன்ற இடங்களிற் சென்று பார்த்தால் நன்கு தெரியும்.

இவ்வாறு வீட்டின் பல பகுதிகளைப் பலவிதமாக வைத்திருப்பதால் என்ன விதமான கலையைக் காண்கிருேம்.

அங்கே கவிதையிலே காணும் கலை, சிற்பத்திலே காணும் கலை, சித்திரத்திலே காணும் கலை, ஆகிய பல கலைகளையும் காண்கிருேம்.

கவிதையிலே காணும் கலையை எந்த நிலையில் காண்கிருேம் என்ருல், அதுதான் வீட்டை அமைக்கும் முறையில், வீட்டிலே பொருள்களை அமைக்கும் முறையில் கலை

உள்ளத்தின் கற்பனைத் திறனைக் காண்கிறோம். இலக்கியத்திலே அல்லது கவிதையிலே காணப்படும் கலையின் தோற்றமும், வீட்டின் பொருள்களை அமைக்கும் முறையிலே காணப்படும் கலையின் தோற்றமும் ஒன்றே.

சித்திரக்கலையை அல்லது ஓவியக்கலையை நம் வீட்டிலே அழகுபடுத்துவதற்காக உபயோகிக்கும் படங்கள், விரிப்புக்கள், தொங்கல்கள் முதலியவைகளில் காண்கிறோம். சித்திரத் தையல்கள் வீட்டின் அழகை உயர்த்துகின்றன. ஆனால், அவைகளை உருவாக்கும் நிலையில் முழுச்சித்திரக் கலை காணப்படுகிறது. இயற்கையின் அழகைச் செயற்கையின் வாயிலாகக் காட்டுவதே ஒரு கலையன்றோ ?

அடுத்தாற்போல, சிற்பக்கலையை எங்குக் காண்கிறோம்? அதை வீட்டைச் சுற்றியுள்ள தோட்டங்களிலே, செடிகளை நாம் வெட்டி விடுகின்ற நிலையிலே காண்கின்றோம். தோட்டத்திலே சிற்பக்கலையை மட்டும் காண்கின்றோம் என்று சொல்லுதல் சரியன்று. அங்கே கற்பனைக்கும் இடமுண்டு. ஆகவேதான் வீட்டிலே கலை, வீட்டின் அமைப்பிலே கலை, பொருள்களிலே கலை, பொருள்களை அமைக்கின்ற முறையிலே கலை, அகத்திலே கலை, புறத்திலே கலை, எங்கும் கலை என்று கூறுகிறோம்.

கலையுணர்ச்சியை எவ்வாறு தோற்றுவிக்க வேண்டும் என்றால், புதிதாக உண்டாக்க வேண்டிய அவசியமில்லை. இறைவன் படைத்த எல்லாப் பொருள்களிலும் கலை உண்டு. அறிவுள்ள பொருள்களிலே கலையுடனே, கலையுணர்ச்சியும் உண்டு. ஆகவே அக்கலையுணர்ச்சியை எழுப்பிவிடுவதின் மூலம் கலையைப் பெருக்கவேண்டும்.

கலையின் பொலிவு நிறைந்த இடங்களைப் பார்க்க நேரிடுவதால் கலை உணர்ச்சி தூண்டப்படுகிறது. பலரோடு பழகுவதால் ஏற்படுகிறது. எல்லாவற்றிற்கும்

மேலாகச் சோம்பல் சோர்வு ஆகியவை நீங்கி, உழைப்பு ஊக்கம் ஆகியவை ஏற்படும்போது தொழிலிலே உள்ளம் ஈடுபடுகிறது. தொழில் சிறக்கும் நிலையில் கலை ஏற்படு கிறது.

வீட்டிலே மகளிர் வேலைக்காரர்களிடம் எல்லாப் பொறுப்பையும் ஒப்புவித்துவிட்டு நிம்மதியாக இருக்கலா மென்று நினைக்கும் தவருன எண்ணம் நீங்கினுல்தான், எல்லாருடைய வீட்டிலும் கலை கமழும். வேலைக் காரர்களைக்கொண்டு வேலைகளைச் செய்ய வைத்துப் பொறுப்பை மட்டும் தாங்களே ஏற்று நடத்த வேண்டும். அப்பொழுதுதான் வீட்டிலே கலை நிறைந்திருக்கும். கலை நிறைந்த வீட்டிலே வாழ்வு மகிழ்ச்சியாயிருக்கும். மகிழ்ச்சி நோயைப் போக்கும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும்.

ஆகவே, அத்தனைக்கும் வாழ்விற்கும் கலை அவசியம். அதுவே அடிப்படை என்றே கூறலாம். எனவே, கலை நிறைந்திருந்தால் வீடு, வீடாகும் அன்றே ?

அருஞ்சொற் பொருள் :

குன்ருமல்-குறையாமல். உன்னி-நினைத்து. பொலியும் – விளங் கும். தெறித்து-சிதறி. உன்னத-சிறந்த. பொலிவு-அழகு.

வினுக்கள் :

1. கலை என்ருல் யாது ? அது காணப்படும் இடங்கள் யாவை ?

2. வீட்டிலே எப்பொழுது கலையைக் காணலாம் ?

3. கலை, சில வீடுகளில் காணவும் சில வீடுகளில் காணமுடியா மைக்கும் காரணம் யாது ?

4 நண்பர்களோடு அளவளாவும் அறை எங்ஙனம் அமைதல் வேண்டும் ?

5. படிக்கும் அறையின் அமைப்பு வீட்டிலே எவ்வாறு அமைந் திருத்தல் வேண்டும் ?

6. சமையலறையில்தான் கலை முழுதும் விளங்க வேண்டும் என்பதற்கு ஆசிரியர் காட்டும் காரணங்கள் யாவை?

7. படுக்கையறை, உண்ணும் அறை — இவை கலையழகுடன் விளங்கச் செய்யக்கூடியன யாவை?

8. கலையுணர்ச்சி எப்பொழுது தோன்றுகிறது?

9. கலை நிறைந்த வீட்டின் வாழ்வால் ஏற்படும் பயன் யாது?

கட்டுரைப் பயிற்சி:

பின் வரும் தலைப்புக்களில் ஒரு பக்க அளவில் கட்டுரைகள் வரைக:

1. கலையுணர்வும் அதன் பயனும்.

2. வீட்டில் கலை மிளிர்தற்கான வழிகள்.

# 12. பண்டைத் தமிழரசரும் புலவரும்

பண்டித வித்துவான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்

இத்தண்டமிழ் நாட்டைப் பன்னெடுங்காலம் ஆண்ட பழந்தமிழ்க்குடி மக்களாகிய சேர பாண்டிய சோழர்களே, பண்டைத் தமிழரசராவர். அவ்வரசர் காலத்திலிருந்த நல்லிசைப் புலவர்களே ஈண்டுப் புலவர் எனப்பட்டவராவர். ஈண்டுக் குறிக்கப்பெற்ற காலம் சங்க காலமாகும். அவ்வரசர்களின் கலைவன்மை, செங்கோன்மாண்பு, வீரத்திறன், வள்ளன்மை முதலிய சிறப்பியல்புகளையும், புலவர் பெருமக்களின் உயர்ந்த பண்புகளையும், புலவரிடத்து அரசர் வைத்திருந்த நன்மதிப்பினையும், நட்பையும் சில எடுத்துக் காட்டுகளின்மூலம் விளக்குதலே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவற்றை உணர்தற்குப் புறநானூறு, பதிற்றுப் பத்து முதலிய சங்கநூல்கள் துணையாவனவாம்.

இவற்றுள், அவ்வரசர் தங் கலைவன்மையைப் பற்றிக் கூறுங்கால், அதனைப் பிறர் புகழ்வதாகக் கூறும் எடுத்துக் காட்டைவிட, அவர்தம் பாடல்களே தக்க சான்றாகும். ஆதலின், சேரருள், பாலை பாடிய பெருங்கடுங்கோ, சேரமான் கணைக்கால் இரும்பொறை முதலியோரும், பாண்டியருள், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முதலியோரும், சோழருள், சோழன் நலங்கிள்ளி, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் முதலியோரும் பாடியவை சங்கநூல்களிற் காணப்படுதல் கொண்டு உணரலாம். பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு பாடிய பாடல் புறநானூற்றிற் காணப்படுதலால் அவ்வரசியரும் நன்கு கற்றுப் பாடலியற்றும் பெற்றிவாய்ந் திருந்தனர் என்பது புலனாகும்.

அவ்வரசர்தஞ் செங்கோன் மாண்பை "நீதிமன்றங் களில் அறநெறி தவறிய ஒருவனை வைத்துக் கொடுங் கோல் செய்தேனாகுக" என ஒல்லையூர் தந்த பூதப்

பாண்டியனும், "என் நிழலில் வாழும் குடிகள் தாம் சென்றடையும் நிழலைக் காணாது, 'எம் இறைவன் கொடியன்' எனக் கண்ணீர்விட்டுப் பழிதூற்றுங் கொடுங் கோலேனாகுக" எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் வஞ்சினங் கூறுதலானும், "குடிமக்களை இறைவேண்டி இரக்கும் ஆண்மையில்லாத சிறியோன் அரசுரிமையைப் பெற்றால் அது அவனுக்குத் தாங்கமுடியாத கனமுடையதாகும்" எனச் சோழன் நலங் கிள்ளி கூறுதலானும், "நின்னிழல் வாழ்வோர் சூரியனது வெம்மை யல்லது வேறு வெம்மையை அறியார்" எனச் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை யைக் குறுங்கோழியூர் கிழார் பாடுதலானும், பிறவற்றானும் உணரலாம்.

அவ்வரசர்தம் **வீரத்திறனை**, "யமன் கோபித்து வரினும் அதனையும் மாற்றும் வலியுடையை" என ஒரு சேரனிடம் ஒரு புலவரும், "கருக்கொண்ட மகளிர் விரும்பி உண்டா லல்லது பகைவரால் உண்ணப்படாத மண்ணையுடையை" என மற்றொரு சேரனிடம் மற்றொரு புலவரும் கூறுதலா லும், "தேர்மொட்டுப் பொலிவுபெற நின்றவன் யாவனோ? அவன் கண்ணி வாழ்க! ஐம்படைத்தாலி கழித்ததுமிலன்; பாலுண்டலை ஒழித்து உணவும் இன்றுதான் உண்டான்; தன்மேல் வெகுண்டு வந்த வீரரை மதித்ததும் அவமதித் ததும் இலன்; அவரைத் தான் கொன்றதற்கு மகிழ்ந்ததும் இவ்வாறு செய்தோம் என்று தன்னை மேம்பட நினைத்தது மிலன்", என ஒரு பாண்டியனை ஒரு புலவர் பாராட்டுத லாலும், "சோழனோடு மாறுபட்டோர் வாழக் கண்டது மில்லை; அவன் அடியடைந்தோர் வருந்தக் காணுதல் அதனினும் இல்லை", என ஒரு சோழனை ஒரு புலவர் புகழ்தலாலும் அவர்தம் வெற்றியுணர்த்தும் பிற வரலாறு களாலும் நன்கு தெரியலாம்.

அவ்வரசர்தம் **வள்ளன்மையை**, "இந்திரர் அமிழ்தம் இயையினும் தனித்துண்ணார்; யாரிடத்தும் வெறுப்பிலர்;

புகழ் கிடைக்கின் தம் உயிரையுங் கொடுப்பார்; பழி வருமாயின் அதனல், உலக முழுதும் பெறினும் கொள்ளார்; தமக்கென முயலாத வலிய முயற்சியையுடைய பிறர்க்கென முயலும் அத்தகையார் உண்மையால் இவ்வுலகம் உளது'', எனக் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கூறுதலானும், 'ஈயென இரப்பராயின் என் அரசாட்சியைக் கொடுத்தல் எளியது; என் இனிய உயிரையுங் கொடுப்பேன்' எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலானும், 'நின்னைப் பாடிய செந்நா, பிறர் புகழைச் சொல்லா வண்ணம் நினக்கென ஒன்றையும் பாதுகாவாமற் கொடுக்கும் எங்கோவே', என ஒரு சேரனிடம் ஒரு புலவர் கூறுதலானும் அறியலாம். சேரர்தங் கொடைப் பெருமையைப் பதிற்றுப்பத்தில், ஒரு சேரன் ஒரு புலவர்க்கு நாற்பது நூருயிரம் பொன் கொடுத்துத் தான் ஆள்வதிற் பாகம் கொடுத்தான் என்பதும், மற்றொரு சேரன் மற்றொரு புலவர்க்கு நூருயிரங் காணங்கொடுத்து ஒரு மலையிலேறி நின்று, தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் கொடுத்தான் என்பதும், பிறவும் காணப்படுதல் கொண்டும் நன்கு அறியலாம்.

இவ்வாறே, ஒவ்வொரு பண்பையும் விரித்துக் கூறிற் பெருகுமாதலின், இன்றியமையாத சில கூறிய இவ்வளவில் நிறுத்திப் புலவர் பெருமக்களின் உயர்ந்த பண்புகளைக் கூறுவேன்.

'' பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே '' (புறம் 148)

என ஒரு புலவரும்,

'' வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய வேத்திப்
பாடுப வென்ப பரிசிலர் '' (புறம் 168)

என ஒரு புலவரும் பாடுதலால், புலவர்கள் இல்லாதவற்றைச் சொல்லாத பொய்யா நாவினர் என அறிகிறேம்.

"பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணி நெடுவரை" (புறம் 174)

எனக் கபிலரை நப்பசலையார் புகழ்ந்திருத்தலால் பொறுமையின்றிச் சிறந்தாரை உயர்த்திக்கூறும் நல்லியல்பினர் என்பது நன்கு அறியப்படும். பெருஞ்சித்திரனார் அதியமான் நெடுமானஞ்சியுழைச் சென்றபோது அவன் தம்மை நேரிற் காணாது 'இது கொண்டு செல்க' என்று பிறர் வாயிலாகப் பரிசில் கொடுப்பக் கொள்ளாது,

"காணா தீத்த இப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே" (புறம் 208)

எனக் கூறுதலானும், வெளிமான் தம்பி சிறிது பரிசில் கொடுப்ப, அவர் கொள்ளாது சென்றமையாலும், சேரமான் குடக்கோச்சேரலிரும்பொறை பரிசில் கொடுப்பதற்குக் காலந்தாழ்க்க அவனை எதிர்பாராது பெருங்குன்றூர்கிழார் சென்றமையாலும், பிறவற்றாலும் தம்மை மதியாதாரிடத்தும், சிறிது கொடுத்தாரிடத்தும், கொடுப்பதற்குக் காலந்தாழ்த்தாரிடத்தும் பரிசில் பெறாத பெருந்தன்மையுடையர் என்பது அறியப்படும்.

இளங்கண்டீரக்கோவும் இளவிச்சிக் கோவும் ஒருங்கிருந்த வழிச்சென்ற பெருந்தலைச் சாத்தனார் கண்டீரக்கோவைத் தழுவி, விச்சிக்கோவைத் தழுவாராக, அவன், 'என்னை ஏன் தழுவவில்லை?' எனக்கேட்டபோது, புலவர், "உன் முன்னோர் பாடுநர்க்கு அடைத்த கதவுடையராதலின் உன்னைத் தழுவவில்லை; கண்டீரக்கோ, மகளிரும் ஆடவரும் கொடையிற் சிறந்து விளங்கும் நற்குடிப் பிறந்தவனாதலின் அவனைத் தழுவினேன்" எனக் கூறியதனால், புலவரை மதியாதவரைத் தாமும் மதியார் என்பதனை நன்கறியலாம்.

"வேந்தே! வெண்கொற்றக் குடை வெயில் மறைத்தற்குக் கொள்ளப்பட்ட தன்று; குடிகட்கு நிழல் செய்தற் பொருட்டுக் கொள்ளப்பட்டது" எனவும், 'புலவர் மாட்டுப் பொதுநோக்கொழிக' எனவும் பிறவுங் கூறுதலால் புலவர் அரசர்க்கு உறுதியை அஞ்சாமற் கூறும் நெஞ்சினர் என்பது துணியப்படும். சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றி யிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் சந்து செய்தற்குக் கோவூர் கிழாரும், மக்கண்மேற் சென்ற கோப்பெருஞ் சோழனைச் சந்துசெய்யும் நோக்கத்தாற் புல்லாற்றூர் எயிற்றியனாரும், வையாவிக்கோப்பெரும்பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியை அவனோடு சேர்த்ததற்குப் புலவர் பலரும் பாடியிருத்தலால் மாறுபட்டாரைச் சேர்க்கும் ஆற்றலும் நற்குணமும் வாய்ந்தவரென்பது புலப்படும்.

இனிப் **புலவரிடத்து அரசர் வைத்திருந்த மதிப்பு** எத்தகைய தென்பதை உற்று நோக்கின், அது மிகவும் வியப்பைத் தருவதாகும். புலவர்மாட்டுச் சேரர் நன்மதிப்பு வைத்திருந்தனர் என்பதற்குச் சேரமான் தகடுரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் வரலாறு ஒன்றே தக்க சான்றாகும்; அஃதியாதெனின்—முற்காலத்து, அரசர், முரசில் தெய்வமிருப்பதாகக் கருதி அதை நீராட்டி அலங்கரித்துச் சிறந்த கட்டிலில் வைத்துப் பூசை செய்வதும், அக்கட்டிலில் யாரேனும் ஏறினுல் அவர்களைக் கொல்வதும் வழக்கம். சேரமான் தகடுரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறைபாலும் அவ்வியல்பிருந்தது. ஒருநாள் வழக்கப்படி முரசு நீராட்ட எடுத்துச் செல்லப்பெற்றிருந்தது. அவ்வமயம் நெடுந்தூரமிருந்து அங்கு வந்த மோசிகீரனார் எனும் புலவர், களைப்பு மிகுதியால் முரசு வைக்கும் கட்டில் என்பதறியாது அதில் ஏறித் துயின்றனர். அஃதறிந்த அரசன் புலவராதலின் அவரைக் கொல்லாததோ டமையாது அவர் நன்கு துயிலும் வண்ணம் கவரிகொண்டு வீசினன். பின்னர் அது கண்ட புலவர் அவனைப் பெரிதும் பாராட்டினர் என்பதாம். அன்றியும், 'தன் வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்து பாடுதற்கு இன்று கபிலரில்லையே', என்று சேரன்

மாந்தரஞ் சேரலிரும்பொறை வருந்தியதாகப் பொருந்தில் இளங்கீரனார் கூறுவதும் அதனை வலிவுறுத்துவதாம்.

" ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவனாக, உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற், புலவர் பாடாது வரைகவென் னிலவரை " (புறம் 72) எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் பாடுவதனால் பாண்டியர் புலவர்மாட்டும் அவர் பாடலிடத்தும் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தனர் என்பது புலனாகும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக், கோவூர்கிழார், கொல்லலாகாதென அவனைப் பாட, அவன் கொல்லாது விட்டமையாலும், சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத் தானும், தாமப்பல் கண்ணன் என்னும் புலவரும் வட்டாடும் போது புலவர் கைகரப்பச் சோழன் வட்டுக் கொண்டெறிந் தான். அவனைப் புலவர் வெகுண்டு, 'நீ சோழன் மகனல்லை' என வைதனர்; அதுகேட்ட சோழன் புலவரைச் சினவாது நாணியிருந்தனன் என்னும் வரலாற்றானும் சோழர்க்குப் புலவர்பாலிருந்த பெருமதிப்பு விளங்குவதாம்.

இனிக் கோப்பெருஞ் சோழனுக்காகப் பிசிராந்தை யாரும் பொத்தியாரும் உயிர் துறந்த வரலாறென்றே புலவர்க்கும் அரசர்க்கும் இருந்த ஒப்புயர்வற்ற **நட்பின்** மாண்பை விளக்குவதாம். இவ்வரலாறு பலருமறிந்ததாக லின் விரிக்கப்படவில்லை.

இங்ஙனம் பெருஞ் செல்வராய பண்டைத் தமிழரச ரெல்லாம் செல்வத்தால் வரும் இன்பமொன்றையே கருதிச் செருக்கில் மூழ்காது, கல்வியின் அருமை உணர்ந்து நன்கு கற்றுக் கல்வியிடத்தும், கற்றார்மாட்டும் பெரிதும் மதிப்பு வைத்திருந்தது போல, இக்காலத்துச் செல்வர்களும் கல்வி யிடத்தும் கற்றாரிடத்தும் மதிப்பு வைத்துப் போற்றுவா ராயின், அதுவே இக்கட்டுரையின் பயனாகும்.

அருஞ்சொற்பொருள் :

துஞ்சிய - இறந்த. வஞ்சினம் - சூளுரை. இறை - வரிப்பொருள். கண்ணி - மாலே. மாறுபட்டோர் - பகை கொண்டோர். காணம் - பொற் காசு. மை - மேகம். வரை - மலே. சந்து செய்தல் – சேர்ப்பித்தல். எறிந்த - வென்ற. கரப்ப - மறைக்க. வட்டாடுதல் - சூதாடுதல்.

விஞக்கள் :

1. கட்டுரை எழுதுவதின் நோக்கமாக ஆசிரியர் கூறுவது யாது?
2. பண்டைத் தமிழரசர் கலேயிடத்துப் பெருமதிப்புக் கொண்டு போற்றினர் என்பதனேச் சான்றுகளுடன் விளக்குக.
3. தமிழக அரசர்கள் வீரஞ்செறிந்தவர் என்பதனே ஆசிரியர் எங்ஙனம் விளக்கிக் காட்டுகின்ருர்?
4. பண்டைப் புலவர் பெருமக்கள் பொருமையின்றிச் சிறந்தாரை உயர்த்திக்கூறும் இயல்பினர்—சான்றுகள் தருக.
5. புலவர்கள் தம்மை மதியாதவரைத் தாமும் மதியார் என்பதை நாம் எங்ஙனம் அறிந்துகொள்ளலாம்?
6. புலவர்களிடத்துப் பெருமதிப்புக் கொண்டிருந்தவர் அக்கால அரசர் என்பதற்குச் சில சான்றுகள் தருக.

கட்டுரைப்பயிற்சி :

பின்வருந் தலேப்புக்களில் ஒரு பக்கவ்ளவில் கட்டுரைகள் வரைக.

1. பண்டைத் தமிழரசர் புலவர்மாட்டுக் கொண்ட பெருமதிப்பு.
2. பண்டை அரசர்களின் கலேவன்மை.
3. பண்டைத் தமிழரசர்களும் புலவர்களும்.

# 13. மலை வாசம்.

திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்

மலைவாசத்தைப் பற்றிய நினைவு இன்று நமக்கு எற்றுக்கு உண்டாயிற்று? காலம் வேனிற்காலம். கடற்கரையில் உலா. அங்கே பலர் கூடுவதும், பலதிறப் பேச்சுப் பேசுவதும் வழக்கம். ஒருபோது, 'மலைவாசம்' என்று ஓர் ஒலி நமது செவியிலுற்றது. 'மலைக்குப் போகிறேன்' என்று ஒருவர் சொன்னதும், 'மலையினின்று வருகிறேன்' என்று மற்றொருவர் புகன்றதும் கடற்காற்றின் வேகத்தால் நமது செவியில் விழுந்தன. பொதுவாக மலை என்பது எம்மலை என்னும் ஐயம் நமக்கு நிகழவில்லை. நீலகிரியை 'மலை', 'மலை' என்று நகரவாசிகள் சொல்லிக் கொள்வது நமக்குத் தெரியும்.

ஐரோப்பியருள் பலர் வேனிற்காலத்தில் தமக்கு உறைவிடமாக நீலகிரியைக் கொண்டுள்ளார். அவரைத் தொடர்ந்து நம்மவர்களில் சிலரும் ஆண்டுச் செல்கிறார். இவர் இந்நாளில், நீலகிரியை 'மலை', 'மலை' என்று வழங்கலாயினர். முன்னை நாளில் 'மலை' என்பது திருப்பதிமலை என்று கொள்ளப்பட்டது. இன்னும் பழைய உலகில் வாழ்பவரது கொள்கை மாறுபடவில்லை.

ஐரோப்பியர் நீலகிரி மலை நோக்கிச் செல்வதைக் கண்டு, அவர்பின்னே 'மலை', 'மலை' என்று ஓடும் நம்மவருள், 'மலைவாசமும் மேல்நாட்டவரிடமிருந்து பயின்ற கல்வித்துறைகளுள் ஒன்று' என்று கூறுவோருமிருப்பர். காலத்தின் கோலத்தை என்னென்று கூறுவது? மேல்நாட்டு நூல்களைப் பயின்றவர் கற்றவரென்றும், இந்நாட்டு நூல்களைப் பயின்றவர் கற்றறியா மூடர் என்றும் சொல்லப்படுங் காலமன்றோ இக்காலம்? வயிற்றின் பொருட்டுக் கல்வி பயிலும் காலமன்றோ இக்காலம்? பிறந்த நாட்டிடையே பற்றை உண்டுபண்ணாத கல்வியைப் பயில்வோர் என்னதான் சொல்லமாட்டார்? இயற்கைக் கல்விப் பயிற்சி

அருகிவரும் இந்நாளில், நம் முன்னோர் மலையில் வாழ்ந்து இன்புற்றதை நினைவுபடுத்தவே இன்று மலைவாசத்தைப் பற்றி எழுதப் புகுந்தோம்.

பண்டைத் தமிழ் மக்கள் நிலத்தை நான்கு வகையாகப் பிரித்தார்கள். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இப்பிரிவைப்பற்றி எழுந்த வழக்கே நானுவித உலகம் என்பது. இவ்வழக்கு தமிழ்நாட்டிலே தோன்றியபோது, மேல்நாட்டில் மனிதர் எவ்வுணர்ச்சியோடு உலவினர் என்னும் வினைவைச் சரித்திரக்காரர்களை நோக்கிப் பொறித்தல் வேண்டும்.

தமிழ் மக்கள் வகுத்த நால்வகை நிலத்துள் முதன்மையது குறிஞ்சி. ஆசிரியன்மாருட் சிலர் சிற்சில காரணம் பற்றியும், தாம் விரும்பியவாறும் நிலங்களை முறை பிறழவும் ஓதியிருக்கிறுர். எவர் எவ்வாறு ஓதினும், குறிஞ்சி முதன்மையது என்பதை அறிஞர் மறுக்கமாட்டார். குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமுமாம். நாம் குறிஞ்சிக்குப் பதிலாக மலை எனக் கூறிச் செல்வோம். குறிஞ்சி நிலத்துக்குரிய முதற்பொருள் – கருப்பொருள் – உரிப்பொருள் முதலியனவற்றைத் தொல்காப்பியம் முதலிய பண்டைத் தமிழ் நூல்கள் விரித்துக் கூறுகின்றன.

மனித வாழ்வு முதன் முதல் தொடங்கப்பட்ட இடம் மலையேயாகும். இஃது அறிஞர் பலராலும் ஒப்பமுடிந்த உண்மை. மலையிலுள்ள மூங்கிலைக்கொண்டே, மக்கள் முதன் முதல் முகத்தல் நீட்டல் முதலிய அளவைப் பொருள்கள் செய்தார்கள்; வேய்ங்குழல் கண்டார்கள்; கம்பு செய்தார்கள்; வில் செய்தார்கள்; வீடுகள் கட்டினுர்கள்; வேறுபல மலைபடு பொருள்களாலும் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொண்டார்கள். நம் முன்னோர் ஆங்கிருந்தே வான சாஸ்திரம் பயின்றுர்; வைத்தியங் கற்றுர்; கடவுளுண்மை கண்டார்; அரசு வகுத்தார்; இசை பயின்றுர். அவைகளைப்பற்றி ஈண்டு ஆராய்ச்சி செய்யவேண்டுமென்பது நமது நோக்கமன்று.

கடவுளின் இயற்கை வடிவாய் இருப்பது மலை. அதில் விளையும் பொருள்களும் இயற்கை மயமாய் இருப்பன. அங்கே பிறக்கும் அருவியும் ஆறும் இயற்கையின் ஊற்றும். மலையில் வாழும் மக்களும் இயற்கை வடிவாய் இலங்குவோர். மலையும், அதன் உள்பொருளும், அதன்கண் உறை உயிரும், பிறவும் கடவுள் வடிவான இயற்கை மணம் நீங்கப் பெறாத மலையில் வாழ்வதை எவரே வெறுப்பர்?

பண்டைத் தமிழ் மக்கள் மலையின் சிறப்பை உணர்ந்து அதன்கண் வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் மலையில் வதிந்து தாங்கள் கண்ட காட்சிகளையும், பெற்ற இன்பங்களையும் நூல்களாக எழுதினார்கள். மலையைச் சிறப்பித்துக் கூறாத நன்னூல் தமிழில் இல்லை என்றே சொல்லலாம். மலையின் இயற்கை இன்பத்தைத் தமிழ்ப் புலவர்கள் எவ்வெவ் வழியாகவோ பாக்களில் இறக்கி நமக்கு உதவியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க.

மலை பூமியினின்றும் ஓங்கலாக மக்கள் வாழ்வுக்கெனக் கடவுளால் அமைக்கப்பட்ட சிறந்த இயற்கை மாளிகை. அம்மாளிகையில் மக்கள் வாழ்வுக்குரிய பொருளெல்லாம் இயற்கையாகவே தோன்றியிருக்கின்றன. விதவிதமான பூக்கள் மலர்கின்றன. பலதிற மூலிகைகள் வளர்கின்றன; பறவைகள் பறக்கின்றன; விலங்குகள் வாழ்கின்றன. பழங்கள் கொத்துக் கொத்தாகத் தொங்குகின்றன. தினை முதலிய தானியங்கள் பயிராகின்றன. அருவிகள் ஓடுகின்றன. மனத்தைக் கவர மயிலின் ஆட்டமும் மானின் ஓட்டமும் சாலும். இத்துணைப் பொருள்களைத் தாங்கும் மலையில் வாழ்பவருக்கு வறுமை உண்டோ? இக்கருத்துப் பற்றியே கச்சியப்பமுனிவர் தணிகைப் புராணத்துள் ஒரு செய்யுள் நாட்டுப் படலத்துள் பாடியிருக்கிறார்.

அச்செய்யுள் வருமாறு:

'தேனும் செந்தினை இடிகளும் தீஞ்சுவைக் கனியும்
ஊனும் துய்ப்பன; உடுப்பன மரவுரி தழைகள்;

வானுந் தோய்சுனை ஆடுவ; மணிவரை இருப்ப;
ஏனஞ் சூழ்ந்தகுன் றவர்க்கொரு நல்குர வின்றே;

உணவுக்கும், உடைக்கும், நீராடுவதற்கும், இருத்தற்கும் பயன்படுவன இயற்கைப் பொருள்களாகவே இருப்பது கவனிக்கத்தக்கது.

சகோதரர்களே! செய்யுளை உற்று நோக்குங்கள்: இயற்கை வாழ்வின் பெருமையை உன்னுங்கள்; மலைவாசிகளுக்கு வறுமை இல்லை என்று ஆசிரியர் கூறி இருப்பதைக் கருதுங்கள். இப்பொழுது – நாகரிகம் பழுத்த இந்நாளில் வயிற்றுக்குக் குறைவறச் சோறு கிடைக்கிறதா? மக்கள் வறுமை நரகத்தில் வீழ்ந்து வருந்துகிறார்கள். மலைகளிலிருந்து இயற்கைப் பொருள்களை உண்டு, வறுமை அறியாது, நம் முன்னோர் வாழ்ந்தனர். இந்நாளில் வயிற்றுக்காகக் கல்வி; வயிற்றுக்காகத் தொழில், வயிற்றுக்காக எல்லாம்—ஆனால் பட்டினி, வறுமை! செயற்கை இயந்திரங்கள், இரயில்கள், தந்திகள், விசிறிகள், விளக்குகள், கூத்துகள், நாடகங்கள், சினிமாக்கள், நாவல்கள், வேறு பல ஆட்டங்கள் பாட்டங்கள் வறுமையை வளர்த்து வருகின்றன. மலைகளில் வாழ்ந்த மக்கள் வைத்தியசாலைகளை நாடினரில்லை; தேடினரில்லை. வயிற்றுக்காக நாட்டுப்புறங்களிலுள்ளவர் கூட்டங் கூட்டமாக நகரங்களில் கூடுகிறார். ஒரு வீட்டில் முப்பது நாற்பது பேர் வாழ்கிறார். ஒருவர் விடுஞ் சுவாசத்தை மற்றவர் பருகுகிறார். அழுக்குக் கழுவல், கழித்தல் எல்லாம் வீட்டிலேயே. அவ்வழுக்குகளெல்லாந் திரண்டு பூமிக்குள் ஓடுமாறு சாக்கடைகள் வாய்க்கால்களாகக் கட்டப்பட்டிருக்கின்றன. சாக்கடை நீர் தேங்கும் கிணறுகளில், அந்தோ! கடவுளால் படைக்கப்பட்ட மனிதர் மூழ்குகிறார்! கொடுமை! கொடுமை! ஒருவனுக்கு மாடி வீடு; மற்றொருவனுக்குச் சாக்கடைக் குழியா? ஐயோ! நாகரிகமே! பழைய காலத்தை அநாகரிக காலமென்று கூறும் இக்கால ஞானிகளே! சிந்தியுங்கள்!

நாட்டுப்புறங்களை விடுத்து மக்கள் நகரங்களில் போந்து, இயந்திரங்களோடும் தொழிற்சாலைகளில் கூட்டங்

கூட்டமாகச் செறிவதால் விளையும் தீமைகள் பல. கிராமங்களில் பயிர்த்தொழில்கள் அழிகின்றன. நகரங்களில் சுகாதாரம் கெடுகிறது. ஆயிரம் பேர் வாழுமிடத்தில் பதினாயிரம் பேர் வாழ்ந்தால், சுகாதாரநிலை கெடுதல் இயல்பே. நகரங்களில் பெரிதும் ஏறக்குறைய எல்லாவித உத்தியோகசாலைகளும் இருக்கின்றன. இவைகளால் நகரத்தில் கூட்டம் பெருகுகிறது. கூட்டத்தால் நோய்கள் பெருகுகின்றன. மலைகளையும் காடுகளையும் நாடுகளையும் மக்கள் விடுத்து நகரத்தில் போந்து இடர்ப்படுகிறார்கள்.

மலை இடங்களில் வாழ்வது நல்லது; அது விரும்பத் தக்கது. மலையிலிருக்கிறவர்களுக்கு நோய் அணுகாது. அசுத்தக் காற்றும் அசுத்த நீரும் நோய்களை உண்டாக்குவன; வளர்ப்பன; மனிதரைக் கொல்வன. மலையில் அசுத்தக் காற்றும் அசுத்த நீரும் தோன்றுவதற்கு இடமில்லை. மலைக்காற்றுக்கு ஒப்பாகவாதல், உயர்வாகவாதல் பிற காற்றுக்களைச் சொல்லுதல் முடியாது. கடற்காற்றை இரண்டாவதாகச் சொல்லலாம். மலையில் வாழ்வோர், அதிகாலையில் சூரியன் உதயமாகும்போது, சூரியனது இளங்கதிர்களின் வாயிலாக நுகரும் தூய காற்றின் (உயிர்ப்பு) முன்னே எந்த நோய் நிற்கும்? அவ்விளங்கதிர் படிய உலவும் மனிதரை எந்த நோய் அணுகும்? சூரியனது இளங்கதிரொளியும், தூயகாற்றும், ஊற்று நீரும் அல்லவா மனிதரை வளர்ப்பவை? இம்மூன்றையும் மலைவாசத்தில் எளிதில் பணங்காசின்றிப் பெறலாம். மருத்துவர்களுக்குப் பணத்தை அள்ளி அள்ளி இறைக்கும் பொருட் செல்வர்களே! மலையில் வாழ விரும்புங்கள். மலையைச் சுற்றித் திரியுங்கள்; மலை உங்களைக் காக்கும்; உங்களை வளர்க்கும்.

பூமியினின்றும் மலை எழுந்து நிற்றலால், பலவித வளங்கள், மலையில் இயல்பாக அமைந்து கிடக்கின்றன. ஞாயிற்றொளி நன்றாகப் படிகிறது. மலைக்காற்றில் தூம்பு தூசிகளில்லை. ஊற்று நீரில் கிருமிகள் இரா. இக்காரணங்களால் மலை நிலங்களில் பொருள்கள் விரைவில் அழுக மாட்டா. மற்ற நிலங்களில் ஒரு நாளில் அழுகும்பொருள்கள்,

மலை நிலங்களில் நீண்ட நாள் அழுகாமலிருக்கும். மலைகளிலுள்ள மூலிகைகளையும் உலோகங்களையும், பிற வற்றையும் ஆறுகள் அடித்துக்கொண்டு ஓடுகின்றமையால் அல்லவோ, அவை பெருமைப்படுகின்றன? நாட்டுக்கு இன்றியமையாத ஆறுகளின் பிறப்பிடம் பெரிதும் மலை என்பதை அறியாதார் இல்லை. இவ்வளவு வளமுடைய மலையில் வாழவேண்டுமென்று ஒருவர் கூறுதல் வேண்டுமோ?

பண்டைத் தமிழ்மக்கள் நாளுக்கு நாள் குறிஞ்சி விடுத்து, முல்லை மருதம் நெய்தல் ஆகிய நிலங்கள் போந்து வாழ்ந்தாலும், அவர்கள் மலையினிடத்திலும் மலைப் பொருள்களிடத்திலும் தொடர்பு வைத்துக்கொண் டிருந்தார்கள். குறிஞ்சியின் உதவியின்றி ஏனைய நில வாழ்வு நடைபெறுதல் அரிது. மலைபடு பொருட்கு மிக்க ஆவலோடு மற்ற நிலத்தவர் காத்திருப்பர். மேகந் தவழும் மலைகளில்லாவிடின், காடேது? நாடேது? நகரமேது? நாடு காடு நகரம் ஆகிய இவ்விடங்களில் வாழ்வதால் விளையும் இன்பத்தையும், வேறு பலவித இன்பத்தையும் மலைவாசத்தால் பெறலாம்.

நம் முனிவர் பலர் மலைகளைத் தமது உறைவிடமாகக் கொண்டிருந்தனர். இன்னும்—இந்நாளிலும்—சில பெரி யோர் மலையில் வாழ்கிறார். பண்டைக்காலத்தில் மலைகளும் காடுகளும் முனிவர் வசத்திலிருந்தன. 'இம்மலை இம் முனிவர் மலை; இக்காடு இம்முனிவர் காடு' என்று வழங்கப் பட்டு வந்தது. இப்பொழுதோ?

மலைத்தொடர்பு மக்கட்கு இருத்தல் வேண்டும் என்ற எண்ணங்கொண்டு, நம் பண்டை மூதறிஞர் மலைகளிலும் மலை சார்ந்த இடங்களிலும் கோயில் கட்டினர். இறைவனை வழிபடும் பொருட்டு, மக்கள் செல்லின், அச்செலவால், மக்கள் மலையில் சில நாளாவது உறையும் பேறுபெற்றுப் பிணியின்றி வாழ்வார்கள் என்ற கருணையால், அறிஞர்

மலைகளிலும், அவை சார்ந்த இடங்களிலும் கோயில் கட்டினர். திருப்பதி, திருக்கழுக்குன்றம் முதலிய தலங்கள் நினைவிற்கு வருகின்றன.

நமது நாட்டிலுள்ள மலைகள் எண்ணிறந்தன. மலைகளிலே உயர்ந்த மலை நம்முடைய நாட்டிலே இருக்கிறது. நமது நாட்டில் குறுக்காகவும் நெடுக்காகவும் கோணலாகவும் வட்டமாகவும் சதுரமாகவும் மலைகள் வரிசை வரிசையாக நிற்கின்றன. மலைவளஞ் செறிந்த நமது தேசத்தைக் காமதேனு என்று கூறலாம். அத்தகைய தேசத்தைப் பஞ்சம் பிடித்தாட்டுகிறது!

நகரத்தில் வாழும் மாந்தர்களே! நோயாளிகளே! பிள்ளைப் பேறில்லாது வருந்தும் பேதையர்களே! நீண்ட காலம் வாழ விரும்பும் நேயர்களே! உங்கள் விருப்பம் நிறைவேறப் பணத்தைச் சொரிதல் வேண்டாம்; உங்கள் வீடுகளில் மருந்துகளைச் சேர்த்தல் வேண்டாம். வைத்தியர்கள்—டாக்டர்கள்—உங்கள் வாயிலை மிதித்தலாகாது. மலையை நோக்குங்கள்; மலையைச் சுற்றுங்கள்; மலையில் ஏறுங்கள்; மலையில் வாழுங்கள். மலையில் இளஞாயிற்று ஒளி உங்கள்மேல் வீசும்; தும்பு தூசிகளில்லாக் காற்று உங்களைக் காக்கும்; அருவிநீர் உங்களை வளர்க்கும். மலைகளைப்பற்றிய வருணனை நூல்களை அடிக்கடி ஓதுங்கள்; நம்முடைய வாழ்வு தொடங்கப்பட்ட இடம் மலை என்பதை மறவாதேயுங்கள். மலைவாசத்தால் எல்லா நன்மைகளும் விளையும்.

அருஞ்சொற் பொருள்:

எற்றுக்கு - எதற்கு. சொற்றது - சொன்னது. அருகி வரும்—குறைந்துவரும். நானுவித - நான்கு வகையான. பொறித்தல்—எழுதுதல். உறை-வாழ்கின்ற. வதிந்து-வாழ்ந்து. சாலும்-போதும். பாட்டங்கள்-விளையாட்டுப் பகுதிகள். துய்ப்பன-உண்பன. வரை-மலை. ஏனம்-பன்றி. குன்றவர்க்கு-குன்றில் வாழும் மக்கட்கு. நல்குரவு-தரித்திரம்.

வினுக்கள்:

1. மலேவாசத்தைப்பற்றி எழுதப் புகுந்ததற்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது?
2. பண்டைத் தமிழ் மக்கள் நிலத்தை எத்தனே வகையாகப் பிரித்தனர்? அவை யாவை?
3. நானுவித உலகம் என்ற வழக்கு எதுபற்றி எழுந்தது?
4. மலேவாழ் மக்கள் மூங்கிலேத் தம் வாழ்விற்கு எங்ஙனம் பயன்படுத்திக் கொண்டனர்?
5. மலே வாழ்வை எவரும் வெறுக்கமாட்டார் என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்கள் யாவை?
6. மலேயில் வாழ்வோர்க்கு வறுமையில்லே? ஏன்?
7. பழைய காலத்தை அநாகரிக காலமென்று கூறும் இக்கால ஞானிகளே எவற்றைச் சிந்திக்குமாறு ஆசிரியர் வேண்டுகிருர்?
8. மலேயிடங்களில் வாழ்வது நல்லது; விரும்பத் தக்கது என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்கள் யாவை?
9. மலேயிடங்களில் சென்று வாழுங்கள் என்று கூறுதல் வேண்டாம் ஏன்?
10. மலேத்தொடர்பு மக்கட்கு இருத்தல் வேண்டும் என்பதற்கு நம் முன்னேர் வகுத்த வழிகள் யாவை?
11. நகரத்தில் வாழும் மாந்தர்களேயும் பிறரையும் நோக்கி ஆசிரியர் கூறுவன யாவை?

கட்டுரைப் பயிற்சி:

"மலே வாழ்வின் பயன்" இத்தலேப்பைப்பற்றிக் கட்டுரை ஒன்று ஒரு பக்க அளவில் வரைக.

# 14. இளைஞர்களுக்கு அறிவுரை

திரு. நெ. து. சுந்தரவடிவேலு, எம். ஏ., எல். டி. அவர்கள்

மாணவ மாணவியர்களே ! உங்கள் பருவம் மீண்டும் கிடைக்காத பருவம்; பொன்போற் போற்றிப் பயன் படுத்தப்படவேண்டும் பருவம். வாய்ப்போ கிடைத்தற்கரிய வாய்ப்பு. தொடக்கப் பள்ளிக்கூடங்களே இல்லாத ஆயிரக்கணக்கான சிற்றூர்களும், படிக்க வாய்ப்பில்லாத பல இலட்சம் மக்களும் உள்ள இந்நாட்டில் உங்களுக்காவது ஏதோ படிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கின்றதென்றால், அதை எளிதானதாகவோ அலட்சியப்படுத்தக் கூடிய தாகவோ கருதாதீர்கள்; இப்பருவத்தையும் வாய்ப்பையும் நன்றாக முழுதும் பயன்படுத்திக்கொள்ளுங்கள் ; மாணவப் பருவத்தில் கற்கவேண்டுவதை எல்லாம் கற்றுக்கொள்ளுங் கள் ; பெறவேண்டிய திறமைகளை எல்லாம் பெற்றுக் கொள்ளுங்கள்; தேடிக்கொள்ள வேண்டுவன எல்லாம் தேடிக்கொள்ளுங்கள்.

**கல்வி கரையற்றது :** கற்க வேண்டுபவை உங்கள் பாட நூல்களோடு முடிந்துவிட்டனவாக எண்ணாதீர்கள். கற்கவேண்டுபவைகளை அறிமுகப்படுத்துபவைகளே அவை. பாடநூல்களுக்கு அப்பால், பரீட்சைகளுக்குத் தொடர்பில் லாதவை பலவற்றை நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும்; படிப்பை முடித்த பின், அவைகளைக் கற்கலாம் என்று மட்டும் காலந் தாழ்த்தாதீர்கள்.

வெறும் ஏட்டுப் படிப்பு தகவல்களைத்தான் கொடுக்கும்; அறிவொளியைத் தான் வீசும். அவற்றை வாழ்க்கையோடு இணைத்துப் பயன்பெறும் திறமையை நீங்கள் பெற முயல வேண்டும். வாழ்க்கைக்கு ஊக்கம், உறுதி, உழைப்பு, தன்னம்பிக்கை இன்றியமையாதவை. அவற்றை யெல் லாம் நீங்கள் இடைவிடாத பயிற்சியாற் பெறலாம்; அப் படிப் பெறத் தவறவேண்டா.

**பிஞ்சிற் பழுக்கவேண்டா :** இளம்பருவத்தே உங்களை மயக்கக் கூடியவை பற்பல.

> " எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு. "

என்ற அறவுரையை மனத்திற்கொண்டு கல்வியிலே உங்கள் முழுக்கவனத்தையும் செலுத்துங்கள். கல்வியின் பகுதியாகத்தான் நீங்கள் சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றைப் படித்துச் சிந்தித்துத் தெளிவுபெற வேண்டும். மாணவர்களாக இருக்கும்போதே அரசியல்வாதிகளாகிவிட வேண்டாம் என்று மட்டும் அறிவுறுத்த விரும்புகிறேன். எதற்கும் காலமுண்டு. காலம் வரும்போது கருத்தோடு செயலாற்ற ஆயத்தம் செய்துகொள்ள வேண்டுவதே மாணவர் கடமை. மாணவர்களாக இருக்கையிலேயே அரசில்வாதிகளாவது பிஞ்சில் பழுப்பதாகும். அப்பழத்தின் சுவையும் பயனும் எப்படி இருக்கும் என்பது நீங்கள் அறியாததன்று.

**உடலோம்பல் :** உடலோம்பலின் இன்றியமையாமையை நான் அதிகம் வற்புறுத்தத் தேவையில்லை. அதன் தேவையையும் சிறப்பையும் உணர்ந்திருந்தாலும் வசதிக் குறைவும் வேறு பொழுதுபோக்குக் கவர்ச்சிகளும் உடற் பயிற்சியை மறக்கச்செய்து வருகின்றன. இது பெருந் தீங்கு. " உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே " என்பது பொருள்நிறைந்த மொழி. உடல் வலிமை இல்லாதவன் எல்லா வலிமைகளும் பெற்றிருந்தாலும், தனக்கும் பிறருக்கும் முழுப்பயன் அற்றவனுகத்தான் இருக்க நேரிடும். எனவே, எப்படியும் ஒழுங்காக உடற் பயிற்சி செய்ய வழிவகை செய்துகொள்ளுங்கள்.

**ஒப்புரவு :**

> " ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும். "

என்ற பொய்யாமொழியையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கல்வியானது ஏட்டுப்படிப்பு, தொழில்

அறிவு ஆகியவற்றை ஊட்டுவதோடு நிற்கக்கூடாது. அது நமக்குக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் கற்பிக்கவேண்டும். ஒழுக்கம் என்னும்போது வழக்கமாகக் கூறும் ஐம்பெருங் குற்றங்களை நீக்குவதை மட்டும் நான் குறிக்கவில்லை; மக்களோடு மக்கள் எப்படிப் பழகுவது, எங்கெங்கு எப்படி நடப்பது, பொது இடங்களில் எப்படி நடப்பது என்பவை களையும் சேர்த்துத்தான் குறிக்கிறேன். கட்டுப்பாடும் ஒழுங் கும் அற்ற அறிவாளி, கூடிய இடமெல்லாம் புரண்டோடிக் கண்டதை எல்லாம் பாழாக்கும் காட்டாறு போன்று தீமை பயப்பவன் ஆவான். எனவே, கட்டுப்பாட்டையும் ஒழுங் கையும் இளமையிலேயே கற்றுக்கொள்க.

**கற்றதனால் ஆய பயன் :** நல்ல உறுதியான உடலும், கூரிய மதியும், கட்டுப்பாடும் ஒழுங்கும் எதற்குப் பயன் படவேண்டும்? யாருக்குப் பயன்படவேண்டும்? ஆக்கத் திற்கா? அழிவிற்கா? தனக்கா? பிறருக்கா?

அணுவைப் பிளந்து ஆற்றல் மிக்க சக்தியைக் கண்ட மனித சமுதாயம், அச்சக்தியால் உலகம் என்று அழிக்கப் படுமோ என்று அஞ்சி அஞ்சி அல்லலுறுகின்றதல்லவா? காரணம் என்ன? ஆக்க வேலைக்கு அவற்றைப் பயன் படுத்தத் தவறியதே. அறிவும் வலிவும் வளர்ந்த அளவு, மக்கள் உள்ளம் வளர்ந்தபாடில்லை. ஆகவே, வலிமை எல்லாம், அறிவெல்லாம் இதுவரை "தான்" என்கிற சிறை யிலிருந்து வெளிப்படவில்லை. தன் பெண்டு, தன் பிள்ளை என்கிற தன்னலம், பொதுநலத்திற்கு ஊறாக நிற்கிறது. "தான்" என்பதைக் குறைத்து "நாம்" என்பதைப் பெருக்கப் பெருக்கத்தான், நாம் மக்கள் நிலையை எய்துவோம். தனி உணர்ச்சி குறைந்து, சமூக உணர்ச்சி வளர வளரத்தான் நம் துன்பங்கள் தொலையும்.

**மக்கட் பண்பு :** பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக் குப் புதுமையாய் உள்ள குறள்,

> "அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண் பில்லா தவர்."

என்று இடித்துரைப்பதை மறந்துவிடாதீர்கள். கல்வியின் நோக்கம் மக்கட் பண்பைப் பெறுவதே. எது மக்கட் பண்பு என்று சிறிது சிந்திப்போம். மக்கட் பண்பாவது, பிறிதினேய் தந்நோய்போல் நோக்குதலாகும். எனவே, மக்கள் துன்பத்தைத் தன் துன்பமாக எவன் கருதுகிருனே அவனே கல்விமான். மற்றவர்கள் எவ்வளவு அறிந்திருந் தாலும், எத்துணைப் பட்டங்கள் பெற்றிருந்தாலும், எவ் வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் மக்கள் நிலையை அடையாதவர்களே. மக்கள் நிலையை அடையவே நாம் எல்லோரும் விரும்புவோம் என்பது உறுதி. எனவே, நம்மைச் சூழ்ந்துள்ளோர் அடைகிற துன்பங்கள் எவை எவை, அவற்றை நீக்க வழிகள் எவை எவை என்று கவனிப்போம்.

**துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் :** வறுமை, அதன் விளைவான பட்டினி; அறியாமை, அதன் விளைவான மூட நம்பிக்கைகள், மூடப் பழக்கவழக்கங்கள்; சாதி ஏற்றத் தாழ்வு, அதன் விளைவான சாதிச் சண்டை; சமய வெறி, அதன் விளைவான சமயப் போராட்டங்கள்; இவற்றின் கூட்டு விளைவான அமைதியின்மை — ஆகிய துன்பங்களை நாம் அனுபவித்து வருகிறோம். இத்துன்பங்களை நீக்க முடியுமா? இப்படியே விட்டு வைக்கலாமா? நீக்க முடியும். நீக்கவேண்டும் என்பதே என் முடிவு. பிற நாடுகள் செய்து காட்டிய முடிவுமாகும்.

**நல்குரவு :** வறுமை, ஒரு சமூகத் தொற்றுநோய். அதைப்போக்குவது சமூகத்தின் முதற் கடமை. அதனை எவ் வழியிற் போக்குவது என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். உழைப்பைப் பெருக்கி உற்பத்தியைப் பெருக்கினல் எல்லோ ரும் வறுமையின்றி வாழலாம் என்பது உண்மையா? பெற்ற பொருள்களை இப்போதுள்ள முறைக்கு மாருக விநியோகிப்பதன் வாயிலாக வறுமையைப் போக்குவதா? என்ற கேள்விகளுக்குப் பதில் என்னிடத்திலிருந்து

எதிர்பார்க்காதீர்கள். இரண்டில் எதைக் கொண்டாலும், இரண்டும் மறந்துவிட்ட மற்றொன்றை நான் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். அது எது? செலவு முறை; நம் மக்கள் செலவு முறையைக் குறிப்பிடுகிறேன். மயக்கத்திற்கோ, வீண் பெருமைக்கோ ஆனவற்றிற்கு நாம் ஏராளமான செல்வத்தைப் பாழாக்குகிறோம். அவற்றைத் தடுத்து வாழ்க்கையை நிரந்தரமாக நல்வழிப்படுத்தும் துறைகளுக்கு மிகுதியாகச் செலவிடக் கற்றுக்கொள்ள வேண்டும். அளவறிந்து செலவிடத் தெரியாத மக்களை எம்முறையும் காப்பாற்றாது என்பதை மறவாதீர்கள்.

**அறியாமை:** தற்குறித்தன்மை நமக்குள்ள அடுத்த துன்பம். மக்கட் பெருக்கத்திற்குப் பெயர் போனதைப் போன்றே தற்குறித்தன்மைக்கும் நம் நாடு உலகறிந்ததாக இருக்கிறது. அறியாமையின் விளைவாய் நம்மிடையே உள்ள மூட நம்பிக்கைகளும், கண்மூடி வழக்கங்களும் எண்ணிறந்தன. மக்கள், மக்கள் தன்மையை முழுதும் அடைவதற்குக் குறுக்கே நிற்கும் இவற்றை எல்லாம் விரைவில் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். மன்னர்களாகிவிட்டவர்களை மண்ணாங்கட்டி நிலையில் விட்டுவைப்பது இழிவு மட்டுமன்று, பெருந் தீங்குமாகும். எனவே, இத் தலைமுறையின் முழுக்கவனமும் முயற்சியும் "எல்லோரும் கல்வி கற்றுப் பன்னரும் கலைஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால், உன்னத இமயமலைபோல்" கீர்த்தி ஓங்கிடுவதற்கான பணிகளில் திருப்பப்படவேண்டும். இதற்கான பொறுப்பையும் உழைப்பையும் நாட்டு அரசிற்கு மட்டுமே விட்டுவிடாமல் பொதுமக்களும் பகிர்ந்துகொள்ள வேண்டும்; விரைவில் பகிர்ந்துகொண்டு வேகமாகப் பணி புரியவேண்டும். 'அப்படிப் பகிர்ந்துகொள்ள முடியுமா?' என்ற ஐயம் எழலாம். முடியுமென்பதில் எனக்கு ஐயமில்லை. இன்றும் நாட்டில் நடக்கும் 'தருமங்களை'ப் பார்த்தவர்களுக்கு ஐயமிராது. நாட்டில் நடக்கும் அறங்களை எல்லாம் கல்விக்கூடங்கள் மூலமாக நடக்கும்படி செய்வது நம்முடைய கடமை.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி ஞயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்."

என்ற காலத்திற்கேற்ற நல்லுரையை எடுத்துக் காட்டி, கல்விப் பணிக்கான எல்லா உதவிகளையும் செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**சாதி வேற்றுமை:** சாதி உயர்வு தாழ்வு நம்மைப் பிடித்துள்ள மற்ளுெரு பெருநோய்; தமிழர்கள் நல்ல நிலையில் இருந்த காலத்தே இல்லாத நோய்; இடையிலே பெற்ற நோய்; விரைவில் ஒழிக்கப்பட வேண்டிய நோய். 'உயர்வு தாழ்வு எங்கு இல்லை?, ஒவ்வோரிடத்தில் ஒவ்வோர் உருவில் இருக்கிறது,' என்கிற முடக்குவாதம் நம்மை முன்னேறவொட்டாமல் தடுக்கும். அவ்வாதத்திற்குச் செவி கொடுத்தால் நீங்கள் மக்கள் தன்மையை எட்டமுடியாது.

"எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்", "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற நல்லுரைகளை நாம் பல்லாண்டுகளாகப் பலப்பல மேடைகளிலும் கேட்டுத்தான் வருகிறோம்; இவற்றைத் தமிழனின் உயர்விற்கு எடுத்துக்காட்டாக பயன்படுத்திக்கொண்டு வருகிறோம். ஆனால், நாம் உண்மையிலே சாதிகளைவிட்டு மக்களாகும் பாதையில் நடக்கிறோமா? தேர்தல்களில் ஆதரவு தேடும் முறையைக் கவனித்தாலே போதுமே. நம்மைவிட்டுச் சாதிவெறி போகவில்லை என்பதற்குக் காணம் என்ன? சாதிகளை வைத்துக் கொண்டே பேச்சளவில் சாதிப்பற்று வேண்டாமென்று கூறி வெறும் பொழுது போக்காக வேலை செய்துகொண்டு இருக்கிறோம். எனவே, இடமும் காலமும் கிடைத்தபோது சாதிவெறி முழு ஆட்டம் ஆடுகிறது. மக்கட் பண்பை மறைக்கும் சாதிப்பற்று ஒழியவேண்டுமென்றல், சாதிகள் இல்லாத

நிலை ஏற்பட வேண்டாவா? அதற்கான வழியை இனித்தானா அறிந்துகொள்ளப் போகிறீர்கள்? அந்நிலை வெறும் விறுவிறுப்பான பேச்சால் கிட்டுமா? கூட்டத்திற் கூடிநின்று கூடிப்பிதற்றிவிட்டு நாட்டத்திற் கொள்ளா விட்டால் ஏற்படுமா? நெஞ்சில் உரத்தோடு நேர்மைத் திறனோடு எல்லாச் செயல்களிலும் சாதியை நீக்கினால் அன்றோ முடியும்? அந்த நேர்மையும் உரமும் உங்களிடம் எதிர்பார்ப்பது அதிகமா?

**சமயவெறி:** சமயப் பற்றும் சமய வெறியாக மாறி அடிக்கடி நம்மை அலைக்கழிக்கிறது. சமயம் மனிதனுடைய தனி விவகாரம். அதைப் பொதுவாக்கி, பகையை வளர்க்கும் வெறியாக மாற்றுவது தீது. சமயம் மக்களை ஒழுங்குபடுத்தி பண்படுத்தாமல் சண்டையை வளர்ப்பதா? சமயத்தின் மதிப்பு அதைப் பின்பற்றுபவர்களின் கோலத்தில் இல்லை; சீலத்தில் இருக்கிறது என்பதை நினைந்து, அதற்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள்.

**முடிவுரை:** உருவால் மக்களாகப் பிறந்த நாம், நிலையால் மக்களாகாமல் இருப்பதற்கான காரணங்கள் சிலவற்றை உங்களிடம் காட்டினேன். அவற்றைச் சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதன் விளைவாக உங்களுக்குத் தெளிவு ஏற்படும் என்பதிலும் எனக்கு ஐயமில்லை. உங்கள் தெளிவில் பிறக்கும் நேரிய வழியில் நடக்க உரமும் உறுதியும் இருக்குமா என்பதைக் காலந்தான் காட்ட வேண்டும். அத்தகைய உரமும் உறுதியும் பெருக உங்களுக்குத் துணையாக நிற்கும்படி நாட்டின் நலத்தில் நாட்டமுடைய பெரியோர்களை வணக்கத்துடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

> "கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
> நிற்க அதற்குத் தக."

என்ற வள்ளுவரின் வழிகாட்டியை நினைவூட்டுவதோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

---

இக்கட்டுரை கலைக்கதிர் வெளியீடாகிய 'பூவும் கனியும்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பெற்றது.

அருஞ் சொற்பொருள் :

ஐம்பெருங் குற்றம் - கொலை, களவு, கள், காமம், பொய். பன்னரும் - சொல்வதற்கரிய. பராக்கிரமம் - வலிமை. ஒளிர - விளங்க. நிறுத்தல் - நிலைபெறச் செய்தல். முடக்குவாதம் - பயனற்ற பேச்சு. கேளிர் - உறவினர்.

வினுக்கள் :

1. வாழ்க்கைக்கு இன்றியமையாதவை எவை? அவற்றை எங்ஙனம் பெறலாம்?
2. உடலோம்பலின் இன்றியமையாமையை ஆசிரியர் எங்ஙனம் வற்புறுத்துகின்றூர்?
3. கட்டுப்பாடும் ஒழுங்குமற்ற அறிவாளி எதற்குச் சமமாவான்?
4. கட்டுப்பாடும் ஒழுங்கும் எதற்கு, யாருக்குப் பயன்படவேண்டும்?
5. மக்கட் பண்பு என்பது யாது?
6. "சமூகத் தொற்று நோய்" என்று எதனைக் கூறுகின்றூர்? அந்நோயைப் போக்குவதற்கான வழி யாது?
7. அறியாமையின் விளைவால் நம்மிடையே ஏற்பட்டுள்ளவை எவை? அவற்றை என்ன செய்ய வேண்டும்?
8. இத்தலைமுறையின் கவனமும் முயற்சியும் எப்பணிகளில் திருப்பப் படவேண்டும்?
9. "இடையிலே பெற்ற நோய்" என்று ஆசிரியர் எதனைக் குறிக் கின்றூர்? அதனை எங்ஙனம் நீக்குதல் வேண்டும்?
10. சமயத்தின் மதிப்பு எதில் இருக்கிறது?

கட்டுரைப் பயிற்சி :

"இளைஞர் கடைப்பிடித்தற்கான வழிகள்" இத்தலைப்பில் ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.

---

TB 031(8) N63
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008.
88779

# 15. கூட்டுறவு வளர்ச்சி *

(சென்னை அரசின் செய்தித்துறை வெளியீடு)

மக்களாட்சியின்கீழ் திட்டங்களை வகுத்து நிறைவேற்று வதில் கூட்டுறவு முறை இன்றியமையாத ஒரு சாதனம். திட்டக் கமிஷன் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்தபோதே இதை உணர்ந்து நடவடிக்கை எடுத்தது. வேளாண்மை, கைத்தொழில் முன்னேற்றம் விஷயமாக கூட்டுறவு முறைக்கு முக்கிய பணியை அது ஒதுக்கியது. ஆனால், முதல் திட்டத்தில் கூட்டுறவுச் சம்பந்தமாகப் பெரிய திட்டம் எதுவும் சேர்க்கப்படவில்லை. ஏனென்றால், போராலும் நாட்டுப் பிரிவினையாலும் சிதைந்த நமது பொருளாதாரத்தைச் சீர்படுத்தி, உணவுப் பொருள்கள், இன்றியமையாத மூலப்பொருள்கள் ஆகியவைகளில் பற்றுக்குறையைத் தீர்ப்பதே முதல் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவின் பங்கு என்ன? திட்டமிட்ட அபிவிருத்தியில் ஒரு பகுதியாகும்படியாகக் கூட்டுறவுத் துறையை வளர்க்கவேண்டும். நமது தேசிய கொள்கையில் இதுவும் ஒரு கூறு என்று திட்டக் கமிஷன் தனது அறிக்கையில் கூறியது. இதையொட்டி வேளாண்மை, கைத்தொழில், சமூகநலப் பணிகள் ஆகியவைகளில் கூட்டுறவு நடவடிக்கைகளைப் பெருக்குவதற்கான பல திட்டங்கள், 2-வது திட்டத்தில் சேர்க்கப்பட்டன.

இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள கூட்டுறவு முன்னேற்றப் பணிகளுள் முக்கியமானவை, கூட்டுறவு விவசாயக்கடன் விற்பனை வசதிகளைப் படிப்படியாக அதிகரித்தல், கூட்டுறவாளர்களுக்

---

*சென்னை அரசினர் வெளியிட்டுள்ள 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பெற்றது.

குப் பயிற்சியளித்தல், கூட்டுறவுப் பண்ணைகள் அமைத்தல், கூட்டுறவுப் பால்பண்ணை, கூட்டுறவு முயற்சிமூலம் கைத்தறி, தொழில்வள நகரங்களைச் சேர்ந்தவர்கள் தொழிலாளர்கள் ஆகியோருக்கு வீடு வசதிகள் செய்தல் முதலியன ஆகும்.

## திட்டத்தின் விவரம்

**இணைப்பான கிராமக்கடன் அபிவிருந்தி:** திட்ட கால முடிவுக்குள் 75 சதவிகித கிராமங்களில், கிராம மக்களுக்குக் குடும்ப அளவில் சரிபாதிப் பேருக்கு வசதி கிடைக்கச் செய்வதும், 1960-61க்குள்ளாக, குறுகிய காலக் கடனாக ரூபாய் 18 கோடி கிடைக்கச் செய்து, குடியானவர்களின் மொத்தக் கடன் தேவையில் குறைந்த பட்சம் 30 சதவீதம் நிறைவேற்றுவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். ஏற்படுத்தப்படும் 300 பெரிய அளவு சங்கங்கள் மூலமாக, மேலே கண்ட கடன் விஸ்தரிப்புகள் 'அமுலாக்கப்படும். லிமிடெட் பொறுப்பு, அல்லது உத்தரவாத மூலமான பொறுப்பு லிமிடெட்டை அடிப்படையாகக் கொண்ட திட்டத்தை யொட்டியும் தற்போதைய கிராமக் கடன் சங்கங்கள், நில அடமான பாங்குகளின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது மூலமும் அந்தச் சங்கங்கள் ஏற்படுத்தப்படும். பெரிய அளவு சங்கங்களுக்குப் பயிற்சி பெற்ற நிர்வாக ஊழியர்களை அமர்த்திக்கொள்ளவும், மத்திய பாங்கு, நில அடமான பாங்குகளுக்கு, அதிகப்படி மேற்பார்வையாளர்களை நியமிக்கவும் உதவித்தொகை மூலம் உதவி அளிக்கப்படும்.

பெரிய அளவு சங்கங்களும், ஆரம்பக்கடன் சங்கங்களும், தங்கள் உறுப்பினருக்கு, எதிர்பார்க்கப்படும் மகசூல் ஜாமீன் மீது கடன்கொடுத்துக் குடியானவர்களுக்கு உதவி செய்யும். உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கமளிக்க நேரடி நில அபிவிருத்திக் கடன்களை நில அடமான பாங்குகள் வழங்கும்.

1956-57 ஆம் ஆண்டின் குறிக்கோள் அளவு 70 சதவிகித கிராமங்களில் 30 சத விகித கிராமியக் குடும்பங்கள்

பயனடையச் செய்வதும், குடியானவர்களின் கடன் தேவைகளில் 15 சத விகிதமாவது பூர்த்தி செய்யக் குடியானவர்களுக்கு 8·50 கோடிவரை கடன் கொடுக்க வேண்டும் என்பதும் ஆகும். இந்த லட்சியத்தை அடைய 1956-57 இல் 90 பெரிய அளவு சங்கங்களும், 6 நில அடமான பாங்குகளும் ஏற்படுத்தப்பட்டன. ஏற்கனவே உள்ள கடன வசதிகளும் இயங்கிவந்தன.

திட்டம், 1956 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் தேதியில் மாநில முழுவதிலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. 70·7 சதவிகித கிராமங்கள் கூட்டுறவு அமைப்புகளினுல் பயன் பெற்றன. இது லட்சிய அளவையும் மீறிய சாதனையாகும். அதே தேதியில் 26·8 சத விகித குடும்பங்கள் கூட்டுறவு அமைப்பிலே வந்தன. இதில் திட்டமிடப்பட்ட குறிக்கோள் அளவு 30 சத விகிதம் ஆகும்.

1957-58 இல் கீழ்க்கண்ட குறிக்கோள் அளவுகளை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டிருக்கிறது:— (1) கூட்டுறவு அமைப்புகள் பரவ வேண்டிய கிராமங்கள் 72 சத விகிதம். (2) கூட்டுறவுகள் மூலம் பயனடையும் கிராம மக்கள் 35 சத விகிதம். (3) கூட்டுறவுக் கடன் ஸ்தாபனங்கள், குடியானவர்களுக்குக் கொடுக்கும் கடன் ரூபாய் 11 கோடி.

ரூபாய் 11 கோடி கடன் வழங்குவது மூலம், மாநிலத்தின் குடியானவர்களுடைய மொத்தக் கடன் தேவையில் சுமார் 18 சத விகிதத்தைக் கூட்டுறவுகள் பூர்த்தி செய்யும். இந்த லட்சியத்தை அடைய, மாநிலத்தில் இயங்கும் 40 பெரிய அளவு சங்கங்களுடன் கூட மேற்கொண்டு 150 பெரிய அளவு சங்கங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள கடன் சங்கங்களின் நடவடிக்கைகளும் விரிவுபடுத்தப்படும். 1957-58 இல் மேற்கொண்டு 4 நில அடமான பாங்கிகள் அமைக்கப்படும். எல்லா நில அடமான பாங்குகளுமாக ரூபாய் 65 லட்சம் கடன் வழங்கும்.

2. **கூட்டுறவு விற்பனை வசதி அதிகரிப்பு :** அகில இந்தியக் கிராமக்கடன் சர்வே கமிட்டி உத்தேசித்த கிராமக் கடன் இணைப்புத் திட்டத்தில் முக்கிய அம்சமாக இருப்பது, வேளாண்மை உற்பத்திப் பொருள்களுக்குக் கூட்டுறவு விற்பனை வசதியளித்தலாகும். அந்த விற்பனை வசதியை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ், முன்னர் உள்ள சங்கங்களுடன் மேற்கொண்டு 23 ஆரம்ப விற்பனைச் சங்கங்களை நிறுவி, மாநிலத்தின் முக்கியமான இடங்களில் எல்லாம் சங்கிலித் தொடராக விற்பனை நிலையங்கள் இருக்குமாறு செய்யப்படும். முன்னர் உள்ள சங்கங்கள், ஏற்படுத்தப்படும் புதிய சங்கங்கள் ஆகியவைகளின் நடவடிக்கைகள் விரிவாக்கப்படும். மத்திய மொத்த வியாபாரக் கிடங்குகள் மாவட்ட அளவில் வழங்கும் விற்பனை நிலையங்களாகச் சீரமைக்கப்படும். திட்டத்தின் மூன்றுவது ஆண்டில் மாநில அளவில் மாநிலக் கூட்டுறவு விற்பனை நிலையம் ஒன்றும் நிறுவப்படும். இந்த நிலையங்களின் பங்கு மூலதனம், நிருவாகம் ஆகியவைகளில் அரசாங்கம் பங்கெடுத்துக் கொள்ளவும், நிருவாக வேலைகளுக்கு அரசாங்கத்துறை ஊழியர்களை அமர்த்தவும் திட்டம் வகை செய்கிறது. விற்பனை நிலையம் இருக்கும் பகுதியில் பணியாற்றும் கடன் சங்கங்களின் அலுவல்கள், விற்பனை நிலையத்துடன் இணைக்கப்படும். சாகுபடிச் செலவுக்குக் கடன் யாருக்கு வழங்கப்படுகிறதோ அந்தக் குடியானவர்கள், விற்பனை நிலையங்கள் வாயிலாகத் தங்கள் பொருள்களை விற்பனை செய்வார்கள். நல்ல விலை வரும்வரை குடியானவர்கள் தங்கள் பொருள்களை வைத்திருப்பதற்கு வசதியாக அறுவடையின் பேரில், விற்பனை நிலையங்கள் கடன் வழங்கும்.

மாநிலம் எங்கும் குடியானவர்களுக்கு உற்பத்திப் பொருள்களை இருப்பில் வைக்க வசதியாக, அரசாங்கக் கடன் மானிய உதவிபெற்றுக் கிடங்குகளை நிருமாணிக்கத் திட்டம் வகை செய்கிறது. கைக்குத்தல் அரிசி சாதனங்கள், நிலக்கடலை உடைக்கும் கருவிகள், பஞ்சு அரைக்கும்

ஜின்கள் போன்ற பொருள் பதனமுறைக் கருவிகளையும் விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்திக்கொள்ளும். அமைக்கப் படும் யந்திர சாதனங்களுக்கு முதலீட்டுச் செலவு வகையில் சங்கங்களுக்குக் கடனும் கொடுக்கப்படும். சர்க்கரை ஆலைகள், ஜவ்வரிசி உற்பத்திச் சங்கங்கள், நூற்பு மில் ஆகியவையும் இந்தத் துறையின்கீழ் தனித்தனியாக அமைக்கப்படும். இந்தச் சங்கங்களின் பங்கு மூலதனத்தி லும் அரசாங்கம் பங்குகளை எடுத்துக்கொள்ளும். மேலே குறிப்பிட்ட பல வசதிகளின் விளைவாகத் திட்டகால முடிவில், குடியானவர்களின் உபரிப் பொருள்கள் விற்பனையில் 10 சத விகிதம் இந்த விற்பனைச் சங்கங்கள் மூலம் நடைபெறும் நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திட்ட கால முடிவிற்குள்ளாக, 25 புதிய விற்பனைச் சங்கங்கள் 245 கிடங்குகளையும், 15 கைக்குத்தலரிசி யூனிட்டு கள், 15 நிலக்கடலை உடைப்புச் சாதனங்கள், 17 பஞ்சு அரைப்பு ஜின்கள், சர்க்கரை ஆலைகள், 2 ஜவ்வரிசித் தொழிற்சாலைகள், ஒரு நூற்பு மில் ஆகியவைகளையும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

1956-57-இல் லட்சிய அளவுகள் வருமாறு:—நான்கு விற்பனைச் சங்கங்கள், 51 கிடங்குகள், கையால் அரைப்பு நிலையங்கள் இரண்டு, நிலக்கடலை உடைப்பு யூனிட்டுகள் இரண்டு, பஞ்சு அரைக்கும் ஜின்கள் நான்கு, ஒரு சர்க்கரை ஆலை.

1956 ஜனவரியிலிருந்தே இந்தத் திட்டம் நடை முறைக்குவர ஆரம்பித்து விட்டது. 1956-57-க்கு 35 விற் பனைச் சங்கங்கள் தீவிர அபிவிருத்திக்காக, குறிப்பாகக் கடன் விற்பனை வசதி இணைப்புக்காக, மேற்கொள்ளப்பட்டன. இந்த எல்லாச் சங்கங்களுக்கும் நிருவாகப் பணிகளுக்காகக் கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், சீனியர் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோரின் சேவைகள் இலவசமாக அனுமதிக்கப்பட் டன. சிறப்பு ஊழியர்களின் உதவியுடன் மேலும் உறுப்

பினர்களைச் சேர்த்தும், உற்பத்திக்கடன்களை அதிக அளவில் வழங்கியும், தங்கள் விற்பனை நடவடிக்கைகளை விரிவுபடுத்தியும், இந்தச் சங்கங்கள் தங்கள் பணிகளைச் செய்து வருகின்றன. நிறுவப்பட்டுள்ள பெரிய சங்கங்களும் ஏற்கனவே இயங்கிவரும் கடன் சங்கங்களும் அந்தந்தப் பகுதிகளில் இந்தச் சங்கங்களுடன் பிணைக்கப்படுகின்றன. கடன் சங்கங்களின் உறுப்பினர்கள் அந்தச் சங்கங்களிடமிருந்து கடன் பெற்று விளைவித்த பொருள்களை இந்தச் சங்கங்கள் வாயிலாக விற்பனை செய்யலாம் என்பதும் அதன் செயல்களில் ஒன்ருகும்.

தீவிர அபிவிருத்திக்காக 1957-58 இல் 60 விற்பனைச் சங்கங்கள் அப்பணியில் ஈடுபடும். 1956-57 இல் மேற்கொள்ளப்பட்ட சங்கங்களும் இந்தத் தொகையில் அடங்கியவை. புதிதாக நான்கு விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்படும். கடன் விற்பனைச் சங்கங்கள் 68 கிடங்குகளை ஏற்படுத்தும். இதற்காக அந்தச் சங்கங்களுக்கு அரசாங்கக் கடன் உதவி முதலியன கிடைக்கும். மூன்று கைக்குத்தலரிசி யூனிட்டுகள், நான்கு நிலக்கடலை உடைப்பு யூனிட்டுகள், நான்கு பஞ்சு அரைக்கும் ஜின்கள் ஆகியவையும் ஏற்படுத்தப்படும்.

தீவிர அபிவிருத்திக்கு மேற்கொள்ளப்படும் 60 விற்பனைச் சங்கங்களுக்கு அவைகளின் நிருவாகக் காரியங்களைக் கவனிக்க ஊழியர்கள் அளிக்கப்படுவார்கள். நான்காவது சர்க்கரை ஆலை ஒன்றும் ஆரம்பிக்கப்படும்.

மாநிலக் கூட்டுறவு அபிவிருத்தி நிதிக்கு ரூ. 2·50 இலட்சமும், நிறுவப்பட்டிருக்கும் மாநிலப் பண்ட சாலை கார்ப்பரேஷனுக்குப் பங்கு மூலதனமாக ரூ. 10 இலட்சமும் அரசாங்கம் அளிக்க வகை செய்யப்பட்டு இருக்கிறது.

3. **கூட்டுறவுக் கல்விப் பயிற்சி:** பல்வேறு முன்னேற்றத் திட்டங்களையும் அமுலாக்க, கூட்டுறவுத் துறையில் மட்டுமின்றிக் கூட்டுறவு நிலையங்களிலும் தொழில் நுட்ப நிருவாக வேலைகளுக்கு, அதிகமான அளவில் ஊழியர்கள்

தேவை. எனவே இந்த ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்வது முக்கியம். எல்லாத் தரங்களிலும் கூட்டுறவு ஊழியர்களுக்குப் பயிற்சி வசதியை, (முன்னரே வேலையில் சேர்க்கப்பட்டவர்களுக்கும், இனி சேர்க்கப்பட விருப்பவர்களுக்கும்) அதிகரிப்பதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நான்கு பயிற்சித்திட்டங்கள் உருவாக்கப்பபட்டுள்ளன :—

(1) ஊழியர்கள், அதிகாரிகள், அதிகாரச் சார்பற்றவர் ஆகியோருக்கு எல்லாத் தரங்களிலும் பயிற்சி அளிப்பதற்காகச் சென்னையிலுள்ள மத்தியக் கூட்டுறவு நிலையத்தைக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியாக உயர்த்தல்.

(2) அதிகாரச் சார்பற்ற ஊழியர்கள் பயிற்சிக்காக மதுரையில் ஒரு புதிய நிலையம் ஆரம்பித்தல்.

(3) வெளிநாடுகளில் கூட்டுறவின் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளை நேரில் கண்டு அறியவும், அந்த மாதிரியில் இந்த மாநிலத்திற்குத் திட்டம் தீட்டவும், வகை செய்வதற்காகக் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் குழுவை இந்தியாவின் இதர மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்புதல்.

(4) பஞ்சாயத்தார்களுக்கும் சங்க உறுப்பினர்களுக்கும் பயிற்சி அளிக்க ஏற்பாடு.

மதுரையிலுள்ள நிலையம் 1956 ஜூலையில் துவக்கப்பட்டது. 1956 ஆகஸ்டிலிருந்து 165 பேருக்கு முதல் வகுப்பை நடத்தியது (மாணவர்களைச் சேர்ப்பதில் குறிக்கோள் அளவு ஆண்டுக்கு 160 பேர்தான்).

இதர திட்டங்கள் 1957-58இல் அனுமதிக்கப்பட்டதும் மேற்கொள்ளப்படும்.

பயிற்சித் திட்டங்கள் பற்றிய குறிக்கோள் அளவுகள் சாதனைகள் முதலியன கீழே தரப்பட்டுள்ளன :—

**சென்னை கூட்டுறவு நிலையத்தைக் கல்லூரியாக உயர்த்தல் :** தற்போது சென்னையிலுள்ள மத்தியக் கூட்டுறவு இன்ஸ்டிடியூட், கீழ்நிலை அதிகாரிகளுக்குப் பயிற்சி யளிக்கிறது. மத்தியதர ஊழியர்களுக்கும் பெரிய அதிகாரிகள், அதிகாரச் சார்பற்ற ஊழியர்கள் ஆகியோருக்கும் பயிற்சி அளிக்கும்படியாக இதைக் கல்லூரியாக உயர்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. திட்டகாலம் முழுவதிலும் 800 பேருக்குப் பயிற்சி அளிக்கவேண்டும் என்பது எண்ணம். அனுமதிக்கப்பட்டதும் 1957-58இல் இதை நடைமுறைக்குக் கொண்டுவரும் வேலையைத் துவக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. திட்டத்தின்கீழ் கிடைக்க வேண்டிய பயன் 1957-58இல் இருந்து நான்கு ஆண்டுகளில் கிடைக்குமாறு செய்யப்படும்.

அதிகாரிகள் சுற்றுலாமூலம் அறிதல்: இத் திட்டத்தின்கீழ் ஒரு இணைப் பதிவினரையும், இரண்டு துணைப் பதிவினரையும் மூன்றுமாதச் சுற்றுப் பயணத்துக்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் மூன்று ஆண்டிற்கு ஆண்டுதோறும் இப்படி அனுப்பப்பட்டு வருவார்கள். தூரக்கிழக்கு நாடுகளுக்கு அவர்கள் செல்வர். இத்திட்டமும் 1957-58இல் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

**பஞ்சாயத்தார்கள், உறுப்பினர்களுக்குப் பயிற்சி:** சங்கங்களின் நிருவாகத்தினர், பஞ்சாயத்தார்கள், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியவர்களுக்கு மாநிலத்தில் 24 இடங்களில் பயிற்சி அளிக்கவேண்டும் என்பதே இந்தத் திட்டம். 1957-58இல் சுமார் 2,500 பேர் பயிற்சி பெறுவர். மதுரை நிலையம் 1957-58இல் 160 பேருக்குப் பயிற்சி அளிக்கும்.

4. **கூட்டுறவுப் பண்ணை :** எல்லாக் குடியானவர்களையும் ஒன்றுபடுத்தி, அவர்களுடைய நிலங்களை ஒன்ருக்கி, நவீன சாகுபடி முறைகளைப் பயன்படுத்தி, கூட்டாகச் சாகுபடி செய்வதே இத்தத் திட்டத்தின் நோக்கம். நில

மில்லாத குடியானவர்கள், ஹரிஜனங்கள் ஆகியோர், நிலங்களில் அமர்ந்து வாழ்வு பெறவும் இது வகை செய்யும். திட்டகால முடிவிற்குள் பத்து சங்கங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவற்றில் முதலாண்டில் இரண்டு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

மதுரை மாவட்டம் வேலந்தூரிலும், செங்கற்பட்டு மாவட்டம் சிவகிரியிலும் ஆக இரண்டு கூட்டுறவுப் பண்ணைகள் 1956-57 இல் பணிபுரிய ஆரம்பித்துள்ளன.

1957-58 இல் ஐந்து பண்ணைச் சங்கங்கள் ஆரம்பிக்கப் படும். இந்தச் சங்கங்கள் 200 குடியானவர்களுக்குப் பயன் அளிக்கும் என்றும் 2,300 ஏக்கர் நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அருஞ்சொற் பொருள் :

வேளாண்மை - உழவுத்தொழில். பட்சம் - அளவு. கிடங்கு - பண்ட சாலை. சாதனங்கள் - கருவிகள். உபரி - மிகுதி.

வினாக்கள் :

1. முதல் திட்டத்தில், கூட்டுறவு பற்றிய பெரிய திட்டம் சேர்க்கப் படாமைக்குக் காரணம் யாது?

2. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவின் பங்கு யாது?

3. இணைப்பான கிராமக் கடன் அபிவிருத்திக்காகத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள வகைகளைத் தொகுத்து எழுதுக.

4. கூட்டுறவு விற்பனைக்கு அதிகரிக்கப்பட்டுள்ள வசதிகள் யாவை?

5. கூட்டுறவுக் கல்விப் பயிற்சிக்கு வகுக்கப்பட்டுள்ள திட்டங்களை எழுதுக.

6. சென்னைக் கூட்டுறவு நிலையத்தைக் கல்லூரியாக உயர்த்துவதன் நோக்கம் யாது?

7. அதிகாரிகள், பஞ்சாயத்தார்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்குப் பயிற்சியளிப்பதற்குச் செய்யப்பட்டுள்ள வசதிகள் யாவை?

8. கூட்டுறவுப் பண்ணையின் நோக்கம் யாது?

9. நம் நாட்டில் கூட்டுறவுப் பண்ணைகள் எங்கெங்குப் பணிபுரிகின்றன?

கட்டுரைப் பயிற்சி :

பின்வரும் தலைப்புக்களில் ஒரு பக்க அளவில் கட்டுரைகள் வரைக.

1. இரண்டாம் திட்டத்தில் கூட்டுறவு வளர்ச்சி.
2. கிராமக் கடன் அபிவிருத்தியும் அதன் பயனும்.
3. கூட்டுறவு வளர்ச்சியால் நம் நாடு அடையும் பயன்.

# 16. வள்ளல் பேகன்

திரு. சிவ. குப்புசாமிப்பிள்ளை அவர்கள்

## காட்சி 1

**இடம் :** ஆவிய நல்லூரில் ஒரு வழிநடை.

**காலம் :** பிற்பகல்.

**உறுப்பினர் :** கருங்கண்ணன், செவ்வைச்சூடி, மலர் முடியார்.

[வள்ளலின் திருமணச் சிறப்புப்பற்றிய வழிப் போக்கரது உரையாடல்]

[பெருமூச்சும் வலுத்த ஏப்பமும் தோன்ற இருவர் மூட்டையுடன் வழிச் செல்லல்]

**மலர்முடியார் :** ஓ! ஓ! கருங்கண்ணனா? பின்புறம் நிற்பவர் யார்? செவ்வைச்சூடியாரா? எங்கிருந்து வருகிறீர்கள்? என்ன உங்கள் தலையில் இவ்வளவு பெரிய மூட்டை? எங்கேயாவது பெரிய விருந்தோ? வரும்படி ஏதாவது உண்டா? உங்களைப் பார்த்தாலே எனக்குப் பொறாமையாக இருக்கின்றதே!

**கருங்கண்ணன் :** ஓய்! என்ன ஐயா! மலர்முடியாரே! ஒன்றும் அறியாதவர்போல் உளறுகின்றீரே! தாங்கள் ஊரில்தானே இருக்கின்றீர்கள்?

**மலர்முடியார் :** இல்லையே! நான் ஊரிலிருந்தால் இதுபோன்ற சமயங்களில் உங்களை விட்டுப் பிரிவேனா? அன்றி, இத்தகைய வினாக்களைத்தான் எழுப்புவேனா? என்ன பெரிய நிகழ்ச்சி நடந்தது?

**செவ்வைச்சூடி :** நிகழ்ந்த நிகழ்ச்சியெல்லாம் சொல்வதற்கு இப்போது நேரம் இல்லை. "உண்ட களைப்புத் தொண்டருக்கும் உண்டென்பர்" பெரியோர். என் போன்றார் உண்டால் உடனே படுத்துறங்க வேண்டுமென்பது தெள்ளத்தில் விளங்கவில்லையா? நாளைக்குக்

காலையில் வாரும்; சிறுமலைப்புறம் வாழும் முருகவேள் தனக்குத் தனயன் பிறந்தமைக்கு எல்லோரையும் அழைத்துள்ளான். அங்குச் செல்லலாம். இப்பொழுது எங்களைத் தொந்தரவு செய்யாதீர். (கருங்கண்ணனை நோக்கி) வாரும் இப்படி விரைந்து. அதோ தெரியும் அறச்சாலைக்குச் சென்று சற்றுக் கண் அயர்வோம்.

**மலர்முடியார் :** (சினமெழ நோக்கி, மிடறு விம்ம) என்னடா ! செவ்வைச்சூடி, உனக்கு வந்த இறுமாப்பு ! யானைக்கொரு காலம் வந்தாலும் பூனைக்கொரு காலம் வராதா ? ஓடம் வண்டியில் ஏறுவதையும் வண்டி ஓடத்தில் ஏறுவதையும் உணராயோ ? ஏதோ ஒரு திங்களாக ஊரில் இல்லாததால் உன்னை உசாவ நேரிட்டது. நடந்த செய்தியைக்கூடச் சொல்லவில்லை; அரச விருந்திலிருந்து வருகின்றவர்கள்போற் காணப்படுகின்றீர்களே என்று கேட்டேன்; என்னை ஒரு பொருளாக மதியாது பெரியவன் என்பதையும் உணராது ஏதேதோ வாய்க்கு வந்தவாறெல்லாம் பேசுகின்றாய். அப்படியா ஆயிற்று ? நேற்றைப் பையல் நீ.........

**கருங்கண்ணன் :** மலர் முடியாரே ! சினங்கொள்ள வேண்டா. நான் கூறுகின்றேன். அவன் கிடக்கிறான்.

**மலர்முடியார் :** இதுவல்லவோ நல்லவர்கட்கழகு; தன்னலம் அற்றவன்தான் மனிதன். என்ன நிகழ்ந்தது ? சொல்.

**கருங்கண்ணன் :** இதோ கூறுகின்றேன்; கேளுங்கள். மலர்முடியாரே ! நம்நாடு இருக்கின்றதே வைகாவூர் நாடு...

**மலர்முடியார் :** ஆமாம்.

**கருங்கண்ணன் :** இதன் தலைவர் ஆவிய நல்லூரிலிருந்து ஆட்சிபுரியும் வள்ளல் பேகன் இருக்கின்றார் அல்லவா ?

**மலர்முடியார்:** தெரியும் சொல்லு.

**கருங்கண்ணன்:** அவர் நம் முருகப் பெருமானின் திருமலையாம் பொதினி மலையின் கீழ்ப் பகுதியிலுள்ள ஆவியர்குடிப் பெருந்தகை நாகவேளின் அருமைச் செல்வியாம் கண்ணகி தேவியை நேற்றைய நன்னாளின் நற்பொழுதில் முருகனது அருளால் திருமணம் புரிந்தார்.

**மலர்முடியார்:** ஓ! ஓ! அப்படியா! அடடா! எனக்குத் தெரியாமற் போயிற்றே! உம்........மணமக்கள் நீடுவாழட்டும். நம் தலைவன் பேகனது கொடைத்திறனும் ஓங்கட்டும். அவனது அருள் என் போன்றார்க்கு எளியதாகுக..........பின்னர் என்ன நிகழ்ந்தது?

**கருங்கண்ணன்:** பின்னர் மணம் முடிந்ததும் நம் தமிழ்நாட்டு முடியுடைய மூவேந்தர்களும் வாழ்த்துக் கூறினார்கள். அதன் பின்னர்ப் பரணர், கபிலர், ஔவையார், அரிசில்கிழார் முதலிய பெருமக்கள் மணமக்களின் பெருவாழ்வையும் சிறந்த புகழையும் வேண்டினர். சிற்றரசர்களும் பிறரும் அரசருக்குப் பல காணிக்கைகளும் மணப் பரிசுகளும் வழங்கினர்.

**மலர்முடியார்:** அவ்வளவுதானா?

**கருங்கண்ணன்:** என்னையா, அவசரம்! நின்று போகுமா அவ்வளவோடு? அதற்கு மேலேதான் நமக்குரிய இடம் வருகிறது.

**மலர்முடியார்:** உம்; அதையல்லவோ முதலிற் கூற வேண்டும்!

**கருங்கண்ணன்:** திருமணத்துக்குச் சென்ற ஒவ்வொருவருக்கும் ஒரு வராகன் பொன் நன்கொடை அளிக்கப் பெற்றது. அதோடு உடுப்பதற்குக் கொட்டைக் கரைப் பட்டுடையும் வழங்கினர். பின்னர்த் தேவாமுதத்தை ஒத்த உணவு. எத்தனை வகை தெரியுமா? அடடா! கொடுத்து வைத்தவர்களுக்குத்தான் கிடைக்கும்.

**மலர்முடியார் :** அப்படியா? ஐயோ! எனக்குத் தெரியாமற் போயிற்றே.

**கருங்கண்ணன் :** பலகாரங்களில் எத்தனை வகை தெரியுமா? அடடா! என்ன சாப்பாடு! அறுசுவை யுண்டியும் ஏழாவதாக முகமலர்ச்சியோடு கூடிய இன்சொற்சுவையோடு அளித்தது இருக்கிறதே, அதுதான் குறிப்பிடத் தக்கது.

**மலர்முடியார் :** நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். என்போன்ற தீவினையாளர்கட்கு ஏன் இவை கிட்டும்!

**கருங்கண்ணன் :** எல்லோரையும் நமது தலைவர் பேகன் பெருமானே நேரே யிருந்து வரவேற்றுக் கண்காணித்த பெருமையை எப்படிச் சொல்லுவேன்!

எதற்கும், மலர்முடியாரே! நீவிர் விரைந்து செல்லுவீராயின், ஒரு வராகன் கிட்டாவிட்டாலும் ஒப்பற்ற உணவும் உடுத்தற்குரிய உடையும் தவறாது கிட்டும். விரைவிற்சென்று அவற்றையாவது பற்றும்.

**மலர்முடியார் :** நமக்குக் கிட்டுவதுதானே கிடைக்கும். இதோ ஓடுகின்றேன்.

[விரைந்து செல்கிறார் — ஏப்பமிட்டுக்கொண்டே இருவரும் வழிச் செல்ல.]

(காட்சி முடிவு)

## காட்சி 2

**இடம் :** அரசவை.

**காலம் :** பிற்பகல்.

**உறுப்பினர் :** பேகன், பரணர், கபிலர், காவலன்.

[பேகன் தனது அவையில் புலவர்களுக்குப் பரிசில் வழங்குதல்]

**பேகன் :** உலகம் போற்றும் உயா அருட் கடலே, நின் பெருமையை என்னென்போம்! நின் திருவருட் பெருக்கால் என் குடிமக்களும் என்னை நாடிய புலவரும் இனிது வாழ்வாராக!

**பரணர் :** பெருங்கல் நாடனும் பேக! நின் புகழ் ஓங்குக. நின்னிடம் பரிசில் பெற்று அதனுல் இன்பக் கடலுள் திளைத்து இனிது வாழ்ந்துவந்த பாணன் ஒருவனை, நெருங்கிய உறவினருடன் மிக்க வறுமைப் பிணியும் வாட்ட மெலிந்து வருந்திய ஒரு புலவன் கண்டு, "பொன்னரி மாலையை அணிந்த மனைவியையும், கடிய குதிரையைப் பூண்ட நெடிய தேரையும் எல்லா வகையான நலங்களையும் கொண்டுள்ள பசும் பொன்னுலாய தாமரைப்பூவை அணிந்த ஏ பாண! எம் வறுமைப் பிணிக்கு மருந்துண்டோ?" என்று கேட்டனன். அதற்கு அப்பாணன், மதம் மிக்க யானையினையும் மனஞ்செருக்கிய குதிரைகளையும் கொடை மடத்தையும் கொண்ட எம்மிறைவனுன பேகனை நீ அறியாயோ? அவன் பிறர்க்குக் கொடுக்கும்போது மறுமைப் பயனைச் சிறிதும் நோக்காது, பிறர் படும் வறுமைப் பிணியையே போக்குகின்ற தலைவன் ஆயிற்றே! அவனது கைவண்மை உணராத நீயும் வறுமையின் விளைவை நீக்குதற்கு இயலாதவனுயினுய்; ஆதலால் அவன்பால் இன்றே செல்வாய்," என்று கூறினன். இறைவ! இத்தகைய புகழ் மொழிக்கு இலக்காய நீ நெடிது வாழ்வாயாக!

**பேகன் :** புலவர் பெரும! பூவுடன் கூடிய நாரும் மணம்பெறுவதை ஒப்பத் தங்கள் கூட்டுறவால் அன்ரே இப்பேறுகள் யாவும் பெறுதற்கு உரியவன் ஆகின்றேன்.

**கபிலர் :** வரையாது கொடுக்கும் வள்ளால்! பகைவர் அஞ்சும் தோள்வன்மை மிக்க பேக! நினக்கு நலம் மிகுக. நீர் இல்லாது வற்றிக் கிடக்கும் குளத்திலும், மிகவும் அகன்ற நல்ல விளையுளைத் தருகின்ற நிலத்தின்கண்ணே யும், சொரிந்து செல்லுகின்ற மழை களர்நிலத்தையும்,

கடற் பரப்பையும் வேண்டாவெனத் தவிர்ப்பதில்லை. அது போல, பெரும! நின்கொடை எத்தகையாரிடத்தும் செல்லு கின்றது. நீ பிறர்க்குக் கொடுக்கும் நிலையில்தான் அறியாமையைப் பூணுகின்றாய். ஆனால், மதம் மிக்க யானை களையும் கழல் புனைந்த கால்களையும் உடைய பேக! நின்னை எதிர்த்து வந்த படையுடன், வீரர்கள் அல்லாதாரும், புண் பட்டுள்ளோரும், மூத்தோர்களும், இளைஞர்களும் கலந்து நின்றாலும் அவ்விடத்து அன்னவர்களை நீக்கி எஞ்சியுள்ள வர்களோடு பொருதுமீளும் பெற்றியுடையவன் நீயாதலால், நினக்குப் படைமடம் இல்லை. நின் விறற்கொடி வாழ்க.

**பேகன் :** கற்றவற்கொரு மணியாய கபில! பாவலர் தொழுதெழும் பரண, நீவிர் இருவீரும் எனக்குற்ற நண்பும் அமைச்சும் ஆக இருக்கும்வரை என்னை நாமகளும் பூமகளும் விரும்புவார்களென்பதில் ஐயமுண்டோ? என் எல்லா நலன்களுக்கும், பெருமைகட்கும், சிறப்புகட்கும் முதற் பொருளாவார் தங்களையன்றி எவருளர்? தங்கள் திருவடி கட்கு என் வணக்கம் உரியதாகுக.

**கபிலர், பாணர் :** வாழி, வண்கைப் பேக! வாழி, வாழி.

**பேகன் :** எளியேன் திருவடிக் காணிக்கைகளை ஏற் றருள வேண்டுகிறேன். (பரிசில் வழங்கல்)

**காவலன் :** பன்னலங் கனிந்த பார்த்திப! எளியேன் வணங்குகின்றேன். தங்களுடன் இளமரக்கா சென்று தென்கால் நுகர வேண்டி நம் கோப்பெரும்பெண்டு கண்ணகி தேவியாரின் வருகையெனத் திருவாய்மொழி கட்டியங் கூறிவருஞ் சொற்கள் என் செவிப்புலம் புக்கன.

**பேகன் :** ஓ! அப்படியா! நன்று வரட்டும். புலவர் பெருமக்களே! யான் வெளிச்சென்று உலாவிவர விடை தாருங்கள்.

**புலவர்கள் :** மன்னர் பெரும! நின் உள்ளத்தின் படியே யாகுக. நீ நீடு வாழ்வாயாக!

[மன்னன் வணங்கி அவையின் நீங்குதல்]

(காட்சி முடிவு)

## காட்சி 3

**இடம் :** ஓர் இளமரக்கா.

**காலம் :** மாலைப்பொழுது.

**உறுப்பினர் :** கண்ணகி, பேகன்.

[ஆவியர் குடித் தலைவரும் அவர் உயிர்த் துணைவியும் பூங்காவின் தென்றல் நுகரும்போது கொடைச் சிறப்பைப்பற்றி ஆராய்தல்]

**பேகன் :** என் உயிர்க்கினியாய்! அதோ பார்த்தனையா, அவ்வேங்கை மரத்தின் கீழுள்ள பாறையை அதன் மீது வேங்கை மரத்தின் உதிர்ந்த பூந்தாது மூடிக் கொண்டிருப்பதை நோக்கின், ஒரு நெடிய வேங்கைப்புலி படுத்துறங்குவதுபோலத் தோன்றவில்லையா?

**கண்ணகி :** ஆம், நாதா! இயற்கை வனப்பினாற் பெறும் இன்பமே உயிர்க்கு உறுதி பயப்பதாகும். இங்கே பாருங்கள். நம் இயற்கை அன்னையின் இன்பநிறை எழிலினை இச்சுனையினின்று தோன்றும் இச்சிற்றருவி காட்டுகிறது. கருங்குவளை நிறைந்த இச்சுனையின் நீர் அதன் கீழுள்ள பள்ளத்தில் வழிந்தோடுவதை நோக்கின், இவ்வனமகள் நம்மைக் கண்ட மகிழ்ச்சியினால் ஆனந்தக் கண்ணீர் பெருக்குவதை நிகர்க்கின்றது

**பேகன் :** என் உயிர்த் துணையே! நன்று கூறினாய். நின் மதிநுட்பத்தை என்னென்பேன்! இவ்வாறு ஒரு புலவன் கூறியிருப்பின், அவன் விரும்பியவெல்லாம் இன்றே பெற்றிருப்பான். இயற்கை அன்னையின்

வனப்பை ஆய்ந்து உளத்தில் அமைத்து மனத்திற்கேற்ப உண்மைக்கு ஊறு தோன்ருத முறையிற் கவிதை செய்யும் புலவரை ஒத்துள்ள நினக்கு என்னையே பரிசிற் பொருளாகக் கொடுப்பதை விடுத்து வேறு என்ன சிறந்த கைம்மாறு தருதற்கு உளது?

**கண்ணகி:** என் உயிர்த்தலைவ! நீங்கள் கொடுத்துத் தானு உங்களை நான் பெறவேண்டும்? எனக்கே தங்களைப் பெற உரிமையுண்டு. நீங்கள் கூறுவதற்கு முன்னரே நான் கொண்டுவிட்டேன். அஃதிருக்கட்டும். எனக்கு ஒரு ஐயம் உளது. தாங்கள் என்னை மன்னித்தருள வேண்டும்.

**பேகன்:** என் இனிய நங்காய்! நினக்கேற்பட்ட ஐயம் என்னை? என்னிடம் கூருமல் எவரிடம் கூறித் தெளியப்போகின்ருய்? கண்ணே, கூறுவாய். என்னுல் இயன்றவரையில் விடைதருவேன்.

**கண்ணகி:** என் பேரன்புக்குரிய தலைவரே, என்னைப் பொறுத்தருள்க. மங்கையராவார் கணவன் சொல்லுக் கடங்கி அவன் கருத்தின்படி ஒழுகுதலையே கற்பு என ஆன்ருேர் கூறுவர். ஆதலால் எளியேனது வினு தங்களது கருத்துக்கு மாறுகொள்ளின், அடியாளைத் திருத்தி ஆட்கொள்ள வேண்டுகிறேன்.

நாதா! மக்கள் பெறுதற்குரிய உறுதிப் பொருள்கள் நான்கினுள் செல்வமே சிறந்ததாகின்றது. ஏனெனில், தாம் தாம் அறவழியில் ஈட்டிய செல்வத்தால் நல்ல அறத்தையும், இம்மை யின்பங்களையும் மறுமைப் பேற்றையும் அடைய இயலும் என்பது ஆன்ருேர் காட்டிய நல்வழியல்லவா? ஆதலால் அறவழியால் ஈட்டிய பொருளை அதற்கு அழிவு ஏற்படா வகையில், தக்கார் தகாதார் என்பதை யோர்ந்து, 'வளவனுயினும் அளவறிந்து அளித்து உண்' என்னும் முதுமொழியைக் கருத்திற் கொண்டு அறத்தைச் செய்வதே என்றும் எவர்க்கும் நன்மையைப் பயப்பதாகும். அவ்வாறின்றி எவர்க்கும் எதையும் எல்லையின்றிப் பொருளாக்கத்தை மதியாது இட்டால்,

அப்பொருளும் நம்மை மதியாது விட்டு அகலுமே! 'அருள் இல்லாதார்க்கு அவ்வுலகம் இல்லையாவது போலப் பொருள் இல்லார்க்கும் இவ்வுலக இன்பம் இல்லாது போகும்' என்பன போன்ற கருத்துக்கள் எல்லாம் தங்களை நாடி வந்தவர்களுக்குத் தாங்கள் அருளும்போது, என் நினைவிற்கு அடிக்கடி தோன்றுவதுண்டு. ஆகையால் அடியாள் கூறுவது என்னை எனின், தங்களை நாடிவரும் புலவர்கள் பாணர்கள் இரவலர்கள் முதலியோர்களின் தகுதியை யுணர்ந்து, அவரவர்க்கு ஏற்றவாறு அளவுடன் கொடுத்துதவுவதே சாலச் சிறந்ததொன்றாகும் என்பதே யாகும்.

பேகன்: என்னை? நங்காய்! நன்று கூறினுய். 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம்' என்பதைத் தெற்றென விளக்கிவிட்டாய். உலகத்தில் கொடுப்பதால் குறைவு வராதென்பதை நீ அறியாய்போலும்! ஒருவன் தனது மானத்தையும் உயர்வையும் கல்வியையும் பொருட்படுத்தாது 'பல்லெல்லாந் தெரியக் காட்டி' எனக்கு இல்லை என்று கேட்பதிலும் இழிவு உண்டோ? அவ்வாறு ஒருவன் தனக்கு வரும் இழிவையும் பொருட்படுத்தாது கேட்ட நாளில் தன்னிடம் உள்ளதையும் இல்லையென்று கூறும் கன்னெஞ்சனினும் கடையாவான் எவனுளன்? ஆதலின் நம்மை நாடிவரும் பரிசின் மாக்களின் உள்ளக்குறிப்பை உணர்ந்து ஏற்பவர் இன்முகம் காணும்வரை ஈதலே சிறப்புடைத் தொன்றுகின்றது. அதற்குத்தான் 'கொடை' என்ற பெயரும் பொருத்தமுறும். ஒருவன் தனக்கு இவை இவை வேண்டுமென வலிந்து கேட்ட பின்னர்த் தருவது ஈகையின் பாற்படாது. மேலும் 'மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று' என்னும் பெரியார் வாழ்ந்த நாட்டிடைத் தோன்றிய நினக்குக் கொடையில் ஐயமேற்படவே வேண்டா. ஆண்டவனுல் தோற்றுவிக்கப்பெற்ற இவ்வுலகில் அனைவரும் ஒரு தரத்தவரே யாவர். ஏதோ ஊழ்வினை வலியால் ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் செயல்கள் வேருகின்றன. அவ்வேறுபாட்டால் உள்ளவரைத் துதிப்பதும், இல்லாதவரைத் தூற்றுவதும் தவறுடைத்

தாகும். ஆதலால் பரிசின்மாக்கள், புலவராயினும், இரவல ராயினும், பாணராயினும், கூத்தராயினும் யாவரே யாயி னும் ஆகுக. பொதுப்பட நோக்கின், யாவரும் மக்களே. ஆதலால் பெண்ணே! யாவர்க்கும் என் கொடை ஒரு திறத்ததாகவே அமையும் என்பதை அறிவாய்.

**கண்ணகி:** என் அருள் நிறை துணைவ! ஏதோ அடியாள் மனத்துட் கொண்டதைத் திருத்துவான் வேண்டி அறியாமையால் புகன்றேன். எத்தகைய கல்வி பயின்றும் உணர்ச்சி மிகுந்தும் செயல் சிறந்திருப்பினும் பெண்புத்தி பின்புத்தி என்பது தாங்கள் உணராதது அன்று. தங்களது உயரிய கருத்தினை உணரும்வகை அறியா எளியாட்குத் தங்களது அருள் நோக்கு உரியதாகுக.

பேகன்: கண்ணகி! நீ இது குறித்துக் கவலற்க. நின் ஐயத்தை என்னிடம் வெளியிட நீயும் உரிமை யுடையாய்; அதனைப் போக்க யானும் கடமைப்பட்டுள் ளேன். தவறு என்பது மக்கள் இயற்கையில் ஒரு பகுதி யல்லவா? வருவாயாக! நாம் நமதில்லம் செல்வோம்.

**கண்ணகி:** வணக்கம், என் நாதா! தங்கள் கருத்தின்படியே ஆகுக.

[இருவரும் பூங்காவை விட்டு நீங்குதல்]

(காட்சி முடிவு)

**அருஞ்சொற் பொருள்:**

தனயன் - மகன். மிடறு - கழுத்து. உசாவ - கேட்க. நாடிய- விரும்பிய. திளைத்து - மூழ்கி. கடிய - விரைந்து செல்லக்கூடிய. விளையுளை - விளைச்சலை. களர் நிலம் - உவர்மண் நிறைந்த நிலம். கனிந்த-மிகுந்த. தென்கால்-தென்றற் காற்று. வளவன்-சோழன். பேதைமை-அறியாமை.

**வினாக்கள்:**

1. மலர்முடியார், செவ்வைச் சூடியை நோக்கிச் சிந்து கூறியவை யாவை?

2. கருங்கண்ணன் கூறிய பேகன் திருமணச் சிறப்பினை எழுதுக.

3. பேகனிடம் பரிசில் பெற்று வாழும் பாணன் கூற்றுகப் பரணர் கூறுவன யாவை?

4. கபிலர், பேகனைப் பாராட்டி வாழ்த்திய வாழ்த்துரைகளை வரைக.

5. தன்னை வாழ்த்திய கபிலரிடமும் பரணரிடமும் பேகன் கூறியவை யாவை?

6. பேகன், கண்ணகி இருவரும் இயற்கையைச் சுவைத்து மகிழும் இயல்பினர் என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.

7. கண்ணகி, தன் உள்ளத்தில் தோன்றிய ஐயப்பாடாக பேகனிடம் கூறியவை யாவை?

8. கண்ணகியின் ஐயப்பாடினைப் பேகன் எங்ஙனம் போக்கினன்?

கட்டுரைப் பயிற்சி:

பேகன் கொடைத்திறன் - இத்தலைப்பில் கட்டுரை ஒன்று ஒருபக்க அளவில் வரைக.

---

TB
031(8)
N63
தமிழ்நாடு அவணக் காப்பக நூலகம்
88779
சென்னை-600 008.

சாரதா விலாஸ பிரஸ், கும்பகோணம்.

1C
RTR/1057